# பாராளும் ஃபக்கீர்களின்

# பேரரசர்

## பெனுகொண்டாவின்

# பாபாஃபக்ருத்தீன்

# ஒலியுல்லா

**ஆசிரியர் :**

**எம்.ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா**

**கலிஃபத்துல் காதிரி சத்தாரி சிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி**

**வாழ்த்துரை : ஹஜ்ரத் காஜா**

**ஸையத் ஷா பாபா ருக்னுத்தீன் அஹ்மத் ஹுஸைனி**

**அஃபி அன்ஹா அல் மஅரூஃப்**

**தாஜ் பாபா சாஹெப்** **ஸஜர் சஜ்ஜாதா நஷீன் :**

**ஆஸ்தான-யெ- குத்புல் அக்தாப் கலந்தரெ பர்ஹக்**

**ஹஜ்ரத் ஸையதினா காஜா பாபா ஃபக்ருத்தீன்**

**ஹசனி வல் ஹுஸைனி கன்ஜுல் அஸ்ரார்[ரலி]**

**பெனுகொண்டா, அனந்தப்பூர் Dt, ஆந்திர பிரதேஷ்.**

நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பாராளும் ஃபக்கீர்களின் பேரரசர் பெனுகொண்டாவின் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | முதல் பதிப்பு நவம்பர் 2012 |
| ஆசிரியர் | : | எம்.ஏ. ஹைதர் அலீ **B.A.** |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | **7" / 4"** |
| எழுத்தளவு | : | **12** |
| பக்கங்கள் | : | **210** |

*விலை ரூ.100/-*

*அச்சகம்:*
*சபாநாயகம் பிரிண்டர்ஸ்,*
*39, மில்லர்ஸ் ரோடு,*
*கீழ்ப்பாக்கம், சென்னை - 10.*

## சமர்ப்பணம்

பேரின்ப சாகரம்
பாபா தப்லே ஆலம் பாதுஷா
நத்தஹர் அவுலியா
அவர்களின் ரஹ்மு என்னும் பாதார
விந்தங்களில் சமர்ப்பணம்

* * *

பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா அவர்களின் வரலாற்றை எழுதவேண்டும் என்று பேரார்வம் கொண்டிருந்தவர்களும், மதனப்பள்ளியில் மறைந்து சிறந்திலங்கும் இறைநேசச் செல்வரும் பாபா அவர்களின் வம்சாவளியில் பத்தொன்பதாவது வாரிசாக தோன்றியவர்களுமான சஜ்ஜாதா நஷீன் ஹஜ்ரத் காஜா சையத் ஷா அப்தால் ஹுசைனி சுஹ்ரவர்தி ஃபக்கீரி(ரஹ்) அவர்களின் உன்னதமான ரூஹை அல்லாஹ் பொருந்தி கொள்வானாக!

ஆமீன்!



## அர்ப்பணம் ஃபக்ருத்தீன் பாபா!

*மனுவாய் ஜின்களாய் வாழ்நிலை கடந்து
வானவர் தகுதியாகி
வற்றாத பொறுமையின் வாரியாய் ஆரிஃபுகள்
மகத்து முன்னோடியாகி
புனிதமிகு பரிசுத்த தவசியாய் சீஸ்தான்
புவனத்தின் மன்னராகி
முகம்மது முஸ்தஃபா சன்மார்க்க தீனில்
பொறுப்புடைய வாரிசாகி
குன்த கன்ஜன் மஃகுபியாம் தெய்வார்த்தப் புதையலை
புரிந்த இறைநேசராகி
சுல்தான் தப்லேஆலம் பாதுஷா சொல்செயல்
துலங்கிடும் முர்ஷிதாகி
அன்தஅனா - அது நான்நீ - பராபர வஸ்துவாய்
அகிலத்தை ஆளும் தலைவா!
அகமிய இர்ஃபான் பெறநின் பாதம் ஃபக்கீரி
அர்ப்பணம் ஃபக்ருத்தீனே பாபா!*

*உருது கஸல் :
ஹஜ்ரத் காஜா ஸையது ஷா அப்தால் ஹுஸைனி
சுஹ்ரவர்தி ஃபக்கீரி (ரஹ்)
தமிழாக்கம் :
ஜனாபா நூருன்னிஸா ரஹீமுத்தீன் காதிரி சுஹ்ரவர்தி (திருச்சி)*

## அஸ்மாவுல் கலந்தரி

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹிம்*

*ஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸையிதினா வ ஸாதாத்தினா வ ஸனதினா வ மததின வ ஜமீலுல் சீஸ்தானி வ ஜலீலுல் குர்திஸ்தானி வ காமிலுல் ஹிந்துஸ்தானி குத்புல் அக்தாப் கலந்தரே பர்ஸக் காஜா பாபா ஃபக்ருத்தீன ஹசனி வல் ஹுஸைனி கன்ஜுல் அஸ்ரார் (ரலி)*

*யா ஆஷிக்குல் ஆரிஃபீன்*
*யா ஜத்புல் வாஸிலீன்*
*யா சுல்தானுல் காமிலீன்*
*யா முல்குல் ஃபுகராயி*
*யா ஸையிதுல் மஜ்தூபி*
*யா குத்புல் அவ்லியாயி*
*யா கபீருல் மக்ஸூதி*
*யா கன்ஜுல் இர்ஃபானி*
*யா தரீக்குல் கலந்தரி*
*யா குர்ரத்துல் அய்னய்னி அப்தாலுல் அஃலம் நத்ஹர்*
*முத்தஹ்ஹிருத்தீன் தப்லே ஆலம் பாதுஷா (ரலி)*
*அஃதினி அல்மதத் அல்அமான்*

*அல்லாஹும்ம அஃப்தாலனா அப்வாபல் ஹைரி வஅப்வாபல் பரகத்தி வ அப்வாபல் நிஃமத்தி வ அப்வாபல் ரிஜ்கி வ அப்வாபல் ஸலாமத்தி வ அப்வாபல் கூவத்தி வ அப்வாபல் குல்லு ஹாஜத்தி பிஹக் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதின் ரசூலுல்லாஹி (ஸல்) சுப்ஹான ரப்பிகரப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிஃபுன் வஸ்ஸலாமுன் அலல் முர்ஸலீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.*



بسم الله الرحمن الرحيم
فخریہ چاریٹیبل ٹرسٹ (فاکٹ)
رجسٹر نمبر ۰۹/۰۹
مکان نمبر۔۲/۲۳۵، درگاہ پیٹ، پنکنڈہ شریف۔۵۱۵۱۱۰ ضلع اننت پور۔ آندھراپردیس۔ ہندوستان
Regd. No. 09/09
FAKHRIYA CHARITABLE TRUST (FaCT)
# 2-235, Dargahpet, PENUKONDA - 515 110. Anantapur District, Andhra Pradesh, India.
Ph : 0091- 94912 20786, e-mail : fakhriyacharitabletrust@rediffmail.com, fakhriyacharitabletrust@yahoo.com

**K.S.S.B. Ruknoddin Ahmed Hussaini**
**@ Taj Baba**
**Founder Chairman / Managing Trustee,**
**Fakhriya Charitable Trust (FaCT),**
**Sadar Chowk,**
**Penukonda**

### வாழ்த்துரை

*பிஸ்மில்லாஹிர்ரஹ்மான்னிர்ரஹீம்*

*நஹ்மதுஹு வநுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்*

*(ஹஜரத் பாபா ஃபக்ருத்தீன் சுஹரவர்தி ஒலியுல்லாவின் தர்கா பெனுகொண்டா ஆஸ்தான் சதர் சௌக் பரம்பரை அறங்காவலர், ஜனாப் **K.S.S.B** ருக்னுத்தீன் அஹ்மத் ஹுஸைனி சுஹரவர்தி தாஜ்பாபா அவர்களின் வாழ்த்துரை)*

*அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)*

*தென் இந்தியாவில் இஸ்லாமிய மார்க்கம் தழைத்தோங்க பெரும் காரணமாக விளங்கியவர்களில் முதன்மையானவர் ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா ஒலியுல்லா ஆவார்கள். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர்கள் மேற்காசியாவில் சிரியாவிலிருந்து அரசப் பதவியைத் துறந்து, 900 கலந்தர்களுடன் இந்தியாவில் வந்து தங்கியிருந்து இஸ்லாமிய ஒளிபரவ உறுதுணையாய் இருந்தார்கள். அவர்களது கலீஃபாக்களில் முதன்மையாக விளங்குபவர் ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா ஆவார்கள்.*

*பாபா அவர்களின் காலத்தில்தான் இஸ்லாமிய சன்மார்க்கம் ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் விரைவாகப்*

பரந்து வேரூன்றியது. ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா(ரஹ்) அவர்களின் தியாகமும், வாழ்க்கை முறையும், கராமத் என்னும் அற்புதங்களும் தீன் மார்க்கம் பரவுவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தது. இந்துஸ்தானத்தில் ஃபக்கீர்கள் என்னும் சூஃபிகளின் தோற்றமும், வளர்ச்சியும், பாபா அவர்களின் காலத்தில்தான் தொடங்கியது.

உலக வாழ்க்கை ஒழுக்க நெறியும், தவயோகமுக்தி நெறியும் ஒருங்கே கலந்த சன்மார்க்க தீன் நெறிதான் இஸ்லாமிய நெறியாகும். வாழ்க்கையில் எந்த நிலையில் இருந்தாலும், இறைவனை, இறையருளை, இறை நேசத்தை, இறை இன்பத்தை மறவாத வாழ்வே மேலான வாழ்வாகும்.

முஹம்மது நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களது தோழர்கள் அனைவரும் உலக நெறியோடு தவநெறி கலந்த வாழ்க்கையை நடத்தினார்கள். ஹஜ்ரத் அபூபக்கர்(ரலி),ஹஜ்ரத் உமர்(ரலி), ஹஜ்ரத் உத்மான்(ரலி), ஹஜ்ரத் அலீ(ரலி)போன்ற நெருக்கத் தோழர்கள், யோக நெறியிலும், முக்தி நெறியிலும் பக்தி நெறியை இணைத்திருந்தனர்.

இஸ்லாமிய சூஃபிகளது வாழ்க்கை வரலாறுகள் நாம் நபிவழி சுன்னத்தைப் பின்பற்றவும், "உஸ்வத்துல் ஹஸ்னா" என்ற அல்லாஹ்வின் (ஸிபத்) பண்புகளை நமக்குள் பெற்றுய்யவும் வழிகாட்டுகிறது. ஸூஃபியாக வாழ்ந்த பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் இந்த நூல் இஸ்லாமிய சமுதாயத்திற்கு இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமான ஒரு நூலாக விளங்குகிறது.

இந்நூலில் கி.பி. 10 ம் நூற்றாண்டில் தென்னாட்டில் இஸ்லாத்தின் அறிமுக நிலையும், இறை நேசர்கள், சூஃபி ஞானிகளின் வாழ்க்கை முறைகளும், ஃபக்கீர்மார்களின் பெருமைகளும் அழகாக எடுத்துரைக்கப்படுகிறது.

ஜனாப். ஹைதர்அலீ சாஹிப் (கலீஃபத்துல் காதிரி ஷத்தாரி வசிஷ்தி ரிஃபாயி) அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு இடையில், இந்நூலை மிகவும் சிறப்பாகவும், அற்புதமாகவும், அரிய பல ஞானங்களையும்,



சிந்தனைகளையும உள்ளடக்கியதாகவும் எழுதி இருப்பதன் மூலம் சமூகத்திற்கு சிறந்ததொரு ஆன்மீக சேவையைச் செய்துள்ளார்.

தம்முடைய மெய்ஞ்ஞான அறிவின் மூலம் இந்நூலை அற்புதமாய் வடிவமைத்துள்ளார். மேலும் இதைப்போன்ற மெய்ஞ்ஞான தத்துவங்கள் அடங்கிய அரிய பல நூல்களை அவர் நமது மக்களுக்கு வழங்க எல்லாம் வல்ல அல்லாஹ் (ஜல்)வும் ரசூல் (ஸல்) அவர்களும் மேலும் அவுலியாமார்களும் துணை புரிவார்களாக. ஆமீன்!

ஆத்மீக வளர்ச்சி பெற்று, பகுத்தறிவுக்கெட்டாத பேறுகள் பல பெற்று, இறை நேசம் என்ற தேனைப்பருகி, ஆண்டவனுடைய அன்பும் அருளும் துணைபெற்று, அனுபவரீதியில் உள்ளத்தூய்மையுடன், இறை நெறியில் நின்று, கஷ்டப்பட்டு, தங்களது சொந்த சுயநல விருப்பம் என்பதே இல்லாமல், ஆண்டவனிடமிருந்து கிடைக்கும் உதிப்பே வாழ்க்கை என்று வாழும் இறை நேசர்களின் நெறி இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

அருள்மறை திருக்குர்ஆனில் "ஸிப்கத்துல்லாஹி ஸிப்கா" ஆண்டவனுடைய வண்ணத்திலேயே (நீயும்) வண்ணமாக கலந்து விடு" என்ற கூற்றிற்கு ஏற்ப மஹ்ரிபாவின் அனைத்து ஞான செய்திகளும் வெளிப்படையாக தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா அவர்களின் மகிமை, அவர்களின் கீர்த்தி, ஜோதிமயமான நிலை, அவர்கள் சொல்லிய (குத்பா) அறிவுரைகள் கோடி கோடி அற்புதங்களுக்குச் சமமானதாக , வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அவர்களின் அற்புதங்களைச் சொல்லி மகிழ்வது மகிமைதானெனினும் அதைவிட இந்நூலில் நமக்கு கிடைக்கும் அவர்களின் இறைநெறி கோட்பாடு, குத்பா மெய்ஞ்ஞான பிரசங்கங்கள் உபதேசங்கள் ஆகியவற்றை ஏற்று அதன்படி நடந்து நாம் பயனடைவது மேலானதாகும்.

"மன்யுதி இல்லா ஹூவா ரஸூல ஃப உலாயிக ம அல்லதீன அன் அமல்லாஹ அலைஹிம மினன் நபிய்யீன, வஸ்ஸித்தீக்கின வஷ்ஷுுதாயி வஸ்ஸாலிஹீன் வஹஸீன

உலாயிக ரஃபீகா - மேலும் நபிமார்களிலிருந்தும், சத்தியவானகளிலிருந்தும், தியாக சீலர்களிலிருந்தும், உத்தமர்களிலிருந்தும், ஆண்டவனால் சன்மானம் அளிக்கப்பட்டவர்களுடன், அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிபட்டு நடப்பவர்கள் சேர்ந்திருப்பார்கள். மேலும் இவர்களே (இறைவனுடைய) அழகான தோழர்கள்'' என்று கூறுகிறது அருள்மறை (குர்ஆன் அந்நிஸா , 4:69)

அல்லாஹ்விடம் கலப்பில்லாத விசுவாசங்கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அபிமானங்கொண்டு, பக்தி வணக்கமுள்ளவர் (முத்தகீன்)களாக இருப்போரே அல்லாஹ்வின் நண்பர் (அவுலியாக்கள்) ஆவர் என்பது சான்றோர்கள் கூற்று. இறைவா! இத்தகைய பாதையிலே நாங்கள் நடக்கும்படி அருள்புரிவாயாக!

இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்து பயன் பெறச் செய்வதுடன், இந்திய மொழிகள் அனைத்திலும் ஆங்கிலத்திலும் இந்நூல் வெளிவர அல்லாஹ் அருள் புரிவானாக!

இனிய வாழ்த்துக்களுடன்,
அன்பன்.
**Taj Baba @ K.S.S.B. Ruknuddin Ahemed**
**Hussaini Suharavardhi**
**Sadar Chowk,**
**Penukonda - 515110**
**Ananthapur Dt.**
**Andhra Pradesh**
**(22-09-2012)**



## அணிந்துரை

எம்.எச். ஹாஜா சம்சுதீன் சாஹிப்,
நாகூர் தர்கா பரம்பரை ஆதீனம்,
பன்னூல் வெளியீட்டாளர்,
தலைவர், நாகூர் நாயகம் நேசப்பாசறை,
நாகூர்.

அலகிலா அருளும் அளவிலா அன்பும்
துலங்கும் உன் பெயரால் தொடங்குவேன் அல்லாஹ்
அகமதில் நிறைந்த அருள் நபி மீதுன்
புகழ் ஸலவாத்தை பொழிந்தருள் அல்லாஹ்

''நாம் பூமி அசையா திருப்பதற்காக அதன் மீது மலைகளை உயர்த்தியுள்ளோம்'', என்று அல்லாஹ் கூறியிருக்கின்றான். அகமியப் பொருளுணர்ந்த உலமாக்கள் பலர் இந்த வசனத்தில் 'மலைகள்' என்று குறிப்பிடப்படுவது நாதாக்களாகிய குத்புமார்களை சுட்டிக் காட்டுகிறதென்று ரூஹுல் பயானில் வந்துள்ளது.

உலகில் ஏக காலத்தில் பல எண்ணிக்கையுள்ள, பலவகையான படித்தரங்களை உடைய அவுலியாக்கள்- குத்புமார்கள் -அப்தால்கள்- அவ்தாதுகள்- நுகபாக்கள்- நுஜபாக்கள் என்ற பதவி உடையவர்கள், உலகமுடிவு வரை இருந்து வருவார்கள். ஹகீகத்தில் ஈருலகையும் கண்காணிப்பவர்கள் இவர்கள்தான் , இந்த பலவிதமான படித்தரங்களைப் பெற்ற அவுலியாக்கள் அனைவருக்கும் 'குத்பே'அதிபராவார்.

இவ்வாறு அல்லாஹ்வுடைய திருமறையில் அகமியப் பொருளாகக் குறிப்பிபடப்படும் ஹஜ்ரத் மகான் பெனுகொண்டா பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள் அந்த மகத்தான பெரியாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களுடைய மேன்மை 'தரீக்' குடைய வழிமுறை ஞானங்களையும் 'பாராளும் ஃபக்கீர்களின்' பேரரசர் என்னும் இந்த நூல் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நூலை சிறந்த முறையில் எனது தந்தை மர்ஹூம் அஷ்ஷெய்கு எம்.ஜி. முஹம்மது ஹுசைன் சாஹிபு அவர்களின் தலைமை கலீஃபாவும், பல ஒலிமார்களின் வரலாற்றை எழுதிய பன்னூல் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர், கவிஞருமான ஆலிஜனாப் எம்.ஏ. ஹைதர்அலீ பி.ஏ., அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆசிரியர் அவர்களின் அரியப்பணி பாராட்டத்தக்க ஒன்றாகும். ஹஜ்ரத் பாபா பெனுகொண்டா அவர்களின் மீது பக்தி கொண்ட அனைவருக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டி இருலோக பாக்கியங்களை அளித்து அருள் பெற்றிட செய்வானாகவும், ஆமீன்.

தங்களின் உண்மையுள்ள ,
எம்.எச். ஹாஜா சம்சுதீன் சாஹிப்,
நாகூர் தர்கா பரம்பரை ஆதீனம்,
பன்னூல் வெளியீட்டாளர்,
தலைவர், நாகூர் நாயகம் நேசப்பாசறை,
நாகூர்.
*(25-09-2012)*



## மதிப்புரை

**M.H.** ரஹீமுத்தீன்,
செயலாளர் ஹஜ்ரத் சான் மஸ்தான் தர்கா,
பொருளாளர்,ஹஜ்ரத் கபாடி பீர் தர்கா பள்ளிவாசல்
முன்னாள் பொது அறங்காவலர்:
ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா (ரஹ்) தர்கா,திருச்சி

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ரசூலுல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஹபீபுல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ரஹ்மத்துன்லில் ஆலமீன்!
அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

மஹ்ரிபா என்ற இறைஞானத்தின் சமுத்திரமாய் விளங்கும் பாரசீக ரோஜா ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (ஒலி) அவர்களின் வரலாற்று நூலைப் படித்து அகமகிழ்ந்தேன். தென்னகத்தின் தீன் சுடராகிய,ஞானக்கடல் மெய்ஞ்ஞான மேதை ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (ஒலி)அவர்கள் பேரின்பச் சாகரமான ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா நாயகம் (ரஹ்) அவர்களின் முரீதும், தலைமை கலீஃபாவும் ஆவார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் சீஸ்தானின் அரச பதவியைத் துறந்து இறைவனின் எண்ணப்படி, தமது ஆன்மீக குருவால் தமக்கு இடப்பட்ட பணிகளை எல்லாம் செவ்வனே செய்தபடி திருச்சிராப்பள்ளியில் 24வருடங்கள் தங்கி இறைவனை தியானித்தும்,மார்க்கப்பணி ஆற்றியும் வந்தார்கள்.

திருச்சியை அடுத்த உறையூர், சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. சோழ அரச குல மங்கையான குந்தவை நாச்சியார் என்கிற மாமா ஜிக்னியின் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவராக, பாபா ஃபக்ருத்தீன் சோழப் பேரரசில் மிகப்பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார்கள்.

ஆயிரம் ஆண்டுகள் கடந்தும், சமய நல்லிணக்கமும், சகோதரத்துவமும் நிறைந்த இடமாக திருச்சி மாநகரம் விளங்குவதற்கு அடிப்படையை அமைத்தவர்கள் பாபா ஃபக்ருத்தீன் (ஒலி)அவர்கள் தான், கியாமத்து நாள் வரை இது தொடர அல்லாஹ் அருள் புரிவானாக!

ஜனாப் ஹைதர் அலீ சாஹிப் (கலீஃபத்துல் காதிரி, ஷத்தாரி, வசிஷ்தி, ரிஃபாயி) அவர்கள் இந்நூலை மிகவும்

சிறப்புற எழுதியுள்ளார். அரிய பல ஞான ரகசியங்களின் பொக்கிஷமாய் இந்நூல் விளங்குகிறது.

தன்னை அறிதல், இறைவனை அறிதல், இவ்வுலகின் யதார்த்த நிலையை அறிதல், மறுமையின் யதார்த்த நிலையை அறிதல் என்னும் தத்துவார்த்த முறையை உணர்ந்தறிந்து முக்தி நிலைபெறும் ஞான மார்க்க விளக்கங்களையும் தெளிவுபடுத்தி எழுதியுள்ளார்கள்.

ஆசிரியரின் இந்த சீரிய தொண்டு ஆன்மீக விளக்கங்களின் வெளிச்சத்தில் சமய நல்லிணக்கத்தை பிரதிபலித்து காட்டுகிறது. ஆசிரியர் அவர்களின் எழுத்துலக சேவை தற்காலத்தில் மிகவும் தேவையாக உள்ளது.

மெய்ஞ்ஞானிகளின் விருப்பம் அல்லாஹ்வின் விருப்பமாகி, அல்லாஹ்வின் ஆற்றலால் மெய்ஞ்ஞானிகளின் விருப்பங்கள் அவர்கள் விரும்பியது விரும்பிய படியே நடந்தேறுகிறது. இதுவே அவுலியா அல்லாஹ்வாகிய மகான்களின் கராமத்து- கஷ்ஃபு அற்புதம் என்று உலகம் கண்கூடாக தரிசிக்கிறது.

'இறைநேசம் என்னும் கோட்டையின் கதவு எப்போதும் திறந்தே இருக்கிறது. அங்குச் செல்வோரைத் தடுப்பார் ஒருவருமிலர், ஆனால் அங்குச் செல்லத் தகுதியுடையதாக தங்கள் உள்ளத்தை பண்படுத்திக் கொள்வோர் வெகு சிலரே'. -ஹஜ்ரத் ராபியா பஸரீ(ரஹ்)

பாபாவின் வரலாற்றோடு அவர்கள் ஏற்படுத்தியுள்ள ஃபுகராக்களின் கலாச்சாரத்தையும் விளக்கும் இந்நூல் பன் மொழிகளிலும் படைக்கப்பட்டு இனிய, எளிய, தெளிந்த நடையில் உலக மக்கள் இதயத்தில் நன்னெறிகள் இயல்பாக படியும்படிச் செய்ய எல்லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டுகிறேன். ஆமீன்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', என்ற கருத்திற்கேற்ப இந்நூலை பிறரும் படித்துப் பயன்பெற விழைகிறேன். அனைவரும் இறைவன் நேசத்தைப் பெற வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக! ஆமீன்.

இப்படிக்கு,

**M.H. ரஹீமுத்தீன் N.K.M.**

திருச்சி **(26-09-2012)**



**பணிந்துரை**

மனிதநேய மாமணி, அரிமா, முனைவர்,
அல்ஹாஜ் க.அ. முஹம்மது கமாலுதீன்,
சுஹர்வர்தியா, கலந்தரியா,
ஹாங்காங்/ சைனா.
மின்னஞ்சல் -kamaludin12345@yahoo.com, kamaludin12345@hotmail.com.

சுமார் 25 வருடகாலங்களுக்கு முன்பு எங்களது ஆன்மீகத் தந்தை (முர்ஷித்), பெனுகொண்டா தர்ஹா சதர் சஜ்ஜாதா நஷீன் சங்கைக்குரிய ஹஜ்ரத் சையபதினா காஜா செய்யித் ஷா பாபா அப்தால் ஹுஸைனி சுஹர்வர்தி(ரஹ்) அவர்களின் ஆன்மீக கலந்துரையாடலில் பங்கேற்ற சமயம் சுஹர்வர்தியா தரீக்காவை சேர்ந்த நானும், என் ஆன்மீகச் சகோதரர் என்.கே. பெரோஸ்கான் அவர்களும் மற்ற அன்பர்களும்,

சங்கைக்குரிய ஹஜ்ரத் சையபதினா பாபா நத்ஹர் ஒலி தப்லே ஆலம் பாதுஷாவின் இதயக்கனி பெனுகொண்டா நகரில் ஆன்மீக சுடரொளி, எங்களின் ஆன்மீக முப்பாட்டனார் சங்கைக்குரிய ஹஜ்ரத் சையபதினா பாபா செய்யதுல் ஆரிஃபீன்,சுல்தானுல் மசாக்கீன். ஃபுர்ஹானுல் ஆஷிக்கீன், குத்புல் அஃப்லாக், சிராஜுஸ் ஸாலிஹீன், ஷம்சுல் ஆரிஃபீன் சையபதினா பாபா ஃபக்ருத்தீன் ஹஸனி வல் ஹுஸைனி பாதுஷா சீஸ்தான்(ரஹ்) அவர்களின் ஜீவியசரித்திரம் தமிழ் மொழியில் வெளியிட வேண்டுமென்ற ஆவலை வெளிப்படுத்தினோம்.

எங்களது சங்கைக்குரிய பீர் முர்ஷித் அவர்கள், உருது, பார்சி மொழியில் பதியப்பட்டிருந்த தகவல்களை திரட்டி தமிழாக்கம் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த தகவல்களை சகோதரர் பெரோஸ்கான் கோர்வை செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

ஆனால் அல்லாஹ்வின் நாட்டப்படி எங்கள் முர்ஷித் அவர்கள் எங்கள் அனைவரின் புறக்கண்களை விட்டு மறைந்து விட்டார்கள். ஆரம்பித்து வைத்த எங்கள் முர்ஷித் முடித்து வைப்பதற்கும் துணை இருப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்து வந்தது.

முர்ஷித் பாபா அவர்களின் பரம்பரை வாரிசும், ஆன்மீக வாரிசுமான சங்கைக்குரிய ஹஜ்ரத் காஜா செய்யத் ஷா பாபா ருக்னுத்தீன் அஹமது ஹுஸைனி உரூப் தாஜ் பாபா சாஹிப், சதர் சஜ்ஜாதா நஷீன் அவர்கள் மற்ற தகவல்களையும் திரட்டித் தந்ததுடன் இந்த புனித நூல் சிறப்பாக வெளிவர ஆசீர்வதித்து துஆ செய்தார்கள்.

மதிப்பிற்குரிய ஹைதர் அலீ யகீனுல்லாஷா அவர்கள் எங்களுக்கு கிடைத்தது நாங்கள் செய்த புண்ணியத்தின் பலன். அவர்கள் திருக்கரங்களால் தான் இப்புனித சரித்திரம் தமிழ் மொழியில் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் என்பது ஆன்மீகப் பேரரசர், சங்கைக்குரிய ஹஜ்ரத் சைய்யதினா பாபா செய்யிதுஸ் ஸாதாத் பீர் நத்ஹர் ஒலி தப்லே ஆலம் பாதுஷா(ரஹ்) அவர்கள் மற்றும்,

ஆன்மீக சுடரொளி எங்களின் ஆன்மீக முப்பாட்டனார் சங்கைக்குரிய ஹஜ்ரத் சைய்யதினா பாபா ஃபக்ருத்தீன் ஹஸனி வல் ஹுஸைனி பாதுஷா சீஸ்தான்(ரஹ்) அவர்கள், எங்களது உயிரினும் மேலான எங்கள் முர்ஷித், சங்கைக்குரிய ஹஜ்ரத் சைய்யதினா காஜா செய்யத் ஷா பாபா அப்தால் ஹுஸைனி சுஹர்வர்தி(ரஹ்) ஆகியோர்களின் நாட்டமாகவும் துஆ பரக்கத்தாகவும் இருந்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

ஜனாப். ஹைதர் அலீ அவர்கள் தாங்களது எழுத்துப்பணி, ஆன்மீகப் பணிகளுக்கிடையே, உடல் நிலையையும், சிரமங்களையும் பாராது மிகக்குறுகிய காலத்தில் இந்த அறிய பொக்கிஷத்தை நூல் வடிவத்தில் கொண்டு வந்தது மிகவும் சிறப்புக்குரியது. அல்ஹம்துலில்லாஹ். இதற்கான நற்பலன்களை அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிவான். ஆமீன் ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

தங்களின்,

ஹாங்காங். க.அ. முஹம்மது கமாலுதீன்,



**எதிர்ப்புரை**

**R.** சையத் அன்வர் பாஷா,
வழக்கறிஞர் மற்றும் நோட்டரி,
எண் : 154/3, மாடி, தாலுக்கா அலுவலக சாலை,
ஓசூர்- 635 109. கிருஷ்ணகிரி மாவட்டம்.

நம் அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

பாராளும் ஃபக்கீர்களின் பேரரசர் பெனு கொண்டாவின் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா என்ற நூலின் ஆசிரியர் அவர்களை நான் கடந்த 10 வருடங்களாக நன்கு அறிவேன். எனக்கு இறையியல் தொடர்பான கல்வி கல்லூரியில் நுழைந்தவுடன் காணாமல் போய்விட்டது. எனினும், பாமர மக்கள் புரிந்து கொண்டுள்ள இஸ்லாம்தான் நான் நம்பிக்கை கொண்டுள்ள இஸ்லாத்தின் கரு.

பொதுவாகவே இறையியல் கோட்பாடுகளை போதிப்பவர்கள், யாராக இருந்தாலும் அவர்களின் நோக்கம் குறித்து மிக்க கவனமாக இருப்பேன். ஓர் விதையை ஊன்ற முயற்சிக்காதவனுக்கு அந்த விதையால் முளைத்த சிறு செடியின் பலனை தா என்று இறைவனிடம் யாசிப்பதற்கும் தகுதியுடையவன் அல்ல என்று நம்புகிறவன் நான்.

ஆனால், இறையியல் கோட்பாடுகளை போதிப்பவர்கள், உழைக்காமலும் உழைப்புக்கான போதனையை செய்யாமலும், மனிதன் இந்த உலகில் தனது கடமைகளை இறைவன் மேல் சுமத்தி, அவன் பார்த்துக் கொள்வான் என்று சமூக கடமைகளை புறந்தள்ளியதால்தான், ஸ்பெயின் தேசத்து முஸ்லிம்கள், பல நூற்றாண்டு சுகபோக வாழ்க்கைக்கு பின் கி.பி.1450/1460 ஆண்டுகளில் துடைத்தெரியப் பட்டார்கள் என்பது வரலாற்று கூர் ஆய்வு.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாய்மொழி ஒரு நிறுவனமாக உயர்ந்து நின்ற போதே, இஸ்லாம் என்ற வினைக்கு எதிர் வினை சூல் கொண்டது. அந்த சூல் இன்று உலகை ஆண்டு கொண்டிருக்கிறது. அந்த எதிர் வினையின்,

தாக்குதல்களை நடைமுறையில் வெற்றிகொண்டு உலக இஸ்லாமிய சமூகத்தை மீட்டெடுக்கும் நோக்கில் ஒரு தனி மனிதரின் சிந்தனையில் உதித்ததுதான் ஃபக்கிரியா என்ற வலைப்பின்னல். ஃபக்கிரியா என்பது உயரிய மனித குணங்களின் ஒன்றான தன்னை இழந்தும், பிறருக்கு ஈகை செய்யும் சிறப்புடையது.

அந்த ஃபக்கிரியா குணம் கொண்ட ஒரு ஃபக்கீர் மூஸா(அலை) காலத்திலேயே இருந்ததாகவும், அல்லாஹ் மூஸா(அலை) அவர்களை சோதனை செய்யும் பொருட்டு, சிறு கத்தியும் ஒரு தட்டும் கொடுத்து உயிருள்ள மனிதனின் மாமிசம் வாங்கி வா என்று சொன்னதாகவும், மூஸா(அலை) ஊரெங்கும் அலைந்து திரிந்ததில் அந்த ஃபக்கிரிய குணம் கொண்டவன் தனது உடலில் மாமிசத்தை அறுத்து கொடுத்ததாகவும்,

அத்தகைய ஃபக்கிரிய குணம் கொண்டவர்களே ஃபக்கீர்கள் என்றும், அத்தகைய ஃபக்கீர்களின் இறை வேண்டுதல், அல்லாஹ்வின் முன் வலிமையுடையது என்றும், மூஸா(அலை) அவர்களின் பரிந்துரைகள் புறந்தள்ளிய அல்லாஹ், உடலில் மாமிசத்தை அறுத்துக் கொடுத்த ஃபக்கீரின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டதாக சொல்லப்படும்,

இத்தகைய பல நூற்றாண்டு கதைகள், தற்போது குறுந்தகடுகளில் வெளியாவது ஃபக்கீர்களின் ஈகை குணத்தையும், அவர்களின் கோரிக்கைகள் எத்தகைய வலிமையுடையவை என்றும் பாமர மக்கள் உணர உதவுகிறது.

மூஸா(அலை) அவர்கள், இறைவனிடம் உன்னுடைய தூதுவனான எனது கோரிக்கையை விட ஒரு ஃபக்கீரின் கோரிக்கை வலிமையானதா? என்று கேட்க, "ஆம், நான்தான் உன்னை எனது தூதனாக பிறப்பித்தேன், உனது உடலில் இருந்து மாமிசத்தை நீ அறுத்து கொடுத்திருந்தால், உனக்கு முன்னுரிமை கொடுத்திருப்பேன், ஆனால் நீயோ அலைந்து திரிந்து அந்த ஃபக்கீரிடமிருந்துதானே வாங்கி வந்திருக்கிறாய் அதனால்தான் ஃபக்கீருக்கு முன்னுரிமை" என்று கூற வாயடைத்து போனாராம் மூஸா(அலை).



அத்தகைய ஃபக்கிரியா தன்மைக்கு தமது சீடர்களைக் கொண்டு, உலகலாவிய வலைப்பின்னலை உருவாக்கியவர் தான் அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்) அவர்கள், அத்தகைய ஃபக்கீர்களின் தரீக்கா என்ற அமைப்பு உருவாக்கி, தங்களை ஈந்து சமுதாயத்தை காத்து நின்றவர்கள்தான் தரீக்காவாதிகள் என்று அழைக்கப்படும் ஃபக்கீர்கள். அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்) அவர்களின் பிறப்பு, இறப்புக்குட்பட்ட காலத்தின் வரலாற்றை ஆய்வு செய்தால், உலகம் முழுதும் முஸ்லிம்களின் சிலுவைப் படையினரால் கொல்லப்பட்ட பின்னனியை புரிந்து கொள்ள இயலும்.

இந்த தரீக்கா அமைப்பினர் ஒரு இலட்சியத்துடன், களபலியாக முன் வந்தார்கள். அந்த அமைப்பின் நடைமுறைகள், பதவியின் கடமைகள், தனித்த முடிவெடுக்கும் அதிகாரம், அதன் படித்தரம் கிலாஃபத் என்று வழங்கப்பட்டது. இவர்களின் தனிமனித கிலாஃபத் பட்டம் பெற்றவர்களே இஸ்லாமிய உலக விவகாரங்களின் கிலாஃபத் அமைப்பின் பணியாளர்கள், இவர்களே உலகின் அனைத்து பகுதிகளிலும் ஃபக்கீர்கள் என்று அமைக்கப்படும் சமூக பாதுகாப்பு அமைப்பினர்.

1928 க்கு முன்பு இவர்களே இஸ்லாமிய ராணுவமாக உலகெங்கும் கிலாஃபத் என்ற இஸ்லாமிய உலக விவகாரங்களின் அமைப்பாக இருந்து வந்தனர். இஸ்லாத்தை இந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்த விரும்பியவர்களை எதிர்த்து தீவிர தாக்குதல்களுக்கு தங்களை உட்படுத்திக் கொண்டவர்களின் இயக்கம் தான் ஃபக்கிரியா ஆகும்.

பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா அவர்களின் காலமும், அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் காலமும் சிலுவை போர்களின் சமூக பின்னனியைக் கொண்டவைகளே. 1928ல் கிலாஃபத் தலைமை வீழ்த்தப்படும் வரை இன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் அன்றைய அனைத்து பணிகளையும் செய்தவர்கள் இவர்களே. கிலாஃபத் வீழ்த்தப்பட்ட பின்புதான் ஐக்கிய நாடுகள் சபையை, கிலாஃபத்தின் அதன் பாத சுவடுகளின் மீது ஐரோப்பிய உலகம் உருவாக்கிக் கொண்டு தனது சட்டைப் பையில்

வைத்துக் கொண்டது.

கேரள கடற்கரையில் போர்த்துக்கீசியர்களுக்கும், கேரள முஸ்லிம்களுக்கும் நடந்த 102 வருட தொடர் போரின் நிகழ்வுகளை ஆய்வு செய்தால், இஸ்லாமிய உலக விவகாரங்களின் அமைப்பான கிலாஃபத் தளபதிகளும், தென்னகத்து ஃபக்கீர்களும் குறிப்பாக கேரள மாப்பிள்ளை முஸ்லிம்களும் ஆற்றிய பங்கு வெளிச்சத்திற்கு வரும்.

எந்த மையக் கருத்துடன் விஜய நகர சாம்ராஜ்ய மன்னர்கள், போர்த்துக்கீசியர்களுக்கு ஆதரவு செய்து முஸ்லிம்கள தோற்கடித்தார்கள் என்ற விவரம் புரியும். போர்த்துக்கீசியரின் முதல் கவர்னர் ஷாகுல் ஹமீது நாயகத்துடன், ஏன் போர் புரிய வேண்டும்? ஃபக்கீர்களின் ஒரு பிரிவினான ரிஃபாயிகளுக்கு ஆயுதம் தரிக்கும் உரிமையை கை கொண்டுள்ளார்களே ஏன்? ஃபக்கீர்களில் அறிவு ஜீவிகள் போன்ற பிரிவும், போர் கலை பிரிவும், கோட்டை காவலர், தளபதி ஆசிரியர், தூதுவர், மருத்துவர், தனித்த முடிவெடுக்கும் உரிமை கொண்ட கிலாஃபத்தை கை கொண்டவர்களும் இருப்பது ஏன்?

இவை சிதைந்து போன ஃபக்கிரியா ராணுவத்தின் சொற்ப அடையாளங்கள். ஆன்மீகம் சமூகம் ஒரு நாணயத்தின் இரண்டு பங்கங்கள், ஒரு பக்கம் தேய்ந்து போனதால் இந்த சமூகம் சிலுவை போர் வீரர்களின் சாட்டை நுனிகளுக்கு சாட்சியம் சொல்லிக்கொண்டு இருக்கிறது. செத்து மடியும் முஸ்லிம்களின் நிலையும், அழிந்து கொண்டிருக்கும் இஸ்லாமும் நமக்கு தேவையில்லை.

இஸ்லாமும் வாழவேண்டும் , முஸ்லிம்களும் வாழவேண்டும். முஸ்லிம்களின் கரங்களைக் கொண்டே இஸ்லாமிய பெரியார்களின் நினைவிடங்களை இடித்து தள்ளுவதற்கான கருத்தாயுதத்தை முஸ்லிம்கள் கையில் ஐரோப்பிய உலகம் திணித்துள்ளது. இதனை புரிந்து கொள்ள உலக வரலாற்றின் இறையியல் ஆய்வையும் சமூக இயல் ஆய்வையும் மேற்கொண்டால், நமது எதிரிகளின்வேர் எதுவரை நீண்டுள்ளது என்று புரியும்.



அதன் விரிவாக்கமாக ஃபக்கிரியா இயக்கத்தின் உண்மை நோக்கத்தை ஆய்வு செய்ய வேண்டும்.ஃபுகரா கலாச்சாரம் மனித ஆற்றல் முழுவதும் மனித சமுதாயத்திற்கு பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டது ஆகும். தப்லே ஆலம் பாதுஷா(ரலி) பாபா ஃபக்ருத்தீன்(ரலி) ஷாகுல் ஹமீத்(ரலி) ஆகியோரின் வாழ்க்கை மனித சமுதாயம் பயனடைந்த ஆன்மீக வழிகளாகும்.

மனித சமுதாயத்திற்கு பயன்படாத ஆன்மீகம் பயனற்றது என்பதே ஃபுகரா கலாச்சாரம். ஆனால் அது அழிக்கப்பட்டுவிட்டது. அதன் சிதைவுகளே ஃபக்கீர்கள் ஆய்வு என்ற நோக்கில் கூட மறுஜென்ம பார்வை தேவையே இல்லை. ஏனெனில், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆய்வு என்றே நினைக்கிறேன். அல்லாஹ் நமக்கு வெளிக்காட்டியது மட்டுமே கடலளவு.

சிறுகுழந்தை தனது ஒரு கையை விரித்து விரலுக்கு ஒரு மிட்டாய் என்று இரண்டு கைகளை விரித்து 10 மிட்டாய் என்று சொல்ல முடியும். 10க்கு மேல் இருகைகளை விரித்து எண்ணிக்கையை எப்படி கணக்கிட முடியும்? அல்லாஹ் படைத்த மனிதனின் ஆற்றல், சிறு குழந்தைக்கு ஒப்பானதுதான்.

ஆசிரியரின் மறுஜென்ம கருத்து எந்த நிலையிலும் இஸ்லாமிய சமுதாயத்திற்கு தேவையே இல்லை. அது வரலாற்று சின்னங்களின் அருங்காட்சியகம் போல பாவித்து ஆசிரியரின் வாத திறமைக்கு மதிப்பெண் கொடுக்கலாம்.

மறைஞானங்களை கற்றும், புரிந்தும், உணர்ந்தவர்கள் மட்டுமே இந்த நூலை சலனமின்றி கடக்க முடியும் என்று கருதுகிறேன். மறை ஞானங்களைப் பற்றிய புரிதல்களை வேண்டுவோர் படித்து பயன்பெற உதவும் என்பது நிச்சயம்!

எல்லாம் வல்ல அல்லாஹ் போதுமானவன்!

இன்னணம், அன்புள்ள,
**R.**சையத் அன்வர் பாஷா.

ஓசூர்,
17.10.2012.

## ஏற்புரை

*மவுலானா மவுல்வி அஷ்ஷெய்கு*
*ஷா வஜ்ஹுன்னகீ சகாப் சாஹிப் காதிரி சத்தாரி,*
*தலைவர், தமிழக தர்காக்கள் ஒருங்கிணைப்பு பேரவை,*
*முத்தவல்லி,ஹஜரத்சையத்ஷாரஹமத்துல்லாசாஹிப்சத்தாரி*
*தர்கா ஷெரீஃப், கிள்ளை 608 102, சிதம்பரம்(வழி).*

*"இல்லை இல்லவே இல்லை அல்லாஹு என்ற அவன் ஒருவனைத் தவிர (லா இலாஹ இல்லல்லாஹ்)" என்கின்ற மூலப் பொக்கிஷ திருக்கலிமாவைக் கொண்டு துவங்கி ,*

*"குன்து கன்ஜன் மக்பியன்" நான் மறைந்த பொக்கிஷமாக, "சிர்ருல் அஸ்ரார்" இரகசியங்களின் இரகசியமாய், என்னுள் நான் "ஜாத்" என்ற உள்ளமையாய் இருந்து, ஏதுமே இல்லாதிருந்த போது "ஃப அஹபப்து அன உஹ்ரிஃப்" என்னை அறிந்து கொள்ள யாசித்தேன்.*

*"அந்த க்ஷணத்தில் நான் என்ற போதினிலே "மஜ்ஹரே அத்தமாக" வெளிப்பட்ட பேரொளி பிரகாச ஜோதியே நூரே முஹம்மதாகிய நபிகள் கோமான் கண்மணி நாயகம் அஹ்மதே முஜ்தபா முஹம்மதே முஸ்தஃபா (ஸல்)" என்று குறிப்பிட்டு அல்லாஹு தன் ஹபீபும் மஹ்பூபுமாக அவர்களை ஏற்றுக்கொண்டான்.*

*"அனமின் நூருல்லாஹி குல்லுஷையின் மினன் நூர் நான் அல்லாஹ்வின் ஜோதியான நூரிலிருந்து, மற்ற அனைத்து பிரபஞ்சமும் என் நூரிலிருந்து அன்றி வேறில்லை" என்ற ஹதீதுல் குத்ஸியான நபிமொழி இதனை ஆதாரப்படுத்துகிறது:-*

*"மன் அரஃப நப்ஸஹு ஃபகத் அரஃப ரூஹஹு வமன் அரஃப ரூஹஹு ஃபகத் அரஃப ரப்பஹு வமன் அரஃப ரப்பஹு ஃபகத் குதிலபில்லாஹ்". யார் நப்ஸ் என்கிற தன்னை அறிந்து கொள்கிறார்களோ அவர்கள் ரூஹ் என்கிற ஆன்மாவை அடைகிறார்கள். யார் ரூஹு என்கிற ஆன்மாவை அடைந்து கொள்கிறார்களோ அவர்கள் ரப் என்ற ஏக நாயனை அறிந்து கொள்கிறார்கள்.*



*அவர்கள் ஃபனாவாகி அவனிலே அழிந்து பட்டுப் போவதால், கௌதாக, குதுபாக, அப்தாலாக, மஸ்தானாக, கலந்தராக, சூஃபியாக, ஃபக்கீராக படித்தரங்களை பெற்று பேரானந்த நிலை அடைந்து அல்லாஹுவிலேயே அவர்கள் நடந்தாட்டப்படுகிறார்கள். இவர்களே இறை நேசச் செல்வர்களான வல்ல ஒலிமார்கள் அவுலியாக்கள் நாதாக்கள் என்ற சீர்மிகு சீதேவியானவர்கள் ஆவார்கள்.*

*இந்த ஒலிமார்களிலேயே சின்னஞ்சிறு மர்தாபா படித்தரத்தை கொண்டவர்கள் கூட இஸ்லாமிய மார்க்க ஷரீஅத் சட்ட அடிப்படையான குர்ஆன், ஹதீஸ்,இஜ்மா, கியாஸ் நிலையில் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ் என்ற அனைத்து ஷரீஅத் சட்டத்தின் ஃபரஜ், வாஜிபு, சுன்னத், முஸ்தஹபு, ஹலால், முபாஹ், மக்ரூஹ், ஹராம் என பகுத்தறிந்து எல்லா கிரியைகளிலும் நல்அமல் செய்து மெய்ஞ்ஞானத்தை கரைத்துக் குடித்து கரைகண்ட மேன்மை மிக்க மேதாவிகளேயாவார்கள்.*

*தஃபூக் யுத்தத்திலிருந்து திரும்பி வந்த திருநபி அவர்கள் "ரஜஊ இலா ஜிஹாதில் அஷ்கர் இலா ஜிஹாதில் அக்பர்! சிறு ஜிஹாது யுத்தத்திலிருந்து மீள்வோம் பெரிய ஜிஹாதை நோக்கி செல்வோம்" என்று கூறி தரீக்கத்தில் தாத்பரியத்தை தெளிவுபட பெருமானார்(ஸல்) விளக்கியுள்ளார்கள்.*

*ஷரீஅத்தில் சிறப்புற்று தேர்ச்சி பெற்றதை அடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸின்படி எள்ளளவும் பிரழாமல் நடந்ததால் தான், கல்வி கடலாம் இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் உலக ஞானம் அனைத்திலும் கரை கடந்த பின்னரும் கூட, தம் குடும்பத்தார் உற்றார் உறவினர்கள் உஸ்தாதுகள், மதரஸா மாணவர்கள் மற்றும் தம் வாழ்நாள் முழுவதும் மார்க்ககல்வி போதித்த பாக்தாத்ஷரீஃபின் நிஜாமியா கலாசாலையையும் விட்டு வெளியேறினார்கள்.*

*"என்னை யாரும் தேடாதீர்கள், பின் தொடராதீர்கள் தூர்சினா மலையின் மீது நபி மூஸா (அலை) அவர்களுக்கு ஒரு அழைப்பு வந்தது போல எனக்கு இறைவனிடத்தில் இருந்து ஒரு அழைப்பு வருகிறது" என்று கூறி தசவுஃப் பாட்டையில் ஜாத் என்ற உள்ளமையை நோக்கி*

பயணப்பட்டு பல ஆண்டுகாலம் சூஃபிகளின் தொடர்பில் ஜெருசலம் முதலிய பல இடங்களில் தவ வாழ்க்கை மேற்கொண்டு தன்னை சம்பூர்ணமாக்கி கொண்டார்கள்.

இத்தகைய ஒலிமார்கள் வாழ்க்கை வரலாற்றிலே செயல்பாட்டு முறைகளிலும், ஞானப்பால் சொரிந்தருளும் தசவுஃப் கருத்துகளிலும் ஷரீஅத்விதிகளுக்கு நேர்மாற்றமான சில செயல்களும் பேச்சுகளும் தோற்றமளிக்க கூடும். ஆனால் அவைகளே உண்மையான சத்தியமான திடமான ஹக்கான நல்ல அமல்களாகும் என்பது அல்லாஹ்வாலும் அவனது ரசூலான நபிகள் கோமான் (ஸல்) நம் உயிருக்கும் உயிரான உயிரைவிட மேலான கண்மணி நாயகத்தின் ஆத்மார்த்த உத்திரவுகளிலும் நியதிகளாக அமையும்.

தித்திக்கும் திருமறை குர்ஆன், நபி மூஸா(அலை) அவர்களுக்கு நபி கிஸர் (அலை) அவர்களை கொண்டு வழிகாட்டி புலப்பட வைத்த மூன்று சம்பவங்களை கூறுவதை உவமை எடுத்துக்காட்டுகளாக கொள்ளலாம்.

மேலும் மன்சூர் அல் ஹல்லாஜ் "அனல் ஹக் நானே சத்திய மெய்ப்பொருள்" என்று கூறியதும், அபூ யஜீது புஸ்தாமி அவர்கள் "மாஃபீ ஜுப்பத்தி இல்லல்லாஹ் என் சட்டைக்குள் அல்லாஹ்வை தவிர எவருமில்லை" என்று முழங்கியதும், ஹஜரத் ஃபரீதுத்தீன் அத்தார் நைஷாப்பூரி அவர்கள் ஹிஜ்ரி 513 ம் ஆண்டு "ஆன் ராகே ஹஜ் ரவேத் பெயா யேத் பெயா யேத்! ஹஜ்ஜு செய்ய விரும்புபவர்கள் யார்? அவர்கள் என்னை வந்து தரிசியுங்கள்" என்று கூப்பாடிட்டு கூவி அழைத்ததும்,

ஹஜரத் அபூ முஹம்மத் ஜரீரி அவர்களின் ஆஸ்தான தைக்காலுக்கு தர்வேஷ் கலந்தர் ஒருவரின் வருகையின் போது அலட்சியமாக இருந்த ஹஜ்ரத்தின் கனவில் தோன்றி, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தலைமையில் இருபதாயிரத்து நூறு நபிமார்கள் வருகை புரிந்து தர்வேஷ் கலந்தருக்கு ஃபாத்திஹா விருந்து உபசாரம் வழங்க உத்தரவிட்டதும் (நூல் தஜ்கிரத்துல் அவுலியா பக்கம் :251,252).

ஃபிர்தவுஸியா ஸில்ஸிலா பிரிவில் மிகப்பெரிய ஷரீஅத் மேதையாக விளங்கிய நஜீமுத்தின் குப்ரா, கவாலி



ஐத்பூ மஜ்லீஸ் கூடாது என்றும், கவாலி நடத்தும் ஷெய்கு ஒலுச் செய்வது சரியில்லை என்றும் விரண்டாவாதம் செய்தபோது, க்ஷணப்பொழுதில் மஹ்ஷர் மைதானக் காட்சி எச்சரிக்கையாக வெளிப்பட்டு ஷரீஅத் மேதையை உண்மை உணரச்செய்த சம்பவம் (நூல் - கஸ்ரே ஆரிஃபான், பாகம் 2 பக்கம் 87)காணப்படுகிறது.

தொழுகைக்கு வராதவர் என்று பாமரர்களான சிலர் கற்பனைசெய்துகொண்டு, சூஃபி ஸர்மத்ஷஹீது அவர்களை தரதரவென டில்லி ஜாமியா மஸ்ஜித் படிக்கட்டுகளில் இழுத்துச் சென்று, தொழுகைக்கு நிறுத்தியபோது அவர்கள் பேஷ் இமாமை நோக்கி "ஓ! பேஷ் இமாமே பொன் மீதும் தங்கத்தின் மீதும் பேராசை கொண்டவரே ஒழுங்காக உள்ளச்சத்தோடு தொழவையும்!" என்று எச்சரித்த போது உண்மைக்குட்டு வெளிப்பட்டு பேஷ் இமாமின் நிலை அங்கு சந்தி சிரித்ததும் ஹிஜ்ரி 1070 ல் நடந்த சம்பவம் (நூல்-ஹஜரத்ஸர்மத்ஷஹீது, பக்கம்40)எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சிஸ்தியா ஸில்ஸிலாவில் ஜலாலியத் என்ற உணர்வு மிகைத்தவர்களாக கருதப்பட்ட மஹ்தூம் அலாவுத்தீன் ஸாபிர் கலியரி அவர்கள், கல்யர் ஷரீஃபின் ஜும்மா பள்ளியிலே தொழுகைக்கு முதல் சஃபில் நின்றார்கள் அந்நேரம், இவர் ஷரீஅத்துக்கு மாற்றமானவர் என்று கூறிய முஹல்லியும், கதீபும், உலமாக்களும் பள்ளியை விட்டு அவர்களை பலவந்தமாக வெளியேற்றினார்கள்,

பள்ளியை விட்டு வெளியே வந்து ஐதுபு நிலையில் கோபப் பார்வையோடு ஸாபிர் கலியரி நாயகம் அவர்கள் "ஓ! அல்லாஹ்வின் ஜாமியா பள்ளியே எம்முடைய ஜும்மா தொழுகையை தடுத்தோரின் தொழுகை பாத்தில் தவறாகிவிட்டது, எனவே நீ ஏன் நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கூக்குரலிட்ட போது அந்த பள்ளிவாசல் அப்படியே நொருங்கி வீழ்ந்து விட்ட சம்பவம் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது(நூல்கள்- பாபா ஃபரீது காலால், ஹக்கீக்த்தே ஜுல்ஜாரே சாபிரி).

கி.பி. 7ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாதுஷா ஒருவர் தன் மகள் என்று தெரியாமல் ஒரு பெண்ணை நிக்காஹ் முடித்து கேடுகெட்ட பெரும்பாவத்தில்

மூழ்கியிருந்த போது அதை கண்டும் காணாதவாறு ஷரீஅத் உலமாக்கள் தைரியமின்றி நின்ற பொழுது கலந்தர் தர்வேஷ் ஒருவர் துணிச்சலுடன் உண்மையை வெளிப்படுத்தி எச்சரித்தார். அவர்தான் பானிப்பட்டு வாழ் ஹஜரத் பூ அலீ ஷா கலந்தர் அவரைப் புகழ்ந்து பாடும் கவாலி பாடல்தான்

தமாதம் மஸ்த் கலந்தர்
அலிகா மஹிலா நம்பர்
தம்ஹை தம்கே அந்தர்
பூ அலீ ஷா கலந்தர் !

என்பதாகும். சேமன்னி ரொட்டி ஃபாத்திஹா நடத்தப்படுவதும் அந்த பெருமகனார் ஹஜரத் பூ அலீஷா கலந்தர் அவர்களுக்குத்தான்.

இப்படி கோடிக்கணக்கான விசித்திரமான சம்பவங்கள் இஸ்லாமிய இறை நேசச் செல்வர்களான வல்ல ஒலிமார்களின் வரலாற்றில் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன. அப்படிப்பட்ட வரலாறுகளில் ஒன்றாகத்தான் ஹஜ்ரத் நத்ஹர் ஒலி தோஹ்ல் சமந்தர் திருச்சி தப்லே ஆலம் பாதுஷாவின் பிரதான கலீஃபாக்களில் முதன்மையானவரின் புண்ணிய வரலாறுத இந்த "பாராளும் ஃபக்கீர்களின் பேரரசர் பெனுகொண்டாவின் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா" என்ற நூலாக வெளிவருகிறது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்திருக்க வேண்டிய ஒலியுல்லா அவர்களின் வரலாற்று பொக்கிஷம் இன்று நமக்கு, நாகூர் பாதுஷா நாயகத்தின் காதிரியா ஷத்தாரியா சிஸ்த்தியா ரிஃபாயியா தரீக்காவின் கலீஃபாவாக, ஷெய்காக திகழக்கூடிய கண்ணியமும் சங்கையும் நிறைந்த பெரியவர் மு.அ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா அவர்களால் நூலாக்கம் செய்து தரப்பட்டுள்ளது.

எல்லா விதத்திலும் முழுக்க முழுக்க தேர்ந்த பாண்டித்யம் பெற்ற நூலாசிரியர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஃபக்கீர்களின் பேரரசர் என்ற தலைப்பில் ஃபக்கீர் என்ற சொல்லுக்கு தசவுஃப் ஞானப்பாட்டையில் சூஃபியாக்களிடத்தில் ஷரீஅத் சட்ட கட்டுப்பாட்டுக்குள் பக்கம் பக்கமாக விளக்கம் அளிக்கலாம்.



பீரே லா ஸானி, கிந்திலே நூரானி, மஹ்பூபே சுபஹானி, கர்முஷக் ஆஸானி, கௌதுஸ் ஸமதானி, மெய்நிலைக் கண்ட ஞானி, வள்ளல் மஹ்ஷூக்கு ரஹ்மானி ஆலே நபி, அவுலாதே அலீ, சையது ஸாதாத் சையதினா ஷேக் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் 40 ஆண்டு கால நெடும் நோன்பையும் 22, ஆண்டு கால கடும் தவத்தையும் தமது ஐம்பதாவது வயதில் (ஹிஜ்ரி- 521,கி.பி.1027) முடித்து சம்பூர்ணம் செய்தபோது அர்ஷுடைய புரத்திலிருந்து அல்லாஹ்வான ஏகன்,

"யா சையத் முஹ்யித்தீன்
யா ஷேக் முஹ்யித்தீன்
யா அவுலியா முஹ்யித்தீன்
யா பாபா முஹ்யித்தீன்
யா கவுஸ் முஹ்யித்தீன்
யா சுல்தான் முஹ்யித்தீன்
யா பாதுஷா முஹ்யித்தீன்
யா ஹாஜா முஹ்யித்தீன்
யா மக்தூம் முஹ்யித்தீன்
யா தர்வேஷ் முஹ்யித்தீன்"

என்று அழைப்புகளை விடுத்தபோது மேற்கூறிய 10 அழைப்புகளுக்கும் அமைதியாக மௌனித்திருந்த ஒலிகள் கோமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள், "யா ஃபக்கீர் முஹ்யித்தீன்!" என்ற நிதா அசரீரி அல்லாஹ்வின் புறத்திலிருந்து அழைப்பாக ஒலித்தபோது "லப்பைக் யா ரப்பி ,இதோ வந்தேன் இறைவா" என்று பதிலளித்த சம்பவம் ஃபக்கீர்களின் மகோன்னத நிலைக்கு ஒரு உச்சக்கட்ட எடுத்துக்காட்டாகும்.

எனவே இந்நூலின் நாயகர் பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் வாழ்க்கையை சிறப்பாக ஊக்கத்தோடு ஆக்கம் செய்த ஆசிரியப் பெருந்தகையை நாமெல்லாம் பாராட்டிக் கொண்டாட வேண்டும் என்றால் மிகையல்ல, இதில் ஆச்சரியப்படத்தக்க நிகழ்வு என்னவென்றால், அழைப்பு என்ற தலைப்பில் ஆசிரியர் தனது மன ஆதங்கத்தை கொட்டி இருக்கின்ற போது அவர் பாபாவின் வழிவந்த ஃபக்கீர்களின் பாரம்பரியத்தில் தோன்றியிருப்பதை பார்க்கும் போது

அது மேலும் நூலின் உயர்வுக்கு மதிப்புக் கூட்டுவதை காண முடிகிறது.

இதுபோன்ற புனித தரீக்கத்து நூல்களிலே உள்ள கருத்துக்கள் ஷரீஅத் சட்டத்திற்கு முற்றிலும் மாற்றாக இருப்பதைப் போல் தோன்றும் சில கருத்துக்களை விமர்சிக்கும் தேவ் பந்த் தப்லிக் வஹாபிகள் மௌலவிகள் மேலும் இன்றைய நவீன தௌஹீது வாதிகள் வரையுள்ள விதண்டாவாதிகளின் பேச்சுக்களை நாம் ஒரு பொருட்டாகவே கொள்ளவேண்டியதில்லை.

ஆனால் சுன்னத்துல் ஜமாஅத் சங்கைக்குரிய உலமாப் பெருமக்கள், ஷரீஅத்துக்கு முரணாகத் தோன்றும் கருத்துக்களை ஷெய்குமார்களை அணுகி தரீக்கத்தின் தாத்பரியத்தோடு கூடிய விளக்கங்களை பெற்று கொள்ள வேண்டும், அல்லது தாமும் சூஃபித்துவத்தோடு ஒன்றி ஹகீக்கத்தை ஆராய்ந்து மெய்ஞ்ஞான மஃரிபாவை பெற முயற்சிக்கலாம் அதை விடுத்து விமர்சிப்பது என்பது புரிதலின் குறைபாட்டையே குறிக்கும் என்பது தாழ்மையானவனின் பணிவான கருத்தாகும்.

வஹ்தத்துல் உஜூத் என்ற அத்வைத சித்தாந்தத்தையும், முகலாய சக்கரவர்த்தி மஹா அக்பரின் நிறைந்த அரசவையில் வஹ்தத்துல் சுஹூத் என்ற துவைத சித்தாந்தத்தை விளக்கியவருமான முஜதித் அல்ஃபதானி சர்ஹிந்தி அவர்களின் நிலையையும் மேலோட்டமாக பார்த்து இவை இந்து மதத்தின் தழுவலென்று வசை பாடுவோர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் ஹகீக்கத்தான இந்த மெய்ஞ்ஞான இரகசியங்களை வெளிப்படுத்தி போதித்ததின் விளைவாக இஸ்லாமை சகோதர சமயத்தவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து தழுவிய சம்பவங்களை இஸ்லாமிய வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. இது மட்டுமல்லாமல் இதன் விளைவாக தர்காக்கள் உரூஸ் வைபவங்கள் கந்தூரிகள் கொடியேற்றங்கள் போன்ற நிகழ்வுகளில் கூடும் மக்களின் ஜாதி மத பேதமற்ற மத நல்லிணக்கம் உண்டாவதையும் கண்கூடாக காண்கிறோம்.

இத்தகைய அற்புதங்களை நிகழ்த்தியிருக்கும்



ஒலிமார்கள் இஸ்லாத்திற்கு செய்திருக்கும் இந்த மாபெரும் சேவையை கியாம நாள் வரை எடுத்து பரைசாற்ற வேண்டுமென்பது உலமாக்கள் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

இப்புனித நூலுக்கு ஒலியுல்லா அவர்களின் கிளைக்கொழுந்தாக, இக்காலத்தில் ஃபக்கீர்களின் தலைமைப் பீடமாக விளங்கும், பெனுகொண்டா தர்காவின் ஸஜ்ஜாதா நஷீன் கண்ணியம் நிறைந்த தாஜ்பாபா அவர்களும் மற்றும் ஏனைய பெரியோர்களும் சிறப்பான உரைகள் வழங்கியிருக்கும் போது தரீக்கத்தின் ஞான வழியில் முழுக்குருடனான மிக மிக அர்ப்பனான, இந்த பாவியிடம் உரை எழுதித்தர நூலாசிரியர் வேண்டியபோது ஓர் உன்னத கலீஃபா அவர்களின் உத்தரவு என்ற அடிப்படையில் கிருக்கலாக சில வரிகளை சமர்ப்பித்துள்ளேன்.

இதனாள் நமக்கு ஏதும் சவாபான நன்மை அல்லாஹ் வழங்கமாட்டானா என்ற சுயநலத்தின் அடிப்படையிலேயே இதனை எழுதியுள்ளோம், மற்றபடி எனக்கு தெரியும் என்ற மேதாவித்தன நோக்கத்தினால் அல்ல. மாறாக நாளை மஹ்ஷர் நாளில் நபி பிரான்(ஸல்) அவர்களின் உயர்ந்த ஷஃபாஅத் மன்றாட்டல் பாவமன்னிப்பு இந்த பாவிக்கும் கிடைக்க வேண்டும், அதற்கு வாசிப்போரும் இருகரம் ஏந்தி இரைஞ்ச வேண்டும் என்று பணிவாக விண்ணப்பித்தும் அனைத்து தவறுகளுக்கும் தாழ்மையாக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு நிறைவுசெய்து கொள்கிறேன்.

நன்றி , வஸ்ஸலாம்!

அல்லாஹ் பஸ்! பாகி ஹவஸ்!
அல்லாஹ் ஏக நாயகனே போதுமானவன் !
அவனன்றி மற்றதெல்லாம் அழிந்து மடிந்து போகும்!

என்றும் பணிவுடன்,
தாழ்மையுள்ள,
சையது வஜுஹுன்னகீ சக்காப்,
கிள்ளை.

15.10.2012

பெனுகொண்டாவின் மெய்ஞ்ஞானப் பேரரசர்
பாரசீக ரோஜா பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாஹ் அவர்களின்
நேசர்களே!
நான் உங்களோடு பேச விரும்புகிறேன்!
அஸ்ஸலாமு அலைக்கும்! அன்பு வாழ்த்துக்கள்!

எனது சொந்த ஊரான முன்னாள் தஞ்சை மாவட்டத்திலுள்ள கூத்தூர் கிராமத்தில் உள்ள மக்கள் நாகூர் நாதர் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் வருடாந்திர உற்சவ காலத்தை அமோகமாக கொண்டாடுவது வழக்கம்.

அல்லாஹ்வை வணங்குவது போதும், அவுலியாக்களை கொண்டாடுவது ஷிர்க், இறைவனுக்கு இணைவைப்பது :- என்ற கொள்கை தலை தூக்கிவிட்ட பிறகு, எல்லாமே இளமை கால சந்தோஷ கனவுகளாய் கலைந்து போய்விட்டன. பாதுஷா நாயகத்தின் கொடி ஏற்றப்படுவதற்கு பத்து நாட்கள் முன்பிருந்தே ஜமா ஃபக்கீர்களின் வருகையால் எங்கள் கிராமம் அமர்க்களப்படும்.

ஃபக்கீர்களின் ஐந்து குழுவினரும் தனித்தனியாகவும் வருவார்கள், ஒன்று சேர்ந்தும் வருவார்கள். நஃபீல் என்ற துந்துபியை ஊதிக்கொண்டு ‘‘நாங்கள் நாகூர் நாயகத்தின் ஃபக்கீர்கள், எஜமான் காதிர்வலீயின் காணிக்கைப் பொருட்கள், தேங்காய், மாங்காய், அரிசி இதர வீட்டு உபயோகப் பொருட்கள் வைத்திருப்பவர்கள் கொடுக்கலாம்’’ என்று உரத்த குரலில் கூவிகொண்டு ஜமா தெருவில் வருவது அதிசய காட்சியாகவே இருக்கும் எனக்கு. ஏனெனில் ‘‘எஜமான் காதிர் ஒலி!’’ என்ற வார்த்தை எனது இதயத்தின் பூபாள ராகம்.

எனது தாயார் ஃபாத்திமாபீவி, அவ்வப்போது ‘‘ஹாதரே! ஹாதர் அவுலியாங்களே!’’ என்று கண்களில் கண்ணீர் ததும்ப உச்சரிப்பதையும், மறைந்த என் கண்குளிர்ந்த குருநாதர், ஆரிஃபுபில்லா ஷெய்குனா ஹலரத் முஹம்மது உசேன் சாஹிபு நாகூரி அவர்கள், தர்பாரில் எஜமானின் மக்ஃபராவைப் பார்த்து பார்த்து ‘‘எஜமானே எங்களை காப்பாத்துங்க’’ என்று அடிக்கடி உளமுருகி கோரிக்கை வைப்பதையும் என்னால் மறக்கவே முடியாது.



எனது தாயாரின் தகப்பனார், மைசூர் மாமன்னர் ஹைதர் அலீயின் குலவழிப்பேரர், கூத்தூர் பட்டாமணியார் ப.உ.அலாவுதீன் சாஹிபு அவர்களின் வீட்டில் ஐந்து ஜமாவுக்கும் நடக்கும் விருந்தும், விருந்தோம்பலும், மரியாதையும் இருக்கிறதே அதை இப்போது நினைத்தாலும் பரவசத்தால் என் கண்கள் கலங்கிவிடும்.

அன்றைய தினத்தில் என் பாட்டனாரும் பாட்டியார் முகம்மது கனி அம்மாளும், பாட்டனாரின் சகோதரி புப்புமா என்கின்ற ஹபீபுன்னிசாவும், என் மாமிகள் முகம்மத் பீவி, அய்ஷா பீவி, ஷரிபா பீவி, ரஹீமா பீவி, என் தாய்மார்கள் பாத்திமா பீவி, ஜெய்தூன் பீவி, ரஹ்மத் பீவி, என் கண்குளிர்ந்த மாமி ஜுலைகாபீ, மாமிகள் ஹபீபா, ஜமீலா என் சகோதரி மலிக்குன்னிஷா உள்பட எல்லோரும் பக்தை சிரோண்மணிகளாக காட்சி அளிப்பார்கள்.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் எங்கள் எஜமான் காதிர் ஒலி வட நாட்டிலிருந்து வந்தார்கள், அவர்களோடு நானூற்றி நான்கு ஃபக்கீர்கள் உடன் வந்தார்கள். இப்போதும் வந்து கொண்டிருக்கும் ஜமா ஃபக்கீர்கள் எஜமானுடைய ஃபக்கீர்களின் சந்ததிகள் என்பதுதான் ஆச்சரியம்.

அதை விட ஒரு ஆச்சரியம் ஒன்று உண்டு. நானும் அந்த ஃபக்கீர்களின் சந்ததிகளில் ஒருவன் என்பது தான் அது. எஜமான் தங்கள் பாதையில் எனது ஊர் கூத்தூருக்கு வடக்கெல்லையில் உள்ள குருக்கத்தியில் குறிப்பிட்ட ஓரிடத்தில் சையதினா ஹசன் காதிரி பீர்ஃகாய்பு ஒலியுல்லாஹ் என்ற நாதா அடங்கியிருக்கிறார்கள் என்பதை தங்கள் ஞான திருஷ்டியால் கண்டறிந்தார்கள்.

தங்களின் ஃபக்கீர்களில் ஒருவரை முகம்மத் அலீ முஃஜாவிர் என்பவரை, அங்கேயே தங்கச் செய்து பீர்காய்பு ஒலியுல்லாவுக்கு மஜார் எழுப்பி, விளக்கேற்றி வைக்குமாறும், அங்கேயே ஒரு பெண்ணைப் பேசி நிக்காஹ் செய்து கொண்டு இல்லறம் பேணுமாறும் உத்தரவிட்டார்கள்.

ஃபக்கீரும் கலந்தருமான முகம்மத் அலீ முஜாவிரின் தலைமுறை பேத்தியான ஃபாத்திமாபீவி என்ற கருணை தாய்தான் எனது பாட்டனார் அலாவுதீன் சாஹிபின் தாயார்,

*"நான் ஜமா ஃபக்கீர் நான் எஜமான் காதிர் ஒலியின் ஐதுபுடைய ஜமா ஃபக்கீர்! குவாலீரி நாயகத்தின் கைகளிலிருந்து ஞானப்பாலருந்திய ஃபக்கீர் கூட்டத்தின் சந்ததியில் நானும் ஒருவன்!"*

*ஃபக்கீர், தர்வேஷ், கலந்தர் என்பதற்கு பல விலக்கங்கள் இருக்கலாம் ஆனால் என்மனதளவில் நான் ஒரு தர்வேஷ் நான் ஒரு கலந்தர் ஃபக்கீர்.*

*"மஸ்த் கலந்தர்! ஜுலே லால் ! மஸ்த் கலந்தர்!"*

இப்படி சொல்லி கொண்டு ஆனந்த கூத்தாடுவது எனது *பிறப்புரிமை! நான் தர்வேஷ் ஹைதர் அலீ யகீனுல்லாஷா கலந்தர் ஃபக்கீர்! ஆம் நான் கலந்தர் ஃபக்கீர்!*

*'திருச்சியில் புறப்பட்டுவிட்டார்கள், ஜமா தஞ்சாவூரில் இருக்கிறது. கூத்தாநல்லூரில், கொடிக்கால் பாளையததில், அவர்கள் அடியக்கமங்கலத்துக்கு வந்து விட்டார்களாம்!'* ஆகா ஆண்டு தோறும் கேட்பதற்கு இந்த வார்த்தைகள் அற்புதமான சந்தோஷம். கூத்தூரில் ஜமாவுக்கு முதல்விருந்து எனது *பாட்டனார் அலாவுதீன் சாஹிபு அவர்களின் வீட்டு கூடத்தில், ஜமாவுக்கு மட்டுமல்ல ஊர்முழுமைக்கும் விருந்து.*

எனது தந்தை வழி பாட்டனார்,டில்லி மன்னர் துக்ளக்கின் குருபிரான், மகான் மகுதூம் ஜஹான் ஜஹானியான் கஸ்த் அவர்களுக்கும், காட்டுபாபா *ஃபக்ருத்தீன் ஒலி அவர்களுக்கும் முறையே தாய் வழியாலும் தந்தை வழியாலும் பரம்பரை பேரர், முகம்மதுஅலீ சாஹிபு காதிரி மாலுமியார் அவர்கள் விருந்து நடக்கும் சம்பந்தரின் வீட்டில் காலையிலேயே தெரு திண்ணையில் வந்து அமர்ந்துவிடுவார்கள்.*

*வீட்டின் எதிரில் வேப்பமர நிழலில் பெரிய கட்றாக்களில் செம்பு சட்டிகளில் நெய் சோறும், தாலிச்சாவும் வெந்து கொண்டிருக்கும். எனது மாமா அப்துல் காதர், வாப்பா அமீர்அலீ, அத்தாக்கள் இபுறாஹிம் ராவுத்தர், அப்துல் ரகுமான் ராவுத்தர் சேத்தவாப்பா மஹ்பூப் அலீ, எனது மாமா முகம்மது சாலீஹ் , மறைந்த என் அண்ணன் அஷ்ரப் அலீ, எனது மச்சான் அப்துல் ரஷீது, எனது மற்றொரு மாமா அப்துல் ஹமீது, மாமா ஹசன் குத்தூஸ், லத்தீப் வாப்பா, நத்தர் வாப்பா, மாமா அஹ்மது மரைக்கார்,*



எனது பாட்டனாரின் உதவியாளர்கள் சேம்பி *அல்லாபிச்சை, ராவுகாலம் இபுறாகிம், பண்டாரி சிலம்பு* சித்தீக் முகம்மது நானா, வேலையாட்கள் தலையாரி குப்பான், வெட்டியான்காச்சி கோவாள், வீரைய்யன், குப்பான் மகன் கோவாள். பட்டாளத்தான் கோவாள்,

பெண் பணியாளர்கள் தஞ்சாவூரம்மா, மதாரியக்கா, ஆமினாக்கா, அம்மாகுஞ்சு, அம்மா பொன்னு, அஞ்சலை, இப்படி நீண்ட பட்டியலில் இடம்பெறும் என் அன்பிற்குரியவர்கள், பரபரப்போடு காணப்படுவார்கள்.

*ஐதுபு நிலையில் நான், மறைந்த என் தம்பி பீர்முகம்மது, எனது நானா அக்பர் அலீ, என் தம்பி சிக்கந்தர்அலீ, சௌக்கத் அலீ, லியாகத் அலீ, என் தங்கைகள் ஜஹிரா, முத்துக்கனி, தாஜ், முத்தா, எங்கள் பள்ளி நண்பர்களுடன் அந்த இனிய எஜமானின் கந்தூரி நாட்களை* விழாவாக கொண்டாடுவோம்.

*ஃபக்கீர்மார்களுக்கு மூலபீடம் பில்குண்டாவில் இருக்கிறது என்று, இப்போதும் ஜமா ஃபக்கீர்களுக்கு மரியாதை* செய்து கொடிருக்கும் என் தம்பி நஜ்முத்தீனின் அத்தா, எனக்கு மெய்ஞ்ஞானப் பாடத்தில் அரிச்சுவடியைப் புகட்டிய முகம்மது மெய்தீன் கலிஃபத்துல் காதிரி அவர்களிடமிருந்து தெரிந்தேன்.

பில் குண்டாவைப் போய் பார்க்க வேண்டும் அங்கு அடங்கியுள்ள மகத்துவமுள்ள அவுலியாவை, ஜமாக்களின் *தலைவரை ஜியாரத் செய்யவேண்டுமென்பது அடிநாட்களில் எனது மனதில் தோன்றிவிட்ட ஆசை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு என் குடும்பத்தினருடன் எனது இல்லத்தரசிகள் ஆசிரியை முகம்மத் பீவி, டாக்டர் ஆயிஷா பீவி ஆகியோரின்* பொருளாதார உதவி கொண்டு,

*அஜ்மீர் வரை வேனில் சென்று திரும்பிய போது பில்குண்டா என்ற அந்த கனவு நகரான பெனுகொண்டாவுக்கு* போகும் வாய்ப்பு கை நழுவியது. ஆனால் இன்று மெய்ஞ்ஞானப் *பேரரசர் பாபா ஃபக்ருத்தீனைப் பற்றிய வரலாற்றை எழுது என்று அழைப்புவருகிறதே!*

*"பாபா! என்னை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? என்னை* நேசிக்கிறீர்களா? உங்கள் கவனத்தில் நான் இருக்கிறேனா? என் *எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா? கனத்த என் இதயம் இலேசாகுமா பாபா?"*

பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவின் வரலாற்று நூல் ஒன்றை நீங்கள் எழுதி தரவேண்டும் என்று திருச்சி நண்பர்

ஜனாப் பெரோஸ்கான் தான் முதலில் வாய் திறந்து என்னிடம் வேண்டி கொண்டார். குறிப்புகள் அடங்கிய கோப்பு ஒன்றையும் தந்தார். திருச்சி நண்பர் ஜனாப் என்.கே.எம். ரஹீமுத்தீன், அதன் பிறகு தொலைபேசியில் ஹாங்காங்கிலிருந்து ஜனாப் கமாலுத்தீன், பெங்களூரிலிருந்து, ஹைதராபாத்திலிருந்து சில இந்து சமய நண்பர்கள், பரங்கிப்பேட்டை அப்துல் ஹமீது சுஹ்ரவர்தி,

இப்படி பலரும் கோரிக்கை வைக்கும் போது இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் கனவில் எனக்கு ‘எழுது’ என்று தெய்வீக உத்தரவு வந்தது. எழுதத் தொடங்கிய பிறகு ஒசூர் வழக்கறிஞர் ஜனாப் அன்வர்பாஷா அவர்கள் இரண்டு நோட்டுபுக்குகள் நிறைந்த குறிப்புகளை அனுப்பிவைத்தார்கள். நெல்லிக்குப்பம் ஜனாப் நூருத்தீன் நானா பெனுகொண்டாவின் தர்காவையும் இயற்கை சூழலையும் வாய்மொழியாகவே படம் பிடித்து காட்டினார்கள்.

அதே நேரத்தில் திருச்சி நண்பர் ரஹீமுத்தீன் அவர்களின் துணைவியார் நூருன்னிசா என்ற சகோதரி பல்வேறு விஷயங்களை விளக்கினார்கள். தான், மறைந்த பெரியார் காஜா ஸையத் ஷா பாபா அஷ்ஷைகு அப்தால் உசைன் சுஹரவர்தி அவர்களிடம் பைஅத் செய்து கொண்ட விவரம், அப்பெரியாரின் மனதில் பாபாவின் வரலாற்றை எழுத வேண்டுமென்று பொங்கிய பேரார்வம், பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவைப் பற்றி கேள்விப்பட்ட செய்திகள். இப்படி நிறைவான விஷயங்களைத் தந்தார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாஹ் சீஸ்தானில் பிறந்தார்கள், அரசுப் பதவி துறந்து இந்தியாவுக்கு வந்தார்கள், பாபா தப்லே ஆலம் பாதுஷாவிடம் முரீதும் கிலாஃபத்தும் பெற்றார்கள் தமிழகத்தின் சில பகுதிகளில் சுற்றிவிட்டு ஆந்திராவில் பெனுகொண்டாவில் தங்கி இஸ்லாமிய மார்க்கத்தையும் ஸூஃபி ஞான மரபையும் போதித்தார்கள். இவைதான் கிடைக்கும் குறிப்புகள்.

இணைய தளங்களில் கிடைத்த தகவல்கள், இஷாராவாக வெளிவந்த குறிப்புகள், தர்காவோடு சம்பந்தப்பட்டவர்கள் தந்த தகவல்களோடு நூறுபக்க அளவில் ஒரு நூலை கற்பனையின்றி எழுத முடியாது. எனவே இந்த நூல் பாபா அவர்களே தங்களை வெளிப்படுத்திக் கொண்ட காவியம் என்று தான் என்னால் சொல்ல முடியும்.



எஜமானைப்பற்றிய மேலும் பல விவரங்களை விளக்கிய ஷாபானுவா ஜமாவின் சற்குரு ஜனாப் அக்பர் அலீஷா, ஜனாப் பிஸ்மில்லா அலீஷா, D.T.P பிரதிகளில் அச்சுப்பிழை திருத்தி ஒழுங்குப்படுத்தி உதவிய எனது முரீது மகனார் முத்துப்பேட்டை ஜாகிர் உசைன் B.A., திருச்சி ஜனாப் ரஹீமுத்தீன் மகள் செல்வி சுல்தானி, மற்றும் மேற்கூறிய அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை எழுதுவதிலும், நூல்களிலிருந்தும், கூகுள் ஸர்ச்சிலிருந்தும் வரலாற்று குறிப்புகளை எடுத்து தருவதிலும் உதவிசெய்த மகளார் டாக்டர் மாஹேநூர் சுல்தானி B.S.M.S.,மகளார் சையது பீவி M.Com., ஆகியோருக்கும், தெலுங்கு வார்த்தைகளை தந்து உதவிய திருமதி Dr. ப்ரதிமா தீபு BAMS,மதனப்பள்ளி அவர்களுக்கும்,

D.T.P செய்வதிலும் நூலுருவாக்கி தருவதிலும் முழுப்பொறுப்பேற்று கொண்ட முரீது மகளார் அத்தீன் கதிஜா பீவி அவர்களுக்கும், அழகிய முறையில் அட்டைபடத்தை உருவாக்கி தந்த எனது முரீது மகனார் A. அப்துல் கரீம் B.E., அவர்களுக்கும்,

மற்றும் எழுதும்படி ஊக்குவித்த நண்பர் ஜனாப் பெரோஷ்கான் சுஹ்ரவர்தி, கூத்தாநல்லூரில் தனது வீட்டில் எனக்கு பொன்னாடைப்போர்த்தி ரூ.1000 அன்பளிப்பு தந்த ஜனாப் கமாலுத்தீன் சுஹ்ரவர்தி,அவர்களுக்கும்,

பாபா அவர்களைப்பற்றி நூல் எழுதுகிறேன் என்று கேள்விப்பட்டதுமே அலைபேசியில் தொடர்புகொண்டு பிரமிப்போடும் மகிழ்ச்சியோடும், “வாப்பா பத்து ஆயிரம் ரூபாய்களை அனுப்பி உள்ளேன் நூலை சமர்ப்பணம் செய்ய பெனுகொண்டா செல்லும் பயணத்துக்கு என் பணம் உதவட்டும்!” என்று முன்வந்துரைத்த எனது கலிஃபா வடமேற்கு ஆப்ரிக்காவில் சியாராலியோனில் பணியாற்றும் இனிய மைந்தர் ஷேக் தஸ்தகீர் பாதுஷா கலிஃபத்துல் காதிரி கூஷிஸ்தி அவர்களுக்கும், நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இன்றும் தொடர்ந்து அரிய தீன் பணி ஆற்றி வரும் ஜமாஃபக்கீர்களான நல்லடியார்கள் அனைவரும் பாதுஷா தப்லே ஆலம் பாபா(ரலி) அவர்களின் 900 கலந்தர்களின் வாரிசுகளும், எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம்

(ரலி) அவர்களின் 404 ஃபக்கீர்களின் வாரிசுகளும், மேலும் அவர்களுடன் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் ஜமாவின் தெய்வீக நிலைப்பாட்டை அறிந்து, தங்களை ஜமாவில் இணைத்துக் கொள்ளும் ஆன்மீக வாரிசுகளும் கலந்த திரு கூட்டத்தினர் ஆவார்கள் என்று, எனது ஷெய்கு நாயகம் முஹம்மதுஉசைன்சாஹிபு நாகூரி அவர்கள் கூறியுள்ளனர்.

இறை நேச பாச விசுவாசிகளான ஜமாவிலுள்ள ஐந்து குழுவையும் சார்ந்த ஃபக்கீர்மார்களின் தீன் பணி தொய்வின்றி கியாமத் இறுதி நாள் வரை இப்புவியில் தொடர வேண்டும் என்று பணிவுடன் கேட்டு கொண்டு, இதயங்கனிந்த நன்றியறிதலை கூறிக்கொள்கிறேன்.

சங்கைமிகுதாஜ்பாபாஅவர்களின் வாழ்த்துரைக்கும் மற்றும் அனைவரின் வரவேற்புரைகளுக்கும் ஹஜ்ரத் சையது வஜுஹுன்னகீ சக்காப் சாஹிப் அவர்கள் வழங்கியுள்ள நூலின் கருத்துகளை முழுமையாக ஆதரிக்கும் ஏற்புரைக்கும், ஒசூர் நண்பர் வழக்குரைஞர் சையத் அன்வர் பாஷா அவர்களின் கடுமையான எதிர்ப்புரைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்குரைஞரின் கருத்துக்கள் ஃபுகரா கலாச்சாரத்தின் மறுபக்கத்தை விரிவாக லோகாயத கண்ணோட்டத்தில் விளக்கி காட்டுகிறது. மறுஜென்மம் பற்றிய அவரது கருத்துக்களில் அது சமுதாயத்திற்கு தேவையில்லாதது என்று கூறுகிறார். ஆனால் தனிமனிதனின் ஆன்ம உய்வுக்கு அது கட்டாயத் தேவையாகும் என்பது சூஃபி ஞானிகளின் கருத்து. யாவுமறிந்தவன் இறைவனே!.

நூலை அச்சிட்டு வெளியிடுவதில் உதவியோருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். "எஜமானே பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவே எங்கள் அனைவரின் இதய தாபங்களையும் தாங்கள் அறிவீர்கள். தங்கள் அடியார்களின் குறைதீர்த்து இம்மை மறுமை நலன்களை அனைத்தையும் தந்து கிருபை செய்யுங்கள் நாயகமே!" தங்கள் ரஹ்மு என்னும் காருண்ய திருப்பாத மலர்களை எங்கள் சிரசின் மீது வைத்து அருள் புரியுங்கள் எஜமானே!

**-மு.அ.ஹைதர்அலீ யகீனுல்லாஷா,**
**நெல்லிக்குப்பம்.**



## பெனுகொண்டாவில் கேட்ட முதல் குரல் :
## பாபையா மா தேவுடு

'வணிக வைசியர்களின் காசி' என்று புகழப்படும்-பெனுகொண்டா என்ற குட்டி நகருக்குள் புகும் போது "ஸ்ரீகன்யகம்பா வரதே தவா சுப்ர பாதம்" என்ற இசை வரிசை காதில் விழுகிறது. அங்கே கோயில் கொண்டிருக்கும் தெய்வம் வாசவி கன்யகா பரமேஸ்வரி தாயார் பெனுகொண்டாவில் பிறந்ததாக ஐதீகம்.

வைசிய குலத்தினர் புனித கோயிலாகப் போற்றும் கன்யகா பரமேஸ்வரி கோயில் சுற்றுலாப் பயணிகளின் சரணாலயமாக விளங்குகிறது.

ஜைனர்-சமணர்களின் 23 வது தீர்த்தங்கரரான பர்ஸ்வநாத் பகவானின் திருக்கோயிலை ஹொய்சல ஆட்சியாளர்கள் நிருவியுள்ளார்கள். எனவே பல நூற்றாண்டுகளாக சமணர்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இக்கோயிலும் தென்னாட்டில் வாழும் சமணர்களின் முக்கிய புனித ஆலயமாக விளங்குகிறது.

கோதாவரியின் கிளை நதியான கௌதமியின் கரையிலமைந்த பெனுகொண்டாவில் வாழ்ந்துதான், புலஸ்திய முனிவர் தவமிருந்து மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை தரிசித்து முக்தியடைந்தார் என்று புராண கால வரலாறு கூறுகிறது.

ஹொய்சலர்களுக்குப் பிறகு இங்கு சாலுக்கியர்களும், விஜய நகர மன்னர்களும் ஆண்டிருக்கிறார்கள். விஜய நகர சாம்ராஜ்யம் கி.பி. 1565 ல் வீழ்ச்சியடைந்த போது பெனுகொண்டா அதன் தலைநகரமாக விளங்கியது என்பது விசித்திரமான செய்தி. விஜயநகர ஆட்சிக்குப்பின் இந்நகர் மகராஷ்ட்டிரர்கள், நிஜாம்கள், நவாபுகள், ஹைதர்அலீ, திப்பு சுல்தான் ஆகியோரின் ஆளுகையில் இருந்திருக்கிறது.

தெலுங்கும், உர்தூவும் சரளமாக வழங்கும் இந்த நகரில் ஆங்காங்கே கன்னடமும், தமிழும், இந்தியும் பேசப்படுவதை காண முடிகிறது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் பெனுகொண்டாவின் அருகாமையில்

கதிரியில் வாழ்ந்த மெய்ஞ்ஞான கவியரசர் வேமணாவின் புகழ்பெற்ற பாடல் ஒன்று!

உப்பு கப்புராம்பு நொக்கா பொலிக நுன்டு
சூடசூட ருசுலு ஜாட வேரு
புருஷலன்டு புன்ய புருஷலு வேரயா
விஸ்வதாபிராமா, வினுர வேமா!

உப்பும் கற்பூரமும் ஒன்று போலவே காணப்படுகிறது
உற்றுநோக்கத்தான் அவற்றின் சுவை வேறென்று புரிகிறது!
மனிதர்களில் மாசற்ற சத்தியவான்கள் தனித்தவர்களாம்!
இறைநேச வள்ளல்களின் நேசா! வேமா! கவனித்துப்பார்

மனிதர்களிடையே மாசற்ற சத்தியவான்களில் ஒருவராக தனக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மெய்ஞ்ஞான வள்ளல் பாபா ஃபக்ருத்தீனின் மஜாருக்கு (சமாதிக்கு) ஞானி வேமணா மரியாதை செய்பவராக இருந்தார் என்ற செய்தியை கதிரியிலேயே கேள்விப்பட்டேன்.

அண்மைக்காலத்தில் மறைந்த மரியாதைக்குரிய சத்திய சாயி பாபாவின் முன்னோர்கள் சில தலைமுறைகளுக்கு முன் பெனுகொண்டாவிலிருந்து இடம் பெயர்ந்து புட்ட பர்த்திக்கு சென்ற குடிகள் என்பதையும், அவர்கள் பாபாவின் ஆலயத்தில் பக்தியுடன் வழிப்பட்டு வந்தவர்கள் என்பதையும் வியப்புடன் கூறும் வரலாற்று நூல்கள் உள்ளன.

எண்ணங்களில் புனித பெனுகொண்டா நகரின் தெய்வீக சரித்திரத்தை அசை போட்டபடி நடந்து கொண்டிருக்கும் போது "பாபையா, பாபையா " என்று அழைத்து கொண்டு ஒரு பிராமண இளம் பெண் தன் மகனை துரத்திக்கொண்டு ஓடுவதை கண்டு ரசித்தபடி நின்றோம்.

வியப்புடன் நின்ற நம்மைப் பார்த்த அப்பெண் கூறினாள் "பாபையா மா தேவுடு ! அக்கட சூடன்டி ஆ குடிலோ ஆயனஉன்னாரு!" - பாபையா (பாபாஃபக்ருத்தீன்) எங்களுடைய கடவுள்! அதோபாருங்கள் அந்தகோயிலில் அவர் இருக்கிறார்!



உடன் வந்த நண்பர் சொன்னார்-"அனந்தப்பூர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் "பாபையா" என்று பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவைப் போற்றுவதும் தங்கள் பிள்ளைகளுக்கு "பாபையா" என்று பெயர் வைப்பதும் எல்லா மதத்தாரிடமும் பழக்கமாக உள்ளது".

பக்தி சிரத்தையுடன் கூறிய அப்பெண்ணின் வார்த்தைகளையும் நண்பரின் விளக்கத்தையும் மனதில் பதித்துக்கொண்டு சிறிது தொலைவில் காணப்பட்ட பாபாவின் ஆலயத்துக்குள் சென்று நுழைந்தோம்.

20 அடிக்கு 30 அடி அகல நீளமுள்ள அறையை அடைத்து கொண்டு பன்னிரெண்டு அடி உயரத்தில் பட்டாடைகளாலும், மலர் மாலைகளாலும் போர்த்தப்பட்ட மஜாரில் /சமாதியில் இந்துக்களும், முஸ்லீம்களும் இதர சமூகத்தினரும் பக்த கோடிகளாக கூடி கண்மூடி நிற்கின்றனர்.

நாமும் நம் சிரசை பாபாவின் பாதத்தில் சாய்க்கிறோம்.

இதோ நம் இதயப்பறவை சீஸ்தானின் திசையை நோக்கி பயணப்படுகிறது.

---

*குறிப்பு :-*

*இந்நூலில் இடம் பெறும் கவிதைகள் அனைத்தும் ஸூஃபி ஞான மரபுவழி கவிதைகளாகும். இறைவன், இறைவி என்றும் மனோண்மணி, பராபரி என்றும் பேரின்ப காதலி என்றும் இறைவனை குறிப்பிடுவது ஸூஃபிகளின் வழக்கம்.*

*"என்கண்ணே என்னம்மா என் தாயே"! என்று முடியும் பாடல்கள் நூற்றாண்டு காலமாக தற்கலை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்களின் பாடல்களோடு இணைத்து பிரசுரிக்கப்படுகிறது. இறைவனை பெண்ணாக பாவித்துபாடும் இந்தப் பாடல்களை சையத் அலீஷா என்ற ஸூஃபி ஞானி பாடியுள்ளார்கள். அமுகணி சித்தர் பாடினார் என்று சித்தர் பாடல்களில் காணப்படுகிறது.*

*அற்றைக்கு இருந்தேன் ஆன்மாவாய்*
*அருள்மறை தெளிவாய் சொல்கிறது*
*இற்றைக்கு இங்குநான் இருக்கின்றேன்*
*இருப்பதும் தெளிவாய்ப் புரிகிறது!*
*மற்றைக்கு ஒருநாள் மரித்தாலும்*
*மறுமைப் பதியிலே இருப்பேனாம்*
*எற்றைக்கும் நான் இருப்பதெனில்*
*இருக்கும் இவன் யார்? அவன்யாரோ?*
*-மன்சூர் அல்ஹல்லாஜ்*

## மஸ்த் கலந்தர்! ஜூலே லால்! மஸ்த் கலந்தர்!

ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் இறுதி நாட்கள், ரமலான் மாதத்தின் லைலத்துல் கதிர் புனித இரவின் பின்னேரம். உலகம் முழுதும் வாழும் கோடி கணக்கான முஸ்லிம்கள் அந்த உன்னத நாளையும் நேரத்தையும் அருள் மறை குர்ஆனின் புனித வசனங்களை ஓதி கொண்டாடி கொண்டிருந்தனர்.

மேற்கே அட்லான்டிக் கடலைத் தொடும் அந்தலூஸியாவிலிருந்து கிழக்கே சீனாவின் கடற்கரை நகரமான பசிஃபிக் கடலை தழுவும் காண்டன்வரை விரிந்து பரந்திருந்த இஸ்லாமிய சன்மார்க்கத்தின் பெயரும் புகழும் வானளாவ கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த காலம் அது.

அரசியலோடு இலக்கியமும் கலைகளுடன் கலாச்சாரமும் மட்டும் அல்லாமல், அறிவியலும் புது மலர்ச்சி பெற்று தழைத்தோங்கி இருந்த அக்காலகட்டத்தில் ஈரான் என்ற பாரசீகத்தின் தென்கிழக்கில் அமைந்த சீஸ்தான் தேசத்தின் ஆன்மீக வானில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

புனித ரமலான் மாதத்தின் நோன்பெனும் மாண்பை தவமெனக் கொண்டு மார்க்க கடமையாற்றிய முஸ்லிம்கள் தொழும் தராவீஹின் வாஜிபான தொழுகையும், உரக்க ஓதும் திருமறை வசனங்களும், தக்பீரும், தஸ்பீஹூம், தரூத் ஸலவாத்தும் சொர்க்கத்தின் வாசல் கதவுகளைத் தட்டி கொண்டிருந்த உன்னதமான அந்த நாட்களில்,

அன்றைக்கு - நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, நானிலத்தின் நடு நிலமாம் அரபகத்தின் இறைஅருள் சுரக்கும் திருமக்கத்தின் பக்கம் அமைந்த நூர் மலையில் ஹீரா இருட்குகையில், எம்பிரான்



முகம்மத் (ஸல்) அவர்களை வானவர் கோன் ஜிப்ரயீல் (அலை) ஆரத்தழுவி அவர்களை அருள்மறையின் முதல் திருவசனத்தை உச்சரிக்க வைத்த லைலத்துல் கத்ர் இரவு அது. ஹிஜ்ரி 390 ரமலான் மாதத்தின் 27ஆம் நாள், அன்று விடிந்தும் விடியாத அதிகாலை, தஹஜ்ஜத் என்னும் நந்நேரம், (கி.பி. 980ம் ஆண்டு ஆகஸ்டு 30ம் நாள்)

இன்று ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தானிலும், ஈரானிலும் பிரிந்து சிதறி கிடக்கும் சீஸ்தான் நிலத்தின் தலைநகரமாம் ஜெராங்கின் அரண்மனையில், அரசியார் ஃபாத்திமா மதனி என்னும் மங்கை நல்லார் பிரசவ வலி ஏற்பட்டு, அந்தப்புரத்தில் பஞ்சணையில் வருத்தத்தோடு படுத்திருந்தார்.

விடாது பெய்த பருவகாலப் பெருமழையால், ஹாமுனே சபார், ஹாமுனே புஷ்க் என்ற இருபெரும் ஏரிகளும் கரை உடைந்து ஹாமுனெ ஹெல்மந் என்னும் சீஸ்தான் ஜலவாரியில் ஒன்று கலந்து மாபெரும் கடல் நீர்பரப்பாக காட்சியளித்து கொண்டிருந்தது.

பரந்த ஏரியின் நாலாதிசைகளிலும், வடமேற்கு இமாலய ஹிந்து குஷ் மலை தொடர்களின் சிகரத்தில் தோன்றி, பள்ளத்தாக்குகளையும் பாலைவனங்களையும் கடந்து வந்து புகும் ஹெல்மந், ஃபாரா, சகான்சுர், ஹாரூத் ஆறுகள் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் வெள்ளப் பெருகெடுத்து பாய்ந்து வந்து சிஸ்தான் ஜலவாரியை மகாசமுத்திரமாக மாற்றி கொண்டிருந்தன.

வறண்ட காஷ் பாலை நிலத்தை வனப்புமிக்க பசுஞ்சோலையாக மாற்றியிருந்த சீஸ்தானின் வனப்பகுதிகளில், அந்த நள்ளிரவில் சீறும் சிறுத்தைகளும், மான்களும், நீர்நாய்களும், நரிகளும், காட்டுப்பன்றிகளும் ஒன்றை ஒன்று பகைக்காமல் உலவித்திரிந்தன. வெள்ளாடுகளும், செம்மறிஆடுகளும், ஒட்டகைகளும், பசுக்களும், காட்டெருமைகளும், நாட்டுப் புறங்களில் உறங்கிக் கிடந்தன.

லாகூன் என்னும் எதிர்நீர் வாய்க்கால்கள் பாயும் ஏரிக்கரை ஓர களிப்பு நிலங்களில், செங்கால் நாரைகளும், நெடுங்கழுத்து கொக்குகளும், பலவண்ண வாத்துகளும் நின்றும் மிதந்தும், கோரைப் புற்களில் கூடடைந்தும் கண்துஞ்சி ஓய்வுகொண்டிருந்தன.

இரவெல்லாம் விழித்து இறைவனை வழிப்பட்ட மாந்தரெல்லாம் கண்ணயர்ந்திருந்த மூன்றாம் ஜாமப் பொழுதில் இடுப்பு வலி ஏற்பட்டு, வலியை உணரமுடியாத விசித்திர மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த அரச மாது, சீஸ்தானின் மன்னர் சையது ஹுசைனின் மாண்புமிகும் காதல் பிராட்டியார் ஃபாத்திமா மதனி, மயங்கிய மயக்கத்தில் ஒரு கனவு கண்டார். தன் அடிவயிற்றில் ஒரு முழு நிலவு வெளிப்பட கண்டார்.

அரசியாரின் பள்ளியறையை பிரசவப் பரிகார அறையாக மாற்றி இரவெல்லாம் விழித்திருந்த மருத்துவப் பணிமாதரும் சேடியரும் கூட, புரிந்துகொள்ள முடியாத அத்தருணத்தில் தாங்களும் உணர்விழந்து மயக்கத்தில் கண்மூடினர். அவர்கள் அனைவரின் மூடிய இமைகளுக்குள்ளும், ஃபாத்திமா மதனியின் வயிற்றிலிருந்து நிலவு வெளிப்பட்ட காட்சி தெரிந்தது. அதை கண்டு பரப்பரப்புடன் கண்விழித்தார்கள்.

அதே தருணம் கவலையுடன் அரண்மனையின் உப்பரிகையில் வாய்மூடி இறைவனிடம் கையேந்தி நின்ற அரசர்க்கரசர் ஷெய்க் சையது ஹுசைன், பரந்து விரிந்த வானத்தில் திடீரென நிகழ்ந்த ஓர் அதிசயத்தை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

கிழக்கு வானத்தின் தொடுகரையில் மங்கி மறைய துவங்கிய 27ம் பட்சத்தின் தேய்ந்த தேய்பிறை, திடீரென பிரகாசித்து பூர்ணிமை நாளின் முழுநிலவாக பொலிந்தது. அரண்மனைக்கு நேரே வானத்தின் உச்சியில் ஊர்ந்து வந்து நின்றது அந்த முழு நிலா. இருண்ட புவியெங்கும் பால் நிலவு பொழிந்தது.

மன்னர் பிரான் அதிசயித்து அதிர்ந்து நின்ற அதே தருணம், நகர வீதிகளின் நாலா திக்குகளிலும் ஆண்களும், பெண்களும், முதியவர்களும், குழந்தைகளும் கூட இல்லங்களில் வெளிப்போந்து அந்த அதிசய வானக் காட்சியைப் பார்த்து இது வால் நட்சத்திரமா அல்லது வண்ண நிலவா என்று புரிந்து கொள்ள முடியாமல் அதிர்ந்து வியந்து அலமலர்ந்து நின்றனர்.

விடியா விடியலில் தோன்றிய விசித்திர நிலா தோற்றத்தால் விதிர்விதிர்த்திருந்த நகர மக்கள், ''இறுதி கியாமத்து நாளின் அடையாளம் இது'' என்று கூச்சலிட்டனர். அதே நேரம், அரண்மனையின் வாயில்புற வானமேடையில் எழுந்த நகரா ஓசையும், அதைத்தொடர்ந்து அந்தப்புரத்திலிருந்து, அரசியார் ஃபாத்திமா மதனிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்ற செய்தியும் வெளிவரவே மக்கள் ஆச்சரியத்தில் அமிழ்ந்தார்கள்.



கொட்டும் பனியையும் குளிர் காற்றையும் பொருட்படுத்தாமல் மக்கள் தெரு வீதிகளில் திரண்டு நின்று கொண்டிருந்தார்கள். அரசியார் மயக்கத்தில் பிரசவித்த விந்தையான தகவலும், குழந்தை தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்ததை, மருத்துவ மாதரும் மற்ற பெண்கள் யாரும் கூட கண்களால் பார்க்கவே இல்லை என்ற பரபரப்பான செய்தியும், கதிரவன் உதிக்கும் முன்னரே ஊரெங்கும் பரவியது.

பொழுது விடியும் வரை, ஜெராங் நகரமும், அதன் வீதிகளும் வீடுகளும், ஆலயங்களும் பள்ளிவாசல்களும், சுற்றுப் புறங்களும் பரந்து கிடந்த சீஸ்தான் ஏரியும், அதன் நடுவில் அமைந்த கூஹே குவாஜா மலைகுன்றும், அதன் உச்சியில் அமைந்த ஜொராஸ்திரர் புனித ஆலயமும் கூட பொழுது விடியும் வரை முழு நிலவின் பால் பொழிவில் மூழ்கிக்கிடந்தன.

கதிரவன் உச்சிக்கு வரும் முன்பே அரண்மனையின் வாசலில், அன்று அதிசயமாகப் பிறந்த பாலகரை தரிசிக்க மக்கள் பெருங்கூட்டமாக கூடி வந்தனர். முஸ்லிம்கள் மட்டும் இன்றி ஜொராஸ்டிர மதத்தவரும், பௌத்தர்களும் கூட அதிசய பாலகரின் முழுநிலா முகத்தை காண விரைந்தோடிவந்தனர்.

மன்னரும் அரசகுடும்பத்தினர், குழந்தை கர்ப்பத்தில் இருக்கையிலேயே வானவர்கள் தோன்றி, பிறக்கப் போவது அல்லாஹ்வின் ஜோதி என்று அறிவித்திருந்ததால் வாய்மூடி மௌனித்திருந்தனர். சொர்க்கத்தின் கனியாக வந்து பிறக்காமல் பிறந்துள்ள மைந்தரை பார்த்து அதிசயித்தனர்.

ஜொராஸ்டிர மதத்தினர் சிலர் வாய்விட்டு ஒரு சந்தேகத்தை வெளிப்படுத்தினர். இது ஒரு அசாதாரன நிகழ்வென்றும், பிறந்திருக்கும் குழந்தை மனிதக்குலத்திற்கோர் ஓர் விடிவெள்ளி என்றும், இக்குழந்தையை பற்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஜொராஷ்டிரர் முன்னறிவிப்பு செய்துள்ளார் என்றும், அவர்கள் கூறினர்.

உலகின் முடிவில் மனித ஆன்மாக்களை விடுவிக்கும் பணியில் ஈடுபடும் மூன்று பாலகர்கள், சீஸ்தான் ஏரிக்கரையில் தோன்றப்போகும் மூன்று விண்ணுலக கன்னியர்களால் ஈன்றெடுக்கப் படுவார்கள் என்று ஜொராஸ்டிரர் கூறியுள்ளதாகவும், இன்று பிறந்துள்ள பாலகர், அவர்களில் ஒருவரா என்று வியப்புற்றும் விவாதித்தனர்.

பிற்பகலில் ''பாபா ஃபக்ருத்தீன்'' என்று ஊராரும் உறவினரும் கூடி அதிசய குழந்தைக்கு பெயர் சூட்டினர். ஆயிரக்கணக்கான மக்கள்

கூடிகிடந்த அரண்மனை வாசலில் பிள்ளைக்கு பெயர் வைக்கும் தருணத்தில், சரணாலயம் தேடி வலசைவரும் தூரத்து பறவைகளைப் போல எங்கிருந்தோ வந்து கூடினர், இருபது முப்பது கலந்தர் ஃபக்கீர்கள்.

பல வண்ண தலைப்பாகைகளோடும், செம்மண் சிவப்பு நிற ஆடைகளோடும், கழுத்தில் தொங்கும் கஹரூபா மணிமாலைகளோடும், தாடிமீசையும் புருவங்களும் சிரைக்கபட்ட ஞானம் நிறைந்த முகமும், மோனம் நிறைந்த பார்வைகளோடும் வந்து குழுமிய அவர்கள், யாரென்பதும் எங்கிருந்து வந்தார்கள் என்பதும் அறிய முடியாத நிலையில்,

கையிலேந்திய தஃப் பறையில் அவர்கள் அதிர்வுடன் எழுப்பிய சப்தமும், "மஸ்த் கலந்தர் ஜுலே லால் மஸ்த் கலந்தர்" என்றெழுப்பிய ஆவேச குரலோசையும், உயர்த்திப் பிடித்த நீண்ட வாட்களை அசைத்தசைத்து ஆடிய நடனமும் அரண்மனையையும் அங்கு கூடி நின்ற மாந்தர்களையும் பேதலிக்கச் செய்தது.

"மஸ்த் கலந்தர் ஜுலே லால்! மஸ்த் கலந்தர் - இவ்வுலகை நான் மறந்தேன், ஏகன் இறைவன் மீது கொண்ட காதல் போதையால் தள்ளாடுகின்றேன்" என்று பொருளுரைக்கும் அந்த வார்த்தைகள், அவர்கள் வாளை உயர்த்தி ஆடிய ஆன்மீக நடனம், அந்த கண்கொள்ளாக் காட்சியின் உச்சத்தில்,

ஆ அந்த குரல் யாருடையது? கலந்தர்களின் கூட்டத்தில் நடுநாயகமாக நிற்கும் அந்த மகான் யார்? அவர் பாடும் அந்த கஜலின் கருத்தென்ன?

*"அஸ்பராயே சுபூத்தே வஹ்தத்தே கீஷ்*
*குப்க்குத் லாயிலாஹ இல்லல்லாஹ்*
*மாஸிவாரா பஎக்நபஸ ஸெமியான்*
*மீபாத் லாஇலாஹ இல்லல்லாஹ்*

*ஏகபராபரனாகிய அல்லாஹ் தன் ஏகாந்த உள்ளமையை பரைசாற்ற கலிமாவை எடுத்தோதினான். கலிமா என்னும் போர்வாள் அவனல்லாத அனைத்தையும் வெட்டி வீழ்த்திவிடும்."*



*"ஆமத அஸ்பயே ரிஸாலத்தெகிஷ்*
*கைரெ முர்ஸில் பிதான் ரஸுலுல்லாஹ்*
*குத்பிரிஸ்திந்தா குத்பிரிஸ்தாதா*
*சூயெகுத் ஸுத்ரவர்ன ரஸுலுல்லாஹ்!*

*- தூதனுப்பினவன் வேறன்றி தன்னைத்தான் தூதாக்கி ரஸுலுல்லாஹ் புவி மீது தோன்றினார்கள். தானே தானான அவன் தன்னிடமே ரஸுலுல்லாஹ்வாக தோன்றி போதித்தான்."*

*"ஹர்நக்ஷே பர்தக்தயே ஹஸ்தீபய் தாஸத்*
*ஐனஸுரத்தே ஆங்கஸஸ்த் கின்நக்ஷாராஸ்த்*
*தர்யாயே குஹன் கேமீஜனத் மவுஜேநௌ*
*ஹேமவுஜே கானந்தர் ஹகீகத் தர்ஸியாத்!*

*- நிகழ்வென்னும் உலகத் திரையில் தோன்றுகின்ற ஒவ்வொரு சித்திரமும் வரைகின்ற ஓவியனின் தோற்றமாக அல்லவோ வெளிப்படுகிறது!"*

*"மஸ்த் கலந்தர்! ஜுலே லால்! மஸ்த் கலந்தர்!"*

மகானின் கஜலைத் தொடர்ந்து கலந்தர்கள் எழுப்பிய கூக்குரல்கள் விண்திசை மண்திசையெங்கும் எதிரொலித்தது.

கலந்தர் ஃபக்கீர்களின் கூட்டம் அரண்மனை வாசலைவிட்டும் கலைந்து நகரத் தொடங்கிய போது, "அவர்கள் யார் எங்கிருந்து வருகிறார்கள்?" என்ற கேள்வி மக்களிடையே எழுந்தது. யாரும் பதில் கூற முன்வராத போது விரைந்து நடந்துக்கொண்டிருந்த கலந்தர்களில் ஒருவர் புன்னகையோடு முகம் திரும்பி கூறினார் :-

"இந்த பெரியாரா? இந்த மகானையா யாரென்று கேட்கிறீர்கள்? இவர்கள் தான்.. இவர்கள் தான் பாபா ஹயாத் கலந்தர். ஆம் அஸ்ஹாபே ரஸுல் பாபா ஹயாத் கலந்தர்."

வெகுவேகமாய் நடந்து தெருக்கோடியில் மறைந்து விட்ட கலந்தர்களை புரிந்து கொள்ள முடியாமல் திகைத்த கூட்டத்தினர்- வந்த மகான் நபித்தோழரா? அஸ்ஹாபே ரஸூலா, ஹயாத் கலந்தரா, என்றும் உயிரோடு வாழும் ஓர் இறைநேசரா? - என்று ஒன்றும் புரியாமல் பேதலித்தனர்!

அந்தப்புரத்திலோ, அன்று பிறந்த பாலகரின் அதரத்தில் நெளிந்த புன்னகையை பார்த்த அன்னையும் தந்தையும் 'எல்லாம் தெரியுமோ இந்த பிள்ளைக்கு' என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஏனெனில் நபி கிஸர் (அலை) தம்பதிகளின் முன் தோன்றி சுவர்க்கத்தின் மாதுளங்கனி ஒன்றை தந்து இருவரும் இதை உடைத்து உண்ணுங்கள் உங்களுக்கு ஆண்குழந்தை ஒன்று உண்டாகும் என்று கூறிப் போந்தனர்.

குழந்தை பிறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் நபி கிஸர் (அலை) அவர்கள் மீண்டும் அன்னையின் கண்முன் தோன்றி "பிறக்கப் போகும் உன் குழந்தை ஞான வானில் திடீரென தோன்றி பேரற்புதங்களை உண்டாக்கும் வால்நட்சத்திரங்களைப் போன்ற ஹவாரியூன்களில் ஒருவராயிருப்பார்" என்று சொல்லிப் போயிருந்தார்கள்.

மேலும் பாலகர் தன் வயிற்றில் மூன்று மாத கருவாக இருந்தபோதிலிருந்தே திருக்குர்ஆன் வசனங்களை இனிமையாக கருப்பையிலிருந்து ஓதுவதையும், பாலகரின் இந்த இனிய மறை ஓதும் குரல் தனது இருவிலாப் புறங்களிலிருந்தும் வெளிப்படுவதையும் கவனித்திருந்தனர் அப்புனித தாய்.

யார் பார்வையிலும் படாமல் தாயின் மணி வயிற்றிலிருந்து முழு நிலவாய் வெளிவந்த பாலகரை குளிப்பட்டுவதற்காக தாதிகள் தூக்கியபோதோ குழந்தை வலது கையால் இருகண்களையும் பொத்திமூடி கொண்டிருப்பதையும் இடது கையால் மானத்தை மூடி மறைத்துக் கொண்டிருப்பதையும் கண்டு அதிசயித்தனர்.

---

*குறிப்பு - பாபா ஹயாத் கலந்தர் மைசூருக்கு அருகில் சிக்மகளூர் மலைப்பிரதேசத்தில் அடக்கமாகியுள்ளனர். அவர்கள் நபித்தோழர் என்றும், அவர்களின் இயற்பெயர் அப்துல் மஜீத் என்றும், இவர்களே பாபா தப்லே ஆலம் பாதுஷாவாக மறுபிறப்பெடுத்தார்கள் என்றும் கூறப்படுகிறது.*



*நாவில்லாமல் பேசுகிறார்:*
*'நலமாம் சுவர்க்கம் உன்னைவிட'*
*'நீ இல்லாத சொர்க்கமெனில்*
*நிஜமாய் எனக்கு அது நரகம்!'*
*தாயில்லாத பிள்ளைபோல்*
*தவிக்கின்றேனே அறிவாயோ?*
*பாயில்லாமல் பேரின்பம்*
*பருகத் தருவாய் பராபரியே!*
*-ஹதீகத்*
*- ஹக்கீம் ஸனாயி*

## பத்தொன்பது வயது பயில்வான்

பரவசமான இளங்காலைப் பொழுது. அரண்மனையை ஒட்டி அமைந்த பூந்தோட்டத்தில் போர் பயிற்சிக் கூடம் அமைந்திருந்தது. சிலம்பு, வாள் சண்டை, ஈட்டி அம்பு எறிதல், குதிரைசவாரி, குஸ்தி போன்ற அரசகுலத்திற்கு உரிய உடற்பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார் இளவரசர் பாபா ஃபக்ருத்தீன்.

மந்திரி பிரதானிகள் மற்றும் படை தளபதிகளின் குடும்பத்தை சேர்ந்த இளைஞர்களும் அந்த பயிற்சிக் கூடத்தில் நடந்த பலவகை சிறந்த பயிற்சிகளில் ஈடுபட்டுவந்தனர். பாபா ஃபக்ருத்தீனின் உற்ற தோழராக மதரஸாவிலும், உடற்பயிற்சி கூடங்களிலும் விளங்கியவர் பாபாவுக்கு ஒரு வயது மூப்புடைய மகுதூம் சையத் அலீஷா ஆவார்.

அந்த இறைஞர் அலீ ஷா, பாபா அவர்களின் பெரிய தந்தையார் சையத் சஅதுத்தீனின் மகனாவார். அவரது தாயாரும் பாபாவின் தாயாரான பாத்திமா மதனியின் சகோதரியுமான ஃபாத்திமா மதனி கபீர் என்பவர், சையத் அலீ ஷா ஒரு வயது பாலகராக இருந்த போது காலமாகிவிட்டார்.

அதனால் பாபா ஃபக்ருத்தீனும், சையத் அலீ ஷாவும் ஃபாத்திமா மதனியிடமே பால்குடித்து வளர்ந்து பருவ வயதில் இரட்டையர் போல காணப்பட்டார்கள். ஒருவரை விட்டு ஒருவர் பிரியா சிநேகிதர்களாகவும் இருந்தனர்.

திருக்குர்ஆனை ஓதுவதிலும் பாராயணம் செய்வதிலும் இருவரும் அபார ஆற்றல் பெற்றிருந்தனர். அரபு ஃபார்ஸி மொழிகளுடன் பலூர்ச்சி, ஸிஸ்தான் மொழிகளிலும் இலக்கண

இலக்கியங்களில் தேர்வு பெற்றிருந்தனர். ஆற்றல் மிக்க அவ்விளைஞர்கள் உடன் பயிலும் மாணவர்களுடன் அன்று பொதுமக்களின் முன்பு திறமையை காட்டுவதற்காக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

குதிரை சவாரி, ஈட்டி எறிதல், பளு தூக்குதல், வாள் வீச்சு, சிலம்பம் ஆகிய அனைத்து கலைகளிலும் அன்று நடைபெற்ற போட்டிகளில் மற்ற இளைஞர்களைவிட அதிகஆற்றல் பெற்றவர்களாக பாபா ஃபக்ருத்தீனும், சையத் அலீஷாவும் விளங்கியதால் அதிகமதிகம் பரிசுகளைப் பெற்று முன்னணியில் நின்றிருந்தார்கள்.

குஸ்தி போட்டிக்காக நாட்டின் புகழ்பெற்ற மாமல்லன் ரஷீத்கான் என்பவர் ஐபோலிலிருந்து வரவழைக்கப் பட்டிருந்தார். இளைஞர்களிடையே நடக்கும் போட்டியில் நீதிபதியாக உட்கார்ந்திருந்த ரஷீத்கான் ஒரு குட்டிமலை போல நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

அவ்வப்போது அவர் தனது இடத்தில் எழுந்து நின்று, கை புஜங்களை மடக்கி இறைஞர்களை அழைத்து தனது புஜத்தில் கைகோர்த்து தொங்கும்படி செய்து, தன் ஆற்றலை வெளிப்படுத்தி கொண்டிருந்தார்.

சிரிப்பும் களிப்புமாக நேரம் கடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியில் இளைஞர் பாபா ஃபக்ருத்தீனை தன் புஜங்களில் கைகோர்த்து தொங்க பயில்வான் அழைத்த போது, புன்னகையோடு நடந்து வந்த பாபா அவரது பானைபோன்ற வயிற்றில் ஓங்கி ஒரு குத்துவிட்டார்.

புஜபல பராக்கிரமசாலியான ரஷீத்கான் அடுத்த நொடியில் நிலைகுலைந்து சரிந்து மல்லாந்து விழுந்தார். தட்டுத் தடுமாறி அவர் திரும்ப எழும்போது பலத்த சிரிப்பும் நகைப்பும் கேலியும் பார்வையாளர்களிடையே எழுந்தது. இளைஞர்களும் பார்வையாளர்களாக திரண்டிருந்த பொதுமக்களும் “பாபா ஃபக்ருத்தீனுக்கு ஜே ஜே!” என்று இளவரசரை பாராட்டி கூச்சலெழுப்பினார்கள்.

ஒரு பக்கம் வெட்கமும் ஒரு பக்கம் விரோதமுமாக எழுந்து நின்ற பயில்வான் ரஷீத்கான் ஆடையில் படிந்த புழுதியைத் தட்டிவிட்டுக் கொண்டார். இளவல் பாபாவை முறைத்துப் பார்த்தார். தன் இரு புஜங்களையும் மீண்டும் மடக்கி கொண்டு பாபாவுக்கு பார்வையால் அழைப்புவிடுத்தார்.



குட்டிமலை போன்ற பயில்வானை, பத்தொன்பது வயதே நிறைந்த பாபா நெருங்கிச் சென்றார்கள். இளவரசருக்கு எதாவது அபாயம் நேர்ந்துவிடப் போகிறது என்று பார்வையாளர்கள் பயந்து கொண்டிருந்த தருணத்தில், பாபாவுக்கும் ரஷீத்கானுக்கும் ஆக்ரோஷமான மல்யுத்தம் மூண்டுவிட்டது.

அடுத்த சில நொடிகளில் யாரும் எதிர்பாராத வண்ணம் ரஷீத்கான் தூரத்தில் தூக்கி எறியப்பட்டார். பாபா ஃபக்ருத்தீன் அவரை முறைத்துப் பார்த்து கொண்டு கம்பீரமாக நின்றிருந்தார்.

தன் தோல்வியை ஒப்புக்கொண்ட ரஷீத்கான் மெல்ல எழுந்து வந்து இளைஞர் பாபாவின் கையை உயர்த்தி பிடித்து தூக்கி “பயில்வான் ஃபக்ருத்தீனுக்கு ஜே ஜே! ஜிந்தாபாத்!” என்றும் “இளவரசர் பாபா பயில்வானுக்கு ஜிந்தாபாத்” என்றும் உரக்க கூவினார். கூடி நின்ற மக்கள் “ஜிந்தாபாத் ஜிந்தாபாத்” என்று கூச்சலெழுப்பி மகிழ்ச்சியில் தத்தளித்தனர்.

* * * * *

சீஸ்தான் ஏரியை சுற்றி வளைத்திருக்கும் களிப்புநிலம் உலகை வலசை வரும் ஆயிரக்கணக்கான பறவை இனங்களுக்கு கோடை கால சரணாலயம், கொடிய வனவிலங்குகளின் கூடாரம், கோரை புற்களும், செடார் மரங்களும் செழித்திருக்கும் கானகம்.

ஆண்டு முழுவதும் வீசும் பருவக் காற்றுகளால் பாலைவனமாகவும், சோலைவனமாகவும், வறண்ட தரிசுநிலமாகவும், வளம் மிகுந்த கோதுமை, பார்லி, ஓட்ஸ் பயிர்கள் பயிரிடும் வயல்களாகவும் அவை வளர்ந்து விளைச்சல் தரும் தானிய களஞ்சியமாகவும், மாறி மாறி காட்சியளிக்கும் நதிப்படுகைகளும், குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த நிலப்பரப்பு அது.

ஸெரஞ்ச் என்ற ஜெஹ்தானுடன், சபஹார், கஸர்கந்த், தல்கான், ஹிர்மந்த், இரான்ஷாஹர், காஷ், கொனார்க், நிசார், சரவான், சர்பாஸ், சோரான், ஸபோல், ஸபோலி, ஸெஹாக் மாவட்டங்கள் சீஸ்தானின் சிதறிய இதரப்பகுதிகள் ஆகும்.

அந்த நிலப்பகுதியில்தான் ஸெரஞ்ஜ், ஸெகதான், சாகஸ்தான், என்று சாகா இனமக்கள் வாழும் நாட்டின் தலைநகரமாக

நாட்டின் நிலப் பெயர் கொண்டு சீஸ்தான் விளங்கியது.

டேரியஸ் பேரரசின் ஆட்சிப் பகுதியாக விளங்கிய இப்பிரதேசத்தில் சாகா ஆரிய இனப்பிரிவினர் கி.மு.128ல் பெரும் நிலப்பகுதியை கைப்பற்றி உட்புகுந்தனர் என்று வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.

சாகா இனத்தை சார்ந்த அரகாசிய பரம்பரை ஆட்சிக்குப்பின் சாஸனிடுகளின் ஆட்சி நடைபெற்றது. இஸ்லாத்தின் இரண்டாம் கலீஃபா ஹஜ்ரத் உமர் அவர்களுடைய காலத்தில் சீஸ்தான் இஸ்லாமியப் படையினரால் வெல்லப்பட்டது. அரபு ஆளுநர்கள் ஆட்சி பொறுப்பில் நியமிக்கப்பட்டார்கள்.

பாரசீகத்தை சேர்ந்த முஸ்லிம் அரசர் யாகூப்-இ-லயித் ஸஃபாரியும் அவரது குடும்பத்தினரும் நீண்டகாலம் இப்பகுதியை ஆட்சி செய்தனர்.

* * * * *

வீர விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்த அந்த முற்பகல் பொழுதில், பலத்த மணல் காற்று வீசத் தொடங்கியது. நடப்பு ஆண்டில் மழைநீர் அதிகமில்லாததாலும், ஆறுகள் வறண்டு போயிருந்ததாலும் பாலைவனப் பரப்பாக மாறிவிட்ட சீஸ்தான் நிலப்பரப்பில் ஆங்காங்கே மணல் குன்றுகள் காட்சியளித்தன.

நான்கு மாத காலம் தொடர்ந்து வீசும் லெவார் சூறைக்காற்றின் வேகம் அதிகரித்து கொண்டிருந்தது. குன்றுகளில் காற்று அள்ளி வந்த மணல் சாரல் அதிகரிக்கவே மக்கள் தம் இல்லங்கள் நோக்கி விரையத் தொடங்கினர்.

இராஜப் பிரதானிகளும், படை வீரர்களும், நண்பர்கள் பட்டாளமும் புடைசூழ அரண்மனைக்குள் வந்து புகுந்த பாபா ஃபக்ருத்தீனுக்கு பலத்த வரவேற்பு காத்திருந்தது. மைந்தர் புகழ்பெற்ற பயில்வானை மண்கௌவச் செய்தது பற்றிய செய்தியை காதால் கேட்டு தாயாரும், உறவுப்பெண்டிரும், மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர்.

புஜபல பராக்கிரமசாலியாக விளங்கும் மைந்தர் ஃபக்ருத்தீனிடம் அரச பாரத்தை இறக்கி வைத்துவிட்டு, தான் தவவாழ்கைக்கு ஒதுங்கி விடலாமா என்று அவரது தந்தையார் ஷெய்கு ஸையிது ஹுஸைனி தீவிரமாக சிந்திக்க துவங்கினார்.



‘என்மேல் காதல் கொள்ளாதே!’
இதுதானே உன் உபதேசம்
உன்மேல் காதல் இல்லையெனில்
உலகம் எனக்கு பாலைவனம்!
நன்மை தீமை எனக்கில்லை
நானோர் கலந்தர் ஃபக்கீராம்!
பெண்ணே பேரின்ப காதலியே
பேசா மடந்தையே பராபரியே!
- மஸ்னவி ஷரீஃப்
- மவுலானா ரூமி

## மகான் சூட்டிய மணிமுடி

கூஹே காஜா என்ற காஜா மலையின் மீது அமைந்த அர்காசித் அரண்மனை அன்று மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பாபா ஃபக்ருத்தீனுக்கு இளவரசு பட்டம் சூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரசர் சையத் ஹுசைன், துணைவியார் ஃபாத்திமா மதனி மற்றொரு மைந்தரான முர்த்தாஜா, தமையனாரின் மைந்தரும் இளவரசு பொறுப்பேற்கவிருக்கும் பாபா ஃபக்ருத்தீனின் தோழருமான சையத் அலீ ஷா ஆகியோர் அவையில் கவுரவ இருக்கைகளில் அமர்ந்திருந்தனர்.

அவர்களைத் தவிர மந்திரிப் பிரதானிகளும், இராணுவ தளபதிகளும், சீஸ்தான் பிரதேசத்தின் இதர நகரங்களிலிருந்து வந்திருந்த ஆட்சியர்களும் அலுவலர்களும் காவலர்களும் பொதுமக்களும் அவையில் நிறைந்திருந்தனர்.

இளவரசு மகுடம் சூடுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த அந்த தருணத்தில் அரசவைக்குள் வந்து நுழைந்தார் ஷேக்ருக்னுத்தீன் அபுல் வதஹ் என்ற மகான். நாடறிந்த ஷெய்குமார்களில் ஒருவராகவும் மஜ்தூபாகவும் (இறைகாதலர்) விளங்கிய அவர், திடீரென அவையில் வந்து புகவே மன்னர் மன்னர் சையத் உசைன் தன் அரச இருக்கையிலிருந்து எழுந்து நின்றார். அந்த மண்டபம் முழுதும் அமைதி நிலவியது.

மன்னருக்கருகில் சரியாசனம் கொடுக்கப்பட்டு அவர் அமர்த்தப்பட்ட பிறகு பட்டம் சூட்டும் பணிகள் மீண்டும் தொடங்கின. மன்னர் தம் மைந்தர் ஃபக்ருத்தீனை ஷெய்கு

மகான் ஷேக் நூருத்தீனிடம் அறிமுகப்படுத்திவிட்டு இளவலுக்காகதுஆ(பிரார்த்தனை)செய்யும்படிவேண்டினார்.

மகானவர்கள் பாபா ஃபக்ருத்தீனை அழைத்து தமது இருக்கைக்கு அருகில் அமரச்செய்தார். பிறகு அன்பொழுக சிலவார்த்தைகளை கூறினார்:

"மைந்தரே இந்த உலகமும் உலக வாழ்க்கையும் கனவைப் போன்றது. மனிதர்கள் உறங்குகிறார்கள், மரணம் வந்ததும் விழித்து கொள்வார்கள் - என்று நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

"உமக்கு பாராளும் பட்டம் சூட்டப்படும் இந்த தருணத்திலும் உலகின் இந்த யதார்த்த நிலையை நீர் உணர்ந்திருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த ஞானவார்த்தைகளை உம்மிடம் கூறுகிறேன்!"

மகானவர்கள் பிறர் செவிகளில் விழாத வண்ணம் கூறிய உபதேச சொற்கள் இளைஞர் ஃபக்ருத்தீனின் இதய ஆழத்தில் நுழைந்தன. தன் இருக்கையிலிருந்து எழுந்துவிட அவர்கள் முயன்றனர்.

மகான் ஷேக் நூருத்தீன் அபுல் வத்தஹ் உடனே தமது கரங்களால் இளவலை அமர்த்தி இருக்கையிலிருந்து எழவிடாமல் தடுத்து மறுபடியும் உபதேசித்தார்கள்.

"மைந்தரே உலக உறவை துறப்பதல்ல ஞானம். உலகத்தோடு ஒட்ட ஒழுகி, தான் யார், தன் நாயன் யார்? என்று கண்டறிவதே சிறந்த ஞானம். அவ்வலுத் தீனி மஹ்ரிபத்துல்லாஹ் - மதத்தின் ஆரம்பம் இறைவனைப்பற்றி ஆராய்ந்தறிவது என்பது எம்பெருமான் (ஸல்) அவர்களின் அருளுபதேசம்.

"இராஜ்யபாரத்தை சுமக்கத்தான் வேண்டுமென்றாலும் மெய்ஞ்ஞானப் பாதையில், மன்அரஃப நஃப்ஸஹு ஃபகத் அரப ரப்பஹு - தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான் என்ற அரிய ஞானத்தை அடைய வழிகோளும் தரீக்குகளின் பாதையில் நடந்து கொள்ளும்!"

என்று உபதேசித்துவிட்டு தமது இருக்கையிலிருந்து எழுந்து கொண்டார்கள். மகானவர்கள் அனைவருக்கும் தமது ஸலாத்தை தெரிவித்தவர்களாக மன்னர் ஸைய்த் ஹுசைனின் வேண்டுகோளை ஏற்று வெள்ளிதட்டத்தில் இருந்த தங்க கிரீடத்தை எடுத்து இளவல் ஃபக்ருத்தீனின் சிரசில் வைத்தார்கள்.



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கி.பி. முதல் நூற்றாண்டில், இஸ்லாத்தின் தோற்றத்திற்கும் நானூறு ஆண்டுகளுக்கு முன், அகமெனிட் பௌத்த மன்னர்களால் கட்டப்பட்ட அந்த அரண்மனையின் கொலுமண்டபம் வாழ்த்து கோஷங்களால் கலகலத்தது.

"மாமன்னர் ஸைய்த் ஹுசைன் ஜிந்தாபாத்!

இளவரசர் ஸைய்த் ஃபக்ருத்தீன் ஜிந்தாபாத்!" என்றும் அவையோர் ஆர்ப்பரித்தனர்.

அரண்மனையில் மகுடம் சூட்டும் விழாவுக்காக புதுப்பிக்கப்பட்டு விளக்குகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த விசால கொலு மண்டபம் பட்டப்பகளிலும் இரவுகாலத்தில் கடலில் பயணிக்கும் ஜலதீப கலம் போல காட்சியளித்தது.

கூஹே காஜா மலை குன்றை சுற்றி சிஸ்தான் ஏரியின் நீர்பரப்பு சமுத்திரம் போல் விரிந்து கிடந்தது. ஏராளமான படகுகளும், பாய்விரித்த குட்டி கப்பல்களும் ஏரியில் அங்குமிங்குமாக ஆடிக்கொண்டும் ஓடிக்கொண்டும் இருந்தன.

இராஜப் பிரதிநிதி ஒருவர் எழுந்து நின்று இளவரசர் ஃபக்ருதீனுக்கு பத்து சிறப்பு பெயர்களை வரிசையாக கூறினார். மக்கள் ஜே என்றும் ஜிந்தாபாத் என்றும் வாழ்த்து குரல் எழுப்பினார்கள்.

*"ஜன்னத்து கா ஹல் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*நூரே அப்தன் அபதி பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*நூரே ஜன்னத் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*சையத் ஹுசைன் பாத்திமா மதனிக்கா பேட்டா*
*பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*சுல்தானே ஆலம் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*ஹாஜி பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*ஷா ஷவார் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*தீர் அந்தாஸ் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*
*சுல்தான் பயில்வான் பாபா ஃபக்ருத்தீன் ஜே ஜே!*

மக்களின் ஆரவார கோஷத்துக்கிடையே அரசரிடமும் அரசியாரிடமும், அரசப் பிரதானிகளிடமும் இளவரசர் ஃபக்ருத்தீனிடமும் விடைபெற்று மாமன்றத்திலிருந்து மகான் ஷேக் நூருத்தீன் வெளியேறி வெளிவாசலை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களை வழியனுப்பி வைக்க, அறிஞர் பெருமக்கள் ஹஜ்ரத் மஹ்தூம் ஜஹான்பாணி, சையத் ஜலால் புகாரி, ஷேக் ஷாஹ் பாஸ் கலந்தர், ஹஜ்ரத் ஷேக் அலீ ஜிவலகி பீர் பர்வாஸ் ஆகியோர் தொடர்ந்து நடந்தனர்.

வெளிவாசலை நெருங்கிவிட்ட மகான் திரும்பி நின்றபடி உரக்க கூவினார்கள்.

“பாபா ஃபக்ருத்தீன் தர்வேஷ் கலந்தர்கீ ஜிந்தாபாத்” மக்களும் அதனை ஏற்று “ஜிந்தாபாத் ஜிந்தாபாத்” என்று ஆர்ப்பரித்தனர்.

*வரலாற்று காலத்துக்கு முன்பிருந்தே மனித நடமாட்டமுள்ள இடமாக விளங்கிய அந்த கூகே மலைக்குன்று கி.மு. 3000 ஆண்டுகளில் ஜிரோப்பித் நாகரிகத்தின் பகுதியாக கருதப்படுகிறது. அதன்பின் ஆரிய இனத்தின் ஓர் அங்கமான இந்தோ ஆரியர்கள் இங்கு குடியேறியிருந்தனர். ஜொராஸ்திரியர்களின் புனித குன்றாக கருதப்பட்ட இங்கு அவர்களின் கோயில் நெடுந்தீ நீண்ட காலம் எரிந்து கொண்டிருந்தது.*

*கி.மு. 600 ஆண்டுகளில் அரகோஷியா என்ற பெயருடன் சீஸ்தான் விளங்கியபோது இங்கு மீடியன் பேரரசு சில நூற்றாண்டு காலம் நீடித்திருந்தது. மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் பட்டுப்பாதையில் படைகளோடு பயணித்த பேரரசர் அலெக்ஸாந்தார்,*

*இந்த தீவுக்குன்றின் மேலேறி அரகோஷிய மன்னர்கள் ஆண்ட மாபெரும் அரண்மனையில் அமர்ந்து ஓய்வெடுத்ததாகவும், ஸெராங்கை வென்று அதில்தன் படைதளபதியை ஆட்சியாளராக நியமித்ததாகவும் கூட குறிப்புகள் கிடைக்கின்றன.*

*கி.மு. 200 க்குப்பின் இங்கு வந்து நுழைந்த சாகாக்கள் சாகஸ்தான் என்று இந்நாட்டுக்குப் பெயரிட்டு பின்னர் அப்பெயர் சீஸ்தான் என்று மருவியது. அரகோஷியரின் அரண்மனையை சாகஸ்தானியர் விரிவு படுத்தி உயர்த்தி அழகுபடுத்தினர்.*

*கி.மு. முதல் நூற்றாண்டிலும் கி.பி. முதல் நூற்றாண்டிலும் அடுத்தடுத்து இங்கு நுழைந்த பார்த்தினியர்களும் இந்தோபார்த்தினியர்களும் சீஸ்தானை வென்று மலைகுன்றில் அமர்ந்து சில காலம் ஆட்சி செலுத்தினர். சாஸானிய துருக்கிய இனம் அல்லது சாஸனிட்ஸ் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தங்கியிருந்தனர். குஷன்ஷாவும் ஹெஃப்தலைத்தும் சாஸானிய மன்னர்களில் முக்கியமானவர்கள்.*



*அரபகத்தின் தளபதி ஆஸிம் பின்அம்ர் கி.பி. 640 திலும், அப்துல்லாபின் உமர், கி.பி.643, 644ம் ஆண்டுகளிலும் சீஸ்தானில் நுழைந்தார்கள். எனினும் இஸ்லாமிய ஆட்சி இங்கு நிலைபெறவில்லை.*

*துருக்கியர்களின் நாடோடி இனமான கரகானியர் சில நூற்றாண்டு காலம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். துருக்கிஸ்தானிலும், சீஸ்தான், பலுசிஸ்தானிலும் ஆட்சியிலிருந்த அவர்கள் பௌத்த மதவழிபாடுடைய பழங்குடியினர் என்பதால் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சிஸ்தானில் ஆங்காங்கே வாழ்ந்த முஸ்லிம்கள் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.*

*சீஸ்தானின் ஆட்சியாளனான நஸ்ர் காகான் சுமார் 150 முஸ்லிம்களை படுகொலை செய்தான். கலந்தர்கள் சிலர் மூலம் தகவலறிந்து திருமக்கத்தின் குறுநிலமன்னர் ஸையத் முஹம்மத் ஹுசைன் என்பார் தமது சகோதரர் அப்துல்காசிம் என்பாரின் தலைமையில் ஆயிரம் பேர் கொண்ட ஃபுதுவா என்ற புரட்சிப்படையை சீஸ்தானை நோக்கி அனுப்பிவைக்கிறார்.*

*சீஸ்தானில் கி.பி. 960 ல் நடந்த போரில் நஸ்ர் காகன் என்கின்ற அகாஹிர் மன்னன் (கரகானி - அல் கரகானி - அலிஃப், லாம், காஃப், ஹே, நூன், அல் காஹிகான் - அல்காஹிர் கான் - அகாஹிர் மன்னன்) கொல்லப்பட்டான்.*

*ஸையத் அபுல் காஸிம் மற்றும் அவர்களுடன் மார்க்கப் பிரச்சாரம் செய்த படைவீரர்களான தோழர்கள் ஆகியோரின் பெருமுயற்சியால் கி.பி. 960 க்கும் 990 க்கும் இடையில் சிஸ்தான், பலுசிஸ்தான், துருக்மினிஸ்தான் பகுதிகளில் இரண்டு லட்சம் பேர் இஸ்லாத்தில் இணைந்தனர்.*

இப்படி, நீண்ட வரலாறும் நெடிய பாரம்பரியமும் மிக்க சீஸ்தான் ஏரியும் மலைக்குன்றும், அதன் நடுவில் அமைந்த உலகமகா காவியங்களில் ஒன்றான ஷாஹ் நமா வர்ணிக்கும், வீரப்புருஷன் ருஸ்தூமின் தந்தையால் கட்டப்பட்டதாக கருதப்படுவதுமான மாபெரும் மாளிகை குதூகலம் கொண்டது. பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் இளவரசு பட்டம் சூட்டப்படும் பெரும் விழாவில் இன்புற்றது.

மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். ஆனால் அடுத்த ஒரு சில மாதங்களில் பாபா ஃபக்ருத்தீன் அரச பதவியை துறந்து உலகை சுற்றும் தர்வேஷாக ஆண்டவன் மீது காதல் கொண்டு அலையும் கலந்தர் ஃபக்கீராக அந்த அரண்மனையை விட்டு வெளியேறப்போகிறார் என்பது அத்தருணத்தில் யாருக்குமே தெரிந்திருக்கவில்லை.

*அரசர் யாரையும் இனிப்பாடேன்!*
*ஆண்டவா அகிலப் பேரரசே*
*சிரசு தாழ்த்தி உன்பாதம்*
*சிவக்க தினமும் கவிதாஞ்சலி*
*பரவச மாகப் பாடிடுவேன்!*
*பட்டம் பதவி வேண்டேன் உன்*
*முரசு கட்டில் ஓரத்தில்*
*முடங்க இடம்தா அதுபோதும்!*
*- ''கொரசானின் கண்ணீர்''*
*- பாரசீக கவிஞர் அன்வரி.*

## தனிமையில் வெளியேறிய தர்வேஷ்

''அல்ஃபக்ர ஃபக்ரீ!'' (எனது ஃபக்கீர் நிலைமையைப் பற்றி நான் பெருமைப் படுகிறேன்) என்பது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உதிர்த்த ஹதீஸ் பொன் மொழிகளில் ஒன்றாகும். ''சிறியதும் பெரியதுமான எல்லா தேவைக்கும் நான் இறைவனாகிய உன்னையே எதிர் பார்த்திருக்கிறேன்'' என்று நபி மூஸா (அலை) இறைவனிடம் முறையிட்டதாக அருள்மறை குர்ஆனில் காணப்படுகிறது (28:24).

பாபா ஃபக்ருத்தீன் அந்த மலைக்குன்று மடாலயத்தில் கண்மூடி அமர்ந்திருந்தார்கள். அங்கு வாசம் செய்த கலந்தர்கள், அரச பதவியைத் துறந்து அங்கு வந்து குடியேறி விட்ட பாபாவை கலந்தர்கள் மரியாதையோடும் கண்ணியத்தோடும் அணுகினர்.

பாபாவுக்கென்று மடத்தில் ஒரு தனியிடத்தை ஒதுக்கினார்கள். மலை சிகரத்தின் மறுகோடியில் ஏரிக்கரையின் பின்னாலிருந்து எழுந்தது இளஞாயிறு. அடிவானில் கருக்கிருட்டு கலைந்தது. அகன்று உருண்ட செம்பரிதிக் கோளமாக ஆதவன் மெல்ல மெல்ல மேலெழுந்தது. விளிம்பிலிருந்து வானில் சிதறிய ஒளித்துளிகளை கானகமரங்கள் தலையாட்டி வரவேற்றன.

அதிகாலை ஃபஜர் தொழுகையை முடித்துவிட்டு முஸல்லா விரிப்பில் அமர்ந்திருந்த பாபா ஃபக்ருத்தீனின் அதரங்கள் பெருமானார்(ஸல்) அவர்கள் ஓதிவந்த ஒரு வேண்டுதலை துஆவை உருப்போட்டு கொண்டிருந்தன.



''என்னை வரம்புமீறச் செய்யும் செல்வத்தையும், இறைவா உன்னை மறக்கடிக்கும் வறுமையையும் விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.''

வறுமையும் வேண்டாம் செல்வமும் வேண்டாம், தவக்கல்து அலல்லாஹ் - ஆண்டவனே அனைத்துக்கும் உன்னிடம் ஆதரவுவைத்தேன் - இதுவே கலந்தர் ஃபக்கீர்களின் சிதையாத விசுவாசம் என்பதை இப்போது பாபா ஃபக்ருத்தீன் அவர்கள் வெகுவாக தெரிந்து கொண்டிருந்தார்கள்.

பாபா அவர்களின் மனத்திரையில் கடந்த ஓராண்டு காலமாக அரண்மனையிலும் தலைநகரிலும் நடந்த நிகழ்வுகள் இப்போது ஒளிச் சித்திரங்களாக ஓட தொடங்கின:-

இளவரசுப் பட்டம் சூட்டப் பட்ட மறுநாள் அதிகாலையிலேயே பாபாவின் தந்தையார், சீஸ்தானின் மன்னர் ஷெய்கு ஸையத் உசைன் காலகதி அடைந்தார்.

பல்வேறு திசைகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்காக வந்த மக்கள் கூடி நின்று நல்லடக்கம் செய்தார்கள். அடுத்த நாள் அதிகாலையில் மூன்றாம் ஃபாத்திஹாவை ஓதிவிடைபெற பாபாவின் தலைமையில் சமாதியருகில் சென்ற உலமாக்களுக்கும் உறவினர்களுக்கும் ஆச்சர்யம் காத்திருந்தது.

மாமரங்களடர்ந்த காலையிருளில் மஜாரின் மீது, துஆ ஓதப்படும் நேரம் ஒரு நீண்ட ஒளி தோன்றியது. அதை தொடர்ந்து ஒரு கனத்த குரல் - ''ஸையத் உசைனே! உமது ஆன்மா அமைதி பெற்றதா? அல்லாஹ் உம்மை பொருந்தி கொண்டானா?'' மஜாரிலிருந்து மறு கணமே பதிலும் வந்தது. அது மறைந்த ஸையத் ஹூசைனின் குரல்: ''ஹுஜூர் அல்லாஹ் என்னை பொருந்திகொண்டான்! நான் ஆத்ம பேரானந்தத்தில் அமர்ந்திருக்கிறேன்!''

இந்த அதிசயமான நிகழ்வைப் புரிந்து கொள்ள முடியாமல் அச்சத்தின் பிடியில் நடுங்கிய மாந்தர்களுக்கு, அங்கு வந்திருந்த ஷாஹ்பாஸ் கலந்தர் விளக்கம் தந்தார்கள். ''தோழர்களே இந்த ஒளியும், குரலும் ஹலரத் கிஸர் (அலை) அவர்களுடையதாகும். இலட்சத்தில் ஓர் நல்லடியாருக்கு இவ்வாறு சம்பவிக்கும்.''

உறவினர்களுடன் இல்லந் திரும்பிய இளவல் பாபா ஃபக்ருத்தீன் மௌனமே உருவாக அரண்மனையில் ஓர் ஒதுக்குப் புறமான அறையில் சில நாட்கள் தனித்தார்கள். பின்னர் அரசவைக்கு வந்து பாபா அரியணையில் அமர்ந்த நாளில் மீண்டும் ஒரு சோதனை நிகழ்ந்தது. குதிரை வியாபாரி ஒருவன் உயர்ந்த ரக அரபு குதிரைகளை அரசவைக்கு கொண்டு வந்து நிறுத்தினான்.

அவர்களின் பார்வையில் ஒரு பெண்குதிரையின் அழகு பளிச்சிட்டது. தொடர்ந்து குதிரையே அழகென்றால் மாதா விரும்புவதுபோல் ஒரு அழகியப் பெண்ணை மணந்து கொண்டு ... என்ற சிந்தனையில் மகான் ஷேக் நூருத்தீனின் உபதேச வார்த்தைகள் குறுக்கிட்டன. அதை தொடர்ந்து ஒரு ஹதீஸ் ஞாபகத்துக்கு வந்தது:-

''நபிகள் (ஸல்) சொன்னார்கள் மிஃகுராஜின் போது நான் அல்லாஹ்வை அழகிய இளம்பெண்ணாக கண்டேன்.''

பாபா அவர்களின் மனம் ஒரு முடிவுக்கு வந்தது: ''வேண்டாம் உலகமும் அதன் இன்பங்களும். நான் அல்லாஹ்வை சந்தித்தே ஆக வேண்டும்.'' மீண்டும் சில நாட்கள் மௌன சிந்தனையில் ஆழ்ந்த பாபா ஃபக்ருத்தீன் தனது மூத்த சகோதரரும் தோழருமான ஸையத் அலிஷா அவர்களிடம் இராஜபாரத்தை ஒப்படைத்தார்கள். அவரிடம் ''என்னை கொஞ்சகாலம் அமைதியாக இருக்க அனுமதியுங்கள்'' என்று வேண்டினார்கள்.

பாபாவின் மனதில் கடந்த ஓராண்டில் நடந்த சம்பவங்கள் புரண்டு புரண்டு ஓடிக்கொண்டிருந்த போது கீழ்வானத்தில் கதிரவன் ஓரளவு மேலெழுந்து வந்திருந்தான். சிஸ்தான் ஏரியோரத்தில் செடார், தேவதாரு, மா, பனை, காடுகளிலிருந்து விழித்து கொண்ட பறவைகள் விண்ணில் வட்டமிடத் தொடங்கின.

மனதின் நினைவுகளோ விரிந்தன, தந்தை மறைந்த நாற்பதாம் நாளில் தாயார் ஃபாத்திமா மதனீ காலமானார்கள். தாயை தந்தையின் மஜாருக்கு அருகில் நல்லடக்கம் செய்துவிட்டு திரும்பிய போது பாபா அரண்மனைக்கு திரும்பாதது கண்டு அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர்.காவலாளிகளை அனுப்பி தேடிய போது தான்,



மலைகுன்றின் மற்றொரு புறத்தில் அமைந்த, மஜ்தூப் மஹதி அலீ மக்கானில் உள்ள கலந்தர்கள் மடத்தில், பாபா தங்கியிருப்பது தெரியவந்தது.

அடுத்த சில நாட்களில் மடத்துக்கு வந்த மஜ்தூப் மகான் ஷாஹ் பாஷ் கலந்தர், பாபாவின் அருகில் வந்து அமர்ந்தார்கள். இதோபதேசம் புரிந்து, மக்கானின் மேற்கூரையில் இழுத்து கட்டிய திரைச் சீலைகளுக்கு நடுவில் பாபாவை அமர்த்தி,

பியாலா என்னும் ஞானப்பாலை கிஸ்தி என்னும் மண் ஓட்டில் ஊற்றி தானும் அருந்தி அவர்களையும் அருந்தச் செய்து தரீக்காவின் பாதையில் பாபாவை இணைத்து கொண்டார்கள். அந்நிகழ்வில் மடத்தில் தங்கியிருந்த கலந்தர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

கடந்த ஓராண்டு காலத்தின் நிகழ்வுகளை பாபா நினைத்துப் பார்த்துவிட்டு கண்ணயர்ந்த போது, எதிரே தெரிந்த ஏரி எதிர்நீர் வாய்காலின் மேற்பரப்பில் படிந்து வந்த காற்று பாபாவின் முகத்தில் சில்லென்று படிந்தது. கண் விழித்து வாய்க்காலில் கால் வைத்து முகம் கழுவலாம் என்ற எண்ணத்துடன் சறுக்கும் மலை குன்றின் பாதையில் கீழிறங்கி வந்தார்கள்.

வாய்க்காலில் ஒவ்வொரிடமாக அவர்கள் கால்வைத்த போதும் சேறாக காணப்படவே, நூறடி தூரம்வரை நடந்து மணல் படிந்து பளபளத்த நீராழத்தில் இறங்கி நின்றார்கள். பாபாவின் முகம் தண்ணீரில் தோன்றி புன்னகைத்தது. நெட்டுச் சரிவின் விளிம்பிலிருந்து தொங்கிய ஆலமரவிழுதுகள் ஓரத்தில் படகில் ஒண்டிக்கொண்டிருந்த ஒரு மனிதனை பாபா பார்த்தார்கள்.

''யார் நீ? யார் நீ?'' என்று பாபா அதட்டலாக கேட்டார்கள். அந்த மெலிந்த கூன மனிதன், ''யார்நீ என்று என்னை கேட்கிறாயா? நீ யார் என்பது உனக்கு தெரியுமா?'' என்று எதிர்வினா தொடுத்தான்.

குழம்பிப் போய் நின்ற பாபா அவர்களிடம் அந்த மனிதன் மீண்டும் பேசினான் ''நீர் உம்மை மெய்யாகவே அறிந்து கொள்ள வேண்டுமானால் உமது மூதாதை தந்தையரிடம் போய்விடும்.''

மேலும் குழம்பிய இளைஞர் பாபாவிடம் தொடர்ந்து பேசினான் அந்த கூனன். ''ஓராண்டுக்கு முன் மறைந்தவர்கள்

உனது இப்பிறவியின் தாயும் தந்தையும் ஆவார்கள். உனது முற்பிறவியின் தந்தையரோ இந்துஸ்தானத்தின் தென்திசையிலுள்ள திருசிரபுறத்தில் (திருச்சி) உன்வரவுக்காக காத்திருக்கிறார்!''

அதிர்ந்து நின்ற பாபாவிடம் அவன் தொடர்ந்தான் ''கடல் கடந்த அந்த நாட்டில் நீ சென்றடையும்போது ''உன்னை உன் தாய் தந்தையரின் பெயருடன் சேர்த்து அழைத்து, உன்குருவைத் தேடியா வந்தாய்? என்று வினவும் நபருடன் செல் உன் மூதாதை தந்தையரை காண்பாய்''

யார் இந்த விசித்திர கூனன்? என்று பாபா குழப்பியதும் அவன் பேசினான் ''நான் தான் உன் சூக்குமம் இத்தனை பிறவிகளிலும் என் கூன் நிமிராமல் வேதனையின் பிடியில் அலைகிறேன். இந்த பிறவியிலாவது என்னை நிமிரச் செய்யும்!''

''எவன் தன் ஆன்மாவை பரிசுத்தப்படுத்தி ஒளிமயமாக்கி கொண்டானோ அவன் ஜெயம் பெற்றான்''. எவன் தன் ஆன்மாவை (மீண்டும் மண்ணில்) புதைத்துவிடுகிறானோ அவன் நஷ்ட மடைந்தான். அல்குர்ஆன் 91 :9,10

மறைந்து போனான் கூனன். கலந்தர்களின் மடத்துக்கு திரும்பிய பாபா ஃபக்ருத்தீன், நடந்தது கனவா நனவா என்று புரிந்து கொள்ள முடியாமல் பேதலித்தார்கள். கூனன் குறிப்பிட்ட இந்துஸ்தானத்தின் தென்கோடியிலுள்ள திரிசிரபுத்தை தேடிச் செல்வது என்ற முடிவக்கு வந்தார்கள்.

சூக்குமம் காரணம் மாகாரணத்தொடு
துலங்கிடற் கருள் புரியவும்
- குணங்குடி மஸ்தான் சாஹிபு

---

குறிப்பு - ''உமது தாய் தந்தையருடன் உமது பெயரையும் சேர்த்து கூப்பிடுபவர் உமது ஷெய்காயிருப்பார் அவரிடம் சேர்ந்து நீர் மெய்ஞ்ஞானத்தைப் பயின்று கொள்ளும்'' என்று பாபாவின் தாய் ஃபாத்திமா மதனி அவர்கள் உபதேசித்ததாக வேறு குறிப்புகளில் காணப்படுகிறது.



வான் நிறைந்திடும் பரஞ்சோதி
வந்தெனக் குள்ளே குடிபுகுமோ?
கூன் நிமிர்ந்து நான் சூக்குமமாம்
கோட்டைக் கரசன் ஆவேனோ?
'நான்' எனும் பாவக் குழப்பத்தில்
நானூற் றெழுபது ஜென்மங்கள்
ஈனன் பிறவி எடுத்தேனே!
என்று விடுதலை பராபரியே?
-மஸ்னவி ஹரீஃப்
- மவுலானா ரூமி

## எங்கு செல்கின்றீர் தலைவனாரே?

சீஸ்தானின் ஆட்சி கட்டிலில் அமர்ந்திருந்த தனது சகோதரர்கள் சையத் அலீ ஷாவுக்கும், இளவல் முர்த்துஜாவுக்கும் உயிருக்கு ஆபத்து வந்திருப்பதாக கனவு கண்டு பதறி எழுந்தார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

விடியா விடியலில் முகம்மத் கஜினியின் படைத்தலைவன் பௌத்தன் ஆகிய சாம்ராஜ், சீஸ்தானின் தலைநகர் ஜெராங்கை முற்றுகையிட்டிருப்பதாக கூஹெ மலைக்குன்றுக்கு தகவல் வந்தது.

அவசர அவசரமாக பாபா மலைக்குன்றிலிருந்து இறங்கி ஜெராங்கு நோக்கி பயணப்பட முனைந்தபோது, மடத்தில் தங்கியிருந்த நூற்று கணக்கான கலந்தர் ஃபக்கீர்களும் ஈட்டி, போன்ற வாள் போர் ஆயுதங்களை கையிலேந்தியவர்களாக ஆயத்தமாகிவிட்டார்கள்.

சீஸ்தான் ஏரியின் இக்கரையில் படகிலேறி அரைமணி அவகாசம் பயணித்து எதிர்கரையை அடைய வேண்டும், செடார் தேவதாரு மரக்காடுகளினூடே நுழைந்து ஜபோலை அடைந்தால், அங்கிருந்து குதிரைகள் ஒட்டகங்களில் ஒரு மணி நேரம் பயணித்து ஜெராங்க் நகரை அடைந்துவிடமுடியும்.

பாபா அவர்கள் கோரிக்கையேதும் வைக்காமலே அவர்களோடு புறப்பட்டுவிட்ட ஃபக்கீர்கள், பாபாவை படைத் தலைவரை பேச்சின்றி தொடரும் ஆயுதப்படை வீரர்களைப் போல பின் தொடர்ந்தார்கள், பொழுது உச்சிக்கு வரும் முன்பு ஜெராங்கின் எல்லையை வந்து அடைந்துவிட்டார்கள்.

கஜ்னியின்படை ஜெராங்க் நகரின் கோட்டை மதில்களைச் சுற்றி சூழ்ந்திருந்த அகழியைக் கடந்து கோட்டை கதவை உடைத்து உள்ளே புகுந்து செல்ல தொடங்கியிருந்த தருணம் அது.

உள்ளிருந்து வந்த பலத்த எதிர்ப்பையும் மீறி எதிரிப்படைகள் ஜெராங்கின் வீதிகளில் கால்வைத்த போது பின்னாலிருந்து வந்த கருப்பாடை அணிந்த கலந்தர்களின் கூட்டத்தைக் கண்டு திடுக்கிட்டார்கள்.

கஜ்னியின் காலாட்படையில் அதிதமதிகம் இந்து வீரர்களே இடம் பிடித்திருந்ததாலும் படைத்தலைவர் சாம்ராஜூம் பௌத்தர் என்பதாலும், புதுமையாக தோன்றும் கலந்தர்களின் கருப்பாடையும் அவர்கள் கையில் உயர்த்தி வந்த நீண்ட நெடுவாட்களும் எதிரிப் படையினரை கலக்கமடையச் செய்தது.

ஏதோ வினோதமான அசுரர்களின் படை விண்ணிலிருந்து இறங்கிவிட்டதோ என்று திகைத்து அச்சத்தின் பிடியில் அகப்பட்டு எதிரிகள் தத்தளித்தார்கள். அந்திமாலை வரை நடைபெற்ற உக்கிரமான போரில் இருதரப்பிலும் நூற்று கணக்கான பேர் கொல்லப்பட்டார்கள்.

பள்ளிவாசல்கள் சில இடிக்கப்பட்டாலும், கடை தெருக்கள் கஜ்னியின் படையால் சூறையாடப்பட்டாலும் இறுதி வெற்றி இஸ்லாமியப் படையினருக்கே கிடைத்தது. பகைவன் சாம்ராஜ், பாபா ஃபக்ருத்தீன் நேர்முகமாக எரிந்த ஈட்டியால் குத்தப்பட்டு போர்குதிரையிலிருந்து கீழே விழுந்தான்.

தலைவனின் மரணத்தால் எதிரிகளின் உற்சாகமும் வேகமும் குறையத் தொடங்கியது. கோட்டையை விட்டு பின்வாங்கி ஓடிய எதிரிகளை ஸையத் அலீ ஷா விரட்டிச் சென்றார், காரிருளில் சீஸ்தானின் எல்லையைத் தாண்டி தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடச் செய்தார்.

ஹேமுன் ஏரியின் கழிமுக கால்வாய் ஒன்றில் சாம்ராஜின் பிணம் தூக்கியெறியப்பட்டது. அடுத்த நாள் அதிகாலையில் ஜெராங்கின் அரண்மனையில் ஆட்சிமன்றம் அவசரமாக கூடி அரசியல் நிலைமைகளை ஆராயத் தலைப்பட்டது. ஆலோசனை கூட்டத்தில் ஸையத் அலீஷாவும், முர்த்துஜாவும் மட்டுமின்றி பாபா ஃபக்ருத்தீனும் கலந்தர்களின் கோலத்தில் வந்து அமர்ந்தார்கள்.



நேற்றையப் போரில் கலந்தர்கள் கலந்து கொண்டு நகரத்தையும் நாட்டையும் எதிரிப்படைகளிடமிருந்து மீட்கப்பேருதவி புரிந்ததற்கு கலந்தர்களை அரசர் ஸையத் அலீ ஷா பாராட்டினார்.

* * * * * * *

*ஹஜரத் அலீ(ரலி) அவர்களே கலந்தர்களின் தலைவர் என்றும் என்று கருதப்படுகிறது. கலீஃபாக்களுக்கு பிறகு இஸ்லாமிய ஆட்சிப் பிரதேசங்களில் நாடோடிகளாக திரிந்த தர்வேஷ் குழுவினர் கலந்தர்கள் என்றும் கலந்தரிய்யா தரீக்காவை சார்ந்தவர்களென்றும் கூறப்படுகிறது. மத்திய ஆசியாவில் துருக்கிஸ்தானிலிருந்து இவர்கள் தோன்றினார்கள் என்றும் கருதப்படுகிறது.*

*கலந்தர் என்ற சொல் இந்திய மொழிச் சொல் என்றும் கலந்தர்களின் பழக்கவழக்கங்களில் இந்திய நாட்டின் வேதாந்த கலாச்சார தாக்கம் காணப்படுவதாகவும் சொல்வோரும் உண்டு. அந்தலூஸியாவில் வாழ்ந்த அரபியான ஸையிது யூசுப் என்பவரே கலந்தர்களான சூஃபிகளின் தலைவரென்று சிலர் வாதிடுகிறார்கள்.*

*ஆனால், சிக்கமகளூரில் அடங்கியுள்ள பாபா ஹயாத் கலந்தர் என்று போற்றப்படும் அப்துல் மஜீத் என்ற அஸ்ஹாபயே ரசூல் அவர்கள் தான் கலந்தர்களின் தலைவர் என்று இந்தியாவிலும், பாரசீகத்தில் ஸாவா என்ற ஊரில் பிறந்து தாம்யத்தா நகரில் வாழ்ந்து வந்த அஷ்ஷெய்கு ஜமாலுத்தீன் என்ற இறைநேசரே இவர்களின் தலைவர் என்று ஈரானிலும் கருதப்படுகிறது.*

*பெரும்பாலும் துறவிகளாக வாழ்ந்த கலந்தர்கள் தலையையும், தாடி மீசை, இருபுருவ முடியையும் களைந்து விடுவார்கள். இவர்கள் இவ்வாறு சிரைக்க கூடாது என்று மம்லுக் சுல்தான் நாஸிர் சட்டமியற்றி கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதாக சொல்லப்படுகிறது.*

*மத்திய ஆசியாவிலிருந்து கி.பி. 10ம் நூற்றாண்டில் கலந்தர்கள் அரபுநாடுகளிலும், எகிப்து, ஈரான், துருக்கி நாடுகளிலும் புகுந்தார்கள் என்றும் வரலாற்று குறிப்புகள் உள்ளன. கலந்தர்களின் மடங்களும், அவர்கள் நிறுவிய பிரத்யேக பள்ளி வாயில்களும் மேற்கூறிய நாடுகளில் பல இடங்களில் பராமரிப்பின்றி பாழடைந்து கிடக்கின்றன. சில இடங்களில் புணர் நிர்மானம் செய்யப்பட்டும் உள்ளன.*

*துருக்கியின் வரலாற்றின் பல கால கட்டங்களில் 'கலந்தர்களின் புரட்சி' என்ற சொல் பிரயோகப்படுத்தப் பட்டுள்ளது. கி.பி. 1002ம் ஆண்டில் பாபா ஃபக்ருத்தீன் தலைமையில் கலந்தர்கள் நடத்திய போர் மஹ்மூது கஜ்னவிக்கு பாடமாகவே அமைந்தது.*

* * * * * * *

மாமன்றத்தில் கூடிய அரசியல் சபையில் தெளிவான முடிவுகள் எடுக்கப்பட்டன. கஜ்னியின் படையினர் புதிய உத்வேகத்துடன் திரும்பி வந்து தாக்க கூடுமென்ற அச்சமிருப்பதாலும், அபுஅஹ்மத் கலஃப் என்ற சாசனிடுகளை சேர்ந்த, மறைந்த மன்னர் ஸையத் உசைனின் தூரத்து உறவினர், மஹ்மூத் கஜ்னியுடன் போர் ஒப்பந்தம் செய்து கொண்டு குரஸானிலிருந்து படையெடுத்து வந்து சீஸ்தானை தாக்க கூடுமென்ற சந்தேகம் எழுவதாலும்,

ஆட்சிப் பொறுப்பிலுள்ள சையத் அலீ ஷா சிஸ்தான் படைகளுடன் புறப்பட்டு, நள்ளிரவில் வெளியேறிய கஜ்னியின் படைகளை துர்க்மினிஸ்தான் வரை சென்று எல்லைக்கு அப்பால் விரட்டுவதென்றும், பாபாவின் இளவல் முர்த்துஜாவுக்கு முடிபுனைந்து ஜெராங்கின் ஆட்சி கட்டிலில் அவரை அமர்த்துவதென்றும் முடிவாயிற்று.

அன்றைய தினமே முர்த்துஜாவுக்கு முடி சூட்டுவிழா நடைபெற்றது. ஹேமுன் ஏரியின் நடுவிலமைந்த மஹ்தி அலீயின் மடத்தை நோக்கி கலந்தர்கள் திரும்பிச் சென்றனர். பாபாவும் அவர்களோடு பரிகளில் பயணித்தும், படகுகளில் ஏரிநீரை கடந்தும் மடத்தை சென்றடையும்வரை கலந்தர்களோடு கலந்திருந்தனர்.

ஆனால் அடுத்த நாள் அதிகாலையில் மடத்தில் பாபா தங்கியிருந்த பகுதி காலியாக இருந்தது. பரப்பரப்படைந்த கலந்தர்கள் சிலர் வெகுதூரத்தில் ஏரியின் எதிர்கரையை மலைஉச்சியிலிருந்து நோட்டமிட்டபோது, பாபாவின் தோற்றம் உடைய ஒருவர் படகிலிருந்து தனியே இறங்கி கரையைக் கடந்து கானகப் பாதையில் நுழைவதை கண்டார்கள்.

பிரிந்து போகும் பாபாவை, சகோதர கலந்தரை பார்த்து, மற்ற கலந்தர்கள் பெருமூச்செறிய முடிந்ததே அன்றி பின்தொடரவோ வேறொன்றும் செய்யவோ வழியில்லாமல் திகைத்து நின்றார்கள்.



*சீராரும் சீராஜ் பெருநகரின்*
*சிந்தைக் கினியப் பெண்மயிலே*
*வாராது வந்தாய் ‘காதலா!*
*வா! வென்றோர் வார்த்தை சொல்வாயா?’*
*ஊராரும் கிரங்கும் உன்உதட்டு*
*ஒய்யார மச்சத்துக் கீடாக*
*பாரையும் வென்றுஉன் பாதத்தில்*
*பரிசாகப் படைப்பேன் பராபரியே!*
*-திவான்*
*-காஜா ஹாஃபிஸ்*

## துறந்தவருக்கே சுபசோபனம்

பார் போற்றும் பட்டு நெடுஞ்சாலையின் வழியே ஜெராங்கையும், மெர்வு நகரையும் கடந்து இஸ்லாமிய கலாச்சார கருவூலமாய் திகழ்ந்த புகாரா நகரை அடைந்தார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

ஜெராங்க் நகரில் தாய்தந்தையர் அடக்கப்பட்டுள்ள பள்ளிவாசல் மைதானில் நின்று ஜியாரத் செய்துவிட்டு, நகரைவிட்டு வெளியேற முற்பட்ட பாபாவை பார்த்துவிட்ட அங்குள்ள கலந்தர் ஃபக்கீர்களில் சிலர் பாபாவை பின்தொடர முயன்றார்கள்.

பாபா எவ்வளவு தடுத்தும், முடிதுறந்த இளவரசரை தனிமையில் அனுப்ப விருப்பமில்லாத ஒன்பது ஃபக்கீர்கள் “தாங்கள் எங்கு சென்றாலும் அங்கு நாங்களும் வருகிறோம்!” என்று பிடிவாதமாய்ப் புறப்பட்டு விட்டார்கள்.

எனினும், ஜெராங்கின் கிழக்கு கோட்டை வாசலை தாண்டும் முன்னரே தகவலறிந்து அரசர் மகுதூம் ஸையத் அலீஷாவும் இளவரசர் முர்த்துஜாவும் அமைச்சர்களும் தளபதிகளும் விரைந்துவந்து வழிமறித்தனர். “ஏனிந்த கோலம்? எதற்கிந்த துறவு?” என்று சகோதரர்கள் மறுத்து மன்றாடிய போதும் பாபா மௌனம் சாதித்தார்கள்.

அவர்களுக்கு பதில் மொழியாக, பல்க் நாட்டின் அரசைத் துறந்து, பரமனின் ஆதரவைத் தேடி அரண்மனையை விட்டு வெளியேறிச் சென்றவரலாறு புகழும் சுல்தானே ஆலம் சுல்தான் ஸையது இபுறாஹிம் பாதுஷா அவர்களுடைய ஃபார்ஸி பாடல்களில் ஒன்றை பாடி காட்டினார்கள் பாபா.

*துறக்கிவு துன்யா தாபித் தம்ஸிக்கித் தீனினா பலா தினுனா யபுக்கா வலாமானு நக்கிவு பத்தூபாலி அப்தின் ஆதறல்லாஹ ரப்பஹு¬ வஜாதபி துன்யாஹு¬ லிமாயத் தவக்கவு*

*பூவுலகின் தேவைகளுக்காகப் போர்புரிந்தோம்!*
*மானத்தை மறைக்கும்*
*உடுத்தாடைகள் கூட மிச்சப்படவில்லை!*
*சண்டையிட்டு நாங்கள்*
*கைப்பற்றிய உலகவாழ்வும் தரிப்படவில்லை!*
*சோபனம் ஆனால்! படைத்த நாயனை*
*தெரிந்து கொண்டு அவனை அடைய*
*ஆசித்தானே அவனுக்கு!*
*தன்னுடைய புவிவாழ்க்கையின்*
*சந்தோஷத்தையால்லாம் ஆண்டவனின்*
*பாதையில் கொடையாக வழங்கி*
*அர்ப்பணித்தானே அவனுக்கு*
*சுபசோபனம்!*

இவ்வாறு பாபா அவர்கள் குரலுயர்த்திப் பாடிய பாடலை கேட்டுவிட்டு சகோதரர்கள் இருவரும் மந்திரிப் பிரதானிகளும் மௌனித்தனர்.

ஆனால் அரசர்களும் அமைச்சர்களும் வற்புறுத்தியதால் வலிமை வாய்ந்த பத்து குதிரைகளையும் பைநிறைந்த தங்க முகர்களையும், நீண்ட நெடிய பயணப் பாதையின் தேவையைக் கருதி பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள் பாபாவும் ஒன்பது கலந்தர்களும்.

செம்மண்நிற சிவப்பாடையும் பச்சை தலைப்பாகையும் அணிந்து பிரிந்து செல்லும் தமையனை மனதில் எண்ணி எண்ணி மருவியவர்களாக, பாபாவின் சகோதரர்கள் அரண்மனைக்கு திரும்பினார்கள்.

*தர்வேஷ் என்பது ஃபார்ஸி மொழிச் சொல்லாகும். வாசலுக்கு வாசல் சென்று யாசகம் கேட்கும் ஃபக்கீர்கள் என்று பொருள்பட தர்-வாசல் என்ற ஃபார்ஸி சொல்லின் அடிப்படையில் தர்வேஷ் என்று அழைக்கப்பட்ட இவர்கள் ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டுகளில் தனிதனி குழுவினராக அமைந்தனர்.*

*பாரசீக நாட்டு தர்வேஷ்களை பாஷர் என்றும் பீஷர் என்றும் இருவகையாகப் பிரித்து மக்கள் அழைத்தனர். ஷரிஅத்தின் சட்டதிட்டங்களையும் பின்பற்றுவோர் பாஷர் என்றும், பின்பற்றாதவர்கள்*



*பீஷர் என்றும் அழைக்கப்பட்டு வந்தனர். இவர்கள் மடங்களை அமைத்து ஊருக்கு வெளியே தங்கினர். பெண்களின் சில தர்வேஷ் குழுக்களும் அமைத்திருந்தன. அவர்களுக்கு பெண்களே தலைமையை ஏற்றிருந்தனர்.*

*தனிப்பட்ட தியான மடங்களில் தங்கி தவஈடுபாடுகளை மேற்கொண்ட தர்வேஷ்களில். இறைகாதலர் (மஜ்தூப்களும்) , இறைநேசர் (அவுலியாக்களும்), இறைஆட்சியாளர்களும் (குத்புமார்களும்), இவர்களிடையே கலந்து வாழ்ந்தனர்.*

கலந்தராகவும், தர்வேஷாகவும், ஃபக்கீராகவும் வீட்டையும் நாட்டையும்விட்டு வெளியேறிவிட்ட பாபா ஃபக்ருத்தீனுடைய இலட்சியம் ‘லிகா அல்லாஹ்’ எனும் இறைவனுடைய தரிசனமாகவே இருந்தது.

பாபாவும் கலந்தர் ஃபக்கீர்களும் பயணப்பட்டு பரிகளின்மீது முன்னேறி சென்ற பாதை பட்டு வழி கிளைப் பாதைகளில் ஒன்றாகும். பட்டு வழிப்பாதை என்பது மேற்கே ரூம் என்னும் ரோமையும், கிழக்கே சீனாவின் காண்டனையும் இணைக்கும் பாதையாகும்.

*ரூம், கிரேக்கம், துருக்கி, ஷாம் நாடுகளில் தொடர்ந்து மத்திய ஆசியாவிலுள்ள ஈரான், ஈராக் அவை தவிர, துர்க்மினிஸ்தான், தஜ்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான் நாடுகளிலும் புகுந்து, ஆப்கானிஸ்தான், ஹிந்துஸ்தானத்தின் காஷ்மிர், திபேத் வழியாக சீனாவின் எல்லையைத் தொட்டு நீண்டு கிடந்தது இந்த நெடுஞ்சாலை பாதையாகிய பட்டு வழிப்பாதை.*

*கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டுவரை, மாலுமி மார்கோ போலோ, மேற்குக்கும் கிழக்கிற்குமான கடல் வழிப்பாதையை கண்டு பிடிக்கும் காலம்வரை, பட்டுவழிப்பாதையே வரலாறுபடைத்த யுரேஷியாவின் வர்த்தகப் பாதையாக அமைந்திருந்தது.*

*சிறிய பெரிய நகரங்களும், விடுதிகளும் வியாபார சந்தைகளும் ஆங்காங்கே காணப்பட்ட இப்பாதை வழியில் மதமும், ஞானமும், கலையும் கலாச்சாரமும் நாடுகளுக்கிடையே பரிமாறப்பட்டன. அரசியலும் அதிகாரமும் விரைந்தன, படையெடுப்புகள் நிகழ்ந்தன.*

*முக்கியமாக சிக்கந்தர் துல்கர்னைன் என்று இஸ்லாமிய உலகம் போற்றும் மாவீரர் அலெக்ஸாந்தர் இப்பாதையில்தான் தன் படைகளுடன் பயணம் செய்தார். செங்கிஸ்தான், தாமர்லேன், மார்கோ போலோ ஆகியோருக்கும் இதுவே பயணப் பாதையாக அமைந்தது.*

*கண்ணாடி மற்றும் பீங்கான் பாத்திரங்கள், மருந்துகள், மூலிகைகள், மண்பாண்டங்கள், கம்பளி, ஜமக்காலம், பேப்பர், சாயம், வண்ண கலவைகள், வெள்ளி, தங்கம், மணப்பொருட்கள், கலைவேலைப்பாடுடைய நகைகள், இது போன்ற கலைபொருட்கள் அனைத்தும், ஒட்டகை, ஒட்டகை வண்டிகள், கூண்டு வண்டிகள், குதிரைகள், குதிரை பக்கிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன.*

அண்டிலோக், பாபிலோன், எர்ஜெம், ஹமதான், புகாரா, சமர்கந்த், கீவா, கஷ்கார் ,கியான் நகரங்கள் இப்பாதையின் பிரசித்திப் பெற்ற வியாபார தலங்களாகும்.

இந்தப்பட்டுப் பாதையில் புகாரா நகரின் எல்லையில் அமைந்த இமாம் புகாரி(ரஹ்) அவர்களின் மஜார் அடக்கத் தலத்துக்கு ஒரு அந்திப் பொழுதில் வந்து இரா தங்கினார்கள் பாபாவும், கலந்தர்களும்.

மஜாரின் வாயிலில் நின்றிருந்த ஒரு வயதான மாது பாபாவை நெருங்கி வந்து ஒரு வேண்டுதலை முன்வைத்தார். ''சிலநாட்களுக்கு முன்பு அருளொழுகும் முகத்தோற்றமுடைய தாங்கள், இங்கு வந்து இறங்குவது போலும் தங்களிடம் நான் என் காணாமல் போன மகனைப் பற்றி முறையிடுவது போலவும் கனவுகண்டேன்'' என்று கூறினாள் அப்பெண்மணி.

அம்மாதுடைய சோக கதையை கேட்டுவிட்டு சில ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் செபக்தஜினின் படையினரால் கைதியாக கொண்டுசெல்லப்பட்ட மனிதன் தாயிடம் திரும்ப வேண்டுமென்று பாபா, இமாம் புகாரி அவர்களின் மக்ஃபராவின் முன்னின்று துஆ செய்தார்கள். கலந்தர்கள் ஆமீன் கூறினார்கள்.

ஆனால், மறுநாள் அதிகாலையில் பாபாவும் கலந்தர்களும், மஜாரைவிட்டு புறப்படும் முன்பே, அந்த முதியமாது தன் காணாமல் போன மகனுடன் அங்கு வந்து நிற்பாள் என்று கலந்தர் யாரும் எதிர்பார்க்கவில்லை.

கஜினியின் சிறை சாலைக்குள் புகுந்த ஃபக்கீர் ஒருவர், தன்னை முன்னிரவில் இரும்பு சலாகைகளை உடைத்து சிறை அறையிலிருந்து வெளியேற்றி, தன் தாய் இருக்கும் புகாரா நகருக்கு இரவேடிரவாக நூற்று கணக்கான மைல்களை கடந்து, அதிகாலையில் கொண்டுவந்து சேர்த்ததாக அந்த தாயின் மகன் தன் விடுதலை கதையை எடுத்தியம்பினார்.

புகாராவிலிருந்து சமர்கந்த் நகரை நோக்கி பயணப்பட்டுவிட்ட பாபாவின் குதிரை முன்செல்ல பின்தொடர்ந்த கலந்தர்கள், ஒரு சாதாரண அரச குமாரரையல்ல, அற்புதங்கள் நிறைந்த இறைநேசச் செல்வர் ஒருவரையே நாம் பின்பற்றி செல்கிறோம் என்பதை அப்போது தான் உணர்ந்தார்கள்.



*மெய்ப்பொருளாம் உன்னைத்தேடி*
*மெலிந்தவர்கள் கோடி கோடி!*
*கைப்பொருளை இழந்தோர் கோடி*
*கால்நடந்து இளைத்தோர் கோடி!*
*துப்பறியத் துணிந்து ஃபளாத்தூன்*
*தோற்றதுபோல் தோற்றோர் கோடி!*
*எப்பொழுதும் எங்கும் மறைவாய்*
*இருப்பவா நின் பாதம் போற்றி!*
*- ஷைகு ஃபைஸி*
*- ஃபளாத்தூன் - பிளேட்டோ*

## மெய்ப்பொருளைத் தேடித் தேடி

மாரகந்தா என்று முற்காலத்தில் அழைக்கப் பட்ட சமர்கந்த் நகரம் ஜெரவ்ஸான் ஆற்றின் கரையோரமாக அமைந்திருந்தது. புகராவிலிருந்து ஆற்றின் கரையோரமாக அமைந்த நெடுஞ்சாலையில் பயணித்த பாபாவும் தோழர்களான கலந்தர்களும் ஒருவார காலத்தில் சமர்கந்த் நகரை வந்தடைந்தனர்.

யூனானி மருத்துவரான புகழ்பெற்ற அவிசென்னா பிறந்து வாழ்ந்து மருத்துவ தொழில் புரிந்து மறைந்த அந்த நகரம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நகரமென்று வரலாறு புகழ்கிறது. கீழை நாட்டு சுவனமென்றும், கிழக்கு உலகின் ரோமாபுரி என்றும் புகழப்பட்ட சமர்கந்த் நகரமேதான் இந்து புராணங்களில் தேவலோகம் என்று கூறப்படுகிறது.

சமர்கந்தின் திறந்தவெளி நகரமைப்பு, எந்நேரமும் வீசும் தென்றல் காற்று, வருடமுழுதும் வசந்தம் என்ற இயற்கையின் வனப்புகளால் உலகிலேயே சமர்கந்தைவிட மனிதனுக்கு மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் அளிக்கும் பிரதேசம் உலகில் கிடையாது என்று வரலாற்றுப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சமர்கந்த் நகரின் எல்லையை தாண்டும் முன்னர், பாபாவும் கலந்தர்களும் விடுதி ஒன்றில் இறங்கினர். போஜனம் அருந்த அமர்ந்தனர். விடுதி வாசலில் தடுமாறி கழிவுவாய்காலில் குப்புற கவிழ்ந்து விழவிருந்த இளவயது குருடர் ஒருவரை கலந்தர்கள் இருவர் காப்பாற்றி உதவி செய்து வழிகாட்டினர்.

விடுதியின் உள்ளே இருந்தபடி அந்த நிகழ்வை பார்த்து கொண்டிருந்த பாபா அவர்கள் வெளியில் வந்தார்கள். அந்த குருடரின் முகத்தின் மீது ''பிஸ்மில்லாஹ்'' என்று ஓதி ஊதினார்கள். ''தம்பி நீர் என்னைப் பாரும்'' என்று உத்தரவிட்டார்கள்.

அடுத்த நொடிப் பொழுதில் அந்த குருடரான இளைஞர் பாபாவை தன் கண்களால் மெய்யாகவே கண்டார். சுற்றுப்புறத்தையும் கடைவீதியையும் விடுதியையும் பார்த்துவிட்டு ''என் பார்வை தெரிகிறது'' என்று பரபரத்தார்.

பாபாவின் ஸ்பரிஷத்தால் பார்வைப் பெற்ற குருடரின் உற்சாகத்தால் நகரெங்கும் செய்தி பரவி, ஏராளமான குருடர்கள் விடுதியின் வாசலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

எந்தவிதமான கஷ்ட நஷ்டமுமின்றி ஒருமணிநேர அவகாசத்தில் கூடிநின்ற குருடர்கள் அனைவரின் பார்வைகளையும் 'பிஸ்மில்லாஹ்' என்ற ஒரு வார்த்தையால் மீட்டு கொடுத்தார்கள் பாபா. விடுதியிலேயே இரவு தங்கும்படி வேண்டி கொண்ட ஊராரின் விருந்தோம்பலில் கலந்தர்கள் மகிழ்ந்தார்கள்.

விடியாவிடியலில் புறப்பட்டு துஷான்பே நகரை மதியத்தில் அடைந்து, அந்தி நெருங்கும் நேரம் ஆப்கானிஸ்தானுக்கும் கஷ்மீரத்துக்கும் இடையிலமைந்த லாக்கான் ஆறோடும் மலைப்பிரதேசத்தை அடைந்தார்கள். இன்று கலந்தர் கணவாய் என்று அழைக்கப்படும் மலைப் பாதையில் பயணத்தை தொடர்ந்தார்கள் பாபாவும் கலந்தர்களும்.

வானம் தெளிந்திருந்தது முழுநிலவு வானில் உதயமாகி பூமியைப் பிரகாசப்படுத்தியது. அடர்ந்த அகன்ற இலை மரக்காடுகளின் ஊடே, சாவன்னா கோரைப் புல்வெளிகள். ஆங்காங்கே நெடிதோங்கிய மூங்கில் கூட்டங்கள்.

முன்இரவு வேளையில் நிலவொளிப் பொழிந்தாலும் சமமற்ற காட்டுப் பாதையில் செல்வது பயமாகவும் அதே சமயம் வீர சாகசம் போன்றும் தெரிந்தது. குதிரைகளோ அச்சமின்றி தாவிப்பரந்தன.



மலைப்பாதையின் இருபுறமும் அமைந்த காடுகளில் ஆங்காங்கே மூண்டெரிந்த தீ ஒரு பக்கம் அச்சத்தையும் மறுபக்கம் பிரமிப்பையும் தூண்டியது. முன்னேறி செல்வதா ஏதாவது ஒரு மரத்தடியில் இரவு தங்குவதா என்று, சிந்தனையோடு கலந்தர்கள் பயணித்தபோது,

ஆங்கே தீப்பந்தங்களோடு காணப்பட்ட விடுதி கண்ணுக்கு தெரிந்தது. விரைந்து சென்று அவ்விடுதியில் நுழைந்த போது அங்கு ஆடலும் பாடலுமாக மலைவாழ் ஆண்களும் பெண்களும் கூடி அவர்களின் வருடப் பிறப்பை கொண்டாடி கொண்டிருந்தார்கள்.

விடுதியில் உணவருந்திவிட்டு, கலந்தர்கள் பயண களைப்பால் ஜமக்காள விரிப்புகளை விரித்து விடுதிக்கு வெளியே படுக்கத் தொடங்கினர். விடுதியில் கூடியிருந்த கிராமவாசிகளின் ஆட்டமும் பாட்டமும் உச்சஸ்தாயியை எட்டிக் கொண்டிருந்தது.

* * * * * * *

கவிஞர் ஃபிர்தௌஸியின் காவியம் ஷாஹ்நமாவாம் வீரார்ந்த காவியத்தின் ஒரு பகுதியை நாடகமாக அவர்கள் நடித்து கொண்டிருந்தார்கள். சிஸ்தான் நாட்டு வீரன் ஸொஹ்ரப், ஆண் உடை தரித்த பாரசீக வனிதையுடன் போரிட்ட அந்த காட்சி நாடெங்கும் பிரசித்திப் பெற்றிருந்தது.

இரவுக் கூத்தாக நடந்த அந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து வெளியில் நடந்த பாபா ஃபக்ருத்தீன் மலைப் பாதையில் தனியே நெடுந்தூரம் நடந்துவிட்டார்கள். கலந்தர்கள் பயணச் சோர்வில் உறங்கிவிட்டப் பிறகும், உறக்கம் வராததாலும், புகாரா நகரில் ஸூஃபிகளிடம் கேடட ஒரு தெய்வீக கருத்து மனதில் புறண்டு கொண்டிருந்ததாலும் பாபா சிந்தனையோடு விடுதிக்கு வெளியே நடந்தார்கள்.

ஸூஃபிகள் கூறுகிறார்கள் : அல்லாஹ் என்கின்ற அரபு சொல்லில் உள்ள அலிஃப் லாம் லாம் அலிஃப் ஹே எழுத்துகளில் ஒரு அர்த்தமிருக்கிறது. அலிஃப் ஆணின் அடையாளம், ஹே பெண்ணின் அடையாளம். அல்லாஹ் ஆணைப் படைத்தான் ஆணின் விலா எலும்பை வெளிப்படுத்தி பெண்ணைப் படைத்தான். அல்லாஹ் என்ற ஆதி பரம்பொருளை அடைய,

ஆண் தன்னிடமிருந்து வெளியேறிய பெண்ணை தனக்குள் சேர்க்கவேண்டும். பெண் தான் பிரிந்து வந்த ஆணில் புகுந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பிரிந்தவை இணைந்த பின்தான் தெய்வீக பேரின்பம் கைகூடும்.

விசித்திரமான இந்த வாதம், புகராவிலிருந்து புறப்பட்டிருக்கும் புதுமையா? அல்லது உண்மையா? பாபாவின் சிந்தனையில் ஊசலாடியது ஒரு ஹதீஸ் மொழி.

அண்ணலெம் பெருமானார் (ஸல்) சொன்னார்கள் : நான் உங்கள் உலகிலிருந்து பெண்களையும் நறுமணத்தையும் தொழுகையில் என் கண்குளிர்வதையும் விரும்புகிறேன்.

ஆண்டவனை தொழும் தொழுகையில் கண்குளிர்ந்து இதயம் குளிர்ந்து ஒன்றி நிற்க வேண்டுமானால் பெண்களும் அவர்களின் உறவென்னும் நறுமணமும் தேவையா? வியாகூலத்தோடு பாபா நின்றிருந்தார்கள். நாடு நகரத்தையும் ஊர் உறவையும் விட்டு பிரிந்து துறவு கோலத்தில் வெளியேறியது தவறா?

கலங்கி நின்ற பாபாவின் காதுகளில் ஒரு பெண்ணின் கலீர் என்ற சிரிப்பொலி காதில் விழுந்தது. ஆளரவமற்ற அந்த மலை பிரதேசத்தில், சுற்றிப் பனிமழை பொழியும் பாலைவனத்தில், நெடுஞ்சாலையின் இடது புறமாக நின்றிருந்த மூங்கில் காடுகளில் பாதத் தண்டைகள் ஒலிக்க ஓடும் பெண் யார்?

பரபரத்தார்கள் பாபா. என்ன விசித்திரம்? தேவதையா, மோகினியா, பேயா, பிசாசா? எதுவாயினும் அதை துரத்தி பிடித்தே தீரவேண்டுமென்னும் ஆவேசத்தோடு பாய்ந்தார்கள் பாபா. வானளாவ நின்றிருந்த மரங்களினூடே பேரிருட்டும் ஆங்காங்கே ஊடுருவும் நிலா ஒளியும் சல்லாபித்துகிடந்தன.

விடாப்பிடியாக விரைந்தும் பலனின்றி மான்போல் பரந்தோடிய அப்பெண், நடு காட்டினுல் பாய்ந்து மின்னலாய் மறைந்து போனாள். ஓரிரு முறை தன் பார்வையில் தோன்றிய அவள் நிலா முகத்தை நினைவுபடுத்தி கொண்டு நெடுஞ்சாலைக்கு திரும்பிய போது அவள்யார் அவள் யார்? என்று மனதின் கேள்விக்கு,

''பத்மினி சித்தினி அத்தினி முத்தினி காமினி!'' என்று காதில் விழந்தது. ஆம்! அவள்தான் உமது ஆன்மா!'' காற்றில் ஒரு பதில் வந்து, காதில் விழுந்தது.



யார் இப்படி தன் காதுகளில் பதில் சொன்னது என்று பேதலித்த பாபாவின் காதுகளில் மீண்டும் ''அவள் பெயரா? அவள் பெயர்...!'' பாபா தான் நின்ற இடத்தில் நின்றபடி தன்னை சுற்றி அந்த அமானுஷ்ய பூமியில் நாலா திக்குகளிலும் எழும் எதிரொலியை செவிமடுத்தார்கள் ''பத்மினி சித்தினி அத்தினி முத்தினி காமினி!''

காற்றில் கலந்து வந்த கவிதை ஒன்று பாபாவின் காதுகளை துளைத்து இதயத்தை ஊடுருவியது :

''பசும்பொன் சிலம் பணிந்து என்கண்ணே என்னம்மா
பாடகக்கால் மேல்தூக்கி
செம்பொன் கலையுடுத்தி என்கண்ணே என்தாயே
சிறுவிழிக்கு மையெழுதி
ஐம்பொன் பணிபூண்டு என்கண்ணே என்னம்மா
அறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்து என்கண்ணே என்தாயே
கண்குளிரப் பாராயோ!

எட்டாப் புரவியடி என்கண்ணே என்னம்மா
ஈராறு காலடியோ
விட்டாலும் பாயுமடி என்கண்ணே என்தாயே
வீதியினில் தான் மருட்டி
கட்டக் கயிறெடுத்து என்தாயே என்னம்மா
கலைநாளும் சேர்த்திருக்கி
அட்டாள தேசமெல்லாம் என்கண்ணே என்தாயே
ஆண்டிருந்தா ளாகாதோ!

ஊற்றைச் சடலமடி என்கண்ணே என்தாயே
உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிடிக்க வென்றால் என்கண்ணே என்னம்மா
மருந்தெனக்கு கிட்டுதில்லை
மாற்றிப் பிடிக்கவென்றால் என் கண்ணே என்தாயே
மருந்தெனக்கு கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம்விட்டு என்கண்ணே என்னம்மா
உன் பாதம் சேரேனோ!

*மாமன் மகளடியோ என்கண்ணே என்னம்மா*
*மச்சினியோ நானறியேன்*
*காமன் கனலெனக்கு என்கண்ணே என்தாயே*
*கனலாக வேகுதடி*
*மாமன் மகளானால் என்கண்ணே என்னம்மா*
*மச்சினியும் நீயானால்*
*காமன் கணைகளெல்லாம் என்கண்ணே என்தாயே*
*கண்விழிக்க ஓடாதோ!*

அவள் யார் அவள் யார்? என்ற தவிப்போடு பாபா விடுதிக்கு அயர்வோடு திரும்பி வந்தார்கள். உறக்கத்தின் மடியில் விழுந்தார்கள்.

---

*அறுகோண வீதி - இருபுருவமத்திபம்*
*கம்பத்தின் மேலிருந்து - இருவிழி உள்கோலம்*
*எட்டாப் புரவி - மூச்சோட்டம்*
*மாற்றிப் பிடித்தல் - மண்ணுடல் மறந்து விண்ணுடல் தரித்தல்*
*மாமன்மகளானால் - தன் ஆன்மாவை பெண்ணாக கண்டால்*



*பார்ப்பாய் முறைப்பாய் பரிகசிப்பாய்*
*பகலிரவென்றுப் பாராமல்*
*தாழ்ப்பாள் போட்டு புறக்கடையில்*
*தள்ளுவாய் 'ஆண்மகனா நீயென?'*
*கூப்பாடு போடுவாய் ஆனால்*
*கொஞ்சும் கிளிநீஎன் காதலி*
*பூப்போல் உன்நெஞ்சிலென் நினைவு*
*போதும் அதுபோதும் பராபரியே!*
*- பாபா ஃபரீதுத்தீன் கன்ஜ் சாகர்*

## ஏழாம் அறிவு!

ஸ்ரீநகரின் படகு வீடுகளில் பயணித்து பாபா ஃபக்ருத்தீன் அவர்களும், ஒன்பது கலந்தர்களும் கஷ்மீர் மன்னர் சம்ஹர ராஜாவின் அரண்மனையை வந்தடைந்தனர். கலந்தர்களில் ஒருவரான அஜீஸ் பல்கர் தன் கைகளில் பிறந்து பத்து நாட்கள் கூட ஆகாத பாலகன் ஒருவனை கையிலேந்தி கொண்டு நின்றிருந்தார்.

அரண்மனையின் ஆராய்ச்சி மணியை மற்றொரு கலந்தர் அசைத்து ஓசையெழுப்பினார். காவலாளிகள் சிலர் வெளியில் வந்தனர். கலந்தர்களின் கோரிக்கையை ஏற்று அவர்கள் அனைவரும் அரசவைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அமைச்சர் பெருமக்களும், தளபதிகளும் காவலர்களும் நாற்காலிகளில் அமர்ந்திருக்க, உள்ளே வந்த கலந்தர்களைப் பார்த்து அவர்களின் தெய்வீகமான செம்மண் சிவப்பு ஆடையும் வண்ண தலைப்பாகைகளையும், புருவம் சிரைத்த முகத்தையும் கவனித்து மரியாதையுடன் எழுந்து நின்ற மன்னர் சம்ஹரராஜ், கலந்தர்கள் அனைவருக்கும் இருக்கை அளிக்குமாறு பணியாட்களை ஏவினார்.

அரண்மனையின் திறந்த சாளரங்களுக்கு வெளியே தால் ஏரி கடல்போல் பரந்து விரிந்து கிடந்தது. வெகுதொலைவில் குல்மார்க் மலைக்குன்றின் உச்சியில் கார்மேகமுகில்கள் தவழ்ந்து கொண்டிருப்பது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

'தேவதைகள் சரணாலயம்' என்று புகழப்படும் 'பாரிமகால்' என்ற அரண்மனையின் இருபுறங்களிலும் படகு வீடுகள் அசைந்தும் அசையாமலும் மிதந்து கொண்டிருந்தன. பரந்த ஏரியின் மீது தொடுவான கரைகள்வரை பலவண்ணப் பறவைகள் பறந்தும் அலைந்தும் இயற்கைக்கு அழகு சேர்த்தன.

குள்ள வாத்து, நெடுங்கால் நாரை, தண்ணீர் கோழி, மடையான் முதலிய பறவைகள் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக ஊர்ந்தபடியும் பறந்தபடியும் திரிந்தன. ஏரியின் நீர்ப்பரப்பில் கரையோர மரங்களில் இருந்து கனிந்து விழுந்த, துலிப், அனார், மாம்பழங்கள் மிதந்தன.

கலந்தர்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர், பாபா ஃபக்ருத்தீன் அவர்கள் அரசன் மற்றும் அமைச்சர்களின் முன் எழுந்து நின்றார்கள். "நீதி கேட்டு வந்திருக்கிறோம். பத்து நாட்கள் கூட நிறைந்திராத இந்த பச்சிளங்குழந்தை யாருடையது? கிஜில் ஆற்றின் கரையில் இக்குழந்தையை தூக்கி எறிந்தவர்கள் யார்?"

எதிர் பாராமல் நடைபெறும் இந்த விசித்திரமான நிகழ்வை உப்பரிகையிலிருந்து கவனித்த கஷ்மீரின் அரசி ஸ்ரீலஹா மாடிப் படிகளில் இறங்கி வேகமாக ஓடி வந்து, பாபாவின் முன்னின்று தேம்பி தேம்பி அழத் தொடங்கினாள். அருகில் நின்ற அவளது மூன்று வயது மகன் ஹரிஹரன் தாயின் முகத்தைப் பார்த்து தவித்தான்.

அரசியின் பரபரப்பை பார்த்துவிட்டு, பாபாவின் கரங்களிலிருந்த குழந்தையை கவனித்துவிட்ட அரசர் சம்ஹரராஜூம் தன் இருக்கையிலிருந்து எழுந்து பாபாவை நோக்கி ஓடிவந்தார். பத்து நாட்களுக்கு முன்னர் அரண்மனையிலிருந்து காணாமல் போன குழந்தை கலந்தர்களின் கையில் வந்தது எப்படி?

அரசரும் அரசியும் ஆச்சரியம் ஒருபக்கம், வெடிக்கும் வேதனை ஒரு பக்கமுமாக விம்முகின்றனர். சில மணித்துளிகளில் அரசவை அல்லோலகல்லோலப் பட்டது. இந்த குழந்தை எப்படி யாரால் திருடப்பட்டு ஆற்றங்கரையில் வீசப்பட்டது? அலமலர்ந்து நின்ற அந்த நேரம்!

அரசியார் கையை நீட்டி மீண்டு வந்த மைந்தனை "மகனே!" என்று அழுது கொண்டே அழைக்கிறாள். அந்த பத்துநாள் சிசுவோ பாபாவின் ஒரு கரத்தில் சாய்ந்து படுத்தவாறு அவரது மறுகரத்தின் பெருவிரலை அதரங்களால் சூப்பி விரலில் பொங்கி வரும் பாலமுதை அருந்தி கொண்டிருந்தது.

பாபாவின் விரல்களில் புனலெனப் பொங்கும் பாலை அருந்தும் தமது இளம் பாலகனை ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள் பெற்றோரான அரச தம்பதிகள். தெய்வீக கலைசிந்தும் அந்த இளவயது ஞானியான கலந்தரை, பாபா ஃபக்ருத்தீனை, அமைச்சர்களும் அவையினரும் பக்தியோடு பார்த்து கொண்டு நின்றார்கள்.



காஷ்மீர சொர்க்க பூமி பல மதங்களின் சங்கமத்தால் ஆத்ம ஞானத்தின் தொட்டிலாக விளங்கிய காலம் அது. புத்தமதமும், ஜைனமதமும், புராதனமான இந்துமதமும், ஜொராஸ்டிர மதமும், மட்டுமின்றி புனிதர் தாமஸின் வருகையால் கிருஸ்துவ மதமும் கஷ்மீர மண்ணில் தழைத்திருந்தது.

இக்காலகட்டத்தில் மஹமூது கஜினி தனது பெரும்படையுடன் இந்தியாவின் வடபுறத்தில் நுழைந்து கஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், பலுசிஸ்தான், சிந்து முதலிய பகுதிகளிலும் புகுந்து, கோயில்களை சூறையாடினார் என்று வரலாற்று குறிப்புகளும், அவர் அல்லோபநிஷத் என்ற அதர்வண நூலின் அதிகாரத்தை தேடி அலைந்தார் என்று வேறு சிலரும் கூறியுள்ளனர்.

பாபாவின் கையிலிருந்த குழந்தை அதன் தாயிடத்தில் ஒப்படைக்கப் பட்டதும், அவையினரில் கலந்திருந்த அரசனின் அத்தையான திட்டாவும், அவளது காதலனும் முதலமைச்சருமான துங்காவும் பாபாவின் முன் பணிந்து மன்னிப்பு கோரினார்கள்.

பிறந்து பத்து நாட்களே ஆன இந்த குழந்தையைக் கடத்தி ஆற்றில் தூக்கி வீசச் செய்தது தாங்களே என்றும், அக்குழந்தையின் பிறந்த நேரம் சரியில்லாததால், இக்குழந்தையின் தகப்பனான அரசன் சம்ஹரராஜ் இறக்க நேரிடும் என்று ஜோதிடர் ஒருவர் எச்சரித்ததால், இந்த சதிச்செயலை யாரும் அறியாமல் நடத்தியதாக ஒப்புக்கொண்டனர்.

பாபா ஃபக்ருத்தீன் பேசினார்கள் :-

"காலத்தை கணித்து ஜாதக குறிப்பை வைத்து முடிவெடுத்து இந்த பச்சிளம் பாலகனை கொன்றுவிட திட்டமிட்டதாக கூறுகிறீர்கள். திருக்குர்ஆனாகிய எங்கள் புனிதவேத நூலில் இறைவன் "காலத்தை (கெட்டது என்று) என்று தூற்றாதீர்கள் காலம் நானாகவே இருக்கிறேன்" என்று கூறியுள்ளான்.

"நட்சத்திரங்கள், கிரகங்களின் சுழற்சியின் அடிப்படையில் ஜோதிடம் பார்ப்பது முடிவான முடிவை உங்களுக்கு உணர்த்திவிடாது. ஆனால் இந்த குழந்தை என்ற ஜீவிதம் யாருடையது? அது ஒரே இலாஹ் என்ற ஏகமாகிய தெய்வீக ஜீவிதத்தின் பாகம் என்பதை உணர்ந்திருந்தால் இந்த உயிரை கொலைசெய்ய நீங்கள் முனைந்திருக்க மாட்டீர்கள்."

பாபா பேசுவதை அரசவையிலிருந்தவர்கள் மட்டுமின்றி கலந்தர்களும் வியப்போடு கவனித்தார்கள். பாபா வித்தியாசமாக ஏதோ ஒன்றை அவர்களுக்கு சொல்ல முனைந்தார்கள்:

''நான், அல்லது நாம் என்கின்ற இந்த ஜீவிதமானது ஆரம்பம் முடிவு என்ற கால எல்லைகளில் கட்டுபடாதது. இது கோடானு கோடி ஆண்டுகளாக இருந்து வருகிறது. இன்னும் கோடானு கோடி ஆண்டுகள் இது இப்படியே தான் இருந்து கொண்டிருக்கும்.

''உங்களில் இருக்கும் இந்த நானென்ற உணர்வு உங்கள் உடலுக்கு சொந்தமானதல்ல. உங்கள் உணர்வுக்குத்தான் இந்த உடல் சொந்தமானது. இந்த உடல் அழிந்துவிட்டாலும் உங்கள் உணர்வு அழியாது. இந்த குழந்தையின் ஜீவனை கொன்றுவிட நீங்கள் செய்தது உங்கள் உணர்வுக்கு நீங்கள் செய்யும் துரோகம்.

''உங்கள் அனைவரையும் ஒரே உள்ளமையிலிருந்து (உஜூதிலிருந்து) இறைவன் படைத்துள்ளான் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. பரந்த இந்த பிரபஞ்சத்தின் உள்ளமை உணர்வு என்பது காற்றைப் போல கடலைப் போல பரந்துகிடக்கிறது. அதில் பறவைகளைப்போல படகுகளைப் போல நீங்கள் மிதந்து கொண்டிருக்கிறீர்கள்.

''கடலெனும் ஒரே உள்ளமையின் அலைகளாக உங்கள் எண்ணங்கள் உலவுகின்றன. நீங்கள் எண்ணங்களால் அலைக்கழிக்கப்படுகிறீர்கள். ''நீங்கள் யார்'' என்று நின்று நிதானித்து சிந்திப்பீர்களானால் ஏக உள்ளமையின் பிரிக்கமுடியாத தவிர்க்க முடியாத ஓர் அங்கம் நீங்கள் என்பது உங்களுக்கு புரிந்து போகும்.

''தீயவற்றை பார்க்காதீர்கள், தீயவற்றை கேட்காதீர்கள், தீயவற்றை செய்யாதீர்கள் என்று வேதங்களனைத்தும் உங்களுக்கு போதிக்கின்றன. யாருக்கோ நீங்கள் தீங்கு செய்கின்றீர்கள் என்ற கருத்திலல்ல இந்த உபதேசம், உங்களுக்கே நீங்கள் தீங்கு செய்து கொள்கிறீர்கள் என்பது தான் இதிலுள்ள உண்மை.''

பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் ஞான வாசகங்களை கேட்டு வியப்பிலாழ்ந்த அரசவையினர் இவர் யார்? யார்? என்று அறிந்து கொள்ள தவித்தனர். புத்த பெருமானா? கிருஷ்ண பரமாத்மனா? அல்லது முன்னூறு ஆண்டுகளுக்கு முன் கஷ்மீரத்தில் புகுந்து அத்வைதம் போதித்த ஆதிசங்கரர் என்ற அற்புதரா? என்று அதிசயித்தனர்.



பாபா அவையினரை நிமிர்ந்து பார்த்தார்கள் ''என்னை நீங்கள் ஆராயவேண்டாம். எனினும் தத்வம் அஸீ என்ற வேதவாக்கியத்தின் பொருள்போல - எதை நீ நினைக்கின்றாயோ, எதை நீ நேசிக்கின்றாயோ, எதை நீ வணங்கி வழிப்படுகின்றாயோ அது நீதான் - என்ற விளக்கத்தைப் போல அந்த உண்மை நான்தான்.''

அந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்வடைந்த அவையினர் ''ஆண்டவரே'' என்று பிரலாபித்தவர்களாக பாபாவை நோக்கி இருகைகளையும் கூப்பி வணங்கினார்கள். பாபா அவர்களோ கலந்தர்களின் பக்கம் திரும்பினார்கள்.

''நான் நீங்கள் நினைப்பதுபோல இளைஞனுமல்ல, உங்கள் இளவரசனும் அல்ல, நான் உங்கள் அனைவரையும் விட வயதில் மூத்தவன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய ஒரு ஹதீஸ் ஆராயப்படாமல் அறிவுக்கடலின் ஆழத்தில் அமிழ்ந்துகிடக்கிறது.

''நபி (ஸல்)அவர்கள் சொன்னார்கள், ''ஒரு மனிதன் ஒரு பாறை கல்லின் மீது அமர்ந்திருக்கிறான். அவன் துக்கமாக அமர்ந்திருக்கிறானா? அல்லது சந்தோஷமாக அமர்ந்திருக்கிறானா? என்பதை அந்த பாறை கல் அறிந்திருக்கிறது![1]

''ஆகவே அறிவு என்னும் உணர்வு என்பது எங்கும் எதிலும் வியாபித்திருக்கிறது. ஓரறிவுடன் வானவெளியாக, ஈரறிவுடைய பஞ்சபூதங்களாக, மூன்றறிவு உடைய மரம் செடி கொடிகளாக, நான்கு அறிவுடன் ஊர்வன பறப்பன நடப்பனவாக, ஐந்தறிவுடன் கூடிய மனிதக் கருவாக, ஆறாவது அறிவான பகுத்தறிவுடைய மனிதனாக, அதுவே ஏழாம் அறிவாக மலரும் போது மனிதன் தன் மெய்நிலை அறியும் உள்ளொளியாக அவனில் வெளிப்படுகிறது.

''நான், பல காலமும் பல யுகமும் வானவெளியாக, கல்லாக மண்ணாக, காட்டு மரங்களாக, கானக விலங்குகள் பறவைகளாக, மனிதனாக கூடப் பிறந்து 'ஹையமினல் மையி, மையமினல் ஹையி - உயிர்ப்பிலிருந்து மரணம், மரணத்திலிருந்து உயிர்ப்பு' என்று திருக்குர்ஆன் கூறும் மெய்ப் பொருளாகப் பயணித்து இன்று பாபா ஃபக்ருத்தீனாக உங்கள் முன் நிற்கிறேன்.''

அவையினர் அனைவரும் அதிசயமாக பாபாவைப் பார்த்து கொண்டிருந்தனர் "எனது மூதாதை தந்தையர் தற்காலம் திருசிரபுரம் என்ற சோழ நாட்டு திருநகரில் எனக்காக காத்திருக்கிறார் என்று ஏழாம் அறிவு எனக்கு சொல்கிறது. அவரை சந்திக்க நான் சென்று கொண்டிருக்கிறேன்!" என்று மவுனித்தார்கள்.

மவுனித்து ஆசனத்தில் அமர்ந்த பாபாவின் கண்முன்னர் ஆன்ம கோலத்தில் மனோண்மணி என்ற மோகினி மீண்டும் ஜோதிமயமாக தோன்றினாள்.

பாபாவும் கலந்தர்களும் ஓரிரு நாட்கள் அரண்மனையின் சிறப்பு விருந்தினர்களாக தங்கவைக்கப்பட்டார்கள். இழந்த குழந்தையை மீட்டு கொடுத்த ஞான வள்ளல் பாபா ஃபக்ருத்தீனைப் பார்த்துப் பார்த்து அரச தம்பதிகள் பரவசமடைந்தனர்.

* * * * * * *

*(1) அண்மையில் ஜெனிவா பிரான்ஸ் நாடுகளின் எல்லையில் நிகழ்த்தப்பட்ட அணுஉலை மோதல் நிகழ்வில் ஹிக்ஸ் போஸன் - கடவுள் துகள் கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வொரு அணுவிலும் உள்ள பன்னிரண்டு துகள்களை இனைத்து செயல்படுத்தும் இந்த பதிமூன்றாவது துகள் பல்ஆண்டுகாலமாக செய்யப்பட்ட ஒரு அறிவியல் ஆராய்ச்சியின் முடிவாக கூறப்படுகிறது.*

*இந்த துகள் ஆற்றலின் மூலத்துகள் என்றும் மற்ற அணு துகள்களுக்கு பருமனை தரக்கூடியதென்றும் அவைகளை இணைக்கக் கூடியதென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.*

*மேலே கூறியுள்ள நபிமொழியோடு இந்த கண்டுபிடிப்பு பற்றிய தகவல்கள் ஒப்புநோக்கத் தக்கது.*

*அணுவில் அணுவை ஆதிப்பிரானை*
*அணுவில் அணுவினை ஆயிரம் கூரிட்டு*
*அணுவில் அணுவை அணுகவல்லார்க்கு*
*அணுவில் அணுவை அணுகலும் ஆமே!*
*அணுவுக்கும் அணுவான அடிப்படைத் துகள்களை ஆயிரம் துண்டாக்கி, துண்டுக்குள் நுண்ணியதாக உள்ள பரமாணுவை நெருங்க கூடியவர்களுக்கு பரம்பொருளை அடைவதும் கூடும்.*
*- திருமந்திரம்*



*மண்ணில் மலரும் செடிகொடிகள்*
*மடிந்து மண்ணில் புதைந்துவிடும்!*
*எண்ணில் விலங்கு பறவைகள்*
*இறப்பும் பிறப்பும் தொடர்ந்துவரும்!*
*கண்ணில் தோன்றும் காட்சியெலாம்*
*கனவாய் நனவாய் கலைந்துவிடும்!*
*விண்ணின் வேந்த! நின் விளையாட்டை*
*வேடிக்கை பார்க்கும் நான் எவனோ?*
*- ஸூஃபி மகான் அபு ஸயீத்.*

## காத்திருக்கும் கா7தலி!

இமயமலையின் தொடர்களில் ஒன்றான சுலைமான் மலை குன்றுகளின் மீதேறி முன்னொரு காலத்தில், நபி சுலைமான்(அலை) சென்றமர்ந்து உலகின் தென்பாதியை நோட்டமிட்டதாக கூறப்படும் தக்தே சுலைமான் எனப்படும் சாலமோனின் அமர்வு என்ற பாறையை சென்று கண்டு, நபி அவர்களின் ஆன்மாவின் தரிசனம் பெற வேண்டுமென்ற ஆவலை கலந்தர்கள் பாபாவிடத்தில் வெளிப்படுத்தினார்கள்.

கிழக்கில் சிந்து நதியையும் மேற்கில் சிஸ்தான் நாட்டையும் இணைக்கும் ஹிந்துகுஸ் மலையின் பிரிவான சுலைமான் மலை சிகரங்களில் நடக்க தொடங்கினார்கள் கலந்தர்கள். கேஸிகார், ஜாம், ஜர்குன்கர் என்று பல சிகரங்களை கொண்ட பனிமலைகளிலிருந்து டேரி, கோமதி ஆறுகள் அருவிகளாய் அரும்பி சிற்றாறுகளாய் பிரிந்து சென்று சிந்து நதியில் கலந்தன.

அடர்ந்த ஆப்பிள், செர்ரி, திராட்சை, முலாம்பழ மரம் செடி கொடிகளினூடே விரைந்து முன்னேறிய கலந்தர்கள் உச்சிப் பொழுதில் குறிப்பிட்ட தக்தே சுலைமான் என்ற சிகரத்தை சென்றடைந்தார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் தம் படைபரிவாரங்களுடன் நபி சுலைமான் (அலை) அங்கு வந்து தங்கியிருந்தார்கள் என்று சிந்திப்பதே கலந்தர்களுக்கு பெரும் மகிழ்வை உண்டாக்கியது.

நபி சுலைமான் (அலை) அவர்களின் அமர்வு என்ற குன்றின் வெகு அருகில் அமைந்திருக்கும் அஸ்ஹாபித் தோழர்

(நபி தோழர்) என்று கருதப்படும் கயிஸ் அப்துல் ரஷீத் (ரலி) அவர்களின் மஜாரில் நின்று பாபாவும் கலந்தர்களும் ஜியாரத் செய்தார்கள். பின்னர் மாலைவரை அல்லது இரவு முழுவதும் அங்கேயே தங்குவது என்று முடிவெடுத்தார்கள்.

அஸ்ஹாபித் தோழர் கயீஸ் அப்துல் ரஷீத் (ரலி) அவர்களே பக்தூன்களின் மூதாதை தந்தை என்ற வழக்கு ஆப்கானிலும் கஷ்மீரிலும் பலுசிஸ்தானிலும் பரவியிருந்ததால் ஆண்டு தோறும் மக்கள் அங்கு குழுமி கந்தூரி நடத்திவந்தார்கள். நேர்ச்சைக்கு வந்து சிலர் நள்ளிரவில் மஃஜாரை சுற்றிய தாழ்வாரத்தில் தங்குவது உண்டு.

மாலையிலிருந்து குளிர் அதிகரித்துகொண்டே வந்தது. வானம் ஆழ் நீலமாக மாறியது. வெண்பனி அடர்ந்த காட்டின் வழியே காற்று நெளிந்து வெளிவந்து மஃஜார் கூடத்தை அணுகியது. வானத்தில் விண்மீன்கள் மொய்த்து கிடந்தன. ஏக நிசப்தம் எங்கும் நிரவிப் பரவியிருந்தது.

சாலமன் மலைச் சிகரத்தின் சரிவிலமைந்த செடார் தேவதாரு தேக்கு மரக்காடுகள் அசைவற்று குளிரால் விரைத்து நின்றன. பூமி உயிரற்றது போல் கிடந்தது. இந்த வனம் சூழ்ந்த மலைப்பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்து விடவேண்டுமென்ற ஆவல் தோன்றியது.

எல்லையில்லாமல் பரவிக்கிடக்கும் இந்த மாயக்காட்சிக்கு தேவையான வண்ணங்களை இயற்கை எங்கிருந்து சேகரித்து வருகிறதோ? சிகர கொடுமுடிகளும் பள்ளத்தாக்குகளும், ஏரிகளும், சலசலத்து ஓடும் அருவிகளும் யாருடையவை? ஆளரவற்ற அமானுஷ்ய பூமியில் இந்த கண்கொள்ளா காட்சிகள் யாருக்காக காத்துகிடக்கின்றனவோ!

நினைத்தாலும் பார்த்தாலும் நெஞ்சு கும்மாளம் போடும் அந்த அழகிய சூழலில் தேவதாரு மரக் காட்டோரத்தில் உறைந்த ஏரிக்கரையை ஒட்டி அமைந்திருந்தது நபி சுலைமான் (அலை) அவர்களின் நினைவிடமும், அஸ்ஹாபெ ரசூல் கயிஸ் அப்துல் ரஷீது (ரலி) யின் அடக்கவிடமும் அமைந்த கராக்ரஹம். அங்கு கலந்தர்களை ஓய்வு கொள்ளச் சொல்லிவிட்டு வெளியில் காலாற நடந்தார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

அதோ தெரிகிறது அந்தப் பாறை! அதன்மீது அமர்ந்துதான் ஞான கோமான் சாலமோன் கீழ் உலகை



எட்டிப்பார்த்தார்கள் என்று கூறப்படுகிறது. இப்போது பாபா அவர்கள் பவித்ரமாக நடந்து அந்த பாறையின் மீது பணிவோடு ஏறி அமர்ந்தார்கள். மேற்கு நோக்கி பார்வையை திருப்பினார்கள்.

மலை முடிகளில் ஒளிந்திருந்த நிலா தன் முகத்தை காட்டியது. இப்போது அடர்ந்த காட்டின் இடைவெளிகள் செதுக்கு சிற்பம்போல் துலக்கமாக தெரிந்தன. அது வெளிச்சமுள்ள அமைதியான இரவாக மாறியது. பாபாவின் மேற்கு நோக்கிய பார்வையில் அழகிய சூக்கும காட்சி ஒன்று நாடகம் போல் விரிகிறது.

கண்முன் தெரியும் அந்த ஒளிஒலி காட்சியில் உலகம் போற்றும் உத்தமர் இளகிய நெஞ்சுக்குரிய இறைவனின் தூதர் நபி ஈசா (அலை) அவர்கள் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் அமைந்த பைத்துல் முகத்தஸின் பக்கமமைந்த கொல்கத்தா மலையிலிருந்து உயிரோடு எழுந்து நடந்து வருகிறார்கள்.

அவர்களோடு உடன் வருவது யார்? அவர்கள் நால்வரில் ஒருவர் அபோஸ்தலர்கள் என்னும் ஹவாரியுன்களில் ஒருவரான புனிதர் பால், மற்றும் பெண்களில் ஒருவர் இனிய சொற்களை உடைய ஈசாவின் தாய், மற்றொருவர் ஈசாவின் சிஷ்யை என்றும் காதலி என்றும் கருதப்படும் மரியா மகதலேன். நால்வரும் ஒளி கோலத்தில் ஈரானையும், துருக்மினிஸ்தானையும் ஆப்கனையும் கடந்து வந்து கஷ்மீரத்துக்குள் நுழைகிறார்கள்.

அந்த ஒளிக்காட்சியைக் கண்டு திடுக்கிட்டெழுந்த பாபா திகைப்படைந்தார்கள். எதற்காக இந்த காட்சியை இறைவன் வெளிப்படுத்துகிறான்? அவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. நபி ஈசா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்படும்முன் விண்ணில் உயர்த்தப்பட்டார்கள் - என்ற இறைவசனம் அவர்களுக்கு புரிந்திருந்தது.

ஈசா உயிர்த்தெழுந்து தேவலோகம் போன்று இயற்கை எழில் கொஞ்சும் கஷ்மீருக்கு சென்றுவிட்டார்கள் என்று பாரசீகத்தில் உலவும் கதைகளும் உண்மைதானா? அவர்களுடன் உடன் சென்ற மாதர்கள், ஈசாவை ஈன்ற தாய் மரியம்மையும், நேசித்த காதலி மரியாள் மகதலேனா என்றும் கலந்தர்கள் சொல்லும் கதையும் உண்மையா?

மரியா மகதலேன் பெற்றெடுத்த மகள் சாராவின் சந்ததியில் மாநபி (ஸல்) அவர்களின் தாயார் ஆமினா பிறந்தார்கள் என்ற அதிசய செய்தியொன்றை சிறுவயதில் சிஸ்தானில் கேள்விப்பட்ட செய்தியும் உண்மையா?

சிந்தையில் புகுந்த கலவரத்தோடும்,கவலைகளோடும் ஏந்தல்நபி ஈசா(அலை) அவர்களையும், அவர்கள் வாழ்க்கையின் இரகசியத்தையும் ஆண்டவன் தன்னிடத்தில் ஏன் விவரிக்கிறான் என்ற ஆச்சர்யத்தோடும் பாபா ஃபக்ருத்தீன் உறங்கிப்போனார்கள். பின்னிரவிலோர் அதிசய கனவு கண்டு அவர்கள் பதறி விழித்தபோது,

கலந்தர்களில் ஒருவர் அதிகாலை ஃபஜ்ர் தொழுகைக்கான பாங்கொலியை எழுப்பி கொண்டிருந்தார். அவசரமாக படுக்கையை விட்டு எழுந்து, ஒலுச்செய்து இமாமாக நின்று தொழுவித்து, தோழர்களுக்கு ஸலாம் கூறி தொழுகைப் பாயிலமர்ந்தபடியே பாபா பேசினார்கள், பாபா கூறியதைக்கேட்டு கலந்தர்கள் வியந்தார்கள் :-

''மன்னர் சம்கர ராஜாவின் தலைநகரான ஸ்ரீநகரில் நபி ஈசா (அலை) அவர்களின் மறைவிடம் இருப்பதாக இறைவன் எனக்கு கனவில் அறிவிக்கிறான். அது ஒரு பாறை என்றும் அதன் முகப்பில் ''இவ்வுலகம் ஒரு மரப்பாலம் அதன்மீது நடந்து மனிதன் அதை கடந்து செல்ல வேண்டுமே தவிர, அந்த பாலத்தின் மீதே வீடுகட்டி குடிபுகுந்து வாழமுனைய கூடாது - ஈசா (அலை)'' என்பதாக கல்லில் பொறிக்கப் பட்டுள்ளது என்றும் இறைவன் என்கனவில் கூறியுள்ளான் என்றார்கள்.

பிறகு ''அருமை நண்பர்களே எம்பெருமான் நபிகள் (ஸல்) அவர்கள் நல்ல கனவுகள் நுபுவத்தில் (நபித்துவ வேத வெளிப்பாட்டில்) நாற்பதில் ஒரு பங்கு என்று கூறியுள்ளனர். எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள குறிப்பின்படி நபி ஈசா (அலை) அவர்களின் மறைவிடத்தை தேடி கண்டு பிடித்து மெய்யை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும்'' என்றார்கள்.

மௌனமாக அமர்ந்திருந்த கலந்தர்களில் ஒருவர் சந்தேகத்தை எழுப்பினார். ''தலைவரே! நபி ஈசா (அலை) அவர்களை இறைவன் வானத்தளவில் உயர்த்தி கொண்டதாக நம்முடைய மார்க்கத்தின் கொள்கையாக இருக்கிறதே! அவர்களின் மஜார் அடக்கவிடம் இங்கு இருப்பதாக நாம் எப்படி கூற முடியும்?'' என்று வினவினார்.



பாபா விளக்கம் தந்தார்கள். நபி ''ஈசா (அலை) இறந்து அடக்கப்பட்ட இடத்தை எனக்கு இறைவன் காட்டுகிறான் என்று நான் கூறவில்லை. அவர்கள் மறைவிடமென்றே அறிவிக்கப்பட்டுள்ளது. கொல்கொத்தா மலையிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர்கள் நெடும்பயணத்தை தங்கள் குடும்பத்தாருடன் நடந்து கடந்து கஷ்மீரத்தை அடைந்து இங்கு வாழ்ந்து வானத்தில் உயர்த்தப்பட்டிருக்கலாம் அல்லவா?

''நபி ஈசா (அலை) வானத்தளவில் உயர்த்தப்பட்டார்கள் என்பதிலோ இறுதி தீர்ப்புநாள் நெருங்கும் போது பைத்துல் முகத்தஸிலுள்ள பள்ளிவாசல் மினாராவின் அருகில் உயிரோடும் உடலோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்களென்ற கருத்திலோ எந்த மாற்றமும் கூற நமக்கு தகுதி கிடையாது.

''ஆனால் நபி ஈசா (அலை) தங்கியிருந்த நினைவிடம் என்று ஒன்று குறிப்பிடப்படுவதில் மார்க்க முரண்பாடு எதுவும் ஏற்படவில்லை. எனவே அதை நாம் கண்டு பிடித்து அங்கு அவர்கள் விண்ணுக்கு உயர்த்தப்பட்டார்கள் என்ற நினைவிடத்தை எழுப்பலாம்'' என்றார்கள்.

''நாம் தற்போது தங்கியிருக்கும் கஷ்மீர பூமியில் ஏற்கனவே நூஹ் (அலை) மூசா(அலை), அவர்களின் சகோதரர் ஹாரூன் (அலை), ஈசா (அலை) அவர்களின் தாயார் மர்யம் (அலை) அவர்களின் சிஷ்யை மரியா மகதிலேனா ஆகியோரின் அடக்கதலங்களும் இருப்பதாக கூறப்படுகிறது.

''அந்த இடங்களையும் நாம் சென்று காணவேண்டும். இப்போது புதிதாக இறைவனால் நமக்கு வெளிப்படுத்தப்படும் நபி ஈசா (அலை) அவர்களின் மறைவிடத்தையும் நாம் அழகு படுத்தவேண்டும்'' என்றும் பாபா கூறினார்கள்.

அடுத்த ஒரு சில நாட்களிலேயே மன்னர் சம்கரராஜின் ஆட்களின் உதவியோடு அரண்மனைக்கு வெகு சமீபத்திலிருந்த நபி ஈசா (அலை) அவர்களின் புனிதம் மிகுந்த நினைவிடம் கண்டெடுக்கப்பட்டது.

அந்த நினைவிடத்துக்கு அருகாமையில் ஒரு குன்றின் மீதமைந்த தாயார் மர்யம் (அலை) மற்றும் நபி அவர்களின் காதலியென்று கூறப்படும் சிஷ்யையான மரியா மகதலேன் ஆகியோருடைய கல்லறைகளும் அடையாளம் காணப்பட்டன.

*கஷ்மீரில் தன் முக்கியப் பணிமுடிந்து பாபா ஃபக்ருத்தீன் கலந்தர்களோடு தங்கள் இருப்பிடம் நோக்கி விரைந்தனர். கன்னி தாயாரின் மைந்தனாகப் பிறந்து துறவி என்று உலகளாவ கருதப்படும் நபி ஈசா (அலை) அவர்களுக்கும் ஒரு பெண்ணோடு உறவிருந்தது என்பதை இப்போதும் அவர்களால் முழுமையாக நம்பமுடியவில்லை. ஆனால் அதோ...*

*பயணப்பாதையில் விரைந்து கொண்டிருந்தபோது, கலந்தர்களை விட்டும் வெகுதூரம் முன்னேறிசென்று, வெய்யிலுக்காக வாதுமை மரநிழலில் ஒதுங்கி நின்ற பாபாவின் கண்முன் மீண்டும் தோன்றுகிறாள் அந்த மோகினி..*

*அவளது கலகலவென்ற சிரிப்புக்குப் பொருளென்ன? மைதீட்டிய கண்களும், கனகம் பூட்டிய கரங்களும், சலங்கை கொஞ்சும் பாதங்களும் அசைய அவள் ஆடும் நடனத்துக்கும் அர்த்தமென்ன? ஆடும் அவளைச் சுற்றி அனந்தரமாகப் பாடப்படும் மோகனப் பாடலுக்கு பொருளென்ன?*

*காத்திருக்கும் அந்த காதலி யார்?*

*உச்சிக்கு கீழேயடி என்கண்ணே என்னம்மா*
*ஊசிமுனை வாசல் உள்ளே*
*மச்சிக்கு மேலேறி என்கண்ணே என்தாயே*
*வானமையும் கண்டெடுத்து!*
*கச்சவடம் புரிய என்கண்ணே என்னம்மா*
*காயலூரர் பாதையிலே*
*வச்சு மறந்தல்லோ என்கண்ணே என்தாயே*
*வகைமோசம் போனேண்டி*

*கண்ணுக்கு மூக்கடியோ என்கண்ணே என்னம்மா*
*காதுக்கு மத்திபத்தில்*
*உண்ணாக்கு மேலேயடி என்கண்ணே என்தாயே*
*உன்புதுமை மெத்தவுண்டு!*
*உண்ணாக்கு மேலேறி என்கண்ணே என்னம்மா*
*உன்புதுமை கண்டவர்க்கு*
*கண்ணுக்கு மூக்கடியோ என்கண்ணே என்தாயே*
*காரணங்கள் மெத்தவுண்டு!*



*ஆகாப் புலையனடி என்கண்ணே என்னம்மா*
*அம்புவியிலே பிறந்து*
*வேகாத கலையறியேன் என்கண்ணே என்தாயே*
*மெய்ஞ்ஞானந் தானறியேன்!*
*சாகாத கலையறியேன் என்கண்ணே என்னம்மா*
*தன்னறிவுந் தானறியேன்*

*நோகாமல் நொந்தல்லோ என்கண்ணே என்தாயே*
*உன்மீது காதல் கொண்டேன்!*

பயணப் பாதையில் எதிர் கொண்டு வரும் ஞானப் பாடல்களையும், மோன மயிலாட்டத்தையும் புரிந்து கொள்ளமுடியாமல் திகைத்து நின்ற பாபாவை நோக்கி விரைந்து வந்து சேர்ந்தார்கள் தோழர்களான கலந்தர்கள்.

---

*குறிப்பு :-*
*நூஹ் (அலை) அவர்கள் ஈராக்கில் வாழ்ந்தனரென்றும் அவர்கள் கடல்கோளிலிருந்து கப்பலுடன் மீண்ட இடம் துருக்கியிலுள்ள அராரத் என்ற மலைகுன்று என்பதும் மேற்காசியாவில் உலவும் செய்தியாகும்.*

| | |
|---|---|
| *மச்சு* | *: காபகௌசைன்* |
| *வானமை* | *: மூன்றாம் கண்* |
| *கச்சவடம்* | *: ஆன்மாவை அடையும் பயிற்சி* |
| *ஆகாப்புலையன்* | *: உலக ஆசையில் மூழ்கியவன்* |
| *அம்புவி* | *: பூமி* |
| *வேகாத கலை* | *: நெருப்பு மண்திண்ணாத சூக்கும தேகத்தை அடைவது* |

*ஏதென்ஸ் நகர தத்துவத்தை*
*இந்திய வேத சாஸ்திரத்தை*
*ஓதும் குர்ஆன் பைபிளிலே*
*ஒலிக்கும் கடவுள் வாக்கியத்தை*
*போதி புத்தன் தம்மபதம்*
*புதைந்து கிடக்கும் சத்தியத்தை*
*ஆதிகிரந்தாம் பாட்டிசைத்து*
*ஆடுகிறாள் பார் பராபரியாள்!*
*- ஸச்சல் ஸர்மத்.*

## கிளி பேசிய அருள் வாக்கு

கஷ்மீரைவிட்டு இந்துஸ்தானத்தின் தென்புலத்தை நோக்கி புறப்படு முன்னர் பாபா ஃபக்ருத்தீனும் கலந்தர்களும் கஷ்மீரின் தெற்கெல்லையில் உள்ள நபி நூஹ்(அலை) மஃஜாரை சமாதியை வந்தடைந்தார்கள்.

நபி நூஹ் (அலை) அவர்கள் இந்துஸ்தானத்தில் தென்கோடியிலிருந்த லெமூரியா கண்டத்தில் வாழ்ந்ததாகவும், இறைவன் உத்தரவுகொண்டு அவர்கள் கப்பல் ஒன்றை கட்டுவித்த இடம் தமிழகத்திலுள்ள சீர்காழி என்றும், கடல்கோளால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து கப்பலோடு அவர்கள் மீண்ட இடம் கஷ்மீர் என்றும், இங்குள்ள மக்ஃபராவை ஒட்டியுள்ள இடங்களில் நீண்ட வரலாறு பாரம்பரியமாக கூறப்பட்டு வருகிறது.

நபி நூஹ் (அலை) அவர்களே மனு நீதி சாஸ்திரம் என்று இந்து சமுதாயம் கொண்டாடிவரும் சமூகவியல் சட்டநூலை வரைந்தவர் என்றும் அவர் பெயர் மனு என்றும் இந்தியாவில் வழங்கப்படுகிறது.

நபி நூஹ் (அலை) அவர்களுடைய நீண்ட நெடுங்கால வரலாற்றை உடைய நினைவிடத்தில் பாபாவும் கலந்தர்களும் ஜியாரத் செய்தபோதுதான் அங்கிருந்து வடக்கே ஹிந்துகுஷ் மலைஅடிவாரத்தில்,

நபி மூசா (அலை) அவர்களுடைய மஃஜாரும், அவர்களுடைய சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களின் அடக்கத்தலமும், நபி ஈசா (அலை) அவர்களின் தாயார் மரியம்(அலை), மரியம் (அலை) அவர்களின் கணவர் யூசுஃப் அவர்களின் கபருஸ்தானமும் இருப்பதை உறுதியாக அறிந்து கொண்டார்கள்.



நீண்ட பயணத்துக்குப்பின் நபி மூசா (அலை) அவர்களின் அடக்கஸ்தலத்துக்குள் நுழைந்து ஸலாம் கூறிய போது பாபா அவர்களுக்கு நபியின் பிரதி ஸலாம், ''வஅலைக்குமுஸ் ஸலாம்'' என்று அடக்கஸ்தலத்திலிருந்து ஒலித்தது கேட்டு கலந்தர்கள் திடுக்கிட்டனர். உடன் கபுரிலிருந்து வெளிப்பட்டது நபியின் வரலாற்று புகழ் மிகுந்த அசாகோல் (கைத்தடி).

தொடர்ந்து அசரீரி ஒலித்தது. ''ஆஷிக்கு ரசூலானவரே! இந்த அசாகோலை உமது பயணத்துணையாக ஆக்கிகொள்ளும். மேலும் நீர் தேடி பயணப்பட்டிருக்கும் உமது மூதாதை தந்தையார் கண்முன் தோன்றி உம்மை அழைக்கும் வரை, தென்புலத்திலுள்ள அவருடைய ஸ்தலத்தை நோக்கி செல்லாமல் கஷ்மீரிலேயே தங்கி தவம்புரிந்து வாரும்.''

அசரீரியை ஏற்று பாபா ஃபக்ருத்தீன் அடுத்த பதினோறு ஆண்டுகாலம் கஷ்மீரின் அந்த மலைப்பிரதேசத்தில் நபி நூஹ்(அலை), நபி மூசா (அலை), நபி ஈசா (அலை) ஆகியோரின் நினைவிடங்களுக்கு மாறிமாறி சென்று கலந்தர்களோடு தங்கி தவம் புரிந்து வந்தார்கள்.

தர்வேஷ்களுக்கு நிரந்தரமான தங்குமிடம் என்று ஒன்று இருப்பதில்லை அவர்கள் ஊருக்கு ஊர் அல்லது நாட்டுக்கு நாடு நகர்ந்து செல்லும் நாடோடிகளாவர். நாடோடிகளான தர்வேஷ்கள் நெடும் பயணத்தில் வரும் தடங்கள்களைப் பொருட்படுத்துவதில்லை. பட்டம் பதவி, வீடு வாசல், மனைவி மக்கள், நல்ல ஆடைகளை உடுத்துவதையும் துறந்துவிடுவார்கள்.

வானத்தையும் பூமியின் திசைகளையுமே அவர்கள் ஆடையாக அணிந்திருந்தனர். மரத்தடி வாசமும், கையிலேந்தும் உணவுக் கவளமுமே அவர்களுக்கு உரியனவாயிருந்தன. மாபெரும் மதம் சார்ந்த ஞானவான்கள் பலரும் நாடோடிகளாகவே வாழ்ந்திருக்கின்றனர்.

கஷ்மீரில் பாபாவின் பதினோறு ஆண்டுகால தவ வாழ்கையில் பல்வேறு மனிதர்களை அவர்கள் சந்தித்தார்கள். அவர்களில் இசுலாமிய ஸூஃபிகள் மட்டுமின்றி இந்து சன்னியாசிகளும் சமண சாமியார்களும் பௌத்த துறவிகளும் கூட இருந்தனர்.

நபி மூசா (அலை) அவர்களின் நினைவிடத்துக்கு அருகாமையிலமைந்த புத்தவிகார் ஒன்றில் கிளிமூக்கு பொருத்திய துறவிகள் பலர் தவ ஈடுபாட்டில் காலம் கழித்துவந்தனர். அவர்களில் தலைமை பிட்சுவானவர், பாபாவையும் கலந்தர்களையும் தங்கள் இருப்பிடத்துக்கு

அழைத்து விருந்து உபசாரம் செய்தார்.

*புத்தபிரான் மறைந்து ஆயிரம் ஆண்டுகாலம்வரை அவருடைய உருவத்தை யாரும் வணங்கியதில்லை. மஹாயான புத்தமத கிளை தோன்றிய பின்னர் குஷான மன்னர் கனிஷ்கரின் காலத்தில் புத்தருக்கு உருவச்சிலைகள் செதுக்கப்பட்டன.*

*புத்தரின் முகத்தின் அழகிய மூக்கு கிளிமூக்காக அமைந்திருந்தது என்ற ஐதீகத்தின் படி அவருடைய சிலைகளுக்கு கிளிமூக்கு அமையப்பெற்றது. அதையொட்டி பிக்குகளில் ஒருபிரிவினர் முகத்தில் தங்கள் மூக்கின் மீது கிளிமூக்கு அமைப்பை பொருத்தி கொண்டனர்.*

ஆன்மா, மனம், இச்சை ஆகியவற்றை ஸூஃபி ஞானத்தின் அடிப்படையில் விளக்கும்படி, பிட்சுகள் கேட்டு கொண்ட போது பாபா அவர்கள் மிகத் தெளிவான ஒருவிளக்கத்தை தந்தார்கள் :-

''ஆன்மாவும் மனமும் இச்சைகளும் அடியாழத்தில் ஒன்றே தான். மேல்தளத்தில் அவை பிரிந்து காட்சியளிக்கின்றன. அடிமரம் ஒன்றாக அமைந்திருக்க அதன் கிளைகள் பிரிந்திருப்பது போலவேதான், நாம் ஆன்மாவையும் மனத்தையும் இச்சைகளையும் பிரித்துப் பார்க்கிறோம்.

''மனம் என்பது அரபி மொழியில் கல்பு என்று கூறப்படுகிறது. கல்பு என்பது காதலனும் காதலியும், காதலும் அது தானாகவே இருக்கிறது. மேலும் இறைவனுடைய இருப்பிடமாக இருக்கிறது. இறைவனைத் தவிர இந்த கல்பை ஸ்திரப்படுத்த யாராலும் முடியாது. எனவேதான் மனதை மனதளவில் இலயிக்கச் செய்துவிட்டவனையே ஆரிஃபுபில்லாஹ்! மெய்ஞ்ஞானி இறைவனை அறிந்தவன் என்று பெயர் சூட்டுகிறார்கள்.

''இறைவன் தன்னிலேயே இருக்க அந்த இறைவனை தனக்கு வெளியில் தேடி அலைவதுதான் இந்த மனமெனும் கல்பின் விசித்திரமானப் போக்கு. ஆனால் இந்த மனமென்னும் மாளிகைக்குள் நுழைந்தவன் அதை மாபெரும் பூங்காவனமாக காண்பான். அங்கு கண்ணுக்கினிய மணம் வீசும் மலர்களும், எண்ணற்ற பறவைகளும் நிறைந்திருப்பதை அறிந்துகொள்வான்.

''புதுமைகள் வெளிப்படும் இந்த மனமாளிகை ஹக்கு என்னும் பரம்பொருளுக்கும் அகிலத்தில் ஹல்கு என்னும் படைகோலத்துக்கும் இடைப்பட்ட மலைப்பாதையாகும். மேலும் மனமாளிகையாம் கல்பு ஆண்டவனின் இல்லமாகவும் நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் நூர் என்னும் ஜோதியாகவும் உள்ளது.



''பிரபஞ்சம் எனப்படும் கோப்பையில் மனம் ஒரு திரவ பானத்தை போல உள்ளது. எனவே எந்த ஒரு மனிதனின் மனம் குழப்பம் அல்லது ஊசாட்டம் அற்று களங்கமற்று காணப்படுகிறதோ அது தாத்து என்னும் ஆதிபரம் பொருளின் சுயார்த்த நிலையாகும்.

''தவம், யோகம், ஞானம் என்பதெல்லாம் இந்த மனதின் ஊசாட்டத்தை ஒழித்துவிடும் முயற்சிதான். அலையில்லாத நீர்தடாகம் கண்ணாடி போல் ஆகி பார்ப்பவனுக்கு தன் முகம் காட்டுவது போல, அலையாத மனதின் பரப்பில் ஆதியும் அந்தமும் முற்காலமும் பிற்காலமும் வெளிப்படும்.

''மனம் அறிவதாகவும், ஆன்மா பார்ப்பதாகவும், இச்சை என்ற நஃப்சு தான் ''நான்'' என்று வெளிதோன்றி நாடகமாடும் கதாநாயகனாகவும் உள்ளது. நஃப்சு என்ற இச்சை தான் ''நான்'' என்று சொல்கிறது. தான் என்பதை இச்சிக்கவும் செய்கிறது. அறிந்து கொள்ளுங்கள் நஃப்சு என்னும் இச்சையை தரிப்படுத்த வேண்டுமென்பது முக்தி அடைந்த உன்னத ஞானிகளின் கோட்பாடு.

''ஆனால் நஃப்சை அதாவது இச்சையை அழித்துவிட வேண்டுமென்பது சம்பூர்ணம் அடையாத ஞானிகளின் கொள்கை. அந்த நஃப்சு என்ற இச்சையை விட்டு வெளியில் உன் இறைவனை தேடாதே, அது நீயாகவும், உன் ஆண்டவனாகவும், உன் பூத உடல் என்ற வீட்டின் அரசனாகவும் உள்ளது. அதை ஸ்திரப்படுத்து.''

பாபா அவர்களின் சொற்பொழிவு கேட்டு கொண்டிருந்த பிக்குகளையும் கலந்தர்களையும் சிந்தனையில் ஆழ்த்தியது. பிக்கு ஒருவர் பணிவுடன் எழுந்து மறு ஜென்மம், பிறவி எடுப்பது என்று கூறப்படுவதை விளக்கும்படி வேண்டினார்.

''அகிலம் ஆகிய பிரபஞ்சம் அணுக்கள் என்னும் துகள்களால் ஆக்கப்பட்டிருக்கிறது அணுக்கள் ஒவ்வொன்றும் கல்பு என்னும் மனதின் இருப்பு நிலையைப் பெற்றதாகவும். அதன் உணர்வு என்னும் ஆன்மா என்னும் ரூஹ் அனைத்தையும் அடைய வளைந்ததாயும், அதன் நஃப்சு என்னும் இச்சை அதன் அசைவாகவும் ஆட்டமாகவும் உள்ளது.

''மறுபிறப்பு ஜென்மம் எடுப்பது என்றெல்லாம் கூறுவீர்களேயானால் மேற்காசியாவிலும் கிழக்காசியாவிலும் உள்ள மதங்களுக்கு இடையே ஏதோ அதிபயங்கர வேறுபாடு சுவர்போல எழுந்திருப்பதாக தோன்றும்.

“மறந்தது போல் இருப்பது, தோற்றமாக தோன்றுவது, மறைவது போல் மறைவது, மறைந்திருப்பது தோன்றுவது, ஆகிய இந்த விஷயங்கள் ஒவ்வோர் அணுவுக்கும் உரிய பண்புகள் என்பதை நோட்டமிடுங்கள் உங்களுக்கு தெளிவு பிறந்துவிடும்.

“திருகுர்ஆன் கூறுகிறது : குல்ஹுவ அல்லாஹுவ அஹது (சொல்லப்படும் ஹுவாகிய அணு ஒவ்வொன்றும் ஏகமாகவே உள்ளது) அல்லாஹுஸ் ஸமத் (அது என்றும் எங்கும் தானாக உள்ளது) லம்யளிது (யாருக்கும் அது பிறக்காமல், உடலுக்கு சம்பந்தமில்லாத உணர்வாக அதே உடலில் வெளித்தோன்றுகிறது)

“வலம் யூலத் (அது தன்னில் தன் பூர்வீகத்தை தரிசிக்கிறதே அன்றி எதையும் உண்டாக்குவதில்லை), வலம் யகுன்லஹுவ குஃபுவன் அஹத் (அந்த ஏக ஏகாந்தம் எல்லை வரையரைகளைத் தாண்டியது, எதற்கும் கட்டுப்படாதது)”

“மனிதர்களே! நீங்கள் இறந்தபின் உங்களை உயிர்ப்பிக்கும் இரட்சகன் அல்லாஹ்வை எவ்வாறு நிராகரிக்கிறீர்கள். உயிரற்றவர்களாக இருந்த உங்களை அவனே உயிருள்ள ஜீவனாக்கினான். பின்னும் அவனே மரணிக்கச் செய்கிறான். பின்னும் அவனே உங்களை உயிர்ப்பிப்பான். அதன் பின்னும் அவனிடமே விசாரனைக்கு கொண்டு வரப்படுவீர்கள்” திருகுர்ஆன் (2 : 28). திருகுர்ஆனின் இந்த வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.

பாபா அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தை முடித்து கொண்டதும், பேரின்ப ஞானத்தை அருந்திய பிக்குகள் அரிசியும் கோதுமையும் தேங்காய்ப் பாலும் கலந்த சோறும் இனிய கனிவர்கங்களும், அவற்றின் பிழிந்த சாறுகளும் தந்து விருந்தினர்களைப் பசியாற்றினர்.

பாபாவும் கலந்தர்களும் விடை பெற்று புறப்பட்டபோது மடத்தின் மீதமைந்த ஆலமர கிளையொன்றில் அமர்ந்திருந்த கானக கிளி ஒன்று பாபாவை நோக்கி வாய் திறந்து பேசியது :-

“நல்லறிவாளரே! உம்மையும் உம்முடைய கூட்டத்தாரையும் பகவான் புத்தர் ஆன்மாலோகத்தில் அமர்ந்தபடி ஆசிர்வதிக்கிறார்!”

வியப்புமேலிட்ட கலந்தர்களும் பிக்குகளும் உற்று நோக்கிய போது அந்த கானக கிளி வானின் மேல் நோக்கிப் பறந்து மேக கூட்டத்தில் மறைந்தது.



*இராமன் எனது மாமனடா*
*இயேசு பிரான் என்சிற்றப்பர்!*
*உரோமன் ஃபிளாத்தூன் புத்தபிரான்*
*உப்பப்பர் எனக்கு அறிவாயே!*
*தரும தாதா நபிமுகம்மத்*
*தந்தையராம் எனை ஈன்றவராம்!*
*மர்ம மனிதன் நான் என்னை*
*மயக்குகிறாள் அந்த பராபரியாள்!*
*- ஸச்சல் ஸர்மத்.*

## மனம் திருந்திய மஹ்மூது கஜ்னவி

புகழ் பெற்ற சூரிய கோயிலின் பரந்த வெளிவராந்தாவில் பாபா ஃபக்ருத்தீன் தன் தோழர்களான கலந்தர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அவர்களை சூழ்ந்து கொண்டு கஜ்னவியின் மாமன்னர் மஹ்மூது கஜ்னவியும், சீஸ்தானின் அரசர் மக்தூம் சையத் அலீஷா சில்லாகஷ், இளவரசர் முர்தாஜா மற்றும்,

கஷ்மீரின் மன்னர் சம்கரராஜா, சமந்தின் சிற்றரசர் சாம்ராஜ், பீராரின் அரசன் பாஜிராய், மூல்தானின் ஆட்சியாளர் அபுல் ஃபதா தாவூது ஆகியோரும் அமர்ந்திருந்தனர். அரசர்களின் ஏராளமான படை வீரர்களுடன் நூற்றுக் கணக்கான குதிரைகள், ஒட்டகங்கள், யானைகளும் ஆங்காங்கே கோயிலைச் சுற்றியிருந்த வனப்பகுதியில் தங்கியிருந்தன.

அப்பிரதேசத்தை சுற்றியமைந்த மலைக்குன்றுகள் பனிபடர்ந்து வானவீதிக்கு எழிலூட்டி கொண்டிருந்தன. பூமியின் பரப்பிலே இரவு பொழிந்த பனிப்பொழிவால் அடர்ந்த மரங்களில், கிளைகளிலும் இலைகளிலும் குளிர்ந்த நீர் துளிகள் சன்னமாய் வடிந்து கொண்டிருந்தது. விடிந்தெழுந்த சூரியனின் கதகதப்பில் புல்வெளிகள் குளிர்காய முனைந்தன.

இத்தனை அரசர்களும் அவர்களின் பெரும் படையும் அங்கு வந்து கூடுவதற்கான காரணமென்ன? பலநூறு ஆண்டுகளுக்கு முன் கார்கோட மன்னன் லலிதாதித்த முக்தபீடா என்பவன் சிவபெருமானுக்காக எழுப்பிய அந்த மாபெரும் கோயில் எக்காலமும் இல்லாத பெரும் கூட்டம் தன் பிரகாரத்தில் கூட கண்டு அதிசயித்தது.

*நாற்பது வயது கூட நிரம்பாத பாபா! அந்த மகானின் முகத்தில் முழுநிலவு தோன்றியிருந்தது. இவர் முகம்மதின் (ஸல்) ஜோதிச் சுடரோ என்று அவர்முகத்தை பரவசமாகப் பார்த்து கொண்டு மஹ்மூது கஜ்னவி பிரம்மிப்போடு அமர்ந்திருந்தார்.*

*இந்து மன்னர்களுக்கோ செம்மண் சிவப்பாடை உடுத்திய பாபா, கோயிலின் உள்ளிருக்கும் சிவபெருமானாகவே காட்சியளித்தார்கள்.*

*வெண்பனி இளகிய நிலப்பகுதிகளில், நெடியமரங்களின் அடியிலிருந்தும், உறையாத நீர்க் குட்டைகளிலிருந்தும் கிளம்பிய பனிப்புகை மூடிய, இந்த சமவெளியில் இன்று ஏதோ மறைந்திருந்த வேதாந்த மர்மம் வெளிப்படப் போகிறதோ என்று எண்ண தோன்றியது.*

*தவ சிரேஷ்டர் பாபா ஃபக்ருத்தீன், 'பிஸ்மில்லாஹ்' என்று உச்சரித்து அற்புத சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். அவர்கள் மெல்ல மொழிந்த பாரசீகப் பாடலொன்றை அருகிலமர்ந்திருந்த கலந்தர்களில் ஒருவர் எழுந்து நின்று சப்தமான குரலில் பாடினார்.*

*அனா ஹாமிதும் அனாஷாக்கிறுன் அனாதாக்கிறுன் அனா ஜாகிவுன் அனாக்கானி உன்அனா ஆரிபனல்லமீனு லினிஸ்பிஹியா பாரீ பகுனில்லமீன லினுஸ்பி ஹியாபாரி ஹம்தீலின் கரிக்கதாத்து லஹபின் குலுத்துஹா பஸ¬ உபைதக்க அன்து கூலின்னாரீ.*

*படைத்த ஆண்டவனே*
*நான் உன் புகழைப் பாடும் பாவலன்!*
*நீ தருவதே போதுமென்று*
*பசித்திருக்கும் யாசகன்!*
*உன்னை முன்வைத்து*
*உணவைத்தேடும் மானுடன்!*
*ஆண்டவா நான் பசித்திருந்தால்*
*எனக்கு உணவைக் கொடு*
*நான் ஆடையில்லாதிருந்தால்*
*என்னை உடுத்தாட்டு!*
*நான் தேடியலைந்தால் என்*
*தேட்டங்களை அடையச்செய்!*



*பாடலை பாடிவிட்டு பாபா தொடர்ந்து கூறினார்கள் :-*

*"அன்பர்களே இந்தப் பாடல் பல்க் நாட்டின் முடி துறந்த மன்னர் சுல்தான் இபுராஹிம் இபுனு அதுஹமின் பாடல். அம்மாமன்னர் துறவியாகி அரசப்பதவியை விட்டு விலகி ஆண்டவனை தேடி அலைந்த காலங்களில் ஆண்டவனால் ஆசிர்வதிக்கப்பட்ட பூமியென்று கருதப்படும் இந்த கஷ்மீர் பூமிக்கும் வந்தார்கள்.*

*"இங்கு அருகாமையில் உள்ள தோடா மலைக்குன்றில் சிலகாலம் தங்கியிருந்தார்கள். தவம் புரிந்தார்கள். தன்னிலை உணர்ந்தார்கள் என்பதெல்லாம் உங்களுக்கு தெரிந்திருக்கலாம். தெரியாமலுமிருக்கலாம். தெரிந்துகொள்ளுங்கள். அரசர்களாக இருந்தாலும் ஆண்டிகளாக இருந்தாலும் மனிதனின் தேவையென்பது உடுத்த ஒரு கோவணமும், உண்ண ஒரு கவளம் உணவும்தான். மற்றதெல்லாம் ஆடம்பரம்தான்.*

*"அகிலத்தை அல்ல, ஆன்மாவைத் தேடி அலையும் முடிதுறந்த மாமன்னர் சையிதினா சுல்தான் இபுறாகிம் இபுனு அதுஹம் அவர்களைப் போன்றவர்களின் கோட்பாட்டின்படி*

*"இவர்களின் இறைவன் கருணை கடலாவான், எங்கும் நிறைந்தவனாவான். இவர்களின் கொள்கைப்படி மனித வாழ்க்கை என்பது ஆன்மீக முன்னேற்றத்துக்கான ஒரு வாய்ப்பே தவிர ஆசைகளின் அழிவுப்படுகுழியல்ல. வெறி மிகுந்த இன்ப சல்லாபங்களுக்கு இடையிலமைந்த துன்ப முணுமுணுப்பு அல்ல.*

*"பசுமை மிகுந்த வயல்கள், வனக் காடுகள், இவற்றில் எழும் வசந்தத்தோடும் நறு மணத்தோடும் அழகோடும் கலந்து இந்த மகான்களுடைய கருத்துகள் கவிதைகளாக நம்மை வந்தடைகின்றன.*

*"இவர்கள் படைத்த இறைவனை வழிபட்டுப் பாடும் பாடல்கள், பரிதி எழுவதால் ஒளிபெற்று மலரும் உலகை வரவேற்கின்ற கவலையற்ற பறவைகளின் பாடல்களைப் போல நம் காதுகளில் வந்து விழுகின்றன. "நீங்கள் சுதந்திரமாகப் பறந்து திரியும் பறவைகளை பார்க்கவில்லையா?" என்று கேளிக் குரலில் உங்களுடைய இறைவன் திருக்குர்ஆனில் கேள்வி எழுப்புகிறான்.*

*"கஷ்மீரத்தின் சுற்றி அமைந்த பல்வேறு நாடுகளிலும் இத்தகைய மகான்களும் உன்னத மனிதர்களும் ஞானிகளும் தோன்றியிருக்கிறார்கள். இந்த பூமியின் கிழக்கிலும் மேற்கிலுமாக சரிந்திருக்கும் மலைச்சிகரங்களில் ரிஷிகள் என்ற இறைதூதர்கள் தோன்றி இருக்கிறார்கள். வேதகானங்களை முழங்கியிருக்கிறார்கள்.*

"ஆரியர்களில் பழைய நூலாகிய ரிக்வேத சம்ஹிதையில் உள்ள விந்தையான இந்த பாடலை கேளுங்கள்-

"*மரணமும் வாழ்வும் இல்லாத விண்ணின் பேரொளி அழியாத அந்த ஆனந்த உலகுக்கு ஆண்டவா என்னை அழைத்துச் செல்!*

"*எல்லோரும் இன்பமாக எந்த உலகத்தில் வாழ்கிறார்களோ அந்த உலகத்தை நான் அடையுமாறு செய்து ஆண்டவா என்னை அழிவற்றவனாக்கு!*

"இந்த கவிதையின் அற்புதத்தை கவனியுங்கள். இருப்பவை எல்லாம் இந்த உலகமும், இந்த உடலுமே என்ற நமது சிந்தனைக்கு அப்பால்பட்ட இந்த தவிப்பின்பால் உங்கள் கவனத்தை செலுத்துங்கள். உடலில் இருக்கும் போது அனுபவிக்கும் இன்பத்தைவிட பலமடங்கு உயர்ந்த இன்பம் இந்த உடலை விட்டபின் கிடைக்க இருக்கிறது.

"எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகின் சிற்றின்பத்தைவிட சுவர்க்கத்தின் பேரின்பம் நூறுமடங்கு உன்னதமானது என்றார்கள். ஆனாலும் நமது மனம் அதை ஒரு பொருட்டாக எடுத்து கொள்வதில்லை.

"ஆன்மாவைப் பற்றிய உண்மையை அறிவதற்கு வேண்டிய கரு, சுவர்க்கம் என்ற இந்த கருத்தில் தான் இருக்கிறது. இங்கே உண்மை மனிதன் என்பவன் உடல் அல்ல. அவன் ஆன்மா. உடலுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு பிரிக்கமுடியாது என்ற கருத்து இங்கு இல்லை.

"ஆன்ம சுதந்திரம் என்ற மாபெரும் கருத்து இதன் அடிப்படையில்தான் எழமுடியும். ஆன்மாவின் முற்பிறவி, அழிவின்மை, தனித்துவம் போன்ற கொள்கைகளில் நீங்கள் ஆராயத் தேவையில்லை. ஆன்மாவைப் பற்றி கேட்பவர்களுக்கு அது ஆண்டவனிடத்தில் உள்ள இரகசியம், அவனது கட்டளை அல்லது நாட்டம் என்று கூறுங்கள் என்ற தெளிவான செய்தி திருக்குர்ஆனில் உள்ளது.

"ஆண்டவனுடைய கட்டளையோ, நாட்டமோ, அது எங்கு வேண்டுமானாலும் நுழையும், எந்த உலகத்தை வேண்டுமானாலும் ஊடுருவும், எத்தனை முறை வேண்டுமானாலும் நுழைந்து நுழைந்து வெளிப்படும். புரிந்து கொள்ளுங்கள் உங்களுடைய ஆன்மா இறைவனுடைய கட்டளை.



"இறைவன் கூறுகிறான் நபியே! மரணத்திற்கு பயந்து தங்கள் வீடுகளை விட்டு கணக்கின்றி வெளியேறியவர்களை கவனித்தீரா? அல்லாஹ் அவர்களை இறக்கச் செய்து பின்னர் அவர்களை உயிர்ப்பித்தான் நிச்சயமாக அவன் கருணை உள்ளவன். திருக்குர்ஆன் (2 :243).

"ஆன்மா ஆகிய அது எங்கெங்கு நுழைகிறது எத்தனை முறை ஜென்மமெடுக்கிறது என்பதெல்லாம் விஷயமல்ல. அதுதன் இலக்கை சென்றடைந்ததா என்பது தான் அதி முக்கியம். சூன்யத்திலிருந்து தோன்றினோம் சூன்யத்தில் சென்று முடியவுறுவோம் என்பது நாத்திகம். நாம் அல்லாஹ்விலிருந்து தோன்றினோம் நாம் அல்லாஹ்வையே சென்று அடைவோம் என்று ஃபுர்க்கான் என்னும் குர்ஆன் சொல்கிறதே.

"அந்த அல்லாஹ் ஆதியும் அந்தமும் வெளிப்படையும் உள்ளீடாக மறைந்தவனுமாவான் என்று கூறப்படுகிற போது, நீங்கள் யார்? உங்களுடைய பண்புகளென்ன நீங்கள் நோட்டமிட வேண்டாமா? ஆன்மீக வெற்றி பெற வேண்டாமா? பள்ளி வாசலின் பாங்கு மேடையிலிருந்து ஒரு நாளைக்கு ஐந்துமுறை ஆன்மீக வெற்றிபெற வாருங்கள் என்று அழைப்பு விடப்படுகிறதே?

"ஹய்ய அலஸ்ஸலாத்! ஹய்ய அலல் ஃபலாஹ்! என்ற வார்த்தைகளின் தாத்பரியம் என்ன? தத்துவார்த்தம் என்ன. பழக்கதோஷத்தால் பள்ளிவாசல்களிலும் கோயில்களிலும் உட்புகுந்து உங்களின் உள்ளிருக்கும் ஆன்மாவை மறந்துவிட்டு, உலகையும் உலகவாழ்க்கையின் சந்தோஷத்தையும் நினைக்கும் மனிதர்களே விழித்தெழுங்கள்.

"இறந்த பிறகும் சுவர்க்கத்திலோ நரகத்திலோ நாம் இருந்து கொண்டேதான் இருக்கப் போகிறோம் என்று எல்லா வேதங்களும் ஒரே இராகமாகப் பாடி கொண்டிருக்க உங்களை நீங்கள் அழியப் போகிறவர்களாக ஏன் நினைக்கிறீர்கள்? அழிந்துவிடுவோம் முடிந்து விடுவோம் என்ற அவசரத்தில் ஆசைகளாம் மூச்சுமுட்ட ஏன் அவஸ்தைப் படுகிறீர்கள்?

"வேதங்களின் அடிப்படையில் நரகத்திலோ சுவர்கத்திலோ என்றென்றைக்கும் நாம் இருக்கப் போவது உண்மையானால், இதற்கு முன்னாலும் நாம் எப்போதும் இருந்திருக்க வேண்டும். வேறு விதமாக இருக்கமுடியாது. நாம் முன்னால் இருந்தது நினைவுக்கு வரவில்லையே முற்பிறவி எப்படி உண்மை என்பது தானே உங்கள் ஆட்சேபம்.

“படைத்த ஆண்டவன் உங்களை, உங்கள் ஆன்மாக்களை ஆன்மலோகத்தில் நிறுத்தி வைத்து, அலஸ்து பிரப்பிகும் (நான் உங்கள் நாயனல்லவா) என்று கேட்டதாகவும், நீங்கள் எல்லோரும் ‘காலு பலா’ (ஆம் நீயே எங்கள் இறைவன்) - என்று சாட்சிய மளித்ததாகவும் குர்ஆன் கூறுகிறதே அந்த சம்பவம் ஏன் உங்கள் நினைவில் இல்லை?

“குழந்தைகளாக நாம் இருந்தபோது செய்த சேஷ்டைகள் எந்த அளவுக்கு நம் நினைவில் இருக்கிறது? ஏன் கடந்த ஆண்டு இந்த நாளில் நாம் என்ன செய்தோம் என்பது ஏன் நமக்கு நினைவில் இல்லை? நம்முடைய இருப்புக்கு நினைவுதான் ஆதாரமென்று நினைப்பது பெரிய தவறாக தோன்றவில்லையா?

“நீ என்பது உண்மை! உன் நினைவோ கனவோ அது உண்மையல்ல. நான் என்பது உண்மை என் நனவும் கனவும் உண்மையல்ல! நான் அல்லது நீ என்ற நமது அனுபவம் இந்த உடலின் வயதைப் பொறுத்ததல்ல. நம்முடைய ஆன்மாவின் அனுபவத்தைப் பொறுத்தது! நம்முடைய ஆன்மா தன் இலட்சியத்தை அடைய நீண்ட நெடுங்காலமாக அனுபவக் கடலில் நீந்தி வந்து கொண்டிருக்கிறது.

“நிச்சயமாக கெட்டகல்மாரி பொழிந்த ஊரின் சமீபமாக சென்று பார்க்கவில்லையா. உண்மையில் இவர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதை நம்பவில்லை. (திருக்குர்ஆன் 25 :40)

“நம்முடைய ஆன்மாவின் இலட்சியம் தானே தன்னுடைய ஆண்டவன் என்று அறிந்து கொள்வது தான். மன்அரப நஃப்ஸஹூ ஃபகத் அரப ரப்பஹூ - தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்து கொண்டான் என்பது சர்தாருல் அன்பியா முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சாட்சியம். இதை முக்திநிலை என்று இந்திய மதவாதிகள் சொல்கின்றனர்.

“முடிவான முக்தி நிலையை நாம் அடையும் போது இந்த உலகமே ஒரு கனவு என்பதை நாம் காண்போம். ‘மனிதர்கள் உறங்குகிறார்கள். மரணம் வந்ததும் விழித்து கொள்வார்கள்’ என்ற நபி மொழியின் யதார்த்த உண்மை நமக்கு விளங்கும். எத்தனை முறை பிறந்தோம் எத்தனை முறை இறந்தோம் எத்தனை கனவுகளில் பயணித்தோம் என்பது தெரிந்துவிடும்.

“இன்பங்களையும் துன்பங்களையும், உயர்வையும் தாழ்வையும், வளமையையும் வறுமையையும் உங்களுக்கு சோதனைகளாகவே படைத்துள்ளோம் என்று திருக் குர்ஆன் கூறும் தத்துவம் உனக்கு புலனாகும்! இன்ப துன்ப



சோதனைகளின் போது நானென்ற உனது உண்மையை ஊடுருவிப் பார்த்து நீ உன்னை ஸ்திரப்படுத்துவது அவசியம் என்பது உனக்கு விளங்கும்.

“அப்போதுதான் உலக வாழ்க்கையின் மீதான பற்றின்மை என்ற கருத்து நம்மிடம் இடம்பெறும். அப்போது தான் வாழ்க்கையின் இன்பங்களுக்கான தாகம், உலகின் மீதும் வாழ்வின்மீதும் நமக்குள்ள மோகம் எல்லாம் என்றென்றைக்குமாக மறையும், இதுதான் ஆன்மீக விடுதலை ஆன்மீக வெற்றி (ஹைய அலல் ஃபலாஹ்) என்ற பாங்கொலியின் அழைப்பு.

எல்லாவற்றையும் இழந்துவிட்டு எல்லாவற்றையும் நீ அடையப் போகிறாய். “பிறந்த குழந்தை எப்படி தாயின் மார்பை நோக்கி பாலுக்காகப் பாய்கிறது? பருந்தை கண்டதும் குஞ்சு எதை உணர்ந்து தாயின் அரவணைப்புக்காக கோழியை நோக்கி ஓடுகிறது? பருவம் எய்திய ஆடவன் எதுவுமே தெரியாமல் தன் வயது பெண்ணைப் பார்த்ததும் ஏன் மயங்குகிறான்? என்ன அவளிடமிருக்கிறது என்று தெரிந்து மோகத்தில் தவிக்கிறான்?

“இவையெல்லாம் இறைவனின் ஏற்பாடு என்று சாதாரணமாக சொல்லிவிடலாம். இது உனது ஆன்மா தொடர்ந்து வந்த ஜென்மாந்திர பயணத்தின் அனுபவம் என்பது ஸூஃபி ஞானிகளின் கொள்கை கலந்தர்களின் கொள்கை. ஸூஃபிகளின் கொள்கைகள் என்பதெல்லாம் எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹக்கீகத்தான தத்துவார்த்தமான கொள்கைகள் தான்.

“இது எல்லோருக்கும் கூறப்பட்டதல்ல. இது நபிகளார் (ஸல்) தம் நெருங்கிய தோழர்களுக்கு சொல்லியிருக்கும் செய்தி. எம்பெருமான் (ஸல்) அவர்கள் ஷரீயத் எனது சொல், தரீக்கத் எனது செயல், ஹகீகத் எனது ஞானம், மஃரிபத் எனது நிலை என்றார்கள். எனவே உலகியல் சட்டங்களில் உறைந்துள்ள தத்துவங்களை ஆராய்ந்து உண்மைகளை கண்டு ஞானானந்தைப் பருகுங்கள்!”

நீண்ட சொற்பொழிவை முடித்து கொண்டு பாபா மஹ்மூது கஜ்னவியை நோக்கி, “அன்பரே! எம்பெருமான் (ஸல்) அவர்கள் தஃபூக் யுத்தத்திலிருந்து திரும்பும்போது நாம் சிறிய யுத்தத்திலிருந்து பெரிய யுத்தத்திற்கு மீண்டு செல்கிறோம் என்று கூறியதையும்,

“அதை விளக்கும் படி சஹாபாக்களான தோழர்கள் வினவ, பெரிய யுத்தம் நம் கீழான மனத்துடன் நாம் நடத்தும்

யுத்தம் என்று பதில் கூறியதையும், இது மனதோடு நடக்கும் யுத்தம் நம்மை நாம் கண்டறியும் போராட்டம் என்பதும் தங்களுக்கு தெரிந்தது தானே?'' என்று வினவினார்கள் பாபா.

''ஆம் தெரியும்!'' என்று மௌனித்தார் மன்னர்.

''தாங்கள் தன்னையறியும் போராட்டத்துக்கு, யுத்தத்துக்கு எப்போது தயாராகப் போகிறீர்கள்?'' மீண்டும் அவரிடம் கேட்டார்கள் பாபா

மாமன்னர் மஹ்மூது கஜ்னவி நெடுமூச்செறிந்தார். வானத்தையும் வானளாவ எழுந்த மலை சிகரங்களையும் வனப்பகுதிகளையும் சுற்றுமுற்றுமாக திரும்பி திரும்பி பார்த்துவிட்டு பாபாவின் முகத்தை நோக்கினார் அவர் கண்கள் கலங்கியிருந்தன.

''எனக்கு வழிகாட்டுங்கள் இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்பதை கூறுங்கள்?'' என்று மாமன்னர் பாபாவை கேட்டுக்கொண்டார்.

தன்னுடைய மூத்த சகோதரரும், சீஸ்தானின் மன்னரும் ஷெய்குமான ஸையத் ஹுஸைனின் கலிஃபாவுமான, ஸையத் அலீஷாவிடம் முரீது பெற்றுகொள்ளுமாறு கூறிய பாபாவின் உபதேசத்தை ஏற்று மாமன்னர், மஹ்மூத் குவாலியரில் இப்போது ஷாபீர் என்ற பெயருடன் மஃஜார் கொண்டிலங்கும் மகுதும் சையத் அலீஷாவிடம் முரீது பைஅத் செய்து கொண்டார்.

மன்னர் மஹ்மூத் தன்முன் அமர்ந்திருந்த ஹிந்து முஸ்லிம் பௌத்த மன்னர்கள் அனைவரையும் அவரவர் பூமிக்கு சுதந்திர அரசர்களாக அறிவித்தார். அவர்கள் அனைவரும் ஷாபீர் அவர்களிடத்தில் ஞானதீட்சை பெற்று கொண்டார்கள்.

சீஸ்தானிலிருந்து படைபரிவாளங்களோடு தன்னை தேடிவந்து, கஷ்மீர் மன்னர் சம்காரராஜின் படைகளோடு பவான் நகரின் அருகிலமைந்த சூர்ய கோயிலில் தன்னை கண்டு கொண்ட சகோதரர் சையத் அலீஷாவுக்கும், இளைய சகோதரர் முர்த்துஜாவுக்கும் ஆலோசனை கூறினார்கள் பாபா.

தான் அரச பதவியிலிருந்து விலகவிரும்புவதாகவும், சகோதரர் முர்த்துஜாவை சீஸ்தானுக்கு திரும்பிச் சென்று அரசப் பொறுப்பை ஏற்குமாறும் சையத் அலீஷா விரும்பவே அவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, முர்த்துஜா படைகளோடு சீஸ்தான் புறப்பட்டார்கள். ஸையத்அலீஷா குவாலீயர் நகர் நோக்கி பயணித்தார்கள்.



மாமன்னர் மஹ்மூதும் மற்ற அரவர்களும் சகோதரர்களும் படை பரிவாரத்துடன் புறப்பட்டு சென்றவுடன் வெறிச்சோடி கிடந்த சூர்ய கோயிலின் வாயிலிலேயே அன்று கலந்தர்களுடன் தங்கியிருந்த பாபா இரவில ஒரு கனவு கண்டார்கள். அது தன் மூதாதை தந்தையார் என்று பலமுறையும் இறைவனிடமிருந்து அறிவிக்கப்பட்டு வரும் மகான் என்பதை அந்த கனவிலேயே அவர்கள் உணர்ந்தார்கள். அந்த மகானுக்கு அருகில் ஆன்ம கோலத்தில் தன்முன் தோன்றி அழைப்பு விடுக்கும் மனோண்மணி என்ற மங்கை நின்று தன்னை நோக்கி புன்னகைப்பதை கண்டு அதிசயித்து விழித்தார்கள்.

* * * * * *

## கராமத் : அற்புதங்கள் : குறிப்பு1

*குருவைதேடி வந்த பாதையில் பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் புனித ஆன்மீக நிலையிலிருந்து பல்வேறு அற்புதங்கள் வெளிப்பட்டதாக அவர்களைப் பற்றிய குறிப்புகளில் காணப்படுகிறது.*

*<u>ஏழு நாள் பெய்த மழை</u>.*

*சோம நாதபுரம் நகரை அவர்கள் கலந்தர்களுடன் சேர்ந்து வந்தடைந்தபோது அந்நகர அரசன் சில வருடங்களாக நாட்டில் நிகழும் வரட்சியைக் குறித்து வேதனை தெரிவித்தான். பாபாவின் உத்தரவுப்படி அந்நகரில் ஒரு பள்ளிவாசலை அரசன் எழுப்பினான்.*

*அப்பள்ளிவாசலை நிருவ பாபாவின் துஆவினால் ஆகாயத்திலிருந்து ஒளி வெள்ளமாக ஒரு தூண் இறங்கி வந்தது. தூணுடன் இறங்கிய அட்சய பாத்திரம் ஒன்றில் சுவர்க்கத்துப் பண்டங்கள் வந்திறங்கின. பாபா அதனை அரசனுக்கும் அவன் ஆட்களுக்கும் பங்கிட்டார்கள்.*

*எழுப்பப்பட்ட பள்ளிவாசலின் முற்றத்தில் நின்று பாபா அவர்கள் ஓதிய பிரார்த்தனை துஆவினால் ஏழு நாட்கள் வரை தொடர்ந்து மழை பொழிந்து நாட்டின் வரட்சியும் பஞ்சமும் தெளிந்தது.*

## மறைந்து மீண்ட பெண்ணின் மார்பகம்.

*யமுனை நதி ஓர கிராமம் ஒன்றில் கலந்தர்களுடன் பாபா தங்கியபோது ஹஸரத் முல்கி காதிரி என்பவர், ஆற்றில் குளித்து கொண்டிருந்த ஒரு பெண்மணியின் மார்பகத்தை வேணல் கட்டி என்று தவறாகப் புரிந்து கொண்டு பாபாவிடம் முறையிட அப்பெண்ணின் மார்பகம் மறைந்தது.*

*வேதவதி என்ற அந்த பிராமணப் பெண் பாபாவைத் தேடி வந்து தனக்கு நிகழ்ந்ததை கூறி வருந்தி மார்பகம் மீளப்பெற்று சந்தோஷமாக திரும்பினாள்.*

### மன்னனுக்கு தந்த வாரிசு வரம்.

*குஜராத் நாட்டு மன்னன் ஷாகூர் என்பவனுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. பாபா அவர்களின் பிரார்த்தனையால் அரசியின் வயிற்றில் வாரிசு உண்டாகியது.*

### ஆணாக மாறியப் பெண்.

*குஜராத்தின் மற்றொரு நகரில் கணவன் காணாமல் போனதால் மாமியாரின் வீட்டில் கொடுமைக்கு ஆளான ஒரு பிராமணப் பெண்ணை ஆணாக உருமாற்றி, அவனை அவளின் நாத்தனாருடன் சேர்த்து வாழச் செய்து அவளின் துயரம் நீக்கினார்கள் பாபா.*

## இறைநேசர்கள் சந்திப்பு.

*குஜராத்திலுள்ள ஜார்கண்ட் நகரில் பாபா ஃபரீதுத்தீன் சக்கர் கன்ஜ் என்ற புகழ்பெற்ற பஞ்சாபி ஸூஃபி ஞான கவிஞரை சந்தித்ததாக கூறப்படுகிறது. அவர்கள் அஜ்மீர் காஜா முயினுத்தீன் கிஷ்தி (ரஹ்) அவர்களின் சீடர் காஜா குத்புத்தீன் பாக்தியாரே காகி அவர்களின் சீடரும் கலீஃபாவும் ஆவார்கள்.*

*குஜராத்தின் கானக மொன்றில் மன்னர் துக்ளக்கின் குருவான மகான் சையத் ஜலால் புகாரி மகுதூம் ஜகான் ஜகானியான் கஸ்தி என்ற பெரியாரை சந்தித்ததாகவும் கூறப்படுகிறது.*



*காத்திருக்கிறேன் உனக்காக*
*கனவும் நினைவும் உனக்காக!*
*நேற்று இன்று நாளையென*
*நேரம் கழிவது எதற்காக?*
*பார்த்து உன் முகத்தைப் பரவசமாய்*
*பாடவேண்டாமா ஒருபாடல்?*
*நேத்திரம் நிறைந்தப் பரஞ்சோதி*
*தேவதையே சொல் பராபரியே!*
*- மௌலானா ரூமி.*

## முக்தியின் குருவே! மூதாதை தந்தையே!

பாபா ஃபக்ருத்தீன் அவர்கள் தங்கள் தோழர்களான ஒன்பது கலந்தர்களையும் சையத் அலீஷா கிஷில்லாகஷ் உடன் குவாலியருக்கு அனுப்பிவிட்டு இந்துஸ்தானத்தின் தென்பகுதியை நோக்கி புறப்பட்டு விட்டார்கள்.

பரந்த பரதகண்டத்தின் பயணப் பாதையில் நெடிய மலைப்பாதைகளையும் நீண்டு அகன்ற நதிகளையும், பள்ளத்தாக்குகளையும், சமவெளிகளையும் அவர்கள் நடந்தே கடந்தார்கள். காடுகானகங்களையும், நாடு நகரங்களையும் தம் பாதத்தை தரைமீது பதியவைத்து நடந்தார்கள். சில நேரங்களில் காற்றில் பறந்தார்கள்.

அவர்களின் அவஸ்தைகள் நிறைந்த பயணப் பாதையில் விந்திய மலைக்குன்றுகள், பள்ளத்தாக்குகளும், கிருஷ்ணா, கோதாவரி, துங்கபத்ரா பேராறுகளும், அவற்றின் உப நதிகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளின் குன்றுகளும், காவேரி ஆற்றை நோக்கி செல்லும் அருவிகளும் குறுக்கிட்டன.

தொட்டபேட்டா ஆனை மலை சிகரங்களையும் பாபா புதன்கிரி சிகரத்தையும் பார்வையால் அளந்தபடி, மலபாரின் கடற்கரை பாதையில் நடந்து பொதிகை மலையில் பீர்மேடு மலைபாதையிலேறி சுருளி நீர் வீழ்ச்சியின் உச்சியில் சென்றார்கள்.

மலைப் பாதையின் உச்சியில் பதினெட்டு சித்தர் தவ குகைகளை அடுத்து, வனாந்திரப் பிரதேசத்தில் வசிக்கும் காட்டு யானைகளும், சிறுத்தை புலிகளும், கரடிகளும் பாபாவை கண்டதும் ஓடி ஒளிந்தன. மான் மறைகளும், மயில் குயில் கொக்கு குருவி கூட்டங்களும் நெருங்கி வந்து நின்று வியப்புடன் அவர்களை நோக்கின.

மலைச் சிகரத்தின் உச்சியில் அமைந்த புராதன அடக்கத்தலங்களில் ஒன்றாக அமைந்திருக்கும் சமாதி மஃஜாரின் அருகே சென்று மூன்று நாட்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள்.(1) அருகிலிருந்த குளிர் தடாகத்தில் நீரருந்தி அமைதி கொண்ட பாபாவுக்கு, அன்றாடம் கலைமான் ஒன்று வாயில் கவ்வியபடி கோதுமை ரொட்டி ஒன்றை எடுத்து வந்து கொடுத்து பசியாற்றியது.

வானளாவிய மா, பலா, அத்தி, ஆலமரங்களும், அவைகளை சுற்றிப்படர்ந்த முல்லை மனோரஞ்சித செடி கொடிகளும், பச்சைப் பசேலென விரிந்திருக்கும் அந்தப் பகுதியில், சொர்க்கத்திலிருந்து இறங்கி வரும் மாதுளங்கனியை உண்டு, மறைவில் தங்கியிருந்ததாக அருள்மறை குர்ஆன் புகழும். மாதரசி மரியம் (அலை) அவர்களைப்போல மான் கொண்டு வரும் ரொட்டியை உண்டு, சுனைநீரை அருந்தி பாபா பல நாட்கள் வரை அங்கே தங்கியிருந்தார்கள். நாளென்றும் பொழுதென்றும் பாராமல் சமாதி நிலையில் அமர்ந்தார்கள்.

*சமாதி நிலை என்றால் என்ன? ஒவ்வோர் உயிரும் படைத்தவனின் அடையாளம் என்று தன்னை அறிந்து கொள்வது. ஒவ்வொரு படைப்பும் தானே படைத்தவன் வாழும் இல்லத்தின் வாசல் என்பதை உணர்ந்து கொள்வது.*

*நிர்வாணம் அல்லது அனைத்து ஆசைகளையும் விட்டு விடுதலை பெற சமாதி யோகத்தில் நீங்கள் அமர்கிறீர்கள். 'காலையிலும் மாலையிலும் இல்லங்களில் இறை அடியார்கள் தங்கள் இறைவனை ஞாபகம் (திக்ரு) செய்து அவனது திருநாமங்களை ஜெபித்தவர்களாக இருக்கிறார்கள்' என்றும், 'அவர்களின் உலக வாழ்க்கை கொள்வினை கொடுப்பினைகள் அவர்களை இறைவனின் ஞாபகத்தினின்றும் பராக்காக்குவதில்லை' என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.*

*இறைவனின் ஞாபகத்தை உங்களில் நீங்கள் மேலோங்கச் செய்வதுதான் சமாதி நிலை என்று கூறப்படுகிறது. நிர்வாணம் என்பது உலகப் பற்றறுவது. சமாதி என்பது இறைவன் ஆகிய ஆதி பரம்பொருளுடன் சமமாகி ஒன்றிவிடுவது. சமா என்பதை அமைதி என்றும் சாந்தம் சமாதானம் ஸலாம் என்றும் சொல்லலாம்.*

---

*(1) இங்கு கி.பி 10ம் நூற்றாண்டில் ஸூஃபி அப்துல் ரஹ்மான் மஸ்தான் என்ற பெரியார் வாழ்ந்து அடக்கமாகி சமாதி கொண்டுள்ளனர்.*



*வஹ்தத்துல் உஜூத், வஹ்தத்துல் சுஹூத் என்று இஸ்லாமிய ஆத்ம ஞான உலகில் இரு கொள்கைகள் உள்ளன. உஜூதியா கொள்கை எல்லாம் அவன்தான் எல்லாம் இறைவன் தான் என்கிறது. சுஹூதியா கொள்கையோ இறைவன் என்பதையும் படைப்புகள் என்பதையும் இரண்டாக பாவித்து இரண்டுக்கும் உள்ளமைவு ஒன்று தான் என்று கூறுகிறது.*

*இந்த இருவித கொள்கைகளையும் இந்துஸ்தானத்தில் அத்வைதம், துவைதம் என்று அர்த்தப்படுத்துகிறார்கள். அகில பிரபஞ்சம் முழுவதும் ஆண்டவனின் தோற்றம் தான். அகிலம் அணுக்களின் அடுக்கு. ஆக அகிலமும் அணுவும் ஒன்றுதான் என்ற இந்த கொள்கைக்கு ஹம ஓஸ்த் என்று பாரசீக மொழியில் சொல்வார்கள்.*

*ஹம ஓஸ்த் என்ற வார்த்தையை விளக்கும் ஸூஃபிகளின் கருத்து அறிஞர்களை திகைக்க வைக்ககூடியது.*

*லாயிலாஹ இல்லல்லாஹ் என்பது ஷரீஅத்தின் கொள்கையின் படி வணக்கத்திற்குரிய நாயன் இறைவன் ஒருவனையன்றி யாருமில்லை என்பதாகும். இதன் ஹகீகத் ஆகிய தத்தறுவ நிலையிலே லாஇலாஹ் இறைவன் என்பவன் இல்லை, இல்லல்லாஹ் இருப்பதெல்லாம் இறைவனாகவே இருக்கிறது என்பதாகும்.*

*காற்றில் மிதக்கும் ஒரு புயல் சின்னம் தனக்கென ஒரு வடிவத்துடன் தனித்தன்மையுடன் கடலிலிருந்து கரை நோக்கி விரைந்து நகர்ந்து வருகிறது. ஆனால் அது உடைந்து சிதறியதும் அதனுள்ளிருந்த வெற்றிடம் அல்லது காற்று எங்கே என்று உங்களால் குறிப்பிட்டு காட்டமுடிவதில்லை. ஏனெனில் அது காற்றோடு காற்றாக கலந்துவிட்டது.*

*உடல் என்னும் கூண்டுக்குள் பூட்டிவைத்திருக்கும் உயிர் என்பதும் அப்படித்தான். அந்த உயிரென்ற ஆன்மாவை அகன்ற அகிலத்தின் படைகோலத்துடன் ஒன்றறக் கலந்திடச் செய்யும் நிலைதான் சமாதி நிலை. இதற்கு சாதனைகள் தேவையா? தொழுகையும், வணக்கமும், வழிபாடும் ஜெபதபமும், யோகமும் தேவையா? கழுத்தை வெட்டினால் காரியம் முடிந்துவிடும் எனலாம்.*

*ஆனால் மனிதன் கழுத்தை வெட்டி கொண்டால் உடலென்ற கூடு உடைந்து உயிர்வெளியேறிவிடும். ஆனால் அது சமாதி நிலை அல்ல, தற்கொலை. உடலை சிறிதளவும் சிதைக்காமல் வீட்டிலிருந்து வெளியில் நடப்பது போல நாம் வெளிவிடும் மூச்சோடு கலந்து பிரபஞ்சமெங்கும் விரிந்து நமக்குள் ஸ்திரமாவது தான் சமாதி நிலை. இந்த மகா சமாதி நிலையை திருக்குர்ஆன் அழகாக விவரிக்கிறது.*

*''உங்கள் இறைவனின் அத்தாட்சிகளை அகிலமெங்கும் நீங்கள் பார்க்கவில்லையா? உங்களுக்குள்ளும்?'' என்ற திருமறை வசனம் வினா எழுப்பி, மகா சமாதி நிலைக்கு வருமாறு உங்களை தூண்டுகிறது.*

ஆனால் இது எளிதான காரியமா? நினைத்த நேரமெல்லாம் இன்பத்தோடும் பரவசத்தோடும் கூடிய உணர்வுகளை உலகத்தை விட்டுவிட்டு சமாதி நிலைக்கு கொண்டுவர முடியுமா? முடியாதுதான். ஆனால் வாழ்க்கையென்பது இன்பமும் துன்பமும் மாறி மாறிவரும் இடம். இது இந்த உலகின் மாற்றமில்லாத இயல்பு. வெளி உலகை மாற்ற முனைந்தால் தோற்றுப் போவீர்கள்.

ஆனால் உள் உலகம் என்ற அக உலகை நோக்கி, உங்கள் மனஉலகை நோக்கி கவனத்தை திருப்புங்கள் ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டு, உங்கள் அகத்தை அமைதிப்படுத்தி உங்களுக்குள் சமாதானத்தை நிலைநாட்டி சமாதி நிலைக்கு உயருங்கள்.

உங்களை இறைவழியில் உயர்த்த சமாதிநிலைக்கு இட்டுச் செல்ல பிரபஞ்சம் முழுவதிலும் ஆண்டவன் அறிவை பரவச் செய்திருக்கிறான். பரந்த சமுத்திரத்தை பாருங்கள். அதன் அலைகள் கரையைத் வந்து வந்து தொட்ட வண்ணம் கடலுக்குள் திரும்பிச் செல்கின்றன. ஆனால் பரந்த சமுத்திரத்தின் நடுமையம் கனத்த கம்பீரத்தோடு இருந்து வருகிறது. தன்னை நோக்கி எத்தனை நதிகள் ஓடிவந்தாலும் சமுத்திரம் மாற்ற மடைவதில்லை.

தியானத்தால் உடலின் மிருகப் பண்புகள் பலவீனமடைகிறது. முழுமையான மனிதப் பண்பு பரிணமித்து அது தெய்வீகப் பண்பாக மலர்கிறது. உடலைச் சுற்றியுள்ள சூக்கும உடலின் தேஜஸ் ஒளிருகிறது, பார்ப்பவர்களுக்கு நல்லெண்ணமும் மரியாதையும் ஏற்படுகிறது.

எல்லா உயிர்களையும் தன்னுயிர் போலப் பாவித்து துயர்துடைக்கும் தயைகுணம் தலைதூக்குகிறது. தியானிக்க தொடங்குபவனிடம் சாத்வீக சாந்தகுணம் ஏற்படுகிறது. அவனுடைய குண்டலினி சக்கரம் விழிப்படைந்து உடலின் எல்லா நாடி நரம்புகளும் புத்துணர்வு உண்டாகிறது.

மாயை என்னும் ஆசையால் ஏற்பட்ட ஞான மறைவு என்னும் திரை நீங்குகிறது. எல்லாம் உணர்ந்த நிலை மெல்ல மெல்ல கைகூடுகிறது. உடல் மனஆற்றல் அதிகரிக்கிறது. தெய்வீக நிலை அவனில் குடிகொள்கிறது.

சாதகன் பேச்சை குறைத்து, மனதின் மௌனத்தில் ஆழவேண்டும். எது நிரந்தரம், எது தற்காலிகம் எது நல்லது எது கெட்டது என்று புத்தி கூறுவதை மனத்துக்குப் புகட்டி அதை அடக்கி வைக்கவேண்டும். இதுவே அடக்கம்.

தனியிடத்தில் ஒதுங்கி தலை, கழுத்து, முதுகுவளையாமல் நிமிர்ந்து அமர்ந்து, விழிகளை மூடி புருவ நடுவில் தோன்றும் இருளில் பார்வையை செலுத்தி மூச்சோட்டத்தை நிதானமாக ஓடச் செய்ய வேண்டும். சுஜூது செய்யுமிடத்தில் குருவின் தோற்றத்தை முன்னிருத்தி இறைவனை தியானிக்க வேண்டும்.

ஹக்கீகத்தான தத்துவ நிலையில் நபி (ஸல்) அவர்களே பரம்பொருளாகிய இறைவனாக இருப்பதாலும் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) இன்னும் கௌதுகள் குத்புகள், ஒலிமார்கள், மேலும் பிறமதத்தினர் அவரவர் அவதார, பரமார்த்த குருமார்களையும் சுழுமுனையில் நிலைநிறுத்தி பழகவேண்டும்.



சமாதி நிலைக்கு உங்களை இட்டு செல்லும் தியானம் திக்ரு இறைநாம ஜெபத்தால், ஃபிக்ரு இறைவனின் பண்புகளை சிந்தித்தல். அஃக்லாக்கல்லாஹ் அவன் குணங்களை உங்கள் குணமாக ஆக்குங்கள் என்ற மெய்ஞ்ஞான மஹ்ரிபத்தான அடிப்படையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஹீரா மலைகுகையில் ஆற்றிய தவம் ‘சுகுல அன்து’ என்று சொல்லப்படுகிறது.

பாயுமீராறு கலை பாயாது பக்குவம்
பண்ணி வைப்பது சமாதி
பழவினை இரக்கவும் சுழிமுனை திறக்கவும்
பழகி வருவது சமாதி!
ஓயாத கருவி கரணாதி ஓய்ந்தொழியவிழி
ஒளி கொழிப்பது சமாதி
ஒன்றிரண்டென்றுமனம் உளருதலையும்விட்டு
ஒன்று படுவது சமாதி!
ஈயெறும்பாதி களுக்கும் உடல் குழைந்துஉள்
எண்புருகு வது சமாதி
என்றருள் பிரானே அடியேனுமுமை நம்பினேன்
இதுவேளை ஆளுதற்கே!
மாயா மலர்கந்தம் உடையநீர் பின்தொடர
வள்ளலிரசூல் வருகவே
வளரும் அருள்நிறை குணங்குடி வாழும் எண்ணிருகண்
மணியே முஹ்யித்தீனே!

- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலி.

பன்னிரெண்டு கலையாக உடலுக்கு வெளியே பாய்ந்து செல்லும் மூச்சோட்டத்தோடு கலந்தோடும், தன்னுணர்வை தனக்குள் அடக்கி பக்குவப் படுவது சமாதி, காலகாலமாக சூட்சும சுழுமனையான இருபுருவ மத்தியெனும் சுஜூது செய்யும் இடத்தின் உட்புறத்தில் ஆன்ம உலகின் வாசல் திறக்க வழி பார்ப்பது சமாதி.

ஒய்வற்ற ஐம்புலன்களின் இச்சைகள் ஒடுங்கி ஆன்ம ஒளிபொங்குவது சமாதி, ஒன்று இரண்டு, நான் நீ, ஆண் பெண், வானம் பூமி என்று உலகில் தோற்றப்படும் இரட்டை என்னும் பேதங்களில் லயித்து விடாமல் எல்லாம் ஒன்றாகிய இறைவனே என்று சமமாக பாவிப்பது சமாதி.

ஈயெறும்பு முதலான அனைத்து உயிர்களின் மீதும் அன்பினால் எண்புருகி இரக்கம் கொள்வது சமாதி என்ற சமாதி நிலையை எனக்கு அருள்புரிந்து எம்பிரானாகிய முகம்மத் (ஸல்) என்னும் ஏகபராபர வள்ளளின் கருணைக்கு என்னை பாத்திரவானாக்குங்கள், மனம் மாயையில் விழாது காக்கும் ஞானமாம் வாச மலர்கந்தம் உடையவர்களான, என்னிருகண்மணியில் நின்றாடும் குருபிரானாகிய முஹ்யித்தீனே!

*ஆரம்ப கால சாதகன் இறைபக்தன், அழுதும் புலம்பியும் இறைவனை தேடுவான். ஞானம் உதயமாகிவிட்டவனோ நடுக்கடலின் பேரமைதியைப் போல தன்னுள்ளே தானாக நிலைத்துவிடுவான். அதன்பின் மௌனமே பேச்சாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஞானியின் இந்த நிலையை அழகிய வார்த்தைளில் 'ஞானம் வந்ததும் மனிதன் ஊமையாகிவிடுகிறான்' என்றார்கள்.*

*ஆத்ம நிஷ்டை கூடி அமர்ந்திருக்கும் யோகியும் சமுத்திரமும் ஒன்றுதான். அவனைச் சுற்றிலுமுள்ள உலகத்தின் கரைகளில் எத்தனை அலைகள் வந்து மோதினாலும் சரிதான், அந்த சாதகன் நடுக்கடல் போல ஆத்மானந்தத்திலேயே அமிழ்ந்திருப்பான்.*

பாபா சில நாட்கள் வரை அம்மலைப் பிரதேசத்தில் அலைந்து திரிந்துவிட்டு ஒரு மரத்தடியில் அமர்ந்தார்கள்.

மூன்று மாத காலம் அமர்ந்தது அமர்ந்த படியே யோக நிலையில் ஆழ்ந்து விட்ட அவர்கள்மீது கரையான்கள் படர்ந்து ஆடைகளிலும், தாடியிலும் ஜடா முடியிலும் மண்புற்றுகளை உண்டாக்கின. பாம்புகள் பகலும் இரவும் நெளிந்தன. கானகவிலங்குகள் தூரத்திலேயே நின்று அந்த கடுந்தவ யோகியைத் தரிசித்துவிட்டு ஓடின.

ஓச்சமற்ற அந்த ஞான வேள்வியின் முடிவில் ஒரு அதிகாலைப் பொழுதில் மீண்டும் அந்த தேவலோக ஹூரியின் பாடல் ஒன்று வந்து காதில் விழுந்தது :-

*பால வயதாலே என்கண்ணே என்தாயே*
*வஞ்சியரே அஞ்சுகமே*
*ஆல விழியாலே என்கண்ணே என்னம்மா*
*அகமதி ரசூலாளே*
*மாலைக் குளியாளே என்கண்ணே என்தாயே*
*வாழ்வெனக்கு யீந்தாயே*
*சோலைக் கிளியாளே என்கண்ணே என்னம்மா*
*சுகமெனக்கு தாராயோ?*
*கொல்லன் உலையடி யோ என்கண்ணே என்தாயே*
*கொதிக்குதடி என்வயிறு*
*நில்லென்று சொன்னாலும் என் கண்ணே என்னம்மா*
*நிலைநிறுத்த கூடுதில்லை*
*நில்லென்று சொல்லியல்லோ என்கண்ணே என்தாயே*
*நிலை நிறுத்த வல்லார்க்கு*
*கொல்லென்று வந்தயமன் என்கண்ணே என்னம்மா*
*குடியோடிப் போகானோ?*



*முத்து முகப்படியோ என்கண்ணே என்னம்மா*
*முச்சந்தி வீதியிலே*
*பத்துயிதழ் பரப்பி என்கண்ணே என்தாயே*
*பஞ்சணையின் மேலிருத்தி*
*அந்த விடந்தன்னிலே என்கண்ணே என்னம்மா*
*ஆருமில்லா வேளையிலே*
*குத்துவிளக்கேற்றி என்கண்ணே என்தாயே*
*கோலமிட்டு பாரேனோ?*

*உன்னை மறந்தல்லோ என்கண்ணே என்னம்மா*
*உள்ளுளுத்த மரமானேன்*
*தன்னை மறந்தாற்கு என்கண்ணே என்தாயே*
*தாய்தார மில்லையடி*
*தன்னை மறக்காமல் என்கண்ணே என்னம்மா*
*தன்னினைவும் மாறாமல்*
*உன்னை மறக்காமல் என்கண்ணே என்தாயே*
*ஒத்திருந்து வாழேனோ?*

*மாயப்பதிதனிலே என்கண்ணே என்னம்மா*
*கனத்த முதல் தான்வாங்கி*
*மாயா பதிபுகுந்து என்கண்ணே என்தாயே*
*வாழும் சரக்கெடுத்து*
*ஆயத்துரை தன்னிலே என்கண்ணே என்னம்மா*
*ஆராய்ந்துப் பார்க்கும் முன்னே*
*மாயச் சுருளோளை என்கண்ணே என்தாயே*
*மடிமேல் விழுந்ததென்ன?*

காதில் விழுந்த பாடலை கேட்டு கொண்டிருந்தபோது மடியில் ஏதோ மாங்கனி விழுந்தது போல் உணர்ந்து பாபா ஃபக்ருத்தீன் கண்விழித்தார்கள். தன் ஆடைகளின் மீதும் உடல் மீதும் உதிர்ந்திருந்த கரையான் மண்ணை உதறிக் கொண்டு தன்முன் காணப்படும் புதிய வானத்தை புதிய உலகை உற்று நோக்கினார்கள். பசுமை படர்ந்த மலைச் சரிவுகளும், நடுநடுவே ஒலித்தோடிய சிற்றருவிகளும் தெய்வீக லீலைகளைப் போல தோற்றமளித்தன.

அமர்ந்த இடத்திலிருந்து எழுந்து கொள்ள அவர்கள் முயற்சித்த போது மடியில் கிடந்த பனைஓலை ஒன்றை கண்டார்கள். அதன்மீது எழுத்தாணியால் எழுதப்பட்ட எழுத்துக்களைப் படித்தபோது பதறினார்கள்:- "ஸையத் ஹுசைன் ஃபாத்திமாவின் மைந்தர் ஃபக்ருத்தீன்! உமது முற்பிறவித் தந்தை முக்தி தரும் குருபிரான் பாபா தப்லே ஆலம் நத்தஹர் ஒலி உமது வரவுக்காக காத்திருக்கிறார்."

இந்த ஓலை இங்கு எப்படி வந்தது? யார் இங்கு வந்ததிருப்பது? அவர்கள் பார்வையின் முன் அண்மை காலமாக ஆன்ம கோலத்தில் காட்சிதந்த இளம் பெண் இப்போது நிஜ கோலமாக நின்றிருந்தார். கலந்தர்கள் சிலர் அந்நங்கையரின் அருகில் நின்றார்கள். மண்கூஜா நிறைந்த தண்ணீரையும், குவளை நிறைந்த பசும்பாலையும், தட்டத்தில் மா, வாழை, மாதுளை பழங்களையும் பாபாவின் முன் வைத்தார்கள் கலந்தர்கள்.

பாபா முகம் கழுவி பாலருந்தி பழங்களில் சிலவற்றை உண்ணும்வரை காத்திருந்த கலந்தர்கள் பாபாவிடம் ஸலாம் கூறிவிட்டு பேசினார்கள்.

"இம்மங்கையர் சோழநாட்டு இளவரசி குந்தவை ஆவார்கள். எங்கள் குருபிரானின் வளர்ப்பு மகள். பாபா இவர்களுக்கு இட்ட பெயர் மாமாஜிக்னி. நாங்கள் பாபா அவர்களின் தோழர்கள் தொண்டர்கள். பாபா தங்களை திரிசிரபுரத்திலுள்ள இருப்பிடத்துக்கு அழைத்து வரும்படி எங்களை அனுப்பி உள்ளார்கள்" என்றனர்.

ஃபக்ருத்தீன் இப்போது அவர்களை நிமிர்ந்து பார்த்தார்கள். அவர்கள் கொண்டு வந்த குதிரைகளின் மீது அமர்ந்து பயணித்தார்கள்.

முற்பிறவி தந்தையின் பரிவை முக்திதரும் குருவின் அழைப்பை புரிந்துகொண்ட பாபா ஃபக்ருத்தீன், தன் அருகாமையில் தேவதை போல வெள்ளைப் புரவியின் மீது பயணித்து வரும் இளவரசியின் முகத்தில் பூத்திருக்கும் புன்னகையை மட்டும் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

---

*அகமதிரகுலாளே: முகம்மத் என்ற கோலமயிலாக வரும் ஆன்மா எனும் மயிலே*

*நில்லென்று சொல்லி : மன ஓட்டத்தை நிறுத்தினால் ஆன்மீக வெற்றி கைகூடும்*

*பஞ்சணை : சுழுமுனை*



*புவியில் இவனொரு புயல்வேக*
*புலவன் என்றெனை புகழ்கின்றார்!*
*நபிமணி மீதும் அலீமீதும்*
*நான் கொண்டிருக்கும் பெரும்காதல்*
*கவியாய் வடிக்க கூடுமெனில்*
*கல்லும் மண்ணும் மனம்குளிரும்!*
*தவழும் வான மேகங்கள்*
*தரையில் வந்து வட்டமிடும்!*
*-ஷாஹ் நமா.*
*-ஸூஃபி கவிஞர் ஃபிர்தௌஸி.*

## தரீகா : தத்துவ தடாகம்!

"தூத் மலிதா, ஜுலே லால், மஸ்த் கலந்தர்" என்று நூற்று கணக்கான கலந்தர்கள் கூடி நின்று ஆர்ப்பரித்தனர். முப்பத்து மூன்று வயது நிறைந்த பாபா ஃபக்ருத்தீன் தமது முற்பிறவி தந்தையரான பாபா தப்லே ஆலம் பாதுஷாவின் அருளொழுகும் முகத்தைப் பார்த்தபடி அவர் தந்த பியாலாவை (ஞானப்பாலை) அருந்தி கொண்டிருந்தார்கள்.

ஷராஃப்ன் தஃகூரா எனப்படும் ஞானப்பால் பாபா ஃபக்ருத்தீனின் வயிற்றில் நுழைந்ததும் இதயம் குளிர்ந்தது. உணர்வுகள் காலதேச எல்லைகளைக் கடந்து விரிந்தன. கையிலிருந்த மண் பாத்திரத்தை தரைமீது வைத்துவிட்டு பாபா தப்லே ஆலம் அவர்களின் பாதத்தில் சரணாகதி என விழுந்தார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

கையில் நஃபீல் என்னும் துந்துபியை வைத்திருந்த கலந்தர்கள் வேக வேகமாக ஊதத் தொடங்கினர். குடிலின் வெளியே பலரால் மாமரத் தோப்பில் அமைந்திருந்த நகராக்கள் முழக்கப்பட்டு பேரொலியெழுந்தது. சில மணித்துளிகள் பாபா ஃபக்ருத்தீன் குருபிரானின் பாதங்களை முத்தமிட்டு விட்டு எழுந்தார்கள். "மஸ்த் கலந்தர்" என்று கூச்சலிட்டு கொண்டு கலந்தர்களுடன் சேர்ந்து கைகளிரண்டையும் உயர்த்தி கொண்டு தலையையும் கழுத்தையும் அசைத்து ஆடினார்கள்.

சிறு சிறு குன்றங்கள் சூழ்ந்த திருசிரபுரம் அன்று குதூகலம் கொண்டது. அதன் வடக்கெல்லையில் கொள்ளிடமும் காவிரியும் சல்லாபம் கொண்டு துள்ளி ஓடின. சிவ, வைஷ்ணவ

ஆலயங்களில் மணி ஓசை எழுந்து மக்களை பரவசப்படுத்தியது. வானில் குளிர் மேகங்கள் சூழ்ந்திருந்தன. முற்பகலின் சூரியனை கார்முகில் ஒன்று மூடியிருந்தது.

சோழர் தலைநகரம் உறையூரிலிருந்து வெகு சமீபத்தில் அமைந்த திருசிரபுரம் அன்று உவகை கொண்டிருந்ததற்கான ஒரே காரணம் லோகாயதமில்லாத ஒரு ஆன்மீக நிகழ்வுதான். சீஸ்தான் நாட்டின் முன்னாள் மன்னர் ஃபக்ருத்தீன் என்ற இளைஞரை, மலைக்குன்றின் அருகாமையில் அமைந்திருந்த பாபா தப்லே ஆலம் தங்கள் குடிலில் அமர்த்தி ஞானதீட்சையை அன்று வழங்கினார்கள் என்பது தான் அந்த நிகழ்வு என்று கூறவும் வேண்டுமோ?

* * * * * * *

*'சீனாமைசீனா' என்று குருசிஷ்ய உறவைப் பற்றி பாரசீக மொழியில் ஒரு பழமொழி உண்டு. இதயத்தோடு இதயம் உறவுகலந்து ஒன்றிவிடுவது என்பதுதான் பொருள். ''அவர்கள் அவனை நேசிக்கின்றார்கள். அல்லாஹ்வாகிய அவன் அவர்களை நேசிக்கின்றான்'' என்று திருக்குர்ஆனில் இறைவன் தன் அடியார்களின் இலக்கணத்தைப் பற்றி மிக அழகாக கூறுகிறான்.*

*இந்த இறை நேசத்தின் ஆரம்பம் தான் குரு சிஷ்ய நேசமாகும். இது பேரின்ப நேசம். ஞான தீட்சை என்பது உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திலும் உள்ளது. எனினும் இஸ்லாமிய சன்மார்க்கத்தில் தரீக்காவின் பாதையில் வித்தியாசமான சட்டதிட்டங்கள் உண்டு. கதம் போஸ்து - பாதம் பணிதல் என்ற பாரம்பரிய முறை - குருவின் பாதத்தை சிஷ்யன் அல்லது சிஷ்யை குருபிரானின் காலடிகளை பாதங்களை நமஷ்கரிப்பது என்பது தரீக்காவிலுள்ள தெளிவான சட்டம்.*

*தரீக்கா என்ற ஞானப்பாதையை நாடி வருபவர்களுக்கு அர்ஷ் ஆகிய அல்லாஹ்வின் இருக்கையின் வாசல் திறந்து கொள்கிறது. சன்மார்க்கத்தின் சட்டவியலின்படி அடியான் தன் ஆண்டவனை முன்னோக்கும் தலம் (கிப்லா) திருமக்கா நகரிலுள்ள புனித கஅபா என்னும் திருத்தலமாகும்.*

*எந்த ஆதம் என்ற ஆதி மனிதரை, இபுனு பஷரைப் படைத்து, அவருக்குள் தன் ஆன்மாவை புகுத்தி, வானவர்கள் அனைவரையும் அழைத்து 'நீங்கள் ஆதமுக்கு சிரம்பணிந்து சுஜூது செய்யுங்கள் - என்று ஆண்டவன் உத்தரவிட்டானோ அந்த ஆதம் (அலை) ஆகிய ஆண்டவனின் முதல் தூதரை அடக்கப்பட்டுள்ள இடம்தான் கஅபத்துல்லாஹ் என்ற இறைஇல்லமாகும் என்பது ஸூஃபி ஞானிகளின் துணிபு.*



*ஷரீஅத்தை சன்மார்க்க சட்டதிட்டங்களை ஒழுங்குடன் கடைப்பிடித்து நடக்கின்ற நல்லடியான் அல்லாஹ் ஆகிய தன் ஆண்டவனின் மீது தனக்கிருக்கின்ற தேட்டத்தின் காரணமாக தரீக்காவின் பாதையை நாடிவருகிறான். அங்கு புதிய அனுபவங்களை காண்கிறான். புதிய ஞானங்களைப் பெறுகிறான். அவனுடைய முன்னோக்கும் தலமாகிய கிப்லா இப்போது அவன் ஏற்று கொண்டிருக்கும் ஷெய்கு ஆகிய குருநாதரின் முகமாகும்.*

*அவர், அவன்முன் சையிதினா அலீ (கர்) அவர்கள் ''நான் பேசுகின்ற குர்ஆன் ஆக இருக்கிறேன்'' என்று கூறியது போல, ஆத்ம ஞானம் தேடி வந்துள்ள சீடனுக்கு அல்லது சிஷ்யைக்கு அருள் மறையாம் திருகுர்ஆனின் அகமிய விளக்கங்களை விவரித்து கூறும் ஆசானாக மட்டுமல்லாமல் அவர்களுக்கு வணக்கத்தின் திசையாகவும் எல்லையாகவும் அமர்ந்திருக்கிறார்.*

*''நான் ஞானத்தின் பட்டினம், அலீ அதன் வாயிலாவார்'' என்ற நபிமொழியின் விளக்கத்தை தன் குருநாதரின் வாசலில் சீடன் தரிசிக்கிறான். ''திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்துக்கும் ஏழு பொருள்களுண்டு அவற்றில் வெளிப்படையான (லாஹிரான) ஒரு பொருள் தவிர ஆறு அந்தரங்கமான (பாத்தினான) பொருள்களும் உண்டு'' என்று நபிமொழி சொல்வதின் தாத்பரியங்கள் குருவின் நாவிலிருந்து வெளிப்படுவது கண்டு அடியான் பிரமிப்படைகிறான்.*

*அழகிய சோலை போன்றது இந்த உலக வாழ்க்கை. பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக இந்த பூமியை காணும் மனிதன், குழந்தை பருவத்திலேயே தன் வசமிழந்து விடுகிறான். பூஞ்சோலையில் புகுந்த ஒரு வண்டு எப்படி மலர்களின் வாசனையால் ஈர்க்கப் படுகிறதோ அப்படி இவ்வுலக இன்பங்களால் ஈர்க்கப்படுகிறான். பூவின் இதழ்கள் வண்டை மூடிக்கொள்வது போல தேன் உறிஞ்சப் போன வண்டைப் போன்ற மனிதனை உலகம் மூடிக்கொள்கிறது.*

*வண்டுக்கு தன் மூக்கையும் நாக்கையும் அடக்க முடியாது. தேனின் மணத்திற்கும் சுவைக்கும் அது அடிமையாகி விடுகிறது. ஐம்புலன்களை அசைத்து இவ்வுலக இன்பங்களை அனுபவிக்கும் மனிதன் உலகுக்கு அடிமையாகி விடுகிறான். மனிதப் பிறவியை ஏன் எடுத்தோம் என்று சிந்திக்க நேரமில்லாமலேயே மனிதன் செத்து மடிந்துவிடுகிறான். மரணம் என்றால் என்ன என்பதை அவன் அறிய விரும்புவதில்லை. அந்த மரணத்தை வெற்றி கொள்ளும் மார்க்கத்தைப் பற்றியும் அவன் யோசிப்பதில்லை.*

*மரணமென்ற முடிவை வெற்றி கொண்டு மனிதனுக்கு மரணமில்லா முக்தி நிலையை அடைய வழிகாட்டும் மார்க்கம் தான் ஞான மார்க்கம் தரீக்கா என்பதாகும். ஒவ்வொரு மதத்திலும் தரீக்கா உண்டு ஞானவழி உண்டு.*

*வண்டுகள் விஷ மலர்களின் மூடிய இதழ்களுக்குள் மடிவது போல மனிதர்கள் மூடிய சிற்றின்ப இதழ்களுக்குள் மடிந்து விடுகிறார்கள். ஆனால் வண்டுகளில் வித்தியாசமான தேன்வண்டுகள், மலர்களில் அமர்ந்து தேனை உண்டுவிட்டு வெளியில் பறந்துவிடுகிறது.*

*ஞானி இவ்வுலகில் தான் வாழ தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு அதிலிருந்து விலகி விடுகிறான். தேன் வண்டுகளுக்கு இறைவன் வஹி என்னும் வேதவசனம் இறக்கியதாக கூறுவதின் பொருள் இதுதான். தரீக்காவை சார்ந்த மனிதனின் நிலை இதுதான். அவனை உலக கவர்ச்சியிலிருந்து குருவின் வார்த்தைகள் மெல்ல மெல்ல விடுதலை செய்கிறது. அவன் ஆன்ம விடுதலை ஆகிய முக்தி நிலையை நோக்கி விரைந்து பயணம் செய்கிறான்.*

* * * * * * *

குருவிடமிருந்து ஞானப்பாலை அருந்திய பாபா ஃபக்ருத்தீன் அவர்களின் ஐதுபு பேரானந்த நிலை மேலும் மேலும் அதிகரித்தது. நிமிடத்துக்கு நிமிடம் அவர்கள் தாவி தாவி துள்ளி துள்ளி குதித்து தாண்டவமாடினார்கள். பாபாவின் ஆவேசத்தைப் பார்த்த கலந்தர்கள் மெல்ல மெல்ல தங்களை கட்டுப்படுத்தி கொண்டு மௌனமானார்கள். பாபா ஃபக்ருத்தீன் பேரானந்த கூத்துக்கு அர்த்தம் புரியாமல் தவித்தார்கள்.

ஆனால் கலந்தர்களில் முதியவர் ஒருவர் பாபா காஜா ஹயாத் கலந்தர் அவர்களின் ஃபார்ஸி கஸல் ஒன்றை பாடத் தொடங்கினார். அந்தப் பாடலின் இனிமையையும் அர்த்தத்தையும் புரிந்துகொண்ட தோழர்களான கலந்தர்கள் வியப்பின் எல்லைக்கு தள்ளப்பட்டார்கள்.

*அகற்ஹேஷௌக்க மில்கேக்கா - சமஜ்கேறம்சு பாத்தாஜா*
*ஜலாக்கற் கூத் நுமாயீகூ - பசம்தன்பற் லகாத்தாஜா*
*பனாக்கற் இஷ்க்ககீ ஜாடூ - ஸபாக்கற்தில்கே ஹுஜுறேகூ*
*துயீக்கீ தூரல் கூலேக்கற் - முஸல்லேபற் உறாதாஜா*
*முஸல்லாபாட் தஸ்பீஹ்தோட் - கி தாபாங்டால் பாணீமே*
*பகட்ஹரத்மை பறஸ்தோவ்ங்கா - குலாம் உன்கா துகஹ்தாஜா*
*நமற்பூக்கா நறக்றோஸா - நஜாமஸ்ஜித் நகற்ஸஜிதா*
*ஒஷுகாபோட் தேலோட்டா - ஷறாபே ஷௌக்கு பீத்தாஜா*
*நஹோமுல்லா நஹோபஹ்மன் - துயீக்கூஸோடகற்தூஜா*
*ஹு கும்நானாக் கலந்தற்கா - அனல்ஹக்தூ பிகஹ்தாஜா*

*ஹே முரீதானவனே! இறைவன் அளவில் சேர்மானமாக நோக்கம் இருக்குமேயானால், அதற்குரிய அந்தரங்கம் இதுவே தான், அதாவது நீ என்ற எண்ணங்களையும், அனாநீயத்துகளையும், சர்வநாசஞ்செய்து எரித்துப்போடு, உன் பார்வையைத்திட்டமாக நோக்கினவனாக முடுகிக்கொள்.*



*இஷ்க்கு காதல் என்ற விளக்குமாற்றால் மனம்என்ற அறையில் உள்ள கெட்டகுணங்களான குப்பைகளைப் பெருக்கி வாரிக்கூட்டி அள்ளிவீசிவிடு. இரண்டு என்றதை எடுத்து எறிந்துவிடு. முசல்லாப் பாயைக்கிழித்துப் போட்டுவிடு. தஸ்பீஹ்மணியை அறுத்தெறிந்துவிடு.*

*கிதாபுகளை எல்லாம் கட்டிக் கொண்டுபோய்த் தண்ணீரில் போட்டுவிடு. முறுஷிதாகிய சற்குருவின் கையைப்பிடித்து அவரின் குலாம் அடிமை என்று சொல். பட்டினியாய் நோன்புவைக்காதே, பள்ளிவாசலில் போய் சஜ்தா செய்யாதே. உலூசெய்யப்பட்ட லோட்டாவை உடைத்து உருட்டிவிடு.*

*இஷ்க் இறைக்காதல் என்ற சருபத்தைக்குடி, முல்லா என்றும் காஜி என்றும் லெப்பை என்றும் ஆகாதே. பிராமணனாகாதே. நானாக் கலந்தறைப்போலே நீயும் ''நான் ஆண்டவன்'' என்று சொல்,*

*இந்தநாயகம் பாபா ஹயாத் கலந்தர் முன்சொல்லியிருக்கிற கருத்தை விளங்கி அறியும் சத்தியற்றவர்கள், பின்சொல்லி இருப்பதை விபரீதமாகப் பேசுவது தவறென எச்சரிக்கப்படுகிறது. அகமியக் கருத்துடையாரை அடுத்துத் தெரிந்துகொள்வீர்களாக.*
*ஹஸறத் காஜா ஹயாத்தே கலந்தர் ஔலியா அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பைத்துகள். ''பஸாதெ இஷ்க்கு'' என்ற கிதாபிலும் இந்த பைத்தைக் காணலாம்.*

**ஜனூல் ஆபிஃபீன்.**

பாபா ஃபக்ருத்தீன் தன் தந்தையார் சீஸ்தானின் அரசர் ஸையத் ஹுசைனிடமிருந்து ஞான கல்வியை கற்றிருக்கிறார்கள். ஷாபாஷ் கலந்தரிடமிருந்து ஞானப்பால் (பியாலா) அருந்தியிருக்கிறார்கள். பாபா அவர்களிடமிருந்து பிறப்பிலிருந்தே அரிய அற்புதங்கள் (கராமத்) வெளியாகி பார்ப்பவர்களை திகைப்படையச் செய்திருக்கிறது.

இறைநேச செல்வராக இலங்கும் பாபா ஃபக்ருத்தீனுக்கும் மீண்டும் ஒரு பைஅத் ஞான தீட்சை தேவையா? ஒரு குருவிடமிருந்து பியாலா(ஞானப்பால்) அருந்துவது அவசியமா? ஆம் என்று சொல்கிறது தரீக்கா.

மெய்ஞ்ஞானம் மஹ்ரிபா என்பது ஒரு மதுபானம். அதை அருந்த அருந்த அருந்தியவன் தன்னை மறந்து போவான். தன்னில் தனது தான் தன்மை காலத்தாலும் தூரத்தாலும் விரிவடைந்து கொண்டே போவதை காண்பான். இதற்கு எல்லையும் முடிவும் கிடையாது.

மெய்ஞ்ஞான மதுபானம் அருந்தியவன் தன் வீட்டில் இருந்தபடியே அவன் தோட்டத்திலுள்ள மலர்களைப் பறித்துவிடுவான். வானத்திலுள்ள நட்சத்திரங்களை தொட்டுவிடுவான். இன்றையை மட்டுமின்றி நேற்றைய நிகழ்வுகளையும் நாளைய உற்பவங்களையும் தரிசிப்பான்.

அவன் கண்களும் காதுகளும் விரிவடையும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "இறைவா என் பார்வைகளையும் கேள்விகளையும், என் இதய உணர்வுகளையும் உதிப்புகளையும் உனது ஜோதியைக் கொண்டு நிரப்பு" என்று கடைசிவரை வேண்டி கொண்டே இருந்தார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் தன்னை அலீ (ரலி) ஆகவும் தன் குருநாதர் பாபா தப்லே ஆலம் அவர்களை ரசூல் (ஸல்) அவர்களாகவும் கண்டு கொண்டு ஆர்ப்பரித்தார். "ஜுலே லால் மஸ்த் கலந்தர்" என்று மீண்டும் மீண்டும் உச்சஸ்தாயியில் சப்தமெழுப்பியதோடு இடையிடையே "யாஅலீ!யாஹைதர்! யாஅலீ!" என்றும் கூக்குரலிட்டார்கள்.

குடிலின் தென்புறமிருந்த குளக்கரைக்கு ஓடினார்கள். அந்த குளத்தை குருநாதர் தன்னை மூன்று முறை குளிக்கவைத்து மண் பெண் பொன்னாசை என்ற மூவாசைகளையும் தொடக்கறுத்து பரிசுத்தப்படுத்தியதின் அர்த்தத்தை புரிந்து கொண்டார்கள். குளத்தின் தென்புறம் அமைந்த நந்தவனத்தில் சென்று நின்று நடன மாடினார்கள்.

முற்பகல் தொடங்கி அந்தி மாலைவரை அங்குமிங்கும் ஆடி ஓடி குதித்து கொண்டிருந்த பாபா ஃபக்ருத்தீன் என்ற ஞானவானை கண்டு செய்வதறியாது திகைத்தார்கள் கலந்தர்கள். "அவரை அவருடைய போக்கிலேயே விட்டுவிடுங்கள்" பாபா தப்லே ஆலம் கூறிவிட்டு தங்கள் படுக்கையில் சாய்ந்து கொண்டார்கள்.

வெகு நேரத்துக்கு பின் பாபா ஃபக்ருத்தீனின் கண்களில் ஒரு காட்சி தோன்றியது. பத்து வயதும் நிரம்பாத ஒரு இளம் சிறுவர் எங்கிருந்தோ பறந்து வந்து தனது இரு தோள்களின் மீதும் அவரது பாதங்களால் மிதிப்பதையும் தன் ஆத்ம ஆவேசம் மெல்ல மெல்ல அடங்குவதையும் கண்டார்கள். களைப்படைந்த பாபா ஒரு மகிழ மரத்தின் நிழலில் படுத்து உறங்கிப் போனார்கள்.



இரவு வந்துவிட்டது. ஆனால் அது வெளிச்சமுள்ள இரவு. அமைதியான இரவு. பெருக்கெடுத்த ஆற்று வெள்ளம் ஓடிமறைந்தபின் அமைதி கொள்ளும் வெண் மணல் படுகையைப் போல பாபா ஃபக்ருத்தீனின் இதயத்தை அமைதி கொள்ளச் செய்த இரவு அது. பாபா தப்லே ஆலம் அவர்களின் குடிலும் தென்புறம் அமைந்த குளமும் நந்தவனமும் நிலா ஒளியில் குளித்து நிம்மதி கொண்டன.

ஆழ்ந்த உறக்கத்துக்குப் பின் விழித்தெழுந்த இளவல் தம் குருநாதரின் முன் வந்து அமர்ந்தார்கள். அவர்களின் பாதங்களை மீண்டும் தொட்டு தன்னிரு கரங்களிலும் ஒற்றிக் கொண்டார்கள். 'ஏதுமதுவான குரு நாதனிரு பாதமதில் இச்சையுற்றிருப்பது துதி புரிவது சமாதி' என்ற தரீக்காவின் இலக்கணத்துக்கு அமைய பணிவுடன் தன் குருநாதரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்கள். இளவல் முகத்தில் ஒரு கேள்வி இருந்தது.

பாபா தப்லே ஆலம் புன்னகைத்து விட்டு

"மைந்தரே நீர் பேசவேண்டாம். நீர் ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு நான் பதில் சொல்வதென்பது முறையல்ல. குருவின் இதயமும் சீடனின் இதயமும் ஒன்றோடு ஒன்று பொருந்திவிடுமானால் சீடனின் கேள்வி குருவுக்கு தானே புரிந்துவிடும்.

"மைந்தரே! நந்தவனத்தில் நின்று ஞான நடனம் புரிந்த உம் பார்வைக்கு முன் தோன்றிய அந்த பாலகர் யார்? என்று தானே கேட்கிறீர். அவர் முஹ்யித்தீன்! உமது பாட்டனார்களான முஹம்மத் (ஸல்), சையிதினா அலீ (ரலி) ஆகியோரின் பேரர். ஆம் அதனால் உமக்கும் அவர் பேரர்தான். அவர்தான் உலகில் தத்துவ ஞானத்தின் தலைவர்.

"அடுத்த நூற்றாண்டில் ஈரானிலுள்ள தப்ரிஸ்தானில் பிறக்கப் போகும் அவரின் மெய்ஞ்ஞான அந்தஸ்து பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்களான சஹாபாக்கள் ஆகியேருக்குப்பின் இறுதி கியாமத் நாள் வரை உலகில் தோன்றப் போகும் இறைநேசச் செல்வர்கள் அனைவரின் அந்தஸ்தையும் விட உன்னதமானதாகும்.

"அவர் தன்னுடைய காலத்தில் "எனது பாதங்கள் இறைநேசர்கள் அனைவரின் தோள்களின் மீதும் உண்டாகும்." என்று சங்கநாத மிடுவார். அவர் காலத்தில் வாழும் இறைநேசர்கள் மட்டுமல்ல, அவருக்கு முற்காலம் தோன்றிய,

“பிற்காலம் தோன்றும் அனைத்து ஒலி, குத்பு, கௌது என்ற தரத்திலுள்ள இறைநேசர்களும் தங்கள் தோள்களைத் தாழ்த்தி அவருடைய பாதத்தை ஏந்தி கொள்வார்கள்.

“அவரையே இன்று நீர் கண்டீர். அவரை உமது பாட்டனார் அலீ (ரலி) அவர்கள் பதுரு யுத்த களத்தில் ஒரு இக்கட்டான தருணத்தில் தோன்றி தன்னை காத்திட கண்டார்கள்.

“அதுமட்டுமல்ல மிஃராஜ் என்ற இறை தரிசனத்துக்காக அர்சாகிய இறை இருக்கையை அடைந்த நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் அர்சின் படிகளில் தயங்கியதாகவும் அந்தபாலகர் முஹ்யித்தீன் அங்கு தோன்றி தன் கரம் கொண்டு நபி அவர்களின் தோள்களை தாங்கி ஸ்திரப்படுத்தியதாகவும் கூட ஒரு தகவல் உண்டு.”

குருநாதரின் வார்த்தைகளைக் கேட்டு வியப்பிலாழ்ந்த பாபா ஃபக்ருத்தீன் ஒலி நாயகம் தன் இரு தோள்களையும் கைகளையும் தாழ்த்தி பேரரான மோன முஹ்யித்தீனின் உன்னதத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

---

**மற்றொரு மாற்று தகவல் :-**

*முரீது நாடிவந்த முடிதுறந்த மன்னர் ஃபக்ருத்தீனை பாபா தப்லே ஆலம் பாதுஷா இலங்கை சென்று ஆஷா நிகுவான் என்ற மெய்ஞ்ஞானிகளின் கிணற்றில் குளித்து பரிசுத்தமாகி வரும்படி பணித்தார்கள். இளைஞரின் இடுப்பில் பாதுஷாவின் உத்தரவு கொண்டு வார்கச்சை ஒன்று செல்வி மாமாஜிக்னி அவர்களால் கட்டப்பட்டது.*

*பல்வேறு சிரமங்களைத் தாண்டி ஷா ஃபக்ருத்தீன் ஆஷாநிகுவான் கிணற்றை அடையும்போது காட்டேரி ஒன்று எதிர்ப்பட்டு அவர்களை தடுத்தது. அதனுடன் போரிட்டு கொன்றார்கள். கிணற்றின் வாயில் கூர்மையான வாட்கள் சுழன்று கொண்டிருந்தன. அதனை பொருட்படுத்தாமல் கிணற்றுக்குள் குதித்து குளித்து வெளிவந்தார்கள்.*

*தண்ணீர் துளிகளாக இரத்தின கற்கள் தன் உடலின் மீது ஒட்டிகொண்டிருப்பதை துடைத்தெறிந்துவிட்டு திருசிரபுரம் திரும்பினார்கள். பாபா தப்லே ஆலம் முன்னிலையில் செல்வி மாமாஜிக்னி இடுப்பில் கட்டிய வார்கச்சையை அவிழ்த்தபோது ஒரு மாணிக்க கல் அதிலிருந்து விழுந்தது.*

*பாபா தப்லே ஆலம் ஷா ஃபக்ருத்தீனிடம் இது உம்மனதில் எஞ்சியிருந்த உலக ஆசையின் அடையாளம் என்று கூறி, அதை தஞ்சை அரசனுக்கு அனுப்பிவைத்து விட்டு, பாபா ஃபக்ருத்தீனுக்கு ஞான உபதேசம் செய்து தனது சீடராகவும் கலிஃபாகவும் ஆக்கி கொண்டார்கள்.*



### *கராமத் : அற்புதங்கள் : குறிப்பு 2*

*பாபா ஃபக்ருத்தீன் அவர்கள் குருநாதர் தப்லே ஆலம் பாதுஷா அவர்களின் உத்தரவுப் படி இலங்கை சென்ற பாதையில் மேலும் பல அற்புதங்கள் பாபாவிடமிருந்து வெளிப்பட்டதாக குறிப்புகளில் காணப்படுகின்றது.*

*அமாவாசை இரவில் தோன்றிய அழகு நிலா.*

*செஞ்சி நகரருகில் பரோபதி மலைச் சாரல் கிராமத்தில் பாபா ஒரு குளத்தில் குளித்ததைப் பார்த்து பிராமணர்கள் புனிதமான அமாவாசை இரவில் குளம் அசுத்தமாகிவிட்டதாக ஆத்திரப்பட்டனர். பாபா, அது அமாவாசை இரவல்ல, பௌர்ணமி இரவு என்று கூறி முழுநிலா வானில் தோன்றும்படி செய்தார்கள்.*

*சபதத்தில் தோற்ற பிராமணர்கள் தலையில் மொட்டை போட்டதல்லாமல், பாபாவின் கைகளைப் பிடித்து அவர்களின் சீடர்கள் ஆனார்கள்.*

*உப்பாக மாறிய சர்க்கரை.*

*பாபாவும் தோழர்களும் சென்ற பாதையில் வியாபாரி ஒருவன் சர்க்கரை சாக்குமூட்டைகளில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தான்.*

*பாபா, அந்த வியாபாரியிடம் விசாரிக்க, வியாபாரி மூட்டைகளில் உப்பு இருப்பதாக கூறினான். அடுத்த நிமிடமே மூட்டைகள் உப்பு மூட்டைகளாகிவிட்டன. மனம் வருந்தி மன்னிப்பு கேட்ட வியாபாரிக்கு இரங்கி உப்பு மூட்டைகளை சர்க்கரை மூட்டைகளாக மாற்றி அற்புதம் புரிந்தனர் பாபா.*

*செத்த யானை பிழைத்தது.*

*இலங்கை செல்லும் வழியில் பாபா, தனது 7707 சீடர்களுடன் ஜம்புதீப் என்னும் ஜம்பு தீவு, பல்லா தீவு, ஷாதீவு, குந்தா தீவு, கஞ்சு தீவு, லஷ்கர் தீவு ஆகிய இடங்களுக்கு சென்றார்கள்.*

*லஷ்கர் தீவில் வயிற்று வலியால் செத்து விழுந்த அரசனின் யானையை, அரசனின் வேண்டுதலுக்கு இணங்க உயிரூட்டினார்கள். ஜம்பம் பேசி, மானின் தோலில் வானில் பறந்த மந்திரவாதி ஜோகி என்ற யோகியை, பாபா தனது செருப்பை பறக்கச் செய்து அவனை அடித்து தரையில் வீழ்த்தினார்கள்.*

*நரமாமிசம் தின்னும் அரக்கன்.*

*ஜம்புதீபத்தில் தினந்தோறும் ஒரு மனிதனை கொன்று தின்று வந்த அரக்கனை, போரிட்டு அவனை கொன்று ஊர்மக்களை காப்பாற்றினார்கள்.*

*பாரசீக முகத்தழகி*
*பனிஉதிர் சீன உதட்டழகி*
*மார்பு பூத்த அரபழகி*
*மத்திய தரைக்கடல் கண்ணழகி*
*மூரின கதலி தொடையழகி*
*மூவா மேலை சிலையழகி*
*பாரத நாட்டின் கற்பழகி!*
*பார்இவளே என் பராபரியாள்!*
*- ஸூஃபி ஸச்சல் ஸர்மத்*

## மனோன்மனித் தாயார் : பராபரி

சோழர் குல வேந்தன் இராஜராஜ சோழன் கி.பி 1014ல் மறைந்ததும், அவனது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் பட்டத்துக்கு வந்தான். இவனது காலத்தில் பாண்டிய சேர நாடுகள் மட்டுமின்றி இலங்கை முழுவதும் சோழராட்சிக்குள் கொண்டுவரப்பட்டன.

சோழ மன்னர்களில் பெரும்பாலோர் சைவ சமயத்தை தழுவியிருந்தனர். மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற பழமொழி போல மக்களில் பெரும்பாலானோர் சைவ சமயத்தை தழுவி வாழ்ந்தனர். வைணவ சமயமும் சிறப்புற்றிருந்தது. தஞ்சையில் இராஜராஜன் கட்டிய பெருவுடையார் கோயிலை போல பிரம்மாண்டமான கோயிவொன்றை இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டுவித்தான்.

இக்கால சைவ சமயம், கடவுள் ஒருவர் உண்டு, உயிருக்கு அழிவில்லை, உயிர் தன்னைத் தான் அறியும் போது இறைவனையே அறிகிறது. உயிர் தன்னைத் தானே அறிய முடியாமல் தடை செய்வது அறியாமை என்னும் இருள் என்றும் கொள்கைகளை கொண்டிருந்தது.

இலக்கியங்கள் போற்றப் பெற்றன. கம்பரின் இராமயணம், புகழேந்தியின் நளவெண்பா போன்ற நூல்களுடன் ஒட்டக் கூத்தரின் அரச காவியங்களும் புகழ்ந்து பாடப்பட்டன.

சிவன் கோயிலுக்கு வழங்கப்படும் தான நிலம் தேவதானம். திருமால் கோயிலுக்கு வழங்குவது திருவிடையாட்டம் எனப்பட்டது. சமண புத்த மடங்களுக்கான தானம் பள்ளிச் சந்தம் என்று அழைக்கப்பட்டது. பிராமணர்கள் சமுதாயத்தில் மதிப்புடன் வாழ்ந்தார்கள். என்றாலும்



இராஜராஜனைப் போல இராஜேந்திரனும் மனித நேயம் உடையவனாகவும் சாதிமத பேத எதிர்ப்புடையவனாவும் காணப்பட்டான்.

இராஜராஜனின் தமக்கையார் குந்தவை பிராட்டியார் எல்லா சமய நெறியார்களையும் மதித்ததோடு எல்லா மதகோயில்களுக்கும் மடங்களுக்கும் நிலம், பொருள் முதலான தானங்களை வழங்கினார்.

கணவனை இழந்து விதவையான குந்தவை, தாதா தப்லே ஆலம் பாதுஷாவின் நிழலில் வந்து ஒதுங்கியதும் சோழ நாட்டின் பல திசைகளிலும் இஸ்லாமும், ஸூஃபித்துவமும் தழைக்கத் தொடங்கியது.

பாபா ஃபக்ருத்தீன், தப்லே ஆலம் பாதுஷாவின் குடிலில் அந்த காலகட்டத்தில்தான் பதினோறு ஆண்டு காலம் தங்கி கலந்தர்களுடன் கலந்து தவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஞானப்பாதையின் பல்வேறு அம்சங்களை குருபிரானிடமிருந்து கற்றார்கள். பாபா பாதுஷாவின் தவச் சாலையிலிருந்து விடைபெறும் காலம் நெருங்கியது.

அது தமிழ்ப் புத்தாண்டு தினம். கோடையின் வரவு நாள் என்றாலும் அன்றைய தினம் வானில் கார்மேகங்கள் அங்குமிங்குமாக அலைந்தன. காவிரியாற்றிலும் கொள்ளிடத்திலும் நதிநீர் கரைபுரண்டு ஓடாவிட்டாலும் இருகரைகளையும் தொட்டு தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது.

பூஞ்சிதறலாக அங்கொன்றும் இங்கொன்றும் மழைத்தூறல் தூறிக் கொண்டிருந்த போது, பூமி விழித்தும் புலரி விழியாத வானத்தின் கீழ் இருள் சிதறி கிடந்தது. சிறிது நேரத்தில் உலகில் வெளிவெள்ளம் புகப்போகிறது என்று எண்ணிய தருணத்தில் எங்கிருந்தோ வானத்தில் கனத்த கருமேகங்கள் வந்து கவிழ்ந்தன.

சிலுசிலு வென்று வீசிக்கொண்டிருந்த காற்று திடீரென சீற்றமடைந்தது. தங்க உருக்காய் வீசிய மின்னல்கள் கரிய வானில் நீண்டு ஓடிச் சரிந்து மறைந்தவாரிருந்தன. கோடையிடிகள் கொட்டி முழக்கத் தொடங்கின. பாதுஷா தப்லே ஆலம் அவர்களின் குடிலுக்குள் ஞான இளவரசர் பாபா ஃபக்ருத்தீனும், சோழர் குல இளவரசி குந்தவையார் என்னும் மங்கை நல்லார் மாமஜிக்னியும் தனியே அமர்ந்திருந்தனர்.

“இன்று நான் பாபா அவர்களின் உத்தரவுகொண்டு திரிசிரபுரத்தை விட்டு புறப்படுகிறேன், வடதிசை நோக்கி நான் பயணப்பட வேண்டுமென்றும், என்னுடன் சில கலந்தர்கள்

உடன் வருவார்களென்றும் பாபா பணித்திருக்கிறார்கள். நான் இங்கு தங்கிய நாட்களில் தாய்போல கவனித்து எனக்கு பசிக்கு உணவும் தாகத்துக்கு தண்ணீரும் தந்தீர்கள்.''

மௌனமாக பாபாவின் வார்த்தைகளை மங்கை நல்லார் கேட்டு கொண்டிருந்தார்கள். பிறகு பரிவுடன் கூறினார், ''போகுமிடங்களில் பாபா அவர்கள் தங்களிடம் தந்துள்ள பல்துலக்கும் குச்சியை இரவில் ஊன்றத் தவறாதீர்கள். பொழுதுவிடிந்து பார்க்கும் போது எங்கு அந்த குச்சி பசுமை தளிர்விடுகிறதோ அங்கு நிலையாகத் தங்கிவிடுங்கள்.''

செம்மண் செந்நிற உடையணிந்து அன்றைக்கு முதல்நாள் பாபா தன் சிரசின் மீது உடுத்திய கருப்பு தலைபாகையையும், கிலாஃபத் என்னும் கலந்தரியா மரபின் பிரதிநிதித்துவ நிர்வாகப் பொறுப்பையும், சுமந்து கொண்டு அமர்ந்திருந்த பாபா ஃபக்ருத்தீனின் கம்பீரமான தோற்றம், உண்மையில் இவர்தான் சோழப் பேரரசரோ என்ற எண்ணத்தை குந்தவை நாச்சியாரின் எண்ணத்தில் தோற்றுவித்தது.

படுக்கை அறையிலிருந்து எழுந்து வெளியில் வந்த பாபா தப்லே ஆலம் அருகில் வரவும், பாபா ஃபக்ருத்தீனும் மங்கையர் மாமாஜிக்னியும் அவர்களின் பாதங்களில் பணிந்து முத்தமிட்டார்கள்.

ஆசீர்வதித்த பாபா தப்லே ஆலம் ''எனதருமை பிள்ளைகளே உடலால் நான் ஈன்றெடுக்கா விடினும் நீங்கள் என்னுயிரின் பிள்ளைகள். ஆன்மீக சாம்ராஜ்யத்தில் உன்னதப் பதவிகள் உங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்'' என்றார்கள்.

பிறகு, ''மைந்தரே நீர் கராமத்து என்னும் தெய்வீக அற்புதங்கள் வெளிப்படுபவராக இருந்தாலும் என்னை தேடிவந்து முறைப்படியான ஞானமார்க்கப் பயிற்சிகளை ஏற்றுக் கொண்டீர், அற்புதங்கள் வெளிப்படுவதற்கும், மனிதன் முக்தி நிலை நோக்கி முன்னேறுவதற்கும் நேரிடையான சம்பந்தம் எதுவுமில்லை.

''இன்று நீர், ஃபனா ஃபிஷெய்கு குருவின் உள்ளமையில் சீடன் தன் தான் தன்மையை நாஸ்தியாக்குதல், என்ற பாதையில் நடந்ததை நிறைவு செய்து கொண்டீர். இன்று முதல் உம்முடைய சொந்த தோற்றத்தை உம்முடைய ஆன்மாவின் (ரூஹின்) தோற்றமாக்கி அதை இறைதூதரின் தோற்றமாக கொண்டு ஆராதித்து வாரும்.



''எப்படி குருபிரானின் கட்டளைகளை சன்மார்க்க கட்டளைகளாக ஏற்று சீடன் செயல் பட்டு தன்னை குருவின் உள்மையில் நாஸ்தியாக்குகிறானோ, அதுபோல அவன் இரசூலிடமிருந்து உள்ளுதிப்பாக (இல்ஹாமாக) கிடைக்கும் உத்தரவுகளை சட்டமாக கொள்ளவேண்டும்.

''இந்தப் பாதையில் நீர் முன்னேறி செல்லும் போது, இறைவனாகிய ஆதிபரம் பொருளின் ஜோதி உம்முடைய தோற்றத்தில் ஆனால் பெண்ணுருவில் உம்முன் தோன்றும்.

''ஞானாந்திகள் அப்படி பெண்ணுருவில் தோன்றும் பராபரஜோதியை மணோண்மணி என்று அழைப்பார்கள். அது சாதகனின் சட்டசம்மதமான (ஹலால் ஆன) மனைவியின் தோற்றமாகவோ அல்லது மானசீக காதலியின் தோற்றமாகவோ கூட இருக்கலாம். இது மஹ்ரிபா என்னும் ஞானமார்க்கத்தின் உன்னத நிலை ஃபனா ஃபில்லாஹ் என்பதின் தாத்பர்யம்'' என்றார்கள்.

அன்று பிற்பகலில் இருபது கலந்தர்களுடன் பயணம் புறப்பட்ட பாபா ஃபக்ருத்தீனை, பாபா தப்லே ஆலம் அவர்களுக்கருகில் நின்றிருந்த மங்கையர் மாமாஜிக்கனி கண்களிரண்டும் கலங்கி மழையெனப் பொழிய வழியனுப்பி வைத்தார்கள்.

பல மாதகாலம் பரிகளில் பயணித்து பல்லவ நாட்டின் பெனுகொண்டா நகரையடைந்து அங்கு அரைகுறையாக கட்டப்பட்டு நின்றிருந்த சிவன்கோயில் பிரகாரத்தில் தங்கினார்கள்.

அது பல்லவ நாடென்றாலும் சில நூற்றாண்டு காலமாக தாழைக்காட்டு மேலை கங்கர்கள் என்ற அரசமரபினர் ஆண்டுவந்தார்கள். கங்க நாட்டின் அரசனான திருபுருஷனின் காலத்தில் கங்கர்களின் கங்கநாட்டு தலைநகரம் பெங்களூருவுக்கு அருகிலுள்ள மண்ணை என்ற நகருக்கு மாற்றப்பட்டது. கங்கர்களின் அரசு ஸ்ரீராஜ்ஜியம் என்று அழைக்கப்பட்டது.

<u>*வேறு தகவல்.*</u>

*தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அவர்களிடம் முரீது பெற்று கொண்ட பாபா ஃபக்ருத்தீன் தன் குருநாதரின் ஆஸ்தானிலேயே (குருபீடம்) 24 ஆண்டுகள் தங்கி குருநாதருக்கு சேவை செய்ததாக வேறொரு குறிப்பில் காணப்படுகிறது. அதன்பிறகு இலங்கை சென்று திரும்பிய பின் கிலாஃபத் கொடுக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.*

கி.பி. 1024 ம் ஆண்டு கங்க மன்னன் இராக்கசகங்கனை, தஞ்சை மன்னன் முதலாம் இராஜேந்திர சோழன் படையெடுத்து வந்து வெற்றிகொண்டான். இராக்கசகங்கனின் மீது தனது மேலாட்சியை நிறுவினான். தான் போர்மேல் சென்று வெற்றிபெறுமிடங்களிலெல்லாம் சிவபெருமானுக்கு கோவிலெழுப்பும் பழக்கம் கொண்ட இராசேந்திர சோழன் பெனுகொண்டாவில் கோயில் எழுப்ப உத்தரவிட்டான். பணிகள் தொடங்கின.

அங்கிருந்து இராசேந்திர சோழன் படைகளுடன் புறப்படும் தருவாயில்தான் பாபா ஃபக்ருத்தீன் தோழர்களுடன் கலந்தர்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். சிவன்கோயிலாக எழுப்பப்பட்டு வரும் கட்டிடத்தின் முன்புற மண்டபத்தில் இராத்தங்கி காலையில் விழித்தெழுந்த பாபா அவர்களின் கண்ணெதிரில்,இரவு ஊன்றிவைத்த மிஸ்வாக்கு குச்சி உயிர்த்ததும் மட்டுமல்லாமல் தளிர்விட்டு ஐந்தடிஉயர பசுமரமாகத் தழைத்து நின்றது.

பாபா, விடியாவிடியலில் கருக்கிருட்டில் வீசும் குளிர்காற்றில் மின்னி மினுககும் நட்சத்திரங்களிடையே பொலிவுடன் பொழியும் நிலவின் ஒளியில் ஆச்சரியத்தோடு அந்த அதிசய மரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, உறங்கிப்போய் மடத்தின் திண்ணையில் படுத்திருந்தார்கள் கலந்தர்கள்.

ஆளரவமற்ற அமானுஷ்ய தனிமையில் நின்று கொண்டு அந்த பசுந்தளிர் மரத்தை மீண்டும் மீண்டும் பார்த்தார்கள். சரத் காலத்தின் நிலவு ஒளி மேலும் மேலும் அதிகரித்தது. குளிர் காற்று குப்பென்று வீசியது. எதிரில் தெரியும் கானகப் பாதையில் மெல்ல மிதந்துவரும் அந்தப் பொன்னிறப் பெண்ணுருவம் யாருடையது?

கவர்ச்சி நிறைந்த அந்த கருக்கிருட்டில் தான் காண்பது நனவ கனவா அல்லது நினைவின் அடி ஆழத்திலிருந்து எழுந்த மாயத் தோற்றமா. புரிந்துகொள்ள முடியாது நின்றிருந்த பாபாவின் செவிகளில் அப்பெண்ணின் கால்சலங்கை சங்கீதமாய் வந்து விழுந்தது. கஷ்மீரின் பள்ளத்தாக்குகளில் தொடங்கி தொடர்ந்து பீதி கிளப்பி வரும் பாடல் வரிகள், இப்போது அப்பெண்ணின் வாயிலிருந்து ஒலித்தது.



*கற்றாரும் மற்றாரும் என் கண்ணே என்னம்மா*
*சொன்ன முறையதுபோல்*
*உற்றாரும் பெற்றாரும் என் கண்ணே என்தாயே*
*உன்னை மறைத்ததுபோல்*
*உற்றார் பெற்றாருடன் என்கண்ணே என்னம்மா*
*ஊரைவிட்டுப் போகையிலே*
*சுற்றாருமில்லாமல் என்கண்ணே என்தாயே*
*துணையிழந்து நிக்கிறண்டி!*
*சித்திரத்தை கொத்தியல்லோ என்கண்ணே என்னம்மா*
*சிலையாய் நிறுத்திவைத்தேன்*
*உத்திரத்தை கேளாமல் என்கண்ணே என்தாயே*
*ஊரம்பல மானேனடி*
*உத்திரத்தை கேளாமல் என்கண்ணே என்னமா*
*ஊரம்பல மானதனால்*
*சித்திரமும் வேறாகும் என்கண்ணே என்தாயே*
*சிலையும் கலையாகும்!*

சிலையாய் சித்திரமாய் தன்முன் நின்று பாடுவது யார்? சோழர் குலக்கொடி குந்தவையா? அல்லது குந்தவையின் தோற்றத்தில் வரும் சுவர்க்கத்தின் ஹூரியா? மோகினியா?

தனக்கும் மங்கையர் மாமாஜிக்னிக்கும் இடையில் உள்ள உறவின் அர்த்தமென்ன? நேசத்தின் பொருளென்ன? நாங்களிருவரும் பாபா தப்லே ஆலம் அவர்கள் உயிரால் ஈன்றெடுத்த இரட்டைப் பிள்ளைகளா? துறவியான தனக்கு ஏனிந்த சோதனை? அதன் விளக்கம் என்ன?

அந்த காட்சியும் பாடலும் விரசமில்லாமல் தொடர்ந்தது :-

*வேதவழிகாட்டி என்கண்ணே என்னம்மா*
*மெய்ஞ்ஞானந்தான் காட்டி*
*சோதியொளிக்காட்டி என்கண்ணே என்தாயே*
*தூய தலந்தான் காட்டி*
*நீதிமுறை காட்டி என்கண்ணே என்னம்மா*
*நெஞ்சு நிலைதான் காட்டி*
*ஆதிநிலை காட்டி என்கண்ணே என்தாயே*
*ஆண்டடிமை கொள்வாயோ?*

பொழுது விடிந்தது. பாபா தப்லே ஆலம் கொடுத்த மிஸ்வாக்கு துளிர்விட்டிருப்பதை கண் கூடாக கண்ட பாபாவும், கலந்தர்களும் பெனுகொண்டா என்ற அந்த சிற்றூரில் நிரந்தரமாக தங்குவதென்று முடிவெடுத்தார்கள்.

*பாட்டுடன் பறந்து வந்த அந்த பாவை உருவம் தனக்குள் வந்து தன் ஆன்மாவின் கோலமாய் அமரக் கண்டார்கள் பாபா ஃபக்ருத்தீன். தன் குருநாதர் குறிப்பிட்டு கூறிய தன்னிலை இப்போது ஃபனா ஃபில்லாஹ் என்னும் அல்லாஹ் என்னும் மணோண்மணியாகிய ஆதிப் பரம் பரம்பொருளில் நாஸ்தியாகும் நிலையா?*

*மாயா மயக்கருத்து மயக்காதெனையீன்ற*
*தாயை மணமுடித்து தருவாய் நிராமயமே*

*- குணங்குடி மஸ்தான் சாஹிபு*



*இன்னும் எத்தனை காலங்கள்*
*என்னை வீணே அலைக்கழிப்பாய்*
*முன்னும் பின்னும் உன்னோடு*
*முழுவதுமாக இணைந்துவிட*
*என்ன செய்தால் சரியென்பாய்?*
*எப்பொழுது விடை சொல்வாயோ*
*அன்பே என்னை புரிந்துகொள்!*
*அன்னமே மயிலே பராபரியே*
*-மவுலானா ரூமி*

## செத்தமாடு பிழைத்தது!

“சனிபோயின ஆவு ப்ரத்திகிந்தி!” (“செத்தமாடு பிழைத்தது!” )சிறுவர்கள் கூச்சலிட்டார்கள். செத்த மாட்டின் கொம்பையும் கால்களையும் பிரம்பால் தட்டி உயிரோடு எழுப்பிவிட்டார் சிவாலயத்தில் தங்கியிருக்கும் “பாபையா” என்று பரபரப்பாக எங்கும் பேசப்பட்டது.

அந்த அதிகாலைப் பொழுதில் பெனுகொண்டாவின் கோயில் வீதிகள் குடதிசை வானில் தங்கப் பாளம் உருக்கி கொண்டிருக்க, குணதிசை விண்ணில் நீலவண்ணப் பெருவெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. தென்திசை துரியத்தில் முத்துப் பொதிகள் அம்பாரமிட்டு குவிய, வடதிசை வான்பரப்பில் கரிய பாறைகள் உருண்டுகொண்டிருந்தன.

சமணர்கள் நிறைந்த பெனுகொண்டா நகரத்தின் பச்சை பரஸ்வநாத சுவாமி கோயிலிலிருந்து முற்பகல் வழிபாட்டை முடித்துக் கொண்டு நூற்றுகணக்கில் பெண் துறவிகளான கௌந்திகள், பூக்கூடையும் கையுமாக கந்தர்வலோகத்து கன்னிகைகளைப் போல அழகு கொழிக்க அன்னநடை நடந்து நகரின் வீதிகளை அலங்கரித்தனர்.

யோக நரசிம்ம சாமி கோயில், காசி விஸ்வநாதசாமி கோயில், இராமர் கோயில் ஆகிய பெருங்கோயில்களில் வைஷ்ணவ, சைவ சமயம் சார்ந்த நகர மக்கள் நகரத்தைப் பொறுத்தவரை சிறுபான்மையினர் என்றாலும் ஒவ்வொரு கோயிலிலும் ஆராதனைகள் விசேஷமாகவே நடைபெற்றுவந்தன.

பெரியமலை என்று பொருள் படும் பெனுகொண்டா மலையடிவார நகரத்தில் மட்டுமன்றி அதன் குன்றுகளிலும் 365 கோயில்கள் அமைந்திருந்தன. வருடத்தின் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு கோயிலில் உற்சாகமாக உற்சவம் நடந்தது. ஹிந்து, பௌத்த, சமண மதத்தினர் கூடி வாழ்ந்த அந்த நகரம் புராதன புனித நகரமென்று தெலுங்கு மக்கள் கருதிவந்தனர்.

இராக்கசகங்கனின் படையை வென்று தன் கொடியை நாட்டிய சோழமன்னன் முதலாம் இராஜேந்திரன், கோயில் பிரகாரத்தில் தங்கியிருந்த பாபா அவர்களை, அங்கேயே தங்கி கொள்ள அனுமதிக்குமாறு இராக்கசகங்கனுக்கு உத்தரவிட்டான்.

பாபா அவர்களின் முகத்தில் பொங்கிய தெய்வீக களையையும், ஏழை எளியவர்களிடம் கலந்தர்களின் மனிதாபிமான அணுகுமுறைகளையும் கண்டு நெகிழ்ந்த பெனுகொண்டா நகர மக்கள், குழந்தைகளுக்காகவும் நோயாளிகளுக்காகவும் மந்திரிக்க அவர்களை நாடி வந்தார்கள்.

மெல்ல மெல்ல, உடல் மன உபாதைகளுக்காக பாபாவும் கலந்தர்களும் செய்த கைவைத்தியமும் மாந்திரீகமும் மக்களை மகிழச் செய்தது. பிரகாரத்திலிருந்து அதிகாலையிலும் அந்திமாலையிலும் இதர பொழுதுகளிலும் எழுப்பப்பட்ட இனிய பாங்கோசை மக்களை கவர்ந்தது.

ஆனால் சோழமன்னன் தன்படைகளோடு சென்றுவிட்ட ஓரிரு மாதங்களில் நிலைமை மாறியது. அனந்தபுரத்தில் அமர்ந்து ஆட்சிபுரிந்த இராக்கசகங்கனின் குருவான ஐங்கமய்யா இந்த நிகழ்வுகளைக் கண்டு வெறுப்படைந்தார். சிவன்கோயில் பிரகாரத்தில் தங்கியுள்ள கலந்தர்களுடன் நகர மக்கள் எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளகூடாது என்று உத்தரவிட்டார்.

கலந்தர் ஃபக்கீர்கள் யாரும் ஊருக்குள் வரக்கூடாதென்றும் ஐங்கமய்யா அறிவித்ததால், அடுத்த சில நாட்களிலேயே பாபாவும் கலந்தர்களும். உணவுத் தட்டுப்பாட்டுக்கு உள்ளானார்கள். சிலநாள் பட்டினிக்குப்பின் சிவாலய முகப்பில் வந்து உலவிய சமணர்களின் ஜீனாலய காளையைக் கொன்று உணவு தயாரித்து உண்ணவேண்டிய நிர்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.



பகலுணவு தயாரிக்கப்பட்டு பாபாவும் கலந்தர்களும் உணவுக்காக உட்கார்ந்திருந்த தருணத்தில், சமண குரு ஐங்கமய்யா வீரர்கள் சிலருடன் ஆவேசமாக அங்கு வந்தார். கலந்தர்களுக்கும் படை வீரர்களுக்கும் இடையே வாக்குவாதமும் கை சண்டையும் மூண்டபோது பாபா அதை தடுத்தார்கள்.

சமணகுருவை நோக்கி பாபா கூறினார்கள் ''நாங்கள் ஊருக்குள் வரக்கூடாது என்று நீங்கள் தடுத்ததால் தான் இந்த நிலை ஏற்பட்டது. நாங்கள் மக்களுக்கு உதவிசெய்கிறோமே தவிர யார் மீதும் ஆதிக்கம் செலுத்துவது கிடையாது. எனவே எங்களை மக்களோடு மக்களாக வாழவிடுங்கள்'' என்றார்கள்.

ஐங்கமய்யா மேலும் மேலும் ஆவேசப்பட்டார் ''கோயில் காளையைக் கொன்று தின்றுவிட்டு சமாதானமாக பேசுகிறாய்?'' என்று கோபப்பட்டார். பாபா ஒன்றுக்கு இரண்டு காளைகளுக்குரிய கிரயத்தை தருவதாக கூறியதையும், நான்கு காளைகளுக்குரிய விலையைக்கூட தந்துவிடுகிறோம் என்று பணிவுடன் கூறியதையும் மறுத்த மன்னரின் குரு, ''செத்த காளைமாடு தான் எங்களுக்கு திரும்ப வேண்டும்'' என்று ஆட்சேபித்தார்.

பிரகார வாசலில் சிறிது நேரத்தில் பெரும் கூட்டம் கூடிவிட்டது. கலந்தர்கள் சிலரை ஏவி, பாபா அறுக்கப்பட்ட காளைமாட்டின் தலையையும் நான்கு கால்களையும் தரையில் கிடத்தச் செய்தார்கள். பின்னர் தன் அசா என்னும் கை கோளால் செத்த மாட்டின் தலை மீது தட்டி

''கும்பி இத்னில்லாஹ் - அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு எழுந்திரு'' என்றார்கள். காளைமாடு உயிருடன் துள்ளிகுதித்து எழுந்து அங்குமிங்கம் ஓடியது. திகைத்து நின்றார் ஐங்கமய்யா! மக்கள் ஆராவாரம் எழுப்பி ''பாபைய்யா கீ ஜிந்தாபாத்'' என்று வாழ்த்தினர். அரசகுருவின் முகத்தில் கரிபடிந்தது.

பாபாவும் கலந்தர்களும் தொடர்ந்து சிவன் கோயில் பிரகாரத்திலேயே தங்கி மக்கள் தொண்டு செய்தார்கள். அவர்கள் செய்த மருத்துவத்தாலும் மாந்திரீகத்தாலும் மக்கள் அனுதினமும் கோயில் வாசலில் கூட்டமாக கூடி நின்றார்கள்.

மதபேதம் கருதாமல் மனிதநேயத்துடன் அவர்களுக்கு உதவி செய்தார்கள் பாபா. தெலுங்கு தேசத்தின் தூரப்

பிரதேசங்களிலிருந்தும் மக்கள் தேடி வந்தார்கள். அவர்களில் நாடி நின்ற மக்களுக்கு இஸ்லாத்தையும் ஸூஃபித்துவ ஞானத்தையும் பாபா போதிக்கத் தவறவில்லை.

புகழனைத்தும் ஏகனாகிய அல்லாஹ் ஜல்லஜலாலஹூ ஆகிய அவனுக்குரியது. எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அன்னவர்களின் கிளையார் கோத்திரத்தார் சந்ததிகள் கூட்டத்தார் மீதும் என்றென்றும் இறைவா உன் சாந்தி சமாதனம் ஸலாத்தை ஸலவாத்தை என்றென்றும் பொழிந்தருள்வாயாக!

* * * * * * *

---

*மற்றொரு மாற்று தகவல்-*

*செத்த மாடு பிழைத்த பின்னரும் மனம் திருந்தாத அரசனும் அவனது குரு ஜங்கமய்யாவும், அரண்மனைக்கு திரும்பியபின் பாபாவையும் கலந்தர்களையும் கொன்றுவிட சதி செய்தார்கள். விஷம் கலந்த பணியாரங்களைத் தயாரித்து அரசியின் தலைமையில் பணிப்பெண்களை அனுப்பி பாபாவிடம் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்கள்.*

*பணியாரத் தட்டுகளை பார்த்ததும் பாபாவுக்கு அரசனின் சதி திட்டம் புரிந்து போய்விட்டது. ஆனாலும் அவர்கள் பிஸ்மி சொல்லி சுவைத்து உண்டதோடு கலந்தர்களையும் உண்ணச்செய்தார்கள். பாபாவும் கலந்தர்களும் பாதிக்கப்படவில்லை. ஆனால் அரசியார் வீடு திரும்பியபோது அரசன் கடுமையான வயிற்று வலியால் அவஸ்தைப்படுவதை கண்டாள்.*

*வேறு வழியின்றி பாபாவிடம், மன்னிப்பு கோரியபோது அவர்கள் அரசன் அனுப்பிய பணியாரங்களை அவனையே உண்ணச் செய்து அரசனின் வயிற்று வலியைக் குணப்படுத்தினார்கள். அரச குரு ஜங்கமய்யாவோ இதை கண்டு மேலும் ஆத்திரமடைந்தார். பாபாவுக்கு மீண்டும் சவால்விடுத்தார்.*

*அதன்படி பாபாவும், ஜங்கமய்யாவும் சுண்ணாம்பு கட்டிகள் நிரப்பப்பட்ட இரண்டு சாக்குப் பைகளின் உள்ளே உட்காரவைத்து குளத்துக்குள் போடப்பட்டார்கள். மூன்றாம் நாளில் பாபா குளத்திலிருந்து உயிரோடும் உணர்வோடும் வெளியில் வந்தார்கள். அரசகுரு ஜங்கமய்யாவோ குளத்திலிருந்து சாக்குப்பையில் பிணமாக மீட்டு எடுக்கப்பட்டார்.*



*எங்கேதான் நீ இருக்கின்றாய்*
*என்னை கவர்ந்த பராபரியே!*
*அங்கே என்று சொல்கிறார்*
*அகன்ற வானிலா அப்பாலா?*
*இங்கே என்று சொல்கின்றார்*
*இதய இருட்டை காட்டுகிறார்!*
*சங்கொலி முழங்க விடைபெறும்முன்*
*காட்டு முகத்தை பராபரியே!*
*- ஸச்சல் சர்மத்*

## மாதவம் விளைவித்த மாணிக்கம்

காலம் விரைந்தோடியது. பெனுகொண்டாவிலேயே பாபாவும் கலந்தர்களும் தங்கி சுமார் பத்துஆண்டுகள் கழிந்தன. மக்கள் கூட்டம் கூட்டமாக பல்வேறு நாட்டங்கள் வேண்டுதல்களோடு பாபாவின் வாசலை நாடிவந்து கொண்டிருந்தார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவின் ஆன்மீகப் பிரசன்னம் ஆலாவிருட்சமாய் தழைத்தோங்கி சாதி மதமெல்லாம் கடந்து தெய்வீக சாந்தி நிழலில் மக்கள் சங்கமித்தனர். அன்றோரு நாள் அதிகாலையில்,

பாபா தப்லே ஆலம் (ரலி) காலமானார்கள் என்ற வேதனை செய்தியுடன் குந்தவை நாச்சியாரும் கலந்தர்கள் சிலரும், பாபாவின் சகோதரர் ஸையத் அலீஷாவின் குடும்பத்தினருடன் பெனு கொண்டாவை வந்தடைந்தனர்.[(1)]

வேதனை செய்தியைக் காதில் கேட்ட பாபா பேரமைதி கொண்டார்கள். திருசிரபுரத்தில் நடந்ததெல்லாம் பாபாவுக்கு தெரிந்தேயிருக்கிறது என்பது மங்கைநல்லார் மாமஜிக்னிக்கு தெரிந்துவிட்டது.

மறுநாள் அதிகாலையில் சகோதரர் ஸையத் அலீஷாவை தனது பீடத்தில் அமரச் செய்துவிட்டு பாபா சமீபத்திலுள்ள குன்றின் மீது (சில்லா) 40 நாள் தவம் அனுஷ்டித்து திரும்புவதாக கூறிவிட்டு புறப்பட்டார்கள்.

---

*(1) மாதரசி மாமாஜிக்னி பாபா தப்லே ஆலம் பாதுஷா மறைந்த மூன்றாம் நாளில் காலமாகி பாபாவின் காலடியில் அடக்கமானதாக வேறு குறிப்புகளில் காணப்படுகிறது.*

மன ஆறுதலுக்காக பெனுகொண்டா சென்று பாபா ஃபக்ருத்தீனின் அருகாமையில் தங்கியிருந்து விட்டு திருசிரபுரம் திரும்பலாம் என்று எண்ணத்துடன் பாபாவின் சகோதரர் குடும்பத்துடன் அங்கு வந்த மங்கைநல்லார் மாமாஜிக்னிக்கு பாபாவின் முடிவு வருத்தமளித்தது.

ஆனால் பாபா ஃபக்ருத்தீனும் பாபா தப்லே ஆலம் அவர்களின் பிரிவு வேதனையைத் தாளமுடியாமல் தான் தனிமை நாடி செல்கின்றார் என்ற எண்ணம் அம்மையாரை அமைதிப்படுத்தியது.

வெய்யிலும் குளிரும் விட்டுவிட்டு படரும் மழைச்சாரலுமாக தட்பவெட்ப நிலை நிலவும் முன்மாரி காலத்தில் பெனுகொண்டா மலைகுன்றுகளில் உயரமான குன்றின்மீது மூன்றுகல் தூரம் பயணித்து தனிமையில் ஆலமரங்கள் சூழ்ந்த ஒரு குகையின் உள் அமர்ந்து பாபா தவத்தில் ஈடுப்பட்டார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை கலந்தர்களில் சிலர் பழங்களையும், பாலையும் எடுத்து கொண்டு மலைமீது நடந்து சென்று பாபா கண்திறக்கும் வரை காத்திருந்து உண்ண கொடுத்து வந்தார்கள். நாளுக்குநாள் பாபா தங்கள் உணவு தேவையைக் குறைத்து கொண்டார்கள்.

வளைந்து நெளிந்து செல்லும் வயல் வெளிகளைக் கடந்து பசுமைப் போர்த்திய மலைகாடுகளின் பாதையில் ஒருமுறை மங்கையர் மாமாஜிக்னி, பாபா தவமிருந்த மலைக்குகைக்கு வந்தார்கள். வரும் வழியில் நடந்த கலவரம் மாதரசி மாமாஜிக்னியை வருத்தியது.

தனியே நடந்து வந்த போது நெடும்பாதையில் பெனுகொண்டாவைச் சேர்ந்த மனிதனொருவன் மாதரசியை தொட்டு தழுவ முனைந்தான். அடுத்த கணம் அவன் கைகளும் கால்களும் வெட்டுண்டு வீழ்ந்தது போல் விழுந்தன. அவன் அந்த இடத்திலேயே செத்து மடிந்தான்.(1)

தனிமையில வந்து நின்ற மாதரசியைப் பார்த்து தவித்துப் போனார்கள் பாபா ஃபக்ருத்தீன். "ஏன் இப்படி தனியே வந்தீர்கள்?" என்று வருத்தப்பட்டார்கள். வழிப்பாதையில் நடந்த விபரீதத்தை கேட்டவுடன் பதைத்தாரகள்.

---

*(1) குறிப்பிடப்படும் இந்த சம்பவம் சிக்கமலூரில் நடைபெற்றதாக பாபா தப்லேஆலம் பாதுஷா (ரலி) வரலாற்று குறிப்புகளில் காணப்படுகிறது.*



மாதரசி, பாபாவிடம் கூறினார்கள் "தாங்கள் இங்கு வந்தமர்ந்து இன்று நாற்பது நாட்களாகின்றன. உங்கள் தவவேள்வி சம்பூர்ணமடைந்ததாக நான் கனவு கண்டேன். எனவே தங்களை நேரில் கண்டு தங்கள் ஆசியைப் பெறலாம் என்றுதான் நான் இங்குவந்தேன். மேலும் நானும் திருசிரபுரம் திரும்பி செல்ல நாடுகிறேன் தங்களிடம் அதை சொல்லி விடைபெறவும் விரும்பினேன்"

பாபா கூறினார்கள் :- "இன்று என்தவம் சம்பூர்ணமடைந்தது உண்மைதான். ஃபனாவுல் ஃபனா என்னும் உன்னதநிலைக்கு என்ஆன்மா உயர்த்தப்பட்டது. என்ஆன்மா

எனக்குள் எனது உருவில் ஆணாகவும் பெண்ணாகவும் மாறிமாறி தோன்றுகிறது. பிரபஞ்சத்தில் நான் தனித்த ஏகாந்தியாக இருக்கிறேன். எங்கெங்கும் நான்மட்டுமே இருப்பதுபோல எனக்கு தோன்றுகிறது.

"யா அய்யத்துஹன் நஃப்ஸே முத்மஇன்னா துர்ஜயீ இலா ரப்பிக்க ராலியத்துல் மர்ளிய்யா ஃபத்ஹுலி ஃபி இபாத் வத்ஹுலி ஜன்னத்தி -திருப்தி அடைந்த ஆத்மாவே நீ உன் இறைவன்பால் செல் அவனைக்கொண்டு நீ திருப்தி அடை! உன்னைப் பற்றி அவன் திருப்தி அடைந்திருக்கிறான் நீ என்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து என்னுடைய சுவனபதியிலும் நுழைந்துவிடு!"

"என்று அதிகாலையில் குகையின் மூலையிலிருந்து அருள் குர்ஆனின் வசனம் ஒலிக்க கண்டேன். வாழ்நாளில் என்றுமில்லாத பேரின்ப சுகவாரி என்னுள் பாய்ந்து வருகிறது" என்றார்கள் பாபா.

மாமாஜிக்னி என்னும் சோழஇளவரசி குந்தவையார் குனிந்து பாபா ஃபக்ருத்தீனின் இரு பாதங்களையும் முத்தமிட்டார்கள். அம்மங்கை நல்லாரும் இறைநேச செல்வி ஆனார்கள்.

* * * * *

"தீர்ப்பு நாளில் வலது கரத்தில் ஓலை கொடுக்கப்பட்டவர்கள் சொர்க்கத்தை சென்றடைவார்கள், இடது கரத்தில் ஓலை கொடுக்கப் பட்டவர்கள் நரகத்தை அடைவார்கள் (முக்தி நிலை அடைந்து) முன் சென்று விட்டவர்கள் முன் சென்றுவிட்டவர்களே" என்று திருக்குர்ஆன் தெளிவாக கூறுகிறது.

*ஜென்மம் என்பது திருகுர்ஆனில் வெளிப்படையாக ஏன் சொல்லப்படவில்லை. சொர்க்கத்தில் அல்லது நரகத்தில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள் என்ற வசனத்துக்கு அர்த்தமென்ன?*

*எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில் - ''மத்லபல் இல்மி வலவு பிஸ்ஷீன் - அறிவு சீனாவிலிருந்தாலும் அறிவை தேடி அடைந்து கொள்ளுங்கள்'' என்ற ஹதீஸ் மொழிதான். எல்லாமே திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தத்தான் ''இன்ன லிகுல்லி ஆயத்தின் ளஹ்ரன் வபத்னன் தாபித்தன் - ஒவ்வொரு குர்ஆனின் வசனத்துக்கும் வெளிப்படையான மற்றும் மறைமுகமான பொருள் உண்டு, மறை முகமான பொருள் ஏழுவகையானது'' என்றனர் நபிகள்பிரான்(ஸல்).*

*நுனிப்புல் மேய்வதை விட்டுவிடுங்கள் அருள்குர்ஆனின் வசனங்களை ஆய்ந்தறிவதில் கவனம் வையுங்கள், அகிலத்தில் சொல்லப்பட்டுள்ள எல்லா அறிவியல் அருளியல் ஆன்மஇயல் கருத்துக்களும் ஃபுர்கானில் சொல்லப்பட்டிருப்பதை உணர்வீர்கள்.*

*ஆண்டவன் தனது ஆதி இருப்பை கோடானு கோடி கோடானு கோடி அணுக்துகள்களாக பிரித்து, தன் உணர்வெனும் ஆன்மாவை அணு ஒவ்வொன்றிலும் தரிப்படச்செய்தான். தானென்ற ஒவ்வொரு தனித்த ஆன்மாவும் தானே யாவுமாகிய ஆண்டவன் என்பதை கண்டறிய அகிலத்தைப் படைத்தான்.*

*ஒவ்வொரு அணுவும் தனது ஆன்மீக வளர்ச்சிப்பாதையில் பயணப்பட்டு மனிதனின் இந்திரியத்துளியாக உஜுபுதன்பு என்று அரபு மொழியும் ஆதிமூலவித்து என்று தமிழ் மொழியும் கூறும் உயிரணுவாகப் பரிணமித்து உலகில் மனிதனாக ஆணாகப் பெண்ணாக தோன்றுகிறது.*

*அதன் பயணம் உலகில் நிஜம், சூக்கும சொர்க்க நரகத்தில் நிழல், மரணம் நிகழும்போது நிஜம் மறைந்து நிழலாவது போல், சூக்கும உலகில் நிழலும் மறையும் அப்போது உயிர் மீண்டும் பூவுலகில் சூக்கும உலகிலிருந்து கோலமெடுப்பது உறுதி.*

*''முன் சென்றுவிட்டவர்கள் முன் சென்றுவிட்வர்களே'' என்ற திருகுர்ஆனின் வசனம் மெய்யாகி, உலகம் மாயை என்று உணர்ந்து, நானென்றும் தானென்றும் தன் ஆன்ம அழியாதநிலையே மெய், என்று அறியும் வரை இந்த கோலம் எடுக்கும் அலங்கோலம் தொடரும்.*

*பாபா ஃபக்ருத்தீனும் மங்கையர் மாமாஜிக்னியும் வாழ்ந்த நேச வாழ்க்கையின் அர்த்தமென்ன? உலகில் ஆன்மாக்கள் வெவ்வேறு உறவுகளில் அவதரிக்கின்றன. கணவன் மனைவியாய் சகோதரர்களாய், காதலன் காதலியராய், நண்பர்களாய், அரசனாய், ஆண்டியாய், அடிமையாய் பல்வேறு கோலமெடுத்து வாழ்கின்றன.*

*''முதியவனின் கியாமத் (மறுமை) இளைஞனின் கியாமத் (மறுமை)க்கு முன்னர் வந்துவிடும்'' என்று பொருள்பட பெருமானார் (ஸல்) கூறியது போல, உயிர்களின் மரணமும் மறுமையும் மீண்டும் மீண்டும் வரும், உலக வாழ்க்கையும் மீண்டும் மீண்டும் தோன்றும், கணவன் மனைவியாவான், மனைவி கணவனாவாள், தந்தை மகனாவான், மகன் தந்தையாவான், மகள் தாயாவாள், தாய் மகளாவாள்.*



*ஆடும் மாடாகும், மாடு ஆடாகும், ஒட்டகம் குதிரையாகும், குதிரை ஒட்டகமாகும், புலியும் சிங்கமும் கரடியும், பூனையும் ஓநாயும் நரியுமாக மாறிமாறி பிறக்கும். இந்த பிறப்பு இறப்பு சக்கரத்துக்கு முடிவே இல்லை.*

*நீண்ட நெடும் ஆன்மீகப் பயணத்தில் நெருங்கிய அணுக்கள் தங்கள் கோலங்களை மாற்றிக் கொண்டு, உறவுகளை வித்தியாசமாக புதுப்பித்துக் கொண்டு விளையாடும் உலக வாழ்க்கை, மாயையின் வெளிச்சத்தில் அழகாகவும் குருட்டு அற்புதமாகவும் தெரியும்.*

*எனவே தான் (உனது மனித கோல) இந்த உலக வாழ்க்கை பறக்கும் தூசுக்கு சமமானது, (உனது ஆன்மகோல) மறுமை வாழ்க்கை நிரந்தரமானது' என்று திருக்குர்ஆன் சொல்கிறது ''பல்தூதிரூனல் ஹயாத்ததுன்யா வல் ஆஃகிரத்து ஹைருன் வஅப்கா''*

பாபா ஃபக்ருத்தீனும் மாதரசி மாமாஜிக்னியும் தந்தை மகளாக, தாய் மகனாக, சகோதரன் சகோதரியாக, நண்பர்களாக, தோழிகளாக பல கோலமெடுத்து பலகாலம் வாழ்ந்து விட்டு தூர்ஸினாய் மலை அடிவாரத்தில் பலஸ்தீன நிலப்பரப்பின் எல்லையில் நபி மூசா (அலை) அவர்களாகவும், அன்னாரின் ஆசை துணைவி சபுராவாகவும் அவதரித்தார்கள்.

நபி ஷுஐப் (அலை) அவர்களின் மறு தோற்றமான பாபா தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அவர்களின் நிழலில் நெருங்கி வாழ்ந்த இருவரும், சிஸ்தானிலும் சோழநாட்டிலும் தோன்றி குரு சிஷ்ய உறவான பேரின்ப உறவில் தங்களை இணைத்து கொண்டார்கள்.

*உலகம் ஓடி கொண்டே இருக்கிறது. உயிர்களின் வாழ்க்கை சுழன்று கொண்டே இருக்கிறது. முடிவற்ற இந்த உடல் பூத சூக்கும ஆன்ம உற்பவ ஊர்வலம் விதியின் வீதியில் நடந்து தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இது இறைவனின் விளையாட்டு.*

*''இரப்பனா லலம்னா அன்ஃபுஸினா - இறைவா! உனக்கு மாறு செய்துவிட்டோம். எங்களை மன்னித்து இரட்சிப்பாயக! (எங்களுக்குள் உன் ஆன்மா எனும் பேரின்பசாகரம் இருப்பதை மறந்து இப்லீஸின் தூண்டுதலால் சிற்றின்ப சேற்றில் விழுந்தோம் இறைவா எங்களை மன்னித்து கரை சேர்ப்பாயாக,)'' என்ற பாபா ஆதம் (அலை) அவர்களின் தவிப்பு நமக்கு புரிகிறது.*

*மரணங்கள் வரலாம். மனிதனுக்கு முடிவு கிடையாது உயிர்த்தெழுவான் வேறொரு கோலத்தில். யுகமுடிவு வரலாம். இறைவன் பிரபஞ்சத்தை மீண்டும் உயிர்பிப்பான் - புதுப்பொலிவுடன்.*

* * * * *

அடுத்த கணம் பாபா ஒரு மயக்க நிலையில் தள்ளாடினார்கள். அவர்களை கைத்தாங்கி மரநிழலில் உள்ள குன்றின் மீது அமரச் செய்த மாமஜிக்னி தன்னிடமிருந்த குடிநீரை புகட்டி ஆசுவாசப்படுத்தினார்கள். பாபா வயிற்றில் ஏதோ புரட்டுவது போல உணர்ந்து குமட்டி வாந்தி எடுத்தார்கள்.

ஆடைகளில் வாந்தி எச்சில் விழுந்து அசுத்தப்படக் கூடாது என்பதற்காக மாமஜிக்னி தன் இருகைகளையும் ஏந்தினார்கள். மங்கையர்கரசி மாமாஜிக்னியின் கைகளில் பாபாவின் வாயிலிருந்து எச்சிலோடு ஒரு மாணிக்க கல் எலுமிச்சை அளவில் வந்து விழுந்தது.

அடுத்த சில மணித்துளி அவகாசத்தில் பாபா அமைதியடைந்தார்கள். விசித்திரமான அந்த மாணிக்க கல்லை இருவரும் பார்த்து கொண்டிருக்கும் போது மறைந்த பாபா தப்லே ஆலம் (ரலி)யின் குரலில் அசரீரி ஒலித்தது.

“மைந்தரே ஃபக்ருத்தீன்! ” உமது தவம் சம்பூர்ணமானதின் அடையாளம் தான் இந்த மாணிக்கம். இதை சுவைக்கும் ஒவ்வொருவருக்கும் இதயத்தில் மஹ்ரிபா என்னும் மெஞ்ஞான அருள் சுரக்கும்!

“மகளே மாமஜிக்னி முதன்முதலாக நீ அந்த கல்லை சுவைத்துப்பாரம்மா!”

குரு பிரானின் குரலில் அசரீரியைக் கேட்டு சிலிர்த்த செல்வி மாமாஜிக்னி அந்த கல்லை வாயிலிட்டு சுவைத்தார். பாபா ஃபக்ருத்தீன் கூறியது போல தனக்குள்ளும் பேரின்ப சுகவாரி பொங்க கண்டார்கள்.

---

*குறிப்பு-*

*இறைவனின் பாதையில் முடுகிச் செல்லும் மகத்து மிஃகுராஜ் என்னும் இறை சந்திப்பின் போது அவன் ஆணாக இருந்தால் அல்லாஹ் என்னும் ஜோதியை பெண்ணாக காண்கிறான். அவள் பெண்ணாக இருந்தால் அந்த ஜோதியை ஆணாக காண்கிறாள்.*

*- “ஜனிய்யா”*

*- ஹலரத் கௌதுல்அஃலம்(ரலி)*



*அவிசென்னாவின் அவிழ்தங்கள்*
*அற்புதமென்பர் யானறியேன்!*
*தவம் செய்தால்தான் முக்தியெனும்*
*தண்டோராவை நான் கேளேன்!*
*சுவனம் புவனம் ஈருலக*
*சுந்தரிகள் மடி வேண்டேனே!*
*கவனம் எனக்கு உன்மீது*
*கண் பாராயோ? பராபரியே!*
*- ஸூஃபி ஸச்சல் ஸர்மத்*

## மரணத்தை வென்ற மதிவதனம்

பாபா ஃபக்ருத்தீன் நில உலகில் தங்கள் ஜீவித பயணத்தை ஐம்பத்து நான்காம் அகவையில் முடித்துக் கொண்டார்கள். மறுஉலகை நோக்கி பயணித்துவிட்ட அவர்களின் உத்தரவுப்படி மறைந்த நாற்பதாம் நாளில் அடக்கவிட சமாதியின் முகப்பு அகற்றப்பட்டு கபரின் மண்தோண்டப்பட்டது.

ஜனாஸாவைப் போர்த்தியிருந்த வெள்ளுடையை அகற்றி பாபாவின் முகத்தை கூடிநின்று பார்த்த மாந்தர்கள், “அல்லாஹூ அக்பர்” என்று ஆரவார ஓசை எழுப்பினார்கள்.

மரணித்து நாற்பதாம் நாளில்கூட வாடாமல் வதங்காமல் தாமரைப் பூப்போல் மலர்ந்திருந்த மதிமுகத்தை கண்ட மன்னன் இராக்கசகங்கன்,

“தேவுடா தேவுடா! - ஆண்டவா ஆண்டவா!” என்று கூச்சலிட்டான்.

* * * * * * *

பெனுகொண்டாவில் சில ஆண்டு காலமே பாபா தங்கியிருந்தார்கள். அவர்கள் காலமாவதற்கு சில மாதங்கள் முன்னதாக துருக்கி நாட்டை சேர்ந்த குதிரை வியாபாரி ஒருவர் தேடி வந்தார். மனைவி மக்களோடு வந்த அவர் பாபாவின் சன்னிதானத்தில் தங்கம் வைரம் முதலிய விலைஉயர்ந்த பொருட்களை காணிக்கையாக செலுத்தினார்.

பாபா ஃபக்ருத்தீன் ஒலி நாயகம் திருச்சியில் பாபா தப்லே ஆலம் பாதுஷாவுடன் தங்கியிருந்த போது தனக்கு நடந்த ஒரு சம்பவத்தை அந்த வியாபாரி கலந்தர்களிடம் சொல்லிகாட்டி மகிழ்ச்சியடைந்தார் : துருக்கியிலிருந்து பல நாடுகளையும் கப்பலில் தன் குடும்பத்துடன் சுற்றிக் கொண்டு எத்தியோப்பியா நாட்டை அடைந்து

அங்கு சில காலம் தங்கி இந்திய நாட்டை நோக்கி பயணித்தார்.

இந்து மகாசமுத்திரத்தில் பயணித்த போது புயலிலும் சூறாவளியிலும் அவரது கப்பல் சிக்கி கொண்டது. தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அவர்களைப் பற்றி அரபுநாடுகளில் கேள்விப்பட்டிருந்ததால், இந்தியாவில் தங்கியுள்ள அவர்களை முன்னோக்கி பிரார்த்தித்தார்.

தன்னையும் தன் குடும்பத்தினரையும் தன் கப்பலையும் காப்பாற்றுமாறு அவர் வேண்டுதல் செய்து கொண்டு கப்பலின் மேல் தளத்தில் நின்றபோது தன் பார்வையில் ஒரு வாலிப உருவம் ஒளி தோற்றமாக பாய்ந்து வந்தது, கப்பலை விரைந்து இழுத்துச் சென்று புயலில்லாத அமைதி கடலில் விட்டுவிட்டு மறைந்தது. அற்புதத்தை கண்ட அவர் அதிசயித்தார்.

மேற்கு கடற்கரை ஓரமாக இந்தியாவுக்குள் மீண்டும் கரையிரங்கி பாபா தப்லே ஆலம் அவர்களை நேரடியாக தரிசித்த போது தான் தன்னை புயலாபத்திலிருந்து காப்பாற்ற வந்த ஒளிதோற்றதுக்குரியவர் தப்லேஆலம் பாதுஷா (ரலி) அவர்களின் கலிஃபாவாகிய பாபா ஃபக்ருத்தீன் என்பது அவருக்கு தெரியவந்தது.

பெனுகொண்டாவுக்கு சென்று பாபா ஃபக்ருத்தீனை தரிசித்த அவர், திருச்சிக்கு திரும்பி வந்து அங்கேயே தங்கிவிட்டார். அவரது சந்ததிகளும் இந்நாள்வரை திருச்சியில் வாழ்ந்துவருகின்றனர்.

* * * * * * *

நாற்பது நாட்களுக்கு முன்பு பாபா தங்கியிருந்த கோயில் பிரகாரத்தில் நடந்த சம்பவத்தை நகர மக்கள் அதிசய அதிசயமாக அப்போது பேசத் தலைப்பட்டார்கள்.

குரு ஜங்கமய்யாவின் வேண்டுகோளுக்கிணங்க பெனுகொண்டாவுக்கு நேரில் வந்த மன்னன் கங்கனுக்கும் பாபாவுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது.

பாபா மன்னனிடமும் மற்றவர்களிடமும் நாங்கள் புதிய மார்க்கம் எதையும் மக்களுக்கு போதிக்க வரவில்லை, உலகில் தோன்றியிருக்கும் ஒவ்வொரு மதத்திலும் உள்ள உண்மைகளை புதுப்பித்துக் கூறவே வந்திருப்பதாகவும கூறினார்கள்.

“லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற புனித கலிமாவை நாவார உச்சரித்து மனதார ஒப்புகொள்பவர்களின் மண்ணுடல் கூட அழியாது” என்று பாபா கூற, “அதை நீரூபிப்பீர்களா?” என்று மன்னன் கேட்க,



“நிரூபிக்கிறேன்!” என்று கூறிய பாபாவிடம், “நீர் மறைந்து மடிந்து புதைந்து விட்டபின் உமது சமாதியில் உயிரோடிருக்கிறீரா என்று நான் பார்ப்பதற்கு நான் உயிரோடிருக்க வேண்டுமே?” என்று கங்க மன்னன் வெகுண்டான்.

“சரி, என் வாழ்நாளில் எஞ்சியிருக்கும் நாற்பது ஆண்டுகளை உனக்கு இப்போதே தாரை வார்க்கிறேன்” என்று பாபா கூறிவிட்டு கலந்தர்களை நோக்கி சகோதரர்களே என்று அழைத்து உருக்கமான உபதேசம் புரிந்து இறுதியில் “இப்போது நான் உயிர் துறந்து விடுவேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். எனது அறிவுரைகள் படிநடந்துகொள்ளுங்கள்.

நான் மறைந்து 40ம் நாளில் மஜாரை திறந்து மன்னரையும் மற்றவர்களையும் அழைத்து எனது ஜனாஸாவின் முகத்தைப் பார்க்கச் செய்யுங்கள் அல்லாஹ் நம் அனைவரையும் மன்னித்து அவனது திருப்பொருத்தத்தால் பொருந்தி ஏற்றுகொள்ளட்டும்” என்று துஆ செய்தார்கள். பாபா அடுத்தகணமே “லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மத் ரசூலுல்லாஹ்” என்று உச்சரித்து காலகதி அடைந்தார்கள்.

* * * * *

பாபா அவர்கள் மறைந்த நாற்பதாம் நாள் அதிகாலையில் 40 நாட்களுக்கு முன்பு எதிர் பாராது தவறு நிகழ்ந்துவிட்ட அந்த வேதனை மிகுந்த நிகழ்வுகளை சிந்தையில் வைத்து நொந்தவர்களாக கலந்தர்களும் மற்றும் பாபாவை, “பாபையா பாபையா!” என்று போற்றி தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் கண்டு களித்து வாழ்ந்து வந்த பெனுகொண்டா நகரத்தில் இந்து சமண பௌத்த மக்களும், நவ்முஸ்லிம்களும் கூடிநின்று

“பாபா ஃபக்ருத்தீன் ஜிந்தாபாத்! ” என்றும்

“பாபையா வாழ்க! வாழ்க!” வென்றும் கூக்குரலிட திறந்த கபுர் ஷரீஃபின் உள்ளே பசுமை பூரித்திருந்த ஜனாஸாவின் உயிரற்ற சடலத்தின் முகத்தை பார்த்து விட்டு மீண்டும் துணியால் மூடி புதிய கழிகளாலும் கீற்றுகளாலும் மறைத்து மண்ணிலிட்டு மூடியபின்,

“அல் ஃபாத்திஹா” என்று ஓதும் கூரல் கேட்டு கூடிகிடந்த மக்கள், அல்ஹம்து, அஹது, ஃபலக், அந்நாஸ் வேதப் பனுவல்களை ஓதி முடித்து “துஆ” என்னும் மன்றாட்டுக்கு “ஆமீன்!” சொல்லும் போதுதான் ஓதுபவர் யாரென்று நிமிர்ந்து பார்த்தார்கள் கூட்டத்தினர்.

“ செம்மண் நிற சிவப்பாடையும், தலைப் பாகையும் சூடி வெள்ளை முகத்திரை ஹிஸாபை கொண்டு முகத்தை மூடியிருக்கும் இந்த இளவயது கலந்தர் யார்?”

“யார்? யார்?” என்று மக்கள் எல்லோருமாக அகத்திலும் முகத்திலும் கேள்விக்குறி எழ, அவர்கள் சுதாரிக்கும் முன், அங்கு மறுபிறவி எடுத்தது போல் உயிரோடும் உணர்வோடும் நின்று ஓதிக்கொண்டிருந்த பாபா ஃபக்ருத்தீன், ஒரு கணநேரம் தன் முகத்தை, ஒளிமிகும் மதிவதனத்தை மக்கள் கண்டு தரிசிக்கும்படி புன்னகையுடன் நின்று காட்டி விட்டு கூட்டத்துக்குள் நுழைந்து மறைந்து போனார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் என்ற இறைநேசச் செல்வரை மண் தீண்டவே இல்லையா? அவர்கள் மரணிக்கவே இல்லையா? இது அவர்களுக்கு மட்டுமே உள்ள நிலையா அல்லது உலகில் தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து மறையும் ஒவ்வொரு இறைநேசச் செல்வருக்கும் பொருந்தும் உண்மையா?

இவை பதில் கூற முடியாத கேள்விகள்!.

---

*மற்றொரு தகவல்- பாபா ஃபக்ருத்தீன் (ரவி) அவர்கள் பெனுகொண்டாவில் உள்ள தன்னுடைய ஆஸ்தானில் 144 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்து சிறந்ததாக வேறு குறிப்புகளில் காணப்படுகிறது. அவர்கள் மறைந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சமாதி திறந்து பார்க்கப்பட்டதாகவும்,40 ஆண்டுகளுக்குப் பிறகும் பாபாவின் சடலம் உருக்குலையாமலும் முக வதனம் வாடாமலும் காணப்பட்டதாகவும் அந்த குறிப்புகள் மேலும் கூறுகிறது.*



*அவனியில் ஆணாகி பெண்ணுமாகி*
*ஆயிரம் கோடி ஆண்டுகளாய்*
*பயணித்து வந்தேன் பலஜென்மம்*
*மன்னனாய் முனிவனாய் குடிமகனாய்*
*உவமையில் ஒவ்வாத கருக்குருவி*
*ஓர் அணு ஒருஆன்மப் பறவைநான் !*
*கவனிஎன் ஆதிப்பெயர் ‘அல்லா!’*
*‘ஹல்லாஜ்!’ என்பதா? கள்ளப்பெயர்!*
*-மன்சூர் அல்ஹல்லாஜ்.*

## நாகூரில் நடந்த ஞான ஆனந்த நடனம்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு பின்!

நாகவூர் என்று இலக்கியங்கள் புகழும் நாகமர காடுகள் நிறைந்த நாகூர் கடற்கரையின் மணல் வெளியில் மெல்லமெல்ல நடந்து, அருகிலமைந்த தங்கள் வாசஸ்தலத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள் மகான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம்.

கடலின் பேரலைகள் எழுந்தும் விழுந்தும் சோழ மண்டலக் கடற்கரையை தழுவி முத்தமிட்ட சப்தம் அந்த பிரதேசமெங்கும் நிறைந்திருந்தது. நீலவானமோ நிசப்தம் கொண்டிருந்தது. அதன் நெடும் பாதையில் நீந்திச் சென்ற வெண்முகில்களோடு, நாரைகளும், கொக்குகளும் பருந்துகள் காக்கைகளுடன் பறந்து திரிந்தன.

மைந்தர் சையிது முகம்மது யூசுஃப் சாஹிபின் மனைவி ஸையிதா சுல்தான் பீவி கருத்தரித்து, பிரசவகாலம் நெருங்கியிருந்தது. ஒன்பதாவது மாதம் கடந்து கொண்டிருந்ததால் பீவியின் குடும்பத்தினர் மேலை நாகூரிலிருந்து புறப்பட்டு வந்து மகான் ஷாகுல் ஹமீது நாயகத்தின் எல்லையில் தங்கியிருந்தார்கள்.

நாக மரங்களுடன் புன்னை தென்னை பனைமரங்களும் சூழ்ந்த அந்த வனப்பிரதேசத்தின் நடுவில் மாமன்னர் அலெக்ஸாந்தர் தங்கியிருந்த நினைவிடம் என்று கருதப்படும் கட்டிடத்தை செப்பனிட்டு, அதில் நாயகத்தின் மைந்தர் ஸையிது முகம்மது யூசுஃபு சாஹிபும் ஸையிதா சுல்தான் பீவியும் இல்லறம் நடத்திவந்தனர்.

ஆன்மீக உலகில் ஓர் அற்புதமாக தோன்றிய தனது பூவுலக வாரிசு சையத் முகம்மத் யூசுபு சாஹிபின் குல வாரிசாக இன்று ஒரு குழந்தை பூமியில் அவதரிக்கப் போகிறது என்பது நாயகத்தின் இதயத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கியது.

மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு மனித சிசுவும் விண்ணில் இருக்கும் இறைவனின் ஆசையின் வெளிப்பாடு என்று கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். "மனிதன் எனது மறைவான இரகசியம். நானோ மனிதனுக்குள் ஒளிந்துள்ள மறைவான இரகசியம் - அன சிர்ருல் இன்சான், இன்சானு சிர்ரீ " என்று ஹதீஸ்அல் குதுசியிலும் காணப்படுகிறது.

'இன்று பிறக்கப் போகும் குழந்தையின் இரகசியம் என்ன?' நாகை நாதர் தன் பார்வையை விண்ணோக்கி உயர்த்தினார்கள். இன்று யூசுஃப் - சுல்தான் பீவி தம்பதிகளுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கப் போகிறது என்பது அவர்களுக்கு உள்ளுணர்ச்சியாக வெளிப்பட்டது.

* * * * * * *

*ஒவ்வொரு மனிதக் கருவும் இறைவனுடைய நாட்டம் என்ற வாக்கியத்தை அர்த்தப்படுத்தினால் அதில் ஆயிரமாயிரம் இரகசியங்கள் வெளிப்படுகின்றன. "மனிதனில் இறைவன் தன்னை தானே அறியாதவனைப் போல் நடித்து கொண்டிருக்கிறான்" என்பது தான் ஸூஃபி ஞான கொள்கை.*

*தன்னை அறியாதவனைப் போல நடிக்கும் இறைவன் தன் நடிப்பை விலக்கி கொண்டு தானே தானாக அமர்வது தான் இறைநேசர்களின் நிலை. இந்த ரகசிய இறைவானாகிய மனிதன் எங்கிருந்து எப்படி வெளிப்போந்தான்?*

*ஆலமே அர்வாஹ் என்ற ஆன்ம லோகத்திலிருந்து இறைவன் தன்னை ஆன்மா என்ற கோடானு கோடி அணு துணுக்குகளாக்கி கொண்டு சூக்கும லோகத்துக்குள் புகுந்தான். சூக்கும லோகத்திலிருந்து அணுக்களின் கூட்டமாக நெருப்பு காற்று நீர் மண் என்ற பஞ்சபூதங்களைக் கொண்டு ஒரு புதிய உருவை எடுத்தான்.*

*மகுலியத்தான தாத்துல் கிபுரியாவில்*
*மறைந்த கன்சுல் மகுபியாம்*
*மஸ்கூத்து அன்குல் கதீமுல் அமாவான*
*மவுஜூதெனும் சிருபுலே*
*அகதியத் துகதாகி வாகிதிய்யத்தான*
*ஆலம் அறுவவாகானதில்*
*ஆலம் மிதாலாகி ஆலம் அஜிசாமான*
*ஆலம் இன்சானானபின்*



*மகுலியத்தான தாத்துல் கிபுரியாவில்*
*மறைந்த கன்சுல் மகுபியாம்*
*மஸ்கூத்து அன்குல் கதீமுல் அமாவான*
*மவுஜூதெனும் சிருபுலே*
*அகதியத் துகதாகி வாகிதிய்யத்தான*
*ஆலம் அறுவவாகானதில்*
*ஆலம் மிதாலாகி ஆலம் அஜிசாமான*
*ஆலம் இன்சானானபின்*

*பகுதியத்தில்லா ஜலாலோடு ஜமாலும்*
*பதீவுல் கமாலுமாகி*
*பகுது கபுலற்ற லாகூத்து ஜபரூத்தில்*
*பகாவான ஹுவியத்தினால்*
*நகுசியத் தற்று முன் தாளின் நிழல் பெற்றடிமை*
*நானினைவும் அற்றுய்வனோ*
*நற்குணம் குடிகொண்ட பாத்துஷா வானகுரு*
*நாதன் முகியித்தீனே!*

*பொருள் :-*

*எந்த வித கலப்படமுமற்ற பூர்வீகப் புதை பொருளைப் போல, இருள் அடைந்து நிற்கும், எதற்கும் அது என்றதோர் குறிப்பற்றதொரு நிலையிலிருந்து ஒன்றாம் குறிப்பாகி இரண்டாம் குறிப்பாகி, ஒருமையினின்றும் வெளிப்பட்டு பல ஆன்மாக்கள் என்று காட்சி தந்து அணுக்களின் அடுக்காம் சூக்குமப் பிரதியாகி,*

*வானம், சூரியன், சந்திரன், நட்சத்திரம், பூமி, காடு, நாடு, நதி, கடல், பாலைவனம் என்றும், ஊர்வன, பறப்பன, நடப்பன மற்றும் கோடானு கோடி மனிதர்களாக வெளிப்போந்து ஸ்தூல கோலம் கொண்டு, மாற்றங்களை கொண்ட அகிலமாகிய ஆலத்தினளவில் மாறிவந்து,*

*அதன்பின் அளவிடற்கரிய ஒளியோடு குளிர்சேர்ந்த விநோதமாகி, தன் தோற்றம் பதிவுஆகிய பரிபூர்ணம் என்ற நிலையடைந்து, முன்னும் பின்னும் இல்லாத லாஹூத்தென்னும் காமில் குணம் நிறைவுபெற்றதும், மாறுபாடும் வேறுபாடும் இல்லாத உனது பாதநிழலை பெற்றுக் கொண்ட அடிமையான நான்,*

*இது நான் அல்ல இறைவனாகிய அவனே என்ற என் யதார்த்த நிலையை அறிந்து முக்தி நிலை அடைவேனோ? குருமார்களுக்கெல்லாம் குருபிரானாகிய பாதுஷாவாகிய நற்குணம் கொண்ட நாயகராகிய முகிய்யித்தீனே!*

*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

*இப்படி தானே அல்லாஹ்வாகிய பூராயமாக இருந்து ஆன்மாவெனும் பல துகள்களாகி, சூக்குமப் பிரதியெனும் கற்பனை உருவாகி, ஸ்தூலத்தில் வெளிப்பட்டிருக்கிறோம் என்பதை, தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான் என்ற ஹதீஸின் தன்மை கேற்ப தன்னை அறிய,*

*ஹையமினல் மையி, மைய மினல் ஹையி - இறப்பிலிருந்து பிறப்பு, பிறப்பிலிருந்து இறப்பு - என்று பலகோல பற்பல பிறவிகளை கடந்து தன்னை அறிகிறான் மனிதன் ஆகிய இறைவன்,*

*தன்னை அறியும் இந்தப் பாதையில் அல்லாஹ் என்பது உடைந்து துகள் துகளாக மாறி ,அர்வாஹ் என்னும் ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் ஆகிய தானேயாவுமாகிய அல்லாஹ் என்னும் மெய்நிலையை எய்துவது தான்.*

*வழிபாதையில் உள்ள அனுபவங்களெல்லாம், சார்புநிலையாக வரும், மனம் சாய்ந்து கொண்டு எழ மறுக்கும் மண், பொன், பெண் முதலிய காமங்களை பொய்யென்று விலகி மெய்யை அதாவது தானே எல்லாம், தனக்கு தான் ஆகிய இறைமீதே காதல் வேண்டும் இதர காதலெல்லாம் மாயை என்று உணர்வதற்கேயாம்.*

*மெய்நிலை உணரும் பாதையில் எழுகின்ற பிறவிகள் அறிவற்ற பேதை நிலை யாகும். மெய்நிலை உணர்ந்த போதையில் எடுக்கின்ற தோற்றமெல்லாம் ஞானானந்த தோற்றமாகும்.*

* * * * * * *

நாகை நாதர் சிந்தித்தார்கள், நானே முகிய்யித்தீனென்ற உஜூதிலும், காஜா பந்தே நவாஸ் என்ற உஜூதிலும் தோன்றி ஞானானந்த நடனம் புரிந்து புவிமீது அமர்ந்திருப்பேனென்றால், இன்று பிறக்கவிருக்கும் ஸையிது முகம்மது யூசுஃபின் மூத்த பாலகர் எந்த உஜூதிலிருந்து தோன்றி இன்று ஞானாந்தியாக அவதரிக்கிறார்?

யோசித்தபடியே நடந்து தங்கள் இருப்பிடம் வந்துவிட்ட நாகை நாதர், அருகிலுள்ள புளியமரத்தின் அடியில் தன் தபசு இருப்பின் மீது அமர்ந்தார்கள்.

அப்போது தான் முதுபக்கிலிருந்து மைந்தர் ஸையத் முகம்மத் யூசுப் சாஹிப் பரபரப்பாக ஓடி வந்தார்கள். பீபி சுல்தானியின் உறவினர் சிலரும் ஃபக்கீர்களில் சிலரும் அவர்களோடு புன் சிரிப்போடு விரைந்து வந்து நாதரை அணுகினார்கள்.

மைந்தர் ஸையத் முகம்மத் யூசுப் முக மலர்ச்சியுடன் தந்தையை வெட்கத்துடன் பார்த்தவர்களாக,

''பாவா சுல்தானிக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது'' என்றார்கள்.



''சுபுஹான்னால்லாஹ்'' என்று வாய்நிறைந்து மொழிந்த எம்பெருமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் வானத்தளவில் மீண்டும் நோட்டமிட்டார்கள்.

''உமது பேரருக்கு பாபா ஃபக்ருத்தீன் என்று பெயரிடும்'' என்ற இறைஉத்தரவு இல்மலதுன்னியாக - ஒலிஒளி காட்சியாக பளிச்சிட்டது.

நாகை நாதர் தன் மைந்தர் யூசுபிடம் ''உமது மகனுக்கு பாபா ஃபக்ருத்தீன் என்று பெயர் சூட்டும்'' என்று மனமகிழ்வோடு கூறினார்கள். அல்லாஹு அஃலம் எல்லாம் அறிந்த அல்லாஹ் நீயே சாட்சி அல்லாஹு அக்பர் - நீயே பெரியவன் அல்ஹம்துலில்லாஹ் புகழனைத்தும் உனக்குரியது.

அந்நேரம்!

பெனு கொண்டாவிலிருந்து புறப்பட்டு, திருச்சியில் பாபா தப்லே ஆலம் பாதுஷாவை தரிசித்துவிட்டு நாகூரை வந்தணுகி, தமிழகமெங்கும் பிரசித்திப் பெற்று புகழோங்க வாழ்ந்து கொண்டிருக்கும் நாகை நாதரை தரிசிக்க வந்த நூற்றுக் கணக்கான கலந்தர் ஃபக்கீர்கள்,

தாங்கள் வந்த தருணத்தில் நாகை நாதரின் இல்லத்தில் பேரர் பிறந்திருப்பதையும், அவருக்கு பாபா ஃபக்ருத்தீனென்று பெயரிடப்படுவதையும் அறிந்து பேரானந்த மடைந்தார்கள். ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் நந்தவனத்தில் நின்றபடி அந்த ஃபக்கீர்கள் கைகளை உயர்த்தி கழுத்தையும் தலையையும் அசைத்து

*மஸ்து கலந்தர்! ஜூலே லால் மஸ்து கலந்தர்!*
*அல்லாவின் நினைவில்*
*அகிலத்தை மறந்தேன்*
*உல்லாச நடனம் ஆடுகிறேன்!*

*(நாங்கள் உலகை மறந்தவர்கள், அல்லாஹ் என்னும் பேரின்ப சாகரத்தில் மூழ்கி, ஃபனாவாகி நாஸ்தியாகி போதை கொண்டவர்கள்) என்று ஆடியும் பாடியும் ஆர்ப்பரித்தார்கள்.*

*இஷ்கே அல்லாஹ்!*
*ஃபுகரா அல்லாஹ்!*

*(அல்லாஹ்வாகிய ஆதி பரம் பொருளின் மீது ஆசை கொண்டோம்! அவனையன்றி அனைத்தையும் துறந்து நாட்ட தேட்டங்கள் அவனளவில் ஆனோம்!)*

# பாராளும் ஃபக்கீர்களின்
# மரபு
# கலாச்சாரம்
# பண்பாடு


*ஹைதர் அலீ யகீனுல்லாஷா*
*கலிபத்துல் காதிரி ரிஃபாயி*
*உதவி*
*சற்குரு அக்பர் அலீ ஷா காதிரி*
*ஷா பானுவா ஜமா*
*சற்குரு பிஸ்மில்லா அலீஷா காதிரி*
*ஷா பானுவா ஜமா*






*உலகலாவிய பரந்த கலாச்சார அமைப்பை உடைய ஃபுகராக்கள் என்று அழைக்கப்படும் ஃபக்கீர்மார்களின் தென்இந்திய கலாச்சார தலைநகரம்தான் சதர்சௌக் என்று அழைக்கப்படும் பெனுகொண்டா நகரமாகும். இறைநேசச் செல்வர்கள் பாபா தப்லே ஆலம் பாதுஷா அவர்களும், பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா அவர்களும் தான் பரந்த இந்தியாவில் ஃபக்கீர் கலாச்சாரத்தின் முன்னோடிகள் ஆவார்கள்.*

*புவியின் வரலாறு போற்றி புகழும் மாமன்னர்களில் ஒருவரான சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் என்ற கிரேக்கத்தின் மகா அலெக்சாந்தர், தான் காலமாகும் தருணத்தில் அருகிலிருப்போரிடம் தன்னுடைய (ஜனாஸா) சடலத்தை மயானப் பாதையில் எடுத்துச் செல்லும் போது,*

*“சடலப் பெட்டிக்கு வெளியே என் இருகரங்களையும் தொங்கவிட்டு விடுங்கள், மனிதன் பிறக்கும் போது எதுவும் கொண்டு வருவதில்லை, உலகை விட்டு பிரிந்து செல்லும்போதும் அவன் எதையும் தன்னுடன் எடுத்துகொண்டு செல்ல முடிவதில்லை என்பதை தொங்கும் என் வெற்று கரங்கள் உலக மக்களுக்கு உணர்த்தட்டும்!”*

*என்று உத்தரவிட்டு அவ்வாறே நிகழ்த்தப் பட்டதாக அம்மாமன்னரின் வரலாறு கூறுகிறது.*

*மாநிலம் போற்றும் மாமனிதர்களும் பௌத்த, ஜைன மதஸ்தாபர்களுமான, கௌதம புத்தரும், மகாவீரரும் கூட அரசப் பதவியைவிட்டு விலகி ஆண்டவனின் பாதையில் விரைந்து சென்ற துறவிகளென்பதையே வரலாறு உணர்த்துவதை காண்கிறோம்.*

*உன்னத நபிமார்களான தீர்க்கதரிசிகளில் ஏசுபிரான் என்று வையம் புகழும் நபி ஈசா(அலை) அவர்களும், மோசே என்று போற்றப்படும் நபி மூசா(அலை) அவர்களும் வாழ்நாள் முழுதும் எளிய ஃபக்கீர்களின் கோலத்திலேயே புவியின் மீது உலவியதைப் படித்தும் கேட்டும் பார்த்தும் வியப்படைகிறோம்.*

*எம்பிரான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களோ இவ்வுலகை நீங்கி மரணித்தபோது, அரபகத்தின் முடிசூடா மன்னராக அவர்கள் விளங்கிய போதும்கூட, ஒரு கயிற்று கட்டிலும், ஒரு*

தலையணையும் சில உடுத்தாடைகளும் தவிர அவர்களின் இல்லத்தில் ஒன்றுமில்லை என்பதை இஸ்லாமியர் அனைவருமே அறிந்திருக்கிறார்கள்.

### ஃபக்கீர்கள் தீர்க்கதரிசிகளின் வாரிசுகள்

ஃபக்கீர்கள், மேற்கூறிய உன்னதமான மாமனிதர்களின் துறவு மனப்போக்கை தங்களின் வாழ்க்கையின் இலட்சியமாக ஆக்கி கொண்டவர்கள். ஆனால் அவர்களை இன்று மனித சமுதாயம் பக்கிரிகள் என்று பெயரிட்டு வேலை செய்யாமல், உழைத்து உண்ணாமல் பிச்சை எடுத்து திரியும் சோம்பேறிகள் என்று கருதுகிறது.

தலையில் பச்சை, காவி முதல் பல வண்ண தலைப்பாகைகளை அணிந்தவர்களாக, முகத்தில் தாடி, கைகளில் தஃப் என்னும் கொட்டுப் பறை, சிலர் கையில் சிறு தடி, சிலர் கழுத்தில் மணிமாலைகள் தொங்க நீண்ட அங்கியுடன், மனிதர்களின் வாழும் வீடுகளில் வாசல் தோறும் வந்து நின்று தெய்வ வசனங்களை ஓதியும் பாடியும் பிச்சை ஏற்கும் இவர்கள் யார்? பிச்சை கேட்பது இகழ்வான கேவலமான செயல் என்ற வெட்க உணர்ச்சி, மான உணர்ச்சி இவர்களின் மனதில் மரத்துப்போய்விட்டதா? எதற்காக இவர்கள் இப்படி செய்கிறார்கள்? இவர்களின் முன்னோடிகள் யார்? இவர்களுடைய கொள்கைதான் என்ன?

### உலகம் புரிந்துகொள்ளட்டும்

உலகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பது இன்று காலத்தின் கட்டாயமாக உள்ளது. புரிந்து கொள்ளுங்கள்.

நபிமார்களும் தீர்க்கதரிசகளும் பரபரப்பான அற்புதங்களை நிகழ்த்தி காட்டி, பாமர மக்களை பரவசப்படுத்தி ஆண்டவனின் பாதையில் மக்களை அழைத்தார்கள்.

ஃபக்கீர்கள் மறை வாசகங்களை ஓதியும், இறைவனின், இறை தூதரின், இறைநேசர்களின் பெருமைகளை பாடியும், மக்களின் கவனத்தை இறைவனின் பாதையில் திருப்புகிறார்கள்.

கொட்டு தட்டுவதோடு ஃபக்கீர்கள் நின்றுவிடுவதில்லை, குருஸ் என்ற கூர்முனை ஆயுதத்தை சிரசின் மீதும், மார்பின் மீதும் குத்தி, குருதி வெளிவராத அற்புதத்தை நிகழ்த்தி காட்டுகிறார்கள்.



பூக்குழிகளென்று சொல்லப்படும் நெருப்பு படுக்கைகளை உண்டாக்கி தீமிதித்து கூடி நிற்பவர்களை திகைக்க வைக்கிறார்கள். தீக்கங்குகளை வாயிலிட்டு கடித்து மென்று கரியாக்கி தின்றுவிடுகிறார்ள். கூடி நிற்கும் மனிதர்கள் விழிபிதுங்க அந்த வித்தையைப் பார்க்கிறார்கள்.

நீண்ட வாளால், நெடுந்தடியால் தங்கள் உடலின் பாகங்களை வெட்டுகிறார்கள், கீறுகிறார்கள், தாங்கள் கொண்டாடும், இறைநேசச் செல்வர்களின் அவுலியாக்களின் பெயரைக் கூறி, நாவில் ஒழுகும் எச்சிலை காயத்தின் மீது தடவி, சாம்பிராணிப் புகையைப் புகைத்து காட்டி, வெட்டு காயத்தின் அடையாளமே தெரியாமல் ஆக்கிவிடுகிறார்கள்.

''கோல்டா'' என்ற சாட்டையை கொண்டு தங்கள் மேனியின் மீது வேகமாக அடித்துகொள்வார்கள். காயம் ஏதும் ஏற்படுவதில்லை. மலங்குகள் ''சும்டா'' என்ற கூர்ஆயுதத்தை மண்டை ஓட்டின் மீது அடிப்பார்கள்.

பான்வா ஜமாவினர் ஜுல்பிகார் வாளின் அடையாளமாக சட்டா, சோட்டா என்ற அசாக்கோல்களை ஏந்தி சதாநிதா என்ற தெய்வ வசனங்களை ஓதிக்கொண்டும் வருவார்கள்.

### பண்பாடு

இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? ஏன்?

இவர்கள் ஈமான் என்னும் இறை விசுவாசம் உறுதிப்பட்டுவிட்டால் மனதையும் உடலையும் இரும்பும் நெருப்பு போன்ற பஞ்சபூதங்களால் பாதிப்பில்லை, ஆன்மா பலம் அடைந்த உடலுக்கு அழிவில்லை என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தி காட்டுகிறார்கள்.

இறை நேசச்செல்வர்களின் பெயரை ஈமானோடு இறைவிசுவாசத்தோடு உச்சரிப்பதால் இயற்கையின் வக்கிர இயல்புகள் தடைப்பட்டு விடுகிறது என்பதை உணர்த்தி, இறைநேசர்களை அழைப்பதால் விதிவசத்தின் போக்கில் தீமை நன்மையாகிறது, தீயும் நீராகிறது, வேதனை விலகுகிறது, துன்பம் இன்பமாக மலர்கிறது என்ற உண்மையை உணர்த்துகிறார்கள்.

நோன்பு மாதங்களில் கருக்கிருட்டில் எழுந்து நடந்து, தங்கள் கொட்டுப்பறை ஓசையால் உங்கள் கதவுகளை தட்டி, நோன்பு எனும் கடமையைச் செய்ய உங்களை விழித்தெழச் செய்கிறார்கள்!

வெள்ளிக்கிழமை தோறும் உங்கள் இல்லங்களின் வாசலில் நின்று ஓதியும் பாடியும், இன்று புனித நாள் உங்கள் இறைவனின் பள்ளி நோக்கி நீங்கள் ஓட வேண்டிய நாள் உஷாராகுங்கள்! என்று உங்களுக்கு உணர்த்துகிறார்கள்!

வாசலில் பிச்சை கேட்கும் அவர்களுடைய குரல், ஜகாத் என்னும் இறைவரி உங்கள் மீது கடமை என்பதை உங்களுக்கு உணர்த்துகிறது.

உலக நியதியான உழைப்பையும் தொழிலையும் அவர்கள் கவனமாகப் பேணாமல் பராரியாக நிற்கும் நிலை, உங்களுக்கு வீட்டைவிட்டு வெளியேறும் ஹஜ்ஜின் கடமையை மட்டுமல்ல, உலகின் நிலையற்ற தன்மையையும், நீங்கள் மண்ணறை மாளிகைக்குச் செல்ல எத்தருணத்திலும் தயார் நிலையில் இருங்கள் என்பதையும் உங்களுக்கு உணர்த்துகிறது.

**சமாதிகளில் கொடியேற்றம் சந்தன பூச்சு**

இறைநேசச் செல்வர்களின் வாசல் தோறும், மஜார் என்னும் சமாதிகள் தோறும், அவர்கள் ஒவ்வொரு ஆண்டு ஊர்வலமாகச் சென்று கொடியேற்றி கொண்டாடி, சந்தனம் சாற்றி அவர்களின் புகழ்பாடி உங்கள் கவனத்தை அவர்களின் பால் ஈர்ப்பது ஏன்?

'அல்லாஹ்வின் பாதையில் வெட்டப்பட்டவர்களை மரணித்தவர்களென்று கருதாதீர்கள், அவர்கள் ஜீவிதத்தோடு இருக்கிறார்கள்' என்ற திருமறை வாக்கியத்தின் உண்மையை உங்களுக்கு உணர்த்துவதற்காக! 'அந்த அவுலியாக்களின் நினைவிடங்கள் இறை அருள் பொங்கும் திருத்தலங்கள்' என்று நீங்கள் உணர்வதற்காக!

'இறை நேசச் செல்வர்கள் சுவர்க்கத்தின் கர்ப்பதரு போன்றவர்கள், அவர்களின் நிழலில் ஒதுங்கி நின்று உங்கள் தேவைகளை நீங்கள் அடைந்து கொள்ளுங்கள்' என்று அண்ணல் நபி (ஸல்) உரைத்த ஹதீஸ் பொன் மொழியை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக!

**இறைநேசர் (அவுலியாவின்) வாசலில் வந்துநில்லுங்கள்**

'போற்றப்படும் மஜாரை உடையவர்களின் சமாதிக்கு சென்று ஜியாரத் செய்யுங்கள், உங்கள் சகல காரியங்களும் நேர்பெறும்!' என்று கூறியுள்ள கௌஸுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் வார்த்தைகளை உங்களுக்கு நினைவூட்டுவதற்காக,



மேலும், 'அடைப்பதும் திறப்பதும் அவுலியாக்களின் கரங்களில் அல்லாஹ் தந்திருக்கிறான், கெட்ட விதியை மாற்றும் இரசவாத வித்தை அவர்களிடமுள்ளது' என்று ஆண்டகை கூறியுள்ள அற்புத உண்மை உங்கள் புத்தியில் புலரவேண்டுமென்பதற்காக!

ஆம் இக்காரணங்களுக்காகதான் பக்கிரிகள் பிச்சைகாரர்கள் என்று நீங்கள் இகழும் ஃபக்கீர்கள் உங்கள் வாசல்களில் நின்று ஓதியும் பாடியும் பிச்சையெடுக்கிறார்கள்.

அவர்களின் எஜமானர் யார் தெரியுமா? அவர்கள் பாக்தாதின் இராஜ ரிஷி கௌஸுல் அஃலம் மஹ்பூபு சுபுஹானி என்று உலகம் புகழும் தத்துவார்த்த தரீக்குகளின் தலைவர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) ஆவார்கள்.

மேலும், பஸ்ராவில் வாழும் மகா சன்னிதானம், மஅசூக்கு ரஹ்மானி, இறையை அறிந்தவர்களின் அரசர், சுல்தானுல் ஆரிஃபீன் யைிது அகுமது கபீர் ரிஃபாயி நாயகம் ஃபக்கீர்களின் முன்னிலை முன்னோடி தளகர்த்தர்ஆவார்கள்,

**ஃபக்கீர்களின் பின்னணியில்**

வட நாட்டிலும் தென்னாட்டிலும் தலைசிறந்த ஞான தர்பார்களின் கோமான்களான காஜா முயினுத்தீன் கூஷிஸ்தி அஜ்மீரி (ரலி), குல்பர்காவில் காஜா பந்தே நவாஸ் (ரலி), டெல்லியில் ஹஜ்ரத் நிஜாமுத்தீன் (ரலி), திருச்சியில் பாபா தப்லே ஆலம் பாதுஷா (ரலி), முல்பாகலில் பாபா ஹைதரே சப்தர் ஒலியுல்லா, பெனுகொண்டாவில் பாபா ஃபக்ருத்தீன் (ரலி), குவாலியர் கொண்டல் முகம்மது கவுது குவாலிரி(ரலி),

ஏர்வாடியில் செய்யிதினா இப்ராஹிம் சாஹிபு ஷஹீது ஒலியுல்லா, நாகூரில் பாபா காதர் ஒலி கன்ஜசவாயி, பண்ருட்டியில் சையித்னா நூர் முகம்மது ஷா ஒலியுல்லா முதலியோர் ஃபக்கீர்களின் வழிகாட்டிகள் ஆவார்கள்.

**உலகளாவிய பேரியக்கம்**

பக்கிரிகள் என்ற ஃபக்கிர்கள் தமிழ்நாட்டிலும் தென்னாட்டிலும் மட்டும் தான் திரிகிறார்களா? அல்ல, புரிந்துகொள்ளுங்கள் அவர்கள் இந்துஸ்தான் என்ற இந்த பரந்த பூமியின் எல்லா திசைகளிலும் பல்வேறு பெயர்களோடு, பல்வேறு கோலங்களில் பல குழுவினராக வாழ்ந்து இறைபணிசெய்கிறார்கள்.

அஜ்மீரில், நாக்பூரில், மும்பையில், இப்படி இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும், இஸ்லாமிய நாடுகளிலும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக சிறுபான்மையாக வாழும் நாடுகளிலும், ஃபக்கிர்களும் அவர்களின் குழுவான ஜமாவும், அவர்கள் கூடி ஆலோசிக்கும் ஆஸ்தான்களும் உள்ளன.

ஈராக்கின் பாக்தாதில் பஸ்ராவில், ஈரானில் ஆப்கானிஸ்தானின் அனைத்து நகரங்களிலும், துருக்கியிலும், எகிப்திலும், மொரோக்கோவிலும், கிழக்கில் மலேசிய இந்தோனேஷியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா, மியான்மர், ஸயாம் நாடுகளிலும் ஃபக்கீர்களின் குருபீடம் அமைந்திருக்கிறது.

### அரேபியாவில் ஃபக்கீர்

ஏன்? சௌதி அரேபியாவிலும், ஐக்கிய அமீராட்சி நாடுகளிலும், குவைத், கத்தார் முதலிய தன்னாட்சி நாடுகளிலும் கூட ஃபக்கீர்கள் வாழ்கிறார்கள். சிரியாவிலும், பலஸ்தீனிலும் கூட ஃபுக்கராக்களின் கலாச்சாரம் உண்டு. உலகில் எந்த சக்தியும் ஃபக்கீர்களை அவர்களின் பண்பாட்டிலிருந்து தடுத்து நிறுத்தமுடியாது.

உலகம் அறிந்து கொள்ளட்டும் கல்யாணம் ஆகாதவர்களுக்கும், குடும்பஸ்தர்களான ஃபக்கீர்களுக்கும் சுய சம்பாத்திய தொழில்கள் உண்டு. உலகம் மற்றும் மறுமைக்கான கல்வி அறிவை நாடிச் செல்லும் பண்பாடு உண்டு, குடும்ப உறவுகளும் மானம் மரியாதையும் மனதில் உண்டு.

சமுதாய செயல்பாடுகளிலும் அரசியலிலும் பங்கு உண்டு. ஏன்? இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அவர்கள் பாடுபட்டு தியாகம் செய்த வரலாறுகளும் உண்டு.

### மறுமையை மறவாத இம்மை வாழ்க்கை

ஃபக்கீர்களின் கலாச்சாரம் அது தெய்வீகமானது, தியாக மனப்பான்மையுடன் கூடியது, அது இயற்கையோடு ஒன்றி வாழும் பண்பை உடையது. மறுமையை மறக்காத இம்மை வாழ்க்கை வாழ தன் அகம்பாவங்களை ஒழித்துவிட்டு ஆண்டவனின் பாதையில் தன்னை அர்ப்பணிப்பது என்பதே அவர்களின் பண்பாடு.



### மரபு

பாராளும் ஃபக்கீர்களின் பேரரசர் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா அவர்கள் தன்னுடைய மெஞ்ஞான தவராஜ சற்குருநாதர் ஹஜ்ரத் சையதினா தாதா தப்லே ஆலம் பாதுஷா (கத்) அவர்களிடம் உயர்ந்த சுல்தான், சையத் கன்ஜுல் இஸ்ரார், காஹே மஸ்த் , காஹே ஹோஷியார் என்ற அரும்பெரும் பட்டங்களை அவர்கள் திருவாய் மலர்ந்து கூறப் பெற்று

மேலும் ஹஜ்ரத் அவர்களின் வஸியத் நஸிஹத் உபதேசங்களின்படி, தன்னுடைய சகோதர ஆன்மீக கலந்தர்களுக்கு மெய்ஞான சர்குருவாக தலைமையேற்று, சன்மார்க்க தீன்பணி துவக்கினார்கள்.

உத்தரவை சிரம்மேலேற்று திரிசிரபுறமென்ற திருச்சியிலிருந்து புறப்பட்டு இருநூறு கலந்தர்களுடன் தென்னகத்தின் பல பகுதிகளிலும் சுற்றினார்கள்.

ஆண்டு மழுதும் தென்னாட்டில் பயணம் செய்து தன்னுடைய மூத்த ஆன்மீக சகோதரர் ஹஜ்ரத் சையதினா ஹைதர் சப்தர் (கத்) அவர்களின் முலுபாகல் ஷெரிஃபிலுள்ள தர்கா ஷெரிபிற்கு சென்று ரஜப் பிறை 1 முதல் 17 வரை தங்கி அங்கு தீனின் பல சேவைகள் செய்து,

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு தன்னுடைய ஷைகும் முர்ஷிதுமான சற்குருநாதர் ஹஜ்ரத் தாதா தப்லே ஆலம் பாதுஷா(ரஹ்) அவர்களின் திருச்சி தர்கா ஷெரிபில் ரம்ஜான் பிறை 1 அன்று பிரவேசித்து குருநாதரின் மஜாரின் பணியிலும் இஸ்லாமிய சன்மார்க்கப் பணிகளும் செய்து வந்தார்கள்.

எங்கெல்லாம் பாபா அவர்கள் கலந்தர் ஃபக்கீர்களுடன் பயணம் மேற்கொண்டார்களோ அங்கு உள்ள மக்களின் தீராத வியாதிகள் தீர்ந்தன. ஊமையர்கள் பேசினார்கள். முடவர்கள் குணமடைந்தார்கள்.

மற்றும் பலர் பாபாவின் தூய முகப்பிரகாசத்தை பார்த்தே இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றார்கள். பலரும் தங்கள் உடமைகளை உறவுகளைத் துறந்து பாபாவின் சீடர்களாக இறைபணி செய்ய தம் வாழ்வை அர்ப்பணிக்க முன்வந்தனர்.

பிரதான சீடர் என்ற முறையில் பாபா அவர்களை கண்ணியப்படுத்தும் வகையில் இன்றும் திருச்சி ஹஜ்ரத் தாதா தப்லே ஆலம் பாதுஷா (ரஹ்) அவர்கள் சந்தனஉருஸ் அன்று திருச்சந்தனக்குடம் ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (கத்) அவர்கள் தாதா சாஹெப் (ரஹ்) அவர்களை சந்திக்க சென்ற நுழைவாயிலின் வழியிலேயே கொண்டு செல்லப்படுகிறது.

மேலும் ஜமா ஃபக்கீர்கள் அனைவரும் அர்கானே பெனுகொண்டாவிலிருந்து வருடா வருடம் வரும் அர்கான் உள் சென்று ஹஜ்ரத் தாதா சாஹெப் (ரஹ்) அவர்களின் மஜாரில் சந்தனச் சாற்று நிகழ்த்தி நிகழ்வுற்றதும் பிரார்த்தனைகள் செய்கிறார்கள்.

பாபாவின் வாழ்நாளுக்கு பிறகு அவர்களின் சீடர்களான கலந்தர்கள் தென்னகமெங்கும் பாபா மேற்கொண்ட பயணப்பாதையில் ஆண்டுதோறும் நடை பயணம் மேற்கொண்டு ஐந்து குழுவினராக பிரிந்து சன்மார்க்க தீன் பணி ஆற்றி வருகிறார்கள். இது இந்நாள்வரை தொடர்கிறது.

**சற்குருமார்கள் நியமனம்**

ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (ரஹ்) அவர்களுக்கு பின் ஆண்டுதோறும் பெனுகொண்டா தர்கா ஷெரிஃபின் நிர்வாகிகளான பாபாவின் பரம்பரையினரில் உள்ள சதர் ஸஜ்ஜாதா நஷீன் சாஹெப் அவர்கள், பாபா அவர்கள் செய்து வந்த மாபெரும் இஸ்லாமிய பணியை தொடர்ந்து தலைமையேற்று நடத்திவர ஷாபானுவா (மஷாயகீன் கலிபா) ஃபக்கீர்களில் திருமணமாகாத ஒருவரை ஜமாவின் சற்குருவாக நியமனம் செய்வது மரபாக உள்ளது.

சற்குரு தஸ்தார்பந்தி நியமனம் என்று சொல்லப்படும் இந்நாள் இஸ்லாமிய மாதம் ஜமாதில் ஆகிர் பிறை 9 அன்று பெனுகொன்டா தர்கா ஷரீஃபில் நடைபெறுகிறது.

அச்சமயம் ஷா ஜலாலியா (ஷா மூஸா சுஹாக், ஷா சுடிதண்டா) ஷா தபக்காத்தி, ஷா மலங்கு, ஷா ரிஃபாயியா (அலிஃப் அல்லாஹ் ஷா அப்தாலியா) அனைத்து ஜமா ஃபக்கீர்கள் புடை சூழ மற்றும் மஷாய்க்குமார்கள், குருமார்கள், உலமாக்கள், மார்க்க அறிஞர்கள் ஆகிய இவர்களின் மத்தியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில்,

அல்லாஹ்வின் ரஸூல் முகம்மது ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் யாரை நாடுகிறார்களோ அந்த ஷாபானவா ஃபக்கீர் சற்குருவாக, ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன்(கத்) அவர்களின் துஆ பரகத்தை கொண்டு நியமனம் செய்யப்படுகிறார். இது பாரம்பரிய மெய்ப்பாடு ஆகும்.



தொடர்ந்து ஹஜ்ரத் சையதினா ஷாபாஸ் கலந்தர் (ரஹ்) அவர்களை தலைமையாக ஏற்ற ஷா ஜலாலியா குழுவை சேர்ந்த ஃபக்கீர்களில் திருமணமாகாத ஒருவரை ஜலாலியா சற்குருவாக ஸஜ்ஜாதாநஷீன் சாஷெப் நியமனம் செய்வார்கள்.

அதன்பின் ஹஜ்ரத் காஜா பதீவூத்தீன் அல்ஹஸனி வல் ஹூஸைனி (ரஹ்) அவர்களை தலைமையாக ஏற்ற குழுவான ஷாதப்காத்தி மண்டலிலிருந்து கல்யாணமாகாத ஒரு ஃபக்கீரை 'மலங்காக' தேர்ந்தெடுத்து அறிவிப்பார்கள்.

ஹஜ்ரத் யைதினா அஹமத் கபீர் ரிஃபாயி (ரஹ்) நாயகம் அவர்களை தலைமையாக ஏற்ற ரிஃபாயி ஃபுக்கராக்கள் ஆஸ்தானா (குருபீடம்) நியமனம் செய்து அறிவிக்கும் 'சர்கலிபா' அவர்களை தலைவராக திருப்தியுடன் ஏற்றுகொள்வார்கள்.

ஸதர் சவுக் என்று பெருமையுடன் சொல்லக்கூடிய ஜமா ஃபக்கீர்களின் மஷாய்குமார்களின் தலைமைப் பீடமாக இறைநேசர்களை உருவாக்கும் மெஞ்ஞான சர்வ கலா சாலையாக பாபா ஃபக்ருத்தீன் (ரஹ்) அவர்களின் தர்கா ஷெரிப் இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது.

**உரூஸ்**

எக்காலமும் பாபாவின் இந்த ஏற்பாடுகளை மெய்ப்பிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டிலும் இந்தியாவின் தென் மற்றும் வட மாநிலங்களிலிருந்தும் ஃபக்கீர்கள், மஷாயிக்குகள், சூஃபிகள் கலந்து கொண்டு பெனுகொண்டாவில் நடைபெறும் பாபாவின் உருஸ் மேளாவை சிறப்பிப்பதை கண்கூடாக காணலாம்.

ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (ரஹ்) அவர்கள் இந்த உலகை விட்டு தன்னை மறைத்து கொண்ட நாள் ரம்ஜான் பிறை 27ஆகும். அன்றைய தினம் பாபாவின் வம்சவழிப் பரம்பரையினரான சையதுமார்கள் பாபாவின் மஜாரில் சந்தனச்சாற்று மற்றும் பிரார்த்தனைகள் செய்து உருஸ் நடத்துகிறார்கள்.

ஜமாதில் ஆகிர் மாதம் அன்று நடக்கும் பெரிய உருஸ் மேளா என்பது ஷா பானவா ஜமாவின் அர்கான் சற்குரு நியமனம் செய்வதற்காகவே பாபா ஃபக்ருத்தீன் (கத்) அவர்களே ஜீவித்ததுடன் இருக்கும்போது தொடங்கிவைத்த அருளேற்பாடு என்பது பாரம்பரிய தகவலாக உள்ளது.

அதை உண்மை படுத்தும் வகையில்
"காயமே அர்கான் அதனி ஹஒஞ்சையே அர்தோ - மியானி அஸ்ஜாயே பாபாயே ஃபக்ருத்தீன் அஷ்ரபே தோ ஜஹானி" என்ற பொன் மொழிக்கேற்ப, ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தீன் (கத்) அவர்களின் உயர் தியாக இஸ்லாமிய ஆன்மீகப் பணி விரிவடைந்து வருகிறது.

**பயணப்பாதை**

ஷா பான்வா ஜமா அர்கானே பெனுகொண்டா ஃபக்கீர்கள், பாபா அவர்கள் வாழ்நாளில் சென்று தங்கிய தர்காக்கள், பள்ளிவாசல்களை சேர்த்து அதை மேலும் விரிவுப்படுத்தி 360 தர்காக்கள், 360 பள்ளிவாசல்கள், 4 சவுக், 14 சவுக்கண்டிகள், ஆலயங்கள், தர்கா தைக்கால்களில் அடங்கியுள்ள இறைநேசச் செல்வர்களின் ஸ்தலங்கள் தோறும் சென்று இன்றும் ஜியாரத் செய்கிறார்கள்.

ஜமா ஃபக்கீர்கள் இறைநேசர்களான அவுலியாக்களின் வாழ்க்கை சரித்திரங்களை நினைவூட்டும் வகையில், சந்தன சாற்று, பிரார்த்தனைகள், ஜிக்ர் தியான சபைகள், உபந்நியாசங்கள் மற்றும் பல புனிதப் பணிவிடைகள் செய்வதோடு,

யூனானி ஆயுவேத மருத்துவம், அஸ்மா தலஸ்ஸமாத் என்ற நல்ல காரியங்களுக்கு மந்திர யந்திர வேலைப்பாடுகள் முதலிய நல்உதவிகளை சாதிமத இன பேதமின்றி அனைத்து மக்களுக்கும் செய்து வருகிறார்கள்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் ஷா பான்வா ஜமா அர்கானே பெனுகொண்டா சர்குருக்களில் பல ஃபக்கீர்கள் இறைநேசத்தை பெற்ற ஒலிமார்களாக பரிணமித்து மெய்தவ வாழ்வு வாழ்ந்து, இஸ்லாத்தின் சுடர்களாக நாட்டின் பல பகுதிகளிலும் மறைந்து சிறந்து தர்கா ஷெரிப்களில் ஆன்ம ஒளிவீசிக் கொண்டிருப்பதை காணலாம்.



## பேரின்பம் நாடும் பெண் ஃபக்கீர் : மஸ்தானிகள்

சிற்றின்ப உறவுகளைப் புறக்கணித்துவிட்டு பேரின்பத்தை விழைந்துதேடும் உரிமை ஆண்களுக்கு மட்டும்தான் உண்டா? பெண்களுக்கு அந்த உரிமை கிடையாதா? இந்த வினாவினோதமாக தோன்றலாம். ஆனால்

"ஆண்களில் படைத்த ஆண்டவன் மீது காதல் கொண்டு வித்தியாசமான துறவு வாழ்க்கையை மேற்கொள்ளும் மஸ்தான்களைப் போல, நாங்களும் படைத்த நாயனின் மீது நேசம் கொண்டுள்ளோம், இந்த புற உலக வாழ்க்கையின் சுகபோகங்களில் சிற்றின்பங்களில் எங்களுக்கு நாட்டமில்லை, நாங்கள் பெண்களில் உள்ள ஃபக்கீர்கள் எங்களுடையப் பெயர் மஸ்தானிகள்"

இவ்வாறு பேசும் ஒரு பரபரப்பான, பார்ப்போரைப் பரவசப்படுத்தும் பராபரனின் பக்தையர் திருக்கூட்டம் இஸ்லாமிய சமுதாயத்திலும் இருக்கிறது. இந்த மஸ்தானிகளில் திருமண உறவை நுகர்ந்திராத கன்னிப் பெண்களுமிருக்கின்றனர், திருமண உறவை, கணவனின் மரணத்தாலோ, விவாகரத்தாலோ இழந்த விதவைப் பெண்களுமிருக்கின்றனர்.

உலகில் எங்கெங்கெல்லாம் ஃபுகராக்களின் கலாச்சாரம் பரவியிருக்கிறதோ, எங்கெல்லாம் ஜமா ஃபக்கீர்கள் கூட்டமாக குழுவினவராக வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் மஸ்தானிகளின் அமைப்பும் இருந்துவருகிறது.

இப்புனிதப் பெண்கள், நாங்கள் அல்லாஹ்வாகியப் பரம பராபரப் பொருளை அறிந்து அடைந்து கொள்வதற்காக, அவனுடைய லிகா என்னும் முகதரிசனத்தைப் பெறுவதற்காக தனிமையைத் தேர்ந்தெடுத்து கொண்டுள்ளோம், என்று தெளிவுடனும் தெம்புடனும் கூறுகிறார்கள்.

"ஆனாயினும் பெண்ணாயினும், எவர்கள் மெய்யாகவே விசுவாசங்கொண்டு, நற்கருமங்களை செய்கிறார்களோ அவர்கள் தாம் சுவனபதி செல்வார்கள். அவர்கள் அற்ப அளவும் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள்." (திருகுர்ஆன் - 4:124)

பெனுகொண்டாவிலுள்ள, பாபா ஃபக்ருத்தீன் ஒலிநாயகத்தின் தர்பாரில் இதுவும் ஒரு வித்தியாசமான அதிசயம். ஆனால் இதை இஸ்லாமிய சன்மார்க்கம் அனுமதிக்கிறதா? பெண் துறவு, பெண் தன்னை இறைவனுக்காக தனிமையாக்கி கொள்கிறாள் என்பதை ஏற்கிறதா?

ஏற்கிறது அனுமதிக்கிறது என்பதை திருகுர்ஆன் கூறும் மாதரசி மரியம் (அலை) அவர்களின் வரலாறு நமக்கு தெளிவுபடுத்துகிறது. இம்ரானும் ஹென்னாவும் பெற்ற எழில் மகளிரான மங்கை மரியம் (அலை) ஒரு மாடத்தில் தனிமையில் தங்கியிருந்தார்கள்.

பெண்களிலே நபிமார்கள் உண்டா என்று கேள்வி எழுப்பப்பட்டால், உதாரணத்துக்கு இவர்களை தான் அந்த பெண்நபி என்று உலகம் ஒப்பு கொள்ளத்தக்க கன்னியர் மரியம்(அலை) அவர்களிடம், உணவுடன் அவர்களின் சிறிய தந்தையரான நபி ஜக்கரியா (அலை) அவர்கள் வரும்போதெல்லாம்,

மங்கையரின் முன் இன்சுவை சிந்தும் கனிகள் பரத்தப்பட்டிருப்பதை நபி ஜக்கரியா அவர்கள் பார்ப்பார்கள். கோடை காலத்தில் குளிர்கால கனிவகைகளையும் குளிர் காலங்களில் கோடை கால பழவகைகளையும் மகளின் அருகில் கண்டுவிட்டு சிறிய தந்தை "இவைகள் ஏது?" என்று வியப்புடன் கேட்பார்கள்.

"இவை சுவர்க்கத்திலிருந்து இறைவனால் எனக்கு இறக்கிவைக்கப்பட்ட உணவுகள்" (திருகுர்ஆன்-3:37) என்று மாதரசி மரியம் கூறுவார்கள். சிற்றின்பத்தையே நுகராமல் உலகம் போற்றும் ஒரு உன்னத திருத்தூதரை இரக்ககுணமுள்ள நபி ஈசா(அலை) அவர்களை ஈன்றெடுத்த அந்நங்கையருக்கு,

ஈசாவின் பிறப்புக்குப் பிறகும் இறையுடன் பேரின்ப உறவைப் பேணி, உலகத்துறவு வாழ்க்கை வாழ்ந்த அன்னை மரியம் (அலை) அவர்கள் தான் மஸ்தானிகளின் முன்னோடி ஆவார்கள்.

இந்த வரிசையில் அடுத்திருப்பவர்கள் நபி ஈசா (அலை) அவர்களின் சிஷ்யையென்றும், அவர்களின் மகள் புனித சாராவின் தாயாரென்றும் கிருஸ்துவப் பேரினத்தின் ஒரு பிரிவினரால் கொண்டாடப்படும் சிறப்புக்குரிய மரியா மகதலேனா ஆவார்கள்.



நபி ஈசா (அலை) உயிர்த்தெழுந்த மூன்றாம் நாளில் அவர்களை முதன்முதலாக சந்தித்த பெருமையோடு, நபி ஈசா (அலை) விண்ணகத்தில் உயர்த்தப்பட்ட பிறகும், அவர்களின் மூலம் வெளிப்பட்ட ஆண்டவனின் அன்புமார்க்கம் பூமியில் தழைக்க தங்களை ஒப்புவித்துக் கொண்ட அப்போஸ்தலர்கள் என்ற ஹவாரியூன்களில் இப்பெண் துறவியும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒன்பதாண்டு காலம் இல்லற வாழ்க்கை வாழ்ந்து பதினெட்டாம் அகவையில் விதவையான மூமின்களின் தாய், அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் நாற்பதாண்டு காலம் புனித பெண் துறவியாக வாழ்ந்தார்கள், அந்த புனித அன்னையர் தான் மஸ்தானிகளின் கலாச்சாரத்தை இஸ்லாத்தில் துவக்கி வைத்தவர் ஆவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் பொறுப்பேற்ற குலஃபாயே ராஷிதீன்கள் நால்வரும் மதினாவின் கஜானாவிலிருந்து அவர்களுக்கு பெருமளவில் செல்வங்களை அனுப்பி கொண்டிருந்தார்கள். அன்னை அவர்களோ, வந்த செல்வங்களை ஏழை எளியவர்களுக்கும் அநாதைகளுக்கும் வாரிவாரி வழங்கிவிட்டு எளிய ஃபக்கீரின் வாழ்க்கையை தங்கள் இல்லத்தில் நடத்திவந்தார்கள்.

நபி பெருமான் (ஸல்) அவர்கள் புவியில் வாழ்ந்த நாட்களில் சில பிராட்டிமார்களுக்கு ஆறு மாதத்துக்கான வாழ்க்கை தேவைகள் ஒதுக்கப்பட்டுவிடும், சிலருக்கு ஒருமாத தேவைகள் ஒதுக்கப்படும், சிலருக்கு ஒருவார கால அத்தியாவசியப் பண்டங்கள் தரப்படும். ஆனால் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மட்டுமோ அன்றன்றைக்குமான தேவைகள் அன்றன்றைக்கு ஒதுக்கப்படும்.

நபிகள் நாயகம் (ஸல்) தமது துணைவியர் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு தனது மரணத் தருவாயில் வஸியத் செய்தார்கள், "மீண்டும் என்னை காணும் விருப்பம் உங்களுக்கு இருக்குமானால், உங்களுடைய ஜீவிதம் ஃபக்கீர்களுடைய ஜீவிதமாக ஆக்கி கொள்ளுங்கள், மேலும் செல்வந்தர்கள் உடைய சபைகளில் இருந்து ஒதுங்கி விலகியிருங்கள், உங்களுடைய ஆடைகளில் ஒட்டுபோட்டு தைக்காமல் இருக்க வேண்டாம்".-கீமியா ஸஆதத் .

கணவரோடுவாழ்ந்த காலத்திலும் கணவரை இழந்த விதவை கோலத்திலும் தேவைகளுக்காக இறைவனையே எதிர்பார்த்திருக்கும் இந்த நிலையில் வாழ்ந்த ஒரு இனிய மங்கை நல்லாரை பெண்களில் ஃபக்கீர், பேரின்ப மஸ்தானி என்று எப்படி கூறாமலிருக்க முடியும்?

எம்பெருமானார் (ஸல்)அவர்களின் மகளார் ஹைருன் நிசா ஃபாத்திமுத்து ஜுஹரா(ரலி)அவர்கள் திருமணமாவதற்கு முன் சிறுமியாக இருந்த பருவத்தில் அஸ்ஹாபுல் சுபா என்ற திண்ணை தோழர்களுக்கு அதிகமதிகம் பணிபுரிந்து வந்துள்ளார். கன்னியரான மஸ்தானியரின் பட்டியலில் அவருக்கு பெருமைக்குரிய இடமுண்டு.

ராபியத்துல் பஸ்ரியா என்றும் ராபியத்துல் அதவியா என்றும் புகழப்படும் இப்பெண்ணரசி ஹிஜ்ரி 95 ம் ஆண்டு ஈராக்கில் பஸரா துறைமுகப்பட்டினத்தில் அதவியா என்ற கோத்திரத்தில் தோன்றினார்கள்.

இளமையிலேயே பெற்றோரை இழந்துவிட்டு அநாதையான இவர்களை கொடியவனான உறவினன் ஒருவன் அடிமையாக விற்றுவிட்டான். எஜமானனிடம் இல்லத்தில் பகலெல்லாம் உழைத்துவிட்டு அவன் வீட்டின் மேல் தளத்தில் இரவெல்லாம் தொழுது வந்தார்கள்.

நள்ளிரவில் தொழும் அடிமைப் பெண்ணின் தலைக்கு மேல் ஒரு ஜோதி தோன்றுவதை பார்த்துவிட்ட எஜமானன் அவர்களை விடுதலை செய்துவிட்டான். புனித நாயகி மக்காவுக்குப் புறப்பட்டார்கள், கஅபத்துல்லாவோ எதிரில் வந்து காட்சியளித்தது. “இந்த கட்டிடத்தை நான் காண விரும்பவில்லை. இதற்குரியவனான அந்த இறைவன் எனக்கு காட்சி தரட்டும்!” என்று கோபித்து கொண்டார்கள்.

தொப்பிகளைத் தைத்து விற்று ஜீவனோபாயம் செய்தார்கள். ஒரு கையில் ஒரு தீனார் மறு கையில் ஒரு தீனாருமாக நின்ற இவர்களை மகான் ஹசன்பசரி அவர்கள் வினவியபோது, இருகையிலுமுள்ள காசையும் இணைத்தால் இறைவனுக்கு இணைவைப்பதுபோல் ஆகிவிடுமோ என்று பயப்படுகிறேன் என்றார்கள்.

இப்படி இறையச்சமும் பக்தியும் பண்பும் கொண்டு தன் தலையணை அருகில் தன் மையித்துக்கான கஃபன்



துணியை எந்நேரமும் வைத்திருந்தார்கள். 90வது வயதில் ஹி.185ல் காலமான மஸ்தானிகளின் முன்னோடியை, அவர்கள் வாழ்ந்த பஸ்ராவிலேயே நல்அடக்கம் செய்யப்பட்டார்கள்.

கலந்தரியா தரீக்காவை சார்ந்தவர்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்பது கலந்தர்களில் இவர்களும் ஒருவர் என்று கூறுகிறார்கள்.

மைமூனத்தல் அதவிய்யா, ஷஃவானத்தல் பிஸ்ரிய்யா, நஃபிஸத்துல் மிஸ்ரிய்யா, ராயிஹத்துல் குர்திய்யா, ரய்ஹானத்துல் ஹஃபஸிய்யா ஆகிய இவர்கள் மஸ்தானிகளாக வாழ்ந்து வரலாற்று புகழ்பெற்றவர்களென்பதை கௌதிய்யா மவுலீது நமக்கு உணர்த்துகிறது.

இந்த பெருமைக்குரிய தெய்வீக பாரம்பரியத்தை பேணும் சுமார் இருபதுக்கும் மேலான எண்ணிக்கையுள்ள மஸ்தானிகள் இன்றும் பெனுகொண்டாவில் பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவின் தர்கா ஷரீஃபில் வாழ்ந்து வருகிறார்கள்.

துறவிகளான ஷெய்குமார்களுக்கு தொண்டு செய்வதோடு, மக்களுக்கு ஞானோபதேசம், கைவைத்தியம், மற்றும், தலஸ்ஸமாத் உதவிகளையும் செய்கிறார்கள். இறை நேசமும், இறைவனை அடைய ஃபக்கீர்கோலமும் பூண்டுள்ள இவர்களின் பேரின்ப நாட்டம் இறைவனால் பொருந்தி கொள்ளப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஏனெனில் இறைவன் திருகுர்ஆனில் தன் நல்லடியார்களை குறிக்கும்போது : “அவர்கள் அவனை நேசிக்கின்றனர். அவன் அவர்களை நேசிச்கின்றான்.” (5:54) என்று கூறியுள்ளான். அந்த வசனத்துக்குரியவர்களில் ஆண்மக்களான மஸ்தான்களோடு பெண் ஃபக்கீர்களான மஸ்தானிகளும் இடம் பெறுகிறார்கள் என்றால் அது மிகையாகாது.

இறையாட்சியாளர்களான நுகபாக்கள், நுஜபாக்கள், குத்பு கௌதுமார்கள், அவ்தாதுகள் மற்றும் ஹவாரியூன்களில் பெண்களான இந்த ஃபக்கீர் மஸ்தானிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

## சிற்றின்பம், பேரின்பம் - வேறுபாடும் விளக்கமும்.

சிற்றின்பம் பேரின்பம் என்பதின் விளக்கமென்ன சிற்றின்பத்தை நுகர்பவர்கள் பேரின்பத்தை அடையமுடியாதா? பேரின்ப பாதையில் சிற்றின்பம் தடைக்கல்லா? அல்லது சிலர் சொல்வதுபோல சிற்றின்பத்தின் தொடராகத்தான் பேரின்பத்தை அடையமுடியுமா?

இந்த கேள்விகளெல்லாம் உலகில் எல்லா மதங்களிலும் உண்டு. கேட்பவர்களுக்கும் கேட்கப்படுகிறவர்களுக்கும் இதுவரை புரிந்திராத சில விஷயங்களை இப்போதாவது நாம் ஆராய்வது பலன்தரக்கூடும்.

சிற்றின்பம் புலன் வழி பாலுருப்பை ஆதாரமாக கொண்டது. பேரின்பம் ஆன்மநிலை இருதயத்தை மையமாக கொண்டது. சிற்றின்பம் குறிப்பிட்ட நேர அனுபவத்தோடு முடிந்துவிடுவது. பேரின்பம் பலமணிநேரம் பல நாட்கள் வரை நீடித்திருப்பது.

இரண்டும் ஒருவித போதைதான். சிற்றின்பத்தில் விளைவுகள் இரண்டு அவை இனஉருப்பிலிருந்து உண்டாகும் ஒருவித சுகம், மற்றொன்று மனிதனிலிருந்து மனித கரு உண்டாகும் இனவிருத்தி.

பேரின்பத்திலும் விளைவுகள் இரண்டாகும். ஒன்று இருதயம் என்ற உருப்பிலிருந்து பொங்கிவரும் முடிவிலா இன்பம். மற்றொன்று மனிதனின் பூத உடலிலிருந்து இறைவனின் சூக்கும கோலம் வெளிப்படும் தெய்வதரிசனம்.

சிற்றின்பத்தில் ஆணும் பெண்ணும் ஈடுபடுகிறார்கள். ஆணின் இன்பம் ஒரு எல்லையில் முடியும், காலையில் உதித்த சூரியன் மாலையில் அஸ்தமிப்பது போல் மறையும். பெண்ணின் இன்பம் பிறையைப் போல தோன்றி வளரும் நிலவைப் போல வளர்ந்து பின்னர் படிப்படியாகத் தேயும்.

இது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இறைவன் ஏற்படுத்தியுள்ள புனிதமான உறவின் விளைவு. உலகம் இந்த இல்லற இன்ப உறவை மையமாக வைத்துதான் சுழன்று வருகிறது. கணவன் மனைவி குழந்தைகள், குடும்பம் வீடு சுற்றம், குலம் சாதி மதம், மொழி நாடு தேசம், எல்லாமே இந்த சிற்றின்ப உறவென்ற விதையிலிருந்து தோன்றும் விருட்சங்கள் வளரும் வனாந்தர காடுகளாகும்.



ஆனால் ஒரு மெய்ஞ்ஞான குரு, அவருக்கும் அவருடைய சிஷ்யன் அல்லது சிஷ்யைக்கும் இடையிலான உறவு பேரின்ப உறவு. குருவை, சிஷ்யனாயினும், சிஷ்யையாயினும் தங்கள் இருதயத்தில் அமர்த்துகிறார்கள். குருவின் ஆன்மா சீடர்களின் ஆன்மாவுடன் ஒன்று கலக்கின்றது. இது உடல் உறவல்ல அதனை மிஞ்சிய ஆன்மஉறவு. அப்போது பரலோக சாம்ராஜ்யத்தின் கதவுகள் திறக்கின்றன.

சுவர்க்கத்தில் நல்லடியார்கள் தங்கள் காதுகளால் கேட்டிராததும் கண்களால் பார்த்திராததுமான இன்பங்களை காண்பார்கள் என்று திருகுர்ஆனும் இதர வேதநூல்களும் வருணிக்கும் பேரின்ப வாழ்க்கையை நோக்கி இவர்கள் முன்னேறுகிறார்கள்.

காலத்தாலும் தூரத்தாலும் தனக்கு முன்னும் பின்னுமுள்ள நிகழ்வுகள் கனவாகவும் நனவாகவும் இவர்களுக்கு தரிசனமாகிறது. இல்ஹாம், இல்மலதுன்னி, இஷாரத், பஷாரத், சூக்கும, துரிய, ஒளி ஒலிக் காட்சிகள் தோற்றமாகின்றன.

மதங்கள், மனிதனை இந்த மறுஉலக வாழ்க்கையின் பேரின்பத்துக்கு ஆயத்தப்படுத்துகின்றன. ஆன்மாக்கள் பூமியில் பிறந்து பிறந்து சிற்றின்ப வேட்டையாடி திரிந்து அலுத்துப் போகும் போது பேரின்பத்தை தேடமுனைகின்றன.

இன்பவேட்டையில் அலையும் ஆன்மாக்கள் உடலெனும் கூடுகளில் பயணித்து இறப்பு பிறப்பு என்னும் வாயில்கள் தோறும் நுழைந்து ஆசை அவஸ்தை என்ற இருவித அனுபவங்களை அடைகின்றன.

ஒவ்வொரு பிறப்பின போதும் ஆன்மாவின் கண்முன் உலகின் இன்பங்கள் பரத்திவைக்கப்படுகின்றன. உண்டுடுத்துப் பூண்டு சையோகித்து உண்ட மயக்கத்திலேயே உறங்கும் ஆன்மா ஒவ்வொரு மரணத்தின் பிறகும் சூக்கும உலகில் நுழைந்து சிலகாலம் உலக வாழ்க்கையின் பிரதி பலன்களான அனுபவங்களை நுகர்ந்துவிட்டு பூமிக்குள் பிறந்து மீண்டுவருகிறது.

இம்மையிலும் மறுமையிலும் தான் பெறும் அனுபவங்களால் ஆன்மா தெளிவு பெறுகிறது. எதை தேடலாம் எதை தேடக்கூடாது என்பதும், குளிரும் சூடும், துன்பமும் இன்பமும், மகிழ்ச்சியும் வேதனையும் இன்னின்ன என்பதும் அதற்கு மிகத் தெளிவாக விளங்கிவிடுகிறது.

நீண்ட நெடும் பயணங்களின் வரிசையில் ஆன்மா உலகின் இன்ப துன்ப அனுவபங்களையும் சுவர்க்க நரகத்தின் சுகதுக்கங்களையும் புறக்கணித்துவிட்டு, இப்படி இம்மைக்கும் மறுமைக்கும் நடுவே அலைக்கழிக்கப்படும் தான்யார் தன்னை அலைக்கழிப்பவன் யார் என்று ஆராய முற்படுகிறது.

அழகு, அறிவு, இன்பம், இசை, கற்பனை, காதல், நீதி, வீரம், தியாகம், கலை, கலாச்சாரம், மதம், மொழி, இனம், பண்பு, பண்பாடு, போர், அமைதி இவையாவும் ஏதோ எங்கிருந்தோ வருவது அல்ல, வருவது எல்லாம் அதுதன்னிலிருந்தே புறப்படுகிறது என்பதை ஆன்மா அறிகிறது. உலகம் மறுமை வாழ்க்கைக்கான பயிற்சிகூடம் என்பது அதற்கு தெளிவாகிறது.

தனக்கு ஒரு உடல் அதற்கு ஒரு வெளிப்படையான மேனி, ஆனால் தனக்குள்ளே ஒளிந்து கொண்டு ஒரு குடல், ஒரு ஈரல், ஒரு நுரையீரல், ஒரு இருதயம் தன்னிச்சையாக செயல்படுவதுபோல,

தன் மனம் அதன் நிகழ்வுகளான நினைவுகள் சிந்தனைகள் கவலைகள் கனவுகள் என்ற வெளிப்பண்புகளைப் கடந்து, உடலுக்குள் இருப்பது போல மனத்துக்கும் உள்ளில் ஏதாவது அருவப்பொருட்கள் கிடந்தபடி வெளிமனத்தை இயக்குமோ ஆட்டுவிக்குமோ? என்ற கவலையோடு தன்னை ஆராய ஆன்மா முற்படும்போது மனமும் எண்ணங்களும் கூட நம் கட்டுப்பாட்டிலுள்ளது அல்ல என்பது புலனாகிறது.

உடலும் என் செயல்பாட்டில் இல்லை, மனமும் என் கட்டுப்பாட்டில் இல்லை. என் சுற்றுப்புற சூழலும் என்கட்டுப்பாட்டில் இல்லை. இல்லை இல்லையென்றால் யார் நான் யார்? எனக்குள்ளிருந்து என்னை ஆட்டுவிக்கும் என்னுள் மறைந்திருக்கும் கள்வன் அவன்யார் என்றகேள்வி விசுவரூபமாக எழுகிறது.

அப்போது தான் ஆன்மீகப்பாதையில் முன் சென்று கொண்டிருக்கும் குருமார்களிடம் தான் மண்டியிட வேண்டும், அப்போது தான் தனக்குள்ளான தன்னை அறியமுடியும் என்று ஆன்மாவுக்கு தோன்றுகிறது.



(இறைவா) உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம், எவர்கள் மீது நீ அன்பு காட்டினாயோ அவர்களின் பாதையில் வழிநடத்து (திருகுர்ஆன் 1:5:6) என்று ஆன்மா தொழுதும் அழுதும் புலம்புகிறது.

அப்போதைய தன் மனித கோலத்தில் அலைந்து திரிந்து மெய்ஞ்ஞான குருவை கண்டடைந்து அவரின் வழிகாட்டுதலில் தன்னையறிய பிரயத்தனப்படுகிறது.

குருவின் அருளால் முடிவான முடிவில் தன்னையே தன்னை ஆட்டுவிக்கும் ஆண்டவனென்று அறிந்து அதிசயப்பட்டு நிதானித்து துன்ப இன்பங்களிலிருந்து விடுபட்ட நிலையை முடிவின் முடிவாக அது அடைகிறது.

உலகமகா குரு கௌஸுல் அஃலம் மஹ்பூபு சுவுஹானி ஆண்டவர்கள் சொல்கிறார்கள் -

“மனிதர்களை நோக்கி முன்லுள்ள வேதங்களில் இறைவன் அழைப்பு விடுத்திருக்கிறான், அடியானே நீ என்னையே அறிந்து வணங்கு. அப்படி எனது உண்மை அடியானாக நீ ஆகிவிடும்போது உன்னை நான் என்னைப்போல ஆக்குவேன் குன் என்று கூறியதும் நீ கருதியது எதுவும் உண்டாகிவிடும் ஆற்றலையும் உனக்கு கொடுப்பேன்.”

-புதுஹுல்கைப்

எத்தனை அல்லாக்கள் எத்தனை ஆண்டவன்கள் உண்டாகி அகிலத்தை ஆளமுடியும் என்று நகைக்கத் தோன்றுகிறதா? ஆனால் முடிவின் முடிவான முக்தி நிலை இறைநேசநிலை மோட்ச நிலை, வீடு பேறு, என்பதெல்லாம் இதுதான் என்பது சிந்தித்தால் புரிந்துவிடும்.

எத்தனை ஆண்டவன்கள் இப்படி தோன்றினாலும் அவன் ஒரே ஆண்டவன்தான். உங்கள் அனைவரையும் நாம் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்திருக்கிறோம் என்பதே உண்மை.

எல்லாவற்றையும் அடைவதற்காக அனைத்து மதங்களின் ஆத்மார்த்த வேண்டுகோள் மனிதன் ஆசைகளிலிருந்து விடுபடவேண்டும் என்பதுதான் இதுதான் உண்மை. மனிதன் புரிந்துகொள்வானா?

உலக இச்சைகளின் மயக்கத்திலிருந்து விலகி பேரின்ப நித்ய வாழ்வுக்கு தன்னை தயார்படுத்திகொள்ள - உறக்கத்திலிருந்து விழித்தெழுவானா?

*கொடிய கெடு மாயைதனை கூடாதிருக்கின்ற*
*குறியருள்வ தென்றுபுகல்வீர்?*
*கூர்குணமசத்து நிற்கின்ற பரவெளியலாம்*
*குடிகொண்டிருந்த குருவே!*
*கோடானு கோடி மறையாலும் மறியா குணங்*
*குடிகொண்ட கருணைவடிவே*
*ஹூ லாயிலாஹ இல்லல்லாஹூ என்பதற்*
*குரிய மஹ்மூது நபியே!*

*- குணங்குடி மஸ்தான் ஒலியுல்லா.*

கலிமா என்னும் ஏகத்துவ உறுதிமொழி என்பது இறைவன் ஒருவனே என்று வாயால் உரைத்து மனதை அதில் பழக்கும் பயிற்சியாகும். தொழுகையின் தாத்பர்யம் அல்லாஹ்வாகியப் பராபரப் பொருளை அகத்தில் அகலாது நிறுத்தும் பயிற்சியாகும்.

நோன்பெனும் கடமையின் மாண்பு அகத்தில் அல்லாஹ்வை நிறுத்துவதை சிதறடித்து தடுக்கும் உடல் ஊன் ஆசைகளை இச்சைகளை விலகி நிற்கும் பயிற்சியாகும்.

ஜக்காத் என்னும் கடமை பொருளாசையைத் துறந்து இறையாசையை நெஞ்சில் வைக்கும் பயிற்சியாகும்.

ஹஜ்ஜின் கடமையோ, உலகில் நீஒரு பயணி என்பதை உணர்த்தி இறைவனை அடையும் பாதையில் உன்னை விரைந்து நடக்கச் செய்யும் பயிற்சியாகும்.

ஐந்து பயிற்சிகளின் முடிவில் லாயிலாஹ இல்லல்லாஹ் - நான் இல்லை இறைவனே இருக்கின்றான் மீண்டும் நீ மனதால் உணர்ந்து உய்வு பெறுவதாகும்.

மஸ்தான்களும், மஸ்தானிகளும் மார்க்க கடமையான ஷரிஅத் பயிற்சிகளோடு நின்றுவிடாமல், தங்கள் வாழ்க்கை முழுவதையும் அந்த இலட்சியப்பாதையில் அர்ப்பணித்துவிட்டவர்களாகும். மஸ்தானிகளான பெண் ஃபக்கீர்களின் இலட்சிய வாழ்க்கையைப் புரிந்து கொண்டு போற்றுவது நமது கடமை.

*அருள்மறை திருகுர்ஆன் கூறுகிறது ஆகவே (அந்நாளில்) வலக்கையில் எவனுக்கு வினைச்சீட்டு கொடுக்கப்படுகிறதோ அவன் வெகு இலகுவாக கேள்விக் கணக்கு கேட்கப்படுவான். அவன் சந்தோஷப்பட்டவனாக (அவள் சந்தோஷபட்டவளாக) தன்னுடைய (எந்தப் பிறவியைச் சார்ந்த தனக்கு இதமான*



*மனைவி கணவன் தாய் தந்தை மகள் எந்த உறவிலும் கூடிய குடும்பத்தாரிடம் திரும்புவான் (திரும்புவாள்) (திருகுர்ஆன் 84 : 7,8,9)*

*எவனுடைய வினைச்சீட்டு அவனுடைய முதுகுப்புறம் கொடுக்கப்பட்டதோ, அவன் தனக்கு கேடுதான் என்று கூறிக்கொண்டே நரக (மாகிய உலக) த்தில் மீண்டும் நுழைவான்.*

*ஏனென்றால் அவன் (இம்மையிலிருந்த ஒவ்வொரு பிறவியிலும்) தன்னிலை மறந்து (அந்தந்தப் பிறவியிலும்) தன் குடும்பத்தார்களை (இவர்களே சதம், நித்யமானது இந்த குடும்ப சுகம் என்று (கருதியவனாக) தன் ஆன்மாவை விடுதலையாக்கும் முயற்சி எடுக்காமல்) மிக்க ஆனந்தத்தில் மிதந்தான்.*

*(திருகுர்ஆன் 84: 10,11,12,13)*

முக்தி நிலை, நிர்வாணம், ஆன்மவிடுதலை என்று கூறப்படுவதெல்லாம் ஆன்மா உலக இச்சைகளை முற்றிலுமாக துறக்கும் நிலையாகும். இது நஃப்ஸே முத்மஇன்னா என்பதாகும். இந்த நிலை காமிலா என்றும் ராளியா மர்ளியா - பராபரப்பொருளுடன் பொருந்தி, பொருந்தி கொள்ளப்பட்ட நிலையாகும். உலக தேவைகளில் பற்றற்ற நிலையாகும்.

நபி பெருமான் (ஸல்) அவர்கள் மிஃகுராஜ் - இறை சந்திப்பின் போது சம்பூர்ண ஆன்ம முக்தி பெற்றார்கள். ஆனால் உலக வாழ்க்கையின் முடிவில் நேச மனைவி ஆயிஷா (ரலி) அவர்களின் மடியில் அவர்களின் சிரசு இருந்தது. உயிர்பிரிந்த அந்த தருணத்தில் உலக வாழ்க்கையை நிர்வாண நிலையில் அனுபவித்த மகத்தான துறவியின் நிலையில் அவர்களின் ஆன்மா பரம்பொருளில் ஐக்கியப்பட்டிருந்தது.

எனவே தான் உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகளிலெல்லாம் உன்னதமானவர்களென்றும், இம்மையையும் மறுமையும் பிரிவின்றி இணைத்துவிட்ட இறுதிநபி என்றும்ட எம்பெருமான் முகம்மத் (ஸல்) அவர்கள் புகழ்ந்துரைக்கப் படுகிறார்கள்.

*பார்வை :-*

*1. ‘‘ஜனிய்யா’’ -*

*ஹலரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)*

*2. மஸ்னவி ஷரீஃப் - ஹலரத் மௌலானா ரூமி (ரலி)*

# பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லாவின் ஃபார்ஸி கவிதைகள்

**உருது மொழியாக்கம்**

**ஹஜ்ரத் காஜா ஸையது ஷா அப்தால் ஹுஸைனி ஸுஹ்ரவர்தி ஃபக்கீரி [ரஹ்]**

**தமிழாக்கம்**

**ஜனாபா. நூருன்னிஸா ரஹீமுத்தீன் காதிரி ஸுஹ்ரவர்தி [திருச்சி]**



## எல்லாம் வல்லவன்
## (ஜல்ல ஜலாலஹூ)

*ஆண்டவா உன் அருகாமையின் நிழலைத் தேடுகிறேன்*
*உன் திருநாமமோ ''எல்லாம் வல்லவன்''*
*இன்னும் எத்தனை காலங்கள் வீதிவீதியாய் அலைவேன்*
*உன் திருநாமமோ ''எல்லாம் வல்லவன்''*
*உனது நாம ஜெபம் (திக்ரு) மட்டுமே எனது பணி*
*உனது திருநாமமோ ''எல்லாம் வல்லவன்''*
*எந்நேரமும் என்நாவில் உன்பெயர் ''ஹூ அல்லாஹூ''*
*உனது திருநாமமோ ''எல்லாம் வல்லவன்''*
*உனது ஒருசொல் ''குன்'' உலகையே உண்டாக்கியது*
*என்மீதும்உன்சொல்லைஅருள்!நீ''எல்லாம் வல்லவன்''*
*உனதுநேசன் என்றபட்டம் என்மீது உண்டாகட்டும்!*
*உனது திருநாமத்தின் ஜோதியை வெளிப்படுத்தினாய்*
*நபி முஸ்தபாவின் அரசாட்சியில்!*
*நான் அறிந்துகொண்டேன் என்வருகையும் ''ஹூ வினால்''*
*என் திரும்புதலும் ''ஹூ வினால்தான்!''*
*இந்த ஃபக்கீரின் அடையாளம் ''ஹூ''*
*முகம்மத் எனும் மீமில் இணைந்து நான் மனிதனானேன்!*
*ஹே ஆண்டவா! நான் உன்னில் இருக்கிறேன்*
*நீ என்னில் இருக்கிறாய்!*
*உன்பெயர் ''எல்லாம் வல்லவன்''*
*ஆம் உன் பெயர் ''ஜல்ல ஜலாலஹூ!''*

## யாரஸூலே அரபி
## (அரபி மொழி பேசிய இறைத்தூதர்)

*எனது உயிரும் (ரூஹூம்) எனது விசுவாசமும்*
*(ஈமானும்) ரசூலே அரபி!*
*என்னுள் குவிந்திருந்த (குஃப்பிர்) - நிராகரிப்பை*
*லாயிலாஹ இல்லல்லாஹ்*
*(இறைவன் ஒருவன் வணக்கத்திற்குரியவன் அவன்)*
*என்ற ஒரு வார்த்தையால் ''இஸ்லாம்''*
*என்ற ஆஸ்திக விசுவாசம் ஆக்கினீர்கள்*
*யாரசூலே அரபி!*
*படைப்பு கோலத்தில் யாரும் அடைய முடியாத*
*உன்னத பதவியை அடைந்தீர்*
*இறைஅரசின் (அருஷின்)*
*விருந்தாளி ஆனிர்கள் யா ரசூலே அரபி!*
*நபிமார்களில் பலரும் பல்வேறு நாடுகளின்*
*மன்னர்கள் ஆனார்கள்*
*தாங்களோ பிரபஞ்சத்தின்*
*சக்கரவர்த்தி ஆனீர்கள்*
*யாரசூலே அரபி!*
*ஆதமின் அகத்தில்*
*பரம்பொருளின் நாட்டம் மறைந்து கிடந்தது*
*அதை பண்படுத்தி*
*இன்ஸான் (மானுடம்) ஆக்கினீர்கள்*
*யா ரசூலே அரபி!*
*உலகின் பாதைகளெங்கும் புயல் வீசுகிறது!*
*பரிதவிக்கும் பாவிகளான உங்கள்*
*உம்மத்துகளாம் (மக்களாம்) எங்களை*
*தூய நேர்வழி படுத்துங்கள்*
*யா ரசூலே அரபி!*



*நரகத்தின் அச்சமுமில்லை*
*சொர்க்கத்தின் ஆசையுமில்லை*
*என் மனதில் தங்களை தரிசிக்கும்*
*ஆசையே எஞ்சியுள்ளது*
*யா ரசூலே அரபி!*
*தங்கள் பெருமைக்கு சாட்சி பகரும்*
*அருள்மறை குர்ஆனின் அழகிய வசனங்கள்*
*ஒவ்வொன்றும் என் நாவில்*
*ஒலித்திடச் செய்யுங்கள் யா ரசூலே அரபி!*
*தங்கள் மீது காதலெனும் (இஷ்க்) பானத்தை*
*அருந்திவிட்ட இந்த ஃபக்கீருக்கு*
*தங்கள் காருண்ய கிருபையை (இஹ்சானை)*
*அருளுங்கள் யா ரசூலே அரபி!*

## பெருமையின் சிகரம்

*வீடுவீடாக யாசிப்பவனும் நாடாளும் சக்கரவர்த்தியும்*
*தங்கள் தர்பாரின் வாசலிலே*
*அடிமை (குலாம்)களே*
*யாரசூலே அரபி!*
*ஆண்டவனின் சன்னிதானத்தில்*
*தாஹாவும் யாஸினும்*
*முர்சலும் தாங்களே*
*யா ரசூலே அரபி!*
*பெருமையின் சிகரமும்*
*தாங்களே! உலக முடிவு நாள்வரை பாடினாலும்*
*உங்கள் பெருமையின் புகழ்பாடி முடிவுறாது*
*யா ரசூலே அரபி!*
*தங்களின் ஜோதியாய் (நூராய்) பராபரன்*
*வெளிப்படவில்லையெனில்*
*படைகோலத்தில் ஜீவன் என்பதே*
*இருக்கப் போவதில்லை*
*யா ரசூலே அரபி!*

தங்களுக்கு ஈடும் இல்லை தங்களுக்கு
இணையாகவும் யாருமில்லை
பராபரன் தங்களில் அர்ப்பணம்
யா ரசூலே அரபி!
எஜமானே தங்களிடம் ஒரு கோரிக்கை
இந்த ஃபக்கீரின் விசுவாசத்தை
(ஈமானை) சம்பூர்ணமாக்குங்கள்
யா ரசூலே அரபி!

தூய (கலிமா) ஏகத்துவ சத்திய உறுதிப்பாட்டினால்
(தருதே ஸலவாத்) நபி புகழ் பாடுவதின்
மகிமையை நான் புரிந்துகொண்டேன்
ஆண்டவனே யா அல்லாஹ்!
இரவும் பகலும் ''நபி மீது சாந்தியும்
ஸலாமும் உண்டாகட்டும்'' என்று
உச்சரித்தவண்ணம் உள்ளேன்
யா அல்லாஹ்!
உலகில் இந்த ஃபக்கீர் உனது தூதரின்
மீது கொண்ட காதல் போதையில்
''முகம்மத் முகம்மத்'' என்று
சொல்லி சொல்லி துள்ளி தள்ளாடுகிறேன்!
ஆண்டவனே யா அல்லாஹ்!

## நபி முகம்மதின் (ஸல்) நலம் தரும் பாதம்

ஓ இறைவனின் இறுதிதூதரே! முகம்மதே!
உமது பாதங்களில் உயிர்துறந்து மரணித்துவிட்டால்
அதுவே நலமாயிருக்கும்!
உமது பாதகமலங்களில் சிரவணக்கம் செய்தபடி
இறுதிநாள் (ஆகிரத்) வரை பயணித்துவிட்டால்
அதுவே நலமாயிருக்கும்!
எனது எஜமானரே உமது புகழை பாடிக்கொண்டே
இருந்துவிட்டால் அதுவே நலமாயிருக்கும்!



உலகில் பூக்கும் ஒவ்வொரு பூவும்,
ஒவ்வொரு மலரும் உமது நறுமணத்தால் அல்லவா
மலர்ந்து மணம் வீசுகிறது!
எஜமானரே பூவின் இதழ்கள் போன்ற உம்முகத்தைப்
பார்த்துவிட்டு என் இதயத்தை தொலைத்துவிட்டால்
அதுவே நலமாயிருக்கும்!
அன்று, ''அனல்ஹக் - நானே மெய்ப்பொருள்'' என்று, கூக்குரல்
எழுப்பியதால் தூக்கில் ஏற்றினராம்
மன்சூர் ஹல்லாஜை!
இன்று, ''மெய்ப்பொருள் முகம்மத் - ஹக்முகம்மத்''
என்று போதையில் குதூகளிக்கும்
என் தலையைக் கொய்துவிடுங்கள்
அதுவே எனக்கு - நலமாயிருக்கும்!

எஜமானரே! முகம்மதே! தெய்வீகம் தன்னை
அற்பணித்துக் கொண்ட உமது ஜோதியைப்
பறந்து பறந்து நான் சுற்றிவந்தால் நலமாயிருக்கும்!
உமது தெய்வீக ஜோதியில் விட்டிலைப்போல் நான்
விழுந்துமடிந்து போனால் நலமாயிருக்கும்!

எஜமானரே முகம்மதே!
இந்த ஃபக்கீர் உங்கள் தர்பாரின் வாசலில்
யாசகனாய் நிற்கிறேன்! என்மீது தங்கள்
அன்பின்பார்வையை அருள்வதில் ஏன் தாமதம்?

தங்கள் மீது கொண்ட காதலெனும்
மதுவினால் என் இதய கோப்பை
நிறைந்து போனால் அதுவே நலமாயிருக்கும்!

ஏ! ஃபக்கீர்! இந்த உலகம் தங்க இழைகளால்
பின்னப்பட்ட மரணவலை!
முள் நிரம்பிய இதன் பாதைகளை
முகம்மதின் (ஸல்) காதல் போதையிலேயே
நீ கடந்து போனால் அது நலமாயிருக்கும்!

## அடுத்தப் பெரியவர் யார்?

ஓ ஆமினா என்ற தாயின் இருதயத் துண்டமே!
மானுடகுலத்தின் தலைவரே!
உலகின் பார்வையில் எளிய ஃபக்கீர் ஆனவரே!
புவியின் நிலப்பரப்பிற்கும் கடல் பரப்பிற்கும்
பேரரசரானவரே!
உமது ஒளி பொருந்திய நெற்றி
சுஜூது (சிரவணக்கம்) செய்ததால் அன்றோ
இறைஇல்லம் கஅபத்துல்லா
வணக்கஸ்தலம் ஆகியது !
இல்லையெனில் அது அவ்வாறு ஆகமுடியாதே!
ஓ பரிபூரணத்தின் தோற்றமே! வல்லமையின் இலக்கணமே!
காலத்தை முன்னும் பின்னும்
பார்க்கும் ஆற்றல் பெற்றவரே!
தோன்றும் வஸ்துக்கள் யாவிலும் மறைந்துள்ளது
தங்கள் இரகசியமல்லவா?
சுருக்கமாக கூறின் அல்லாஹூ அக்பர் என்ற
அந்த மகாப் பெரியவனுக்கு
அடுத்து தங்களை தவிர வேறு யார்?
தைபாவின் (மதினா) திசை செல்லும் காலை தென்றலே!
என்னையும் அழைத்துச்செல் அங்கு
இறைவனின் பொருட்டு!
இவ்வுலகின் சுகம் எனக்கு பொருட்டில்லை!
ஏந்தல் முகம்மத்(ஸல்) தன்
விசேஷ கருணைப் பார்வையால்
இந்தப் ஃபக்கீரை பார்க்கட்டும் அந்த
இறைவனின் பொருட்டு!



## குருதியின் பூரிப்பு!

இன்பத்தில் மட்டுமல்ல உலகத்தோரே!
துன்பத்திலும் முகம்மதின்(ஸல்) முகத்தில்
பூரிப்பைக் கண்டேனே!
அமைதியுடன் இல்லங்களில் அமர்ந்திருந்தபோதும்
போர்ப்பாதைகளில் நிம்மதியின்றி
பயணித்த போதும் முகம்மதின்(ஸல்) முகத்தில்
பூரிப்பையே கண்டேனே!
இறைசந்திப்பின் (மிஃகுராஜின்) இரவில் கில்மானும்
ரிஸ்வானும், வானவரும், ஹூரிகளும்
சிரம்தாழ்த்தி பணிவுடன் தங்களை வரவேற்றனரே!
இறைஇருக்கை (அருஷின்) மாளிகையில்
தங்கள் முகத்தில் அளவிலா பூரிப்பை கண்டேனே!
படைத்தவனின் விதியிலே அனாதை (யதீம்)
என்றும் எழுத்தறிவிலா (உம்மி)
என்றும் கருதப்பட்டீர்!
ஆனால் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும்
தங்களிடம் வசப்படக் கண்டேனே!
ஆ! சன்மார்க்க (தீன்) ஒளிவளர
தங்கள் குடும்பத்தாரும் வாளேந்தி
போர்களத்தில் நின்ற போதும் அவர்கள்
முகத்தில் பூரிப்புடன் நிற்க கண்டேனே!
அந்தோ! நபிகுலத்தின் குருதியால் அநீதியின்
சரித்திர ஏடுகள் கரைபடியக் கண்டேனே!
யஜீதின் படைகள் அலீயார்தம் குடும்பத்தார்
குருதியுடன் விளையாடக் கண்டேனே!
அந்தோ! சன்மார்க்க தீனுக்காக
குருதி சிந்தும் தங்கள் குடும்பத்தாரின்
முகத்தில் பூரிப்பையே காண்கிறேனே!
முகம்மதே! உங்கள் பாதங்களில்
ஃபகீரின் குருதி பூரிப்புடன் அர்ப்பணம்!

## நபி நேசர்களின் பட்டியல்

திரு மக்கப் பதியுலுள்ள இறையில்லம்
கஅபாவின் மீது ஆணை!
இறைவனே இதை கூறினான்:-
"முகம்மத் ஆகிய இவர்
மனிதகுலம் முழுமைக்குமான
எனது தூதுவர்!
மனிதகுலம் முழுமைக்கும்
இவர் நேர்வழிகாட்டி!"
மதினமா நகரின் மதுகடைகாரர்
உலகுக்கு எதை கொடுத்தார்?
ஆம் ஏகத்துவ ஞான மதுவாம்
மதுரபானத்தை கொடுத்தார்!
படைத்த மாபெரியவனே இந்த
ஏகத்துவஞான மதுவாம்
மதுரபானத்தை நமக்களித்தான்!

துவக்கம் முதல் முடிவு வரை உலகில்
நடப்பதெல்லாம்
ஓ முகம்மதே உம் பொருட்டால்!
ஆண்மையும் வீரமும் நிறைந்தவரே!
மலையின் உச்சிமீது தன்னந்
தனியாய் நின்றீரே! நேரிய
வழியின் ஜோதியை ஏந்தி
உலக மக்களுக்கு அழைப்பு விடுத்தீர்களே!
இறைவனுக்காக எதிர்ப்பின் சுமைகளை
எதிர்கொண்டு தாங்கி நின்றீர்!
உமது குடும்பத்தாரையும்
இறைபணியில் அர்ப்பணித்தீர்களே!
உலக மக்களுக்காக உயிர் உடமைகள்
அனைத்தையும் அர்ப்பணித்தவரே!
யா முகம்மத்!
ஈருலகின் ஜீவன் தாங்களேதான்!



ஈருலகின் இரகசியங்களும் அறிந்தவரே
சரிஅத் சட்ட ஞானத்தின் நீதிஅரசே!
மஅரிபத் தெய்வ ஞானத்தின் சமுத்திரமே!
சாந்தியும் சமாதானமும்
உம்மீது இறைவனின் அருட்கொடையாம்!
இழித்துரைக்கும் பகைவர்மீதும் அன்பும்
இரக்கமும் கொள்பவரே!
இறுதி தீர்ப்பு நாளில் விசேஷ
அதிகாரத்தால் அருள்பாலிப்பவர் தாங்களேயாம்!
ஆ! அந்த பேரின்ப தேட்டமுடையவர்களின்
காதலர் முகம்மத்! தன் நேசர்களின்
பட்டியலில் இந்த ஃபக்கீரின் பெயரையும்
இணைத்து கொண்டார்!
ஈருலகிலும் இந்த ஃபக்கீரின் அந்தஸ்தை
உயர்த்திவிட்டார்!

## உன்னில் முகம்மதைப் பார்!

தேட்டமுடையவர்களே!
புவியிலும் (துனியாவிலும்) புனித மார்க்கத்திலும்
(தீனிலும்) முகம்மதையே பார்க்கப் பழகுங்கள்!
அவர் அல்லாஹ்வின் ஜோதியாவார்
அவர் அல்லாஹ்வின் "தான்" ஆவார்!
தேட்டமுடையவர்களே!
படைத்த நாயனை (ரப்பை) பார்க்கும் ஆசையில்
முகம்மதைப் பார்க்கப் பழகுங்கள்!
முகம்மதை அடைந்தவர் அனைத்தும் அடைந்தார்!
ஃபனாவில் (தன்னை அழிப்பதில்)
பகாவில் (சத்திய நிலைப்பாட்டில்)
முகம்மதையே பார்த்து கண்குளிருங்கள்!
ஆதமின் படைப்பே முகம்மதின் பொருட்டாம்
ஆதமின் மூச்சில் முகம்மதை பாருங்கள்!
ஃபகீரே! உனது தேட்டம் உனது நாயன் (ரப்பு)
ஆகிய அவனே ஆகுமென்றால்
உன்னில் உன் "நான்" என்பதை (ஃபனாவாக்கி) அழித்து
உன்னில் முகம்மதை (பகாவாக்கி) நிலைப்பாடாக்கிப் பார்!

## இதயத்தில் முகம்மத்! எண்ணத்தில் யாஅலீ

உம்மீது கொண்ட போதையால்
என் பார்வையும் மருள்கிறதே!
உமது மயக்கத்தில் என் நினைவுகளும் மறைகிறதே!
ஹே நேசரே! முகம்மதே!
உம்மை கண்ணால் காண்பதுதான்
என்இறை வணக்கம்!
உமது நினைவே எனது தியானம்!
இறை தூதர்களின் தலைவரே!
வழிகாட்டுவோரின் கலங்கரை விளக்கே!
இறைவழிபாடு உமது பாதையின் வழித்தடமே!
இதோ என்னை நான் அர்ப்பணித்து
உமது பிரசன்னத்தின் முன் நிற்கிறேன்!
உமது திருநாமத்தின் பிரஸ்தாபத்திலும்
என்னை நான் அர்ப்பணிப்பேன்!
உம்மீது கொண்ட காதலால் உம்மை நோக்கியே
நான் ஈர்க்கப்படுகிறேன்!
என்னை நீர் ஏற்றுக்கொண்டால் அதுவே எனக்கு போதும்
அது நான் பெறும் அருள்வரம்!

உலகத்தோரே! எனது தகுதியிலா நிலையை
யாரும் குறைகாணவேண்டாம்!
எனது நேசரின் உன்னத நிலையை
நீங்கள் அறியமாட்டீர்கள்!
என் கண்களின் முன் அவர் நித்ய வாழ்வருளும்
நீர்தடாகமாம் கௌஸர் ஆவார்!
என் ஆன்மா அந்த நீர்தடாகத்தை பருகியபடி இருக்கிறது!

கோப்பையையும் மதுவையும் வெளியில் தூக்கி வீசுங்கள்
அவரது நினைவு ஒன்றுதான் நான் அருந்தும் மது!



வேண்டாம் எனக்கு உங்கள் மது நிறைந்த கூஜா
அதை உள்ளேயே வையுங்கள்! அவர்மீது
கொண்ட காதல் அதுவே நான் அருந்தும் மது!

நான் உமது நேசத்துக்கு உகந்தவனல்ல!
அது எனக்கு தெரியும்!
இது எனது ஆசை!
என் இதயம் முழுதும் நீர்தான்!
உமது பிரசன்னமே எனது காதல் சன்னதி!

ஃபக்கீர் ஆனநான் பெருமிதமடைகிறேன் ஏனெனில்
என்னை முகம்மதின் அடிமையாய் விற்றுவிட்டேன்!

என் உள்ளத்தில் உள்ளதெல்லாம் யா முகம்மத்!
என் உதட்டின் உச்சரிப்பு எந்நேரமும் யா அலீ!

## யா ரசூலே! சுஜூது செய்கிறேன்!

யா ரசூலே இறை தூதரே முகம்மதே
தங்கள் மீது கொண்ட (இஷ்க்) காதலால்
உடைந்து சிதறுண்ட பின்னரே
என் உள்ளம் அமைதி கொண்டது!
இந்த மலருக்கு பெருமை கிடைத்ததெல்லாம் ஆஸ்திக
பூந்தோட்டத்திலிருந்து வெளியேறிய பின்னர்தான்!
எனக்கு பெருமை கிடைத்ததெல்லாம்
தங்கள் மீது கொண்ட காதலால்
நான் பைத்தியமான பின்னர்தான்!
உங்கள் வாசலை நோக்கி நான் விரைந்து வருகிறேன்
ஒவ்வொரு அடிக்கும் பணிந்து குனிந்து
ஸஜ்தா (சிரவணக்கம்) செய்தவனாக!

உங்கள் முகவரியை அடைந்து கொண்டேன்
உங்களை புரிந்துகொண்டேன்
உலகமெல்லாம் தேடி அலைந்தபின்!
காதல் உள்ளத்தை புரிந்துகொள்ளும்
அழகுடைய நேசர் வேறு யாருளர்?
மவுனம் காத்தீர்களே
உங்களையே நான் வணங்கும் வரை!
உங்களை அடைந்த லைலத்துல்கத்ரின் இரவில்
பிரிந்திருந்த காலத்தின் புலம்பலை கேட்டு
புன்னகை புரிந்தீர்கள்!
தங்கள் மீது கொண்ட இஷ்க் எனும் காதலின் தீயில்
எரிந்து போன என்னை இனி
வேறு எங்கும் அனுப்பாதீர்கள்!

என்பார்வை குருடாகட்டும் தங்களை
பார்த்த கண்கள் வேறுயாரையும்
பார்க்கவே வேண்டாம்!
யா ரசூலுல்லாஹ் ஓடோடி
உங்கள் சந்நிதானம் வந்தடைந்தேன்
சிரம் தாழ்த்தி சுஜூது செய்தேன்
நிதானம் அடைந்த பின்!
உலகோரே நான் கூறுவதெல்லாம் மெய்யின்
போதையில் (ஃபனா) நாஸ்தியாதலையும்
நிலைபெறு தலையும் (பகா) தான்
நான் நேர்வழியின் திசையை அறிந்ததெல்லாம்
மெய்ஞ்ஞான தெளிவு பெற்ற பின்னர்தான்!



## ஃபக்கீரின் பெருமை!

சத்திய சன்மார்க்கம் (தீன்) புவிமீது வெற்றிகொண்டதே!
நாத்திக (குஃபிர்) இருட்டை விரட்ட கதிரவனாய்
தீன்மார்க்கம் எழுந்ததே!
மலர்களின் நடுவில் ரோஜாவாய் உலக
மார்க்கங்களின் நடுவில் இஸ்லாம் தோன்றியதே!
அழகின் இலக்கணமாம் அண்ணல் முகம்மதின்
ரூப லாவண்யம் வெளிப்பட்டதே!
மிஸ்ரின் நபி யூசுஃப் அவர்தம் பேரழகின் பெருமையின்
மீது திரைகள் விழுந்தனவே!
நபியின் அழகும் உரைநடையும் கவிநயத்தால்
உயர்ந்த சொல்திறனும் உன்னதத்தை எய்தியதே!
எதிர் கொள்ளும் விவாத திறன்படைத்த குரைஷிகளும்
அண்ணலின்முன் தோற்றோடிப் போயினரே!
(குஃப்ர், ஷிர்க்)காம் நாத்திகப் பலதெய்வ இருளில்
நேர்வழி தேடியலைந்த புவிமீது
ஒளிபடைத்த முழுநிலவாய் எங்கள் முகம்மத் இரசூல் (ஸல்)
எழுந்தருளினரே!
ஏகஇரட்சகனாம் (ரப்பு) அவன் அருளின் பிரதிபலிப்பாய்
அவனியில் அண்ணல் முகம்மத் (ஸல்) தோன்றினரே!
இறைமையின் பண்புகளை எம்பெருமான் (ஸல்)
தன்னில் வெளிப்படுத்தினரே!

இந்த ஃபகீரி அந்த முகம்மதின் மீது கொண்ட
இஷ்கென்னும் பேரின்ப காதல் போதையில்
தள்ளாடுகிறேன்!
அந்த இறைவனுக்கு நன்றி! நபி மீதுகொண்ட காதலால்
ஃபக்கீர் என்னும் பெருமைக்குரிய பட்டத்தை
நான் பெற்றுவிட்டேன்!

## காதல் பித்தன்!

என்னை காதல் பித்தனாக்கினாய்
உன் பார்வையினால்!
போதையின் இரகசியத்தைப் புரியவைத்தாய்
உன் பார்வையினால்!
ஹே பேரின்பமானவளே! மனோண்மணி!
யாருக்கும் பயந்து பேசாமடைந்தையாய்
இருந்துவிடுவாயோ!
உன் உள்ளத்தின் தொனியை நான் அறிய வைப்பாயா
உன் பார்வையினால்?
என் சோக வரலாறு மறையக் காண்கிறேன்
உன் பார்வையின் போதையால்!
என் பொழுதுகள் யாவும் கழிவதும் உன்
பார்வையின் போதையில்!
என் புலம்பல்கள் எதுவும் உனக்கு சகிக்கவில்லையா?
என் தந்திரங்கள் பிடிக்கவில்லையா?
சகி! என்னை உன் விழி விளக்கில் விட்டிலாய்
விழுந்து செத்திடச்செய்! நிம்மதி!
உன் பார்வையின் மயக்கத்தால் நான் உலகிலிருந்தே
தனித்து கிருக்கனாகிவிட்டேன்!
ஆனாலும் உன் பார்வையே எனக்கு நீதந்த பரிசு !
பகலும் இரவும் உனது ஞானரசம் அருந்தி
மல்லாந்து கிடக்கிறேன்!
ஹே பேரின்ப காதலியே! சகி! மனோண்மணியே!
இந்த ஃபக்கீருக்கு கிடைத்த
மதுவும் மதுகோப்பையும்
உன் கண்களும் உன் பார்வையும்தான்!



## பேரின்ப காதலி : மனோண்மணி!

பேரின்ப காதலியே! மனோண்மணியே!
என் இதயவீட்டை உனக்காக அலங்கரித்து
வைத்துள்ளேன்!
உன்னிலே என்னையே நான் அர்ப்பணித்து
வைத்துள்ளேன்!
ஆனால் என்ன கொடுமை! நீ என்னை
அடிக்கடி மறந்துவிடுகிறாயே!
உன் பார்வையை எதிர்நோக்க
எவருக்கும் உலகில் துணிவில்லையாம்!
எனினும் உன்முகத்திரையை எனக்காக நீ
விலக்கி வைத்துள்ளாய்!
என்முன் உன் இமைகள் கீழ்நோக்கி உள்ளனவே
இது வெட்கத்தினாலா?
எவரும் இதை அறிந்திலர்! ஆம்! உன் கீழ்நோக்கியப்
பார்வை என்மீது அம்புகளாய் பாய்வதை!
சதாகாலமும் துயரமும் பிரிவுமாய்
அல்லாடி நிற்கிறேனே!
என் இதயம் பேசுதை நீ கேட்கிறாயா
புறக்கணிக்கிறாயா மனோண்மணி ?
ஆனால் என்றோ ஓர்நாள் என்
உண்மை காதலை நீ அறிந்து கொள்வாய்!
அந்த நம்பிக்கையைத்தான் இந்த ஃபக்கீர்
இதயத்தில் வைத்து காத்திருக்கிறேன்!

---

மனோன்மணி- ஆன்மா - ரூஹ்

---

## பாபா ஃபக்ருத்தீன் (ஒலி) ஸலாம் பைத்து

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ரசூலுல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க ரபீபுல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா பாபா
ஃபக்ருத்தீன்
ஒலியுல்லாஹ்

அல்லாஹ்வை அறிந்தோராம்
ஆரிஃபீன்களின் முன்னோடியே
சுல்தான் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்...ஸலாம்

ஹக்கான மெய்ப்பொருளின்
ஸிர்ராம் இரகசியம் அஷூந்தவரே
அஸ்ராரி ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

ஹக்கை தரிசித்து ஹல்குகளாம்
மானிடர்க்கு எடுத்துரைப்போரே
தர்வேஷ் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

தீன் மற்றும் துன்யாவின் செல்வங்களை
வாசலில் யாசிப்போருக்கு வழங்குவோரே
யாதவுலத் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

மனு, ஜின் இருகுலத்தோருக்கும்
நேர்வழி காட்டுபவரே
யா நூர் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

ஆதமின் சந்ததிகள் அனைவருக்கும்
மதபேதமின்றி அருள் தரும்
சர்தார் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம் ... ஸலாம்

பரந்த இந்துஸ்தானம் பூமிக்கு
பெருமை சேர்ப்பவரே
யா குத்ரத் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம் ... ஸலாம்



அறியாமை இருளில் மூழ்கி கிடந்த
தீபகற்பத்தில் தீன் விளக்கேற்றிய
யா ஜூல்ஃபிகார் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம் ... ஸலாம்

சன்மார்க்கமாம் இறைவனின் தீனை
பாதுகாக்கும் பாதுகாவலரே
யா பர்ஸக் யா ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

சமுதாயப் பூசலைத் தடுத்து
சமாதான செய்தி கூறும் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

சீஸ்தான் வள நாட்டின் அதிபர்
முடிதுறந்த மாவீரர் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

சாதிமத சச்சரவுகளை தீர்க்கும் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

சகோதர மதசமுதாய மக்களுக்கும்
இறையருள் விருந்தானவரே ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

மரித்து விட்ட மனங்களில் சத்தியத்தை
உயிர்ப்பிக்கும் சற்குருவே ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

ஃபலஸ்தீனம்கண்ட ஈஸா(அலை)போன்றுபுகழுடையவரே
யா ஹாமித் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

குருட்டு மதியோர் பாரா தெய்வீக அழகு(ஜமால்)உடைய
யா ஆஷிக் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

குலாம் ஃபக்கீரின் இதயத்தில்
கல்பில் மறைந்திருப்போரே ஃகாயிப் ஃபக்ருத்தீன் ஒலியே
ஸலாம்... ஸலாம்

***உர்து மூலம் – பாபா அப்தால் ஹுஸைனி (கத்)***
***தமிழ்வடிவம் – நூருன்னிஸாரஹீமுத்தீன் காதிரி சுஹ்ரவர்தி***

## தப்லே ஆஃலம் பாதுஷா (ரலி) அவர்களின் கலந்தர்கள்

*ஹஜ்ரத் சையதினா அப்துல் ரஹ்மான் அலா நூரி*
*ஹஜ்ரத் சையதினா ஷம்ஸ் மன்சூர் கலந்தர் (ரஹ்)*
*ஹஜ்ரத் சையதினா ஷம்ஸ் பீரான் கலந்தர் (ரஹ்)*
*ஹஜ்ரத் சையதினா லுலு கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா கிரேபாஸ் கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா குரம் தாயிச் கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா அமீர் ஹம்ஜா கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா சுல்தான் அலவூத்தீன் கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா சையத் பாதுஷா கலந்தர் (கொல்லிமலை)*
*ஹஜ்ரத் சையதினா ஹைதரே சப்தர் கலந்தர் (முலுபாகல்)*
*ஹஜ்ரத் சையதினா ஹாஜி மக்கீ கலந்தர் (முலுபாகல்)*
*ஹஜ்ரத் சையதினா ஹஜ்ரத் நூர் ஷா கலந்தர் (கொத்துவால் மக்கான் முலுபாகல்)*
*ஹஜ்ரத் சையதினா ஹஜ்ரத் மீர்ஷா கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா இஸ்திஹாக் ஷா கலந்தர்*
*ஹஜ்ரத் சையதினா முகர்ரப் ஷா கலந்தர் (தைலூரி)*
*ஹஜ்ரத் சையதினா சர்மஸ்த் ஹுஸைனி கலந்தர் (சில்கட்டா)*
*ஹஜ்ரத் சையதினா ரஹ்மத்துல்லாஹ் ஷா கலந்தர் (திருப்பாத்தூர்)*
*ஹஜ்ரத் சையதினா இஸ்திஹாக் ஷா கலந்தர் (வேப்பரம்பட்டி)*
*ஹஜ்ரத் சையதினா இஷ்க் அல்லாஹ் திவான் தாதா (ஆலங்காயம்)*
*ஹஜ்ரத் சையதினா ஷம்ஷுத்தீன் கலந்தர் (திருப்பதி)*
*ஹஜ்ரத் சையதினா ஜம்மன் ஜத்தி கலந்தர் (திருப்பதி)*
*ஹஜ்ரத் சையதினா ரஸ் அலிஷா தாஹே கலந்தர் (திருப்பதி)*
*ஹஜ்ரத் சையதினா நூருத்தீன் மஸ்தான் கலந்தர் (நார்த்தா மலை)*
*ஹஜ்ரத் சையதினா காலப்ஷா கலந்தர் (மஞ்சகுப்பம், கடலூர்)*



## ஜமாஃபக்கீர்கள் நீண்ட பயணப்பாதையில்
## தங்கி தரிசித்து செல்லும்
## இறைநேசச் செல்வர்களின் தர்காக்கள் பள்ளிவாசல்கள்

ஆண்டுதோறும் ஜமாத்துல்ஆஹிர் மாதம் பிறை 9 அன்று பெனுகொண்டா தர்கா ஷரீஃபில் சற்குரு தஸ்தார் பந்தி நியமனம் நிறைவுற்றதும் ஷாபானுவா ஜமாவினர் தென்னகத்தின் நான்கு திசைகளிலும் சுற்றி வருகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு சுற்றுப்பயணத்தை முடித்து கொண்டு மீண்டும் பெனுகொண்டாஷரீஃபுக்கு திரும்பும் அவர்கள் தங்கள் நீண்டநெடும் வழிப்பாதையில் 360 தர்கா ஷரீஃபுகளில் ஜியாரத், சந்தனச்சாற்று முதலியவைகளை நிகழ்த்தி ஆங்கே சிலநாள் தங்கிச்செல்கிறார்கள்.

ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, புதுவை மாநிலங்களில் அவர்கள் செல்லும் இடங்களான தைக்காக்கள், தர்காக்கள், பள்ளி வாசல்கள், ஆலயங்களின் விவரம் கீழே தரப்படுகிறது.

*1.பெனுகொண்டா ஷெரிஃப் - ஸதர் சவுக் (ஆந்திரா)*
*"ஹஜ்ரத் சையதினா பாபாஃபக்ருத்தீன்கலந்தர்(கத்)*
*"ஹஜ்ரத் சையதினா சையத் அலீஷா சில்லா கஷ்(கத்)*
*"ஹஜ்ரத் ஷக்கர் பாரான் பீர் சோட்டே பாபா ஃபரீதுத்தீன்(கத்)*
*"ஹஜ்ரத் சையத் ஷா மஸ்தான் ஹுஸைனி சுஹ்ரவர்தி(கத்)*
*2. "ஹஜ்ரத் சையதினா நவ்ஷஹீத் பாபா (கத்)*
*3.கோரி பிந்தூர் - சையிதா நியாமத் பீபீ (கத்)*
*4.சில்கட்டா - ஹஜ்ரத் சையத்ஷாசர்மஸ்த்ஹுஸைனி(கத்)*
*5.சிந்தாமணி- சையத்யகீன்ஷா ஒலியுல்லாஹ் - ஆஷர்கானா*
*6.நிம்கான்பள்ளி- ஹஜ்ரத் ஜலால் காகிஷா மௌலா (கத்)*
*7.ஸ்ரீநிவாஸ்பூர்- ஹஜ்ரத் சையிதா ஜைபாபீ (கத்)*
*8. "ஹஜ்ரத் மீர் முஹம்மத் அலீஷா (கத்)*
*9.கோலார்- ஹஜ்ரத் சையதினா ஷாபாஸ்கலந்தர் (கத்)(கர்நாடகா)*
*10.முலுபாகல்-ஹஜ்ரத் மீர்ஷா ஒலியுல்லா*
*-ஹஜ்ரத் நூர்ஷா ஒலியுல்லா- கொத்துவால்மக்கான்*
*11. "ஹஜ்ரத் இஸ்திஹாக்ஷா(ரஹ்)- மண்டல்மக்கான்*
*12. "ஹஜ்ரத் சையதினா ஹைதர் ஸப்தர்(கத்)- ஸானிசவுக்*
*13. "ஹஜ்ரத் அமன் திவான்ஷா(ரஹ்),ஜமன் திவான் ஷா(ரஹ்)*
*14. "ஹஜ்ரத்சோட்டேபக்ருத்தீன்ஷா(ரஹ்),படேபக்ருத்தீன்ஷா(ரஹ்)*
*15.முலுபாகல்- ஹஜ்ரத் சையத் ஜமால் புர்ஹான் ஷா(கத்), சையத் மலங் ஷா(கத்), சையத் பீர்ஷா(கத்) -படாமக்கான்*

16.கோலார் மாவட்டம்- ஹஜ்ரத் சாந்த்ஷா அவுலியா -தக்கியா மக்கான்
17.தைலூர்- ஹஜ்ரத் சையதினா மஹ்ரீப்ஷா (ரஹ்)
18.வி.கோட்டா- சையத்ஷா ஒலியுல்லாஹ்
19.சாதிகடு- ஹஜ்ரத் பஹாட்ஷா ஒலியுல்லாஹ்
20.பேரணாம்பட்டு- தைக்கால் தர்கா (தமிழ்நாடு)
21.ஆம்பூர்- ஹஜ்ரத் சையதினா ஷாஹுதா ஆலம் குராடா(ரஹ்)
22.வாணியம்பாடி- ஹஜ்ரத் சையதினா மஸ்தான் ஷா கலந்தரி
23. "ஹஜ்ரத் சேம்தாரி ஒலியுல்லாஹ்
24. "ஹஜ்ரத் சையதினா ரஹ்மத்துல்லாஹ் ஷா ஷத்தாரி
"ஹஜ்ரத்உர்ஃப் பஹாட்கான் ஒலியுல்லாஹ்
25. "சையத் பாட்சா ஒலியுல்லாஹ்(கோட்டை)
26.ஆலங்காயம்- ஹஜ்ரத் இஷ்க் அல்லாஹ் திவான் தாதா(ரஹ்)
27.வேப்பரம்பட்டி- ஹஜ்ரத் இஸ்திஹாக்ஷா ஒலியுல்லாஹ்
28.தர்மபுரி- மஷாயக் மக்கான்
29.சேலம்- சையத்ஷா ஜலால் ஹுஸைனி சிஷ்தி(கத்)
" - சையத்ஷா ரஹ்மான் ஹுஸைனி சிஷ்தி(கத்)
30.சேலம் முள்ளுவாடி -சையதினா ஹஜரத் ஷாகர்ஷா (ரஹ்),
" -ஹஜரத் சமன்ஷா (ரஹ்),
" -ஹஜரத் முஹம்மத்ஷா(ரஹ்),
31.சேலம்- திவான் அலிஷா(ரஹ்), மதான் அலிஷா(ரஹ்)-படாமக்கான்
32.சேலம்-நதிமுல்லா- சையதினா ஹுஸைன்ஷா காதிரி(ரஹ்) மக்கான்
33.சேலம்- கூடுபீ சத்திரம்- கூடுபீ அம்மா(ரஹ்)
34.சேலம்-கோட்டை- ரஹ்மத்துல்லாஷா சிஷ்திஉல் காதிரி(ரஹ்)
35.சேலம்-திருச்சிமெயின்ரோடு-அதாவுல்லாஷா சிஷ்திஉல் காதிரி(ரஹ்)
36.சேலம்-சந்நியாசிகுண்டு- சையதினா பீரூல் ஹாதி பாபா(ரஹ்)
37.சேலம்-ஜாமியா மஸ்ஜீத்- சையதினா காஹ்துபாபா ஒலியுல்லாஹ்
38.திருச்சிஷெரீஃப்- ஹஜ்ரத் தாதா தப்லேஆலம்பாதுஷா -ஆலாசவுக்
39.திருச்சி- சிந்தாமணி மக்கான்
40. "ஏக்மினாரா ஹஜ்ரத் பஜ்லுல்லாஷா(ரஹ்)
41. "உறையூர்- ஹஜ்ரத் காயம்ஷா ஒலியுல்லாஹ்
42. "கரிமுல்லாஹ்ஷா ஒலியுல்லாஹ்
43. "அண்டகுண்டான்- சையத்ஷா சர்மஸ்த் ஹுஸைனி ஒலியுல்லாஹ்
44. "தென்னூர்- ஹஜ்ரத் குத்பீஷா ஒலியுல்லாஹ்
45. "ஷம்ஸ்பீரான்தெரு- ஹஜ்ரத் சையதினா ஷம்ஸ்பீரான்(ரஹ்)
46. "சந்துகடை- ஹஜ்ரத் ஹுஸைன்ஷா பண்டாரி
47. "பாலக்கரை- ஹஜ்ரத் ஷாமலங்திவான்(ரஹ்)
48. "அனார்பாக்- ஹஜ்ரத் ஷம்சுத்தீன்(ரஹ்),கம்ரூத்தீன் கிப்லா(ரஹ்)
49. "பாலக்கரை- சான்மியான் தைக்கால்
50. "திருவெறும்பூர்- ஹஜ்ரத் ரோஷன் அலிஷா(ரஹ்)
51. "சிந்தாமணி- சையத்சாதுஷா பாதுஷா தர்வேஷ்(ரஹ்)



52. "சத்திரம் பஸ்ஸ்டாண்ட்- ஹஜ்ரத் பதாவுல்லாஷா நூரி(ரஹ்)
53.சோழவந்தான்- ஹஜ்ரத் நூருல்லாஷா(ஒலி), பியாருல்லாஷா(ஒலி), ஜொஹ்ருல்லாஷா(ஒலி),
54.கீழமாத்தூர்- மண்டல் சர்கிரோ மக்கான்
55.மதுரை- ஹஜ்ரத் சையதினா முகேஷா அவுலியா சவுக்கண்டி
56. "கோரிபாளையம்-ஹஜ்ரத் சையத் சுல்தான் அலாவுத்தீன் ஷா(ரஹ்)
57. "-ஹஜ்ரத் அலியார்ஷா (கத்)
58. "-ஹஜ்ரத் மெஹர் அலிஷா ஆதாண்டமக்கான்
59. "தெற்குவாசல்- ஹஜ்ரத் சையதினா முஹ்யித்தீன் ஆண்டவர் சில்லா
60. "நகை கடைசந்து - சையத்ஷா ஒலியுல்லாஹ்
61. "பெரிய மார்க்கெட்- படாமக்கான்
62.திருப்பரங்குன்றம்- ஹஜ்ரத் சிக்கந்தர் ஜுல்கர்னைன்(ஒலி)
63.தென்காசி- ஹஜ்ரத் சுலைமான்ஷா காதிரி(ரஹ்)
64. " -ஹஜ்ரத் விலாயத் அலிஷா (ரஹ்)தர்கா
65.சிவகாசி- ஷாபாஸ்கான் (ரஹ்) கோரி
66.கடையநல்லூர்- ஹஜ்ரத் மக்தூம் ஜஹானியான் ஜஹான் கஸ்த்(கத்)
67.பொட்டல்புதூர்-மஹ்பூப்சுபுஹானி முஹ்யித்தீன் ஆண்டகை சில்லா
68.மேலப்பாளையம்- ஹஜ்ரத் அவுலியா ஷா (ரஹ்)
69.திருநெல்வேலி ஓடக்கரை - ஹஜ்ரத் சையதினா ஷாஅலி நுக்தா(ரஹ்)
70.தேரிக்குடியிருப்பு- ஹஜ்ரத் சையதினா அமீர் ஹம்ஜா ஷஹீத் (ரஹ்)
71.ஆழ்வார் திருநகரி- தர்கா ஷெரீஃப்
72.வைப்பார்- ஹஜ்ரத் ஷம்சுத்தீன் ஷஹீத் ஒலியுல்லாஹ்
73.குலசேகரப்பட்டினம்- ஹஜ்ரத் சிராஜுத்தீன் தௌலா (ரஹ்)
74.ஏர்வாடி ஷெரீஃப்- ஹஜ்ரத் சையத் சுல்தான் இப்றாஹீம் ஷஹீத்(கத்)
75.கீழக்கரை- ஹஜ்ரத் ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்)
76. " - ஹஜ்ரத் சேகப்பா (ரஹ்)
77.உச்சிபுளி(என்மனங்கொண்டான்)- ஹஜ்ரத் காதர் ஒலி சில்லா
78.அழகன்குளம்- ஹஜ்ரத் வருசை முஹம்மது அப்பா (ரஹ்)
79.சோளியாக்குடி- அறுபது அடி பாபா தர்கா ஷெரீஃப்
80.சேதுபாபா சமுத்திரம்- சேதுபாபா(கத்)
81.பாசிப்பட்டினம்- ஹஜ்ரத் நைனார் முஹம்மது ஒலியுல்லாஹ்
82.கோட்டைப்பட்டினம்- ஹஜ்ரத் ராவுத்தர் அப்பா (ரஹ்)
83.பட்டுக்கோட்டை- ஹஜ்ரத் சான்கான் திவான்,
" - ஹஜ்ரத் மாசிகான் திவான்
84.யானை விழுந்தான் குளம்- ஸைய்யிதானி பீவி தர்கா
85.பட்டுக்கோட்டை- ஹஜ்ரத் நஜர் அலிஷா (ரஹ்)
86.மன்னார்குடி- ஹஜ்ரத் காதர் பாபா (ரஹ்)
87.பொதக்குடி- ஹஜ்ரத் நூர் முஹம்மத் ஷா ஒலியுல்லாஹ்
88.அத்தி கடை- மொட்டை பக்கீர் ஒலியுல்லாஹ் தர்கா
89.அத்திகடை- தஷ்ஃபன் ஷா (ரஹ்)
90.திருமயம்- ஹஜ்ரத் சையதினா பாபா ஃபக்ருத்தீன் ஷா ஷஹீத் (ரஹ்)
91.அத்திகடை- மகிழம்பூ தைக்கால்

92.பூதமங்கலம்- ஹஜ்ரத் மாலும் ஷா(ரஹ்),ஃபக்கீர் முஹம்மத்ஷா (ரஹ்)
93.கொடிக்கால்பாளையம்- ஹஜ்ரத் தாஜ்பிராக்ஷா(ரஹ்),
யார்ஷா(ரஹ்), முஹம்மத்ஷா(ரஹ்) -சவுக்கண்டி
94. " - ஹஜ்ரத் ஆஸ்பாபா தர்கா ஷெரிப்
95. " - ஹஜ்ரத் சையிதா ஹுஸைன் பீபீ அம்மா
96.ஆழியூர்- இனாயத்துல்லா பாபா (ரஹ்)
97.நாகூர்ஷெரிப்- ஹஜ்ரத் சையதினா காதிர் அவுலியா(கத்)தாகூல் சவுக்
98. "முஹ்யித்தீன் பள்ளி- ஹஜ்ரத் சாக்கு மஸ்தான் (ஒலி)
99. " - ஹஜ்ரத் நூர்ஷா ஹாதி(ஒலி)
100. " - ஹஜ்ரத் மலங்ஷா (ரஹ்)
101. "கானாம்பாடி- அரப்ஷா ஹாதி (ஒலி)
102. " - மண்டல் சற்குரு மக்கான்
103. " - ஜிலேபி மக்கான்
104.பாப்பாவூர்- ஹஜ்ரத் சையதினா ஷேக் அலாவுத்தீன் ஒலியுல்லாஹ்
105.கீழ்வேளூர்- ஹஜ்ரத் இஸ்ரார் அலிஷா (ரஹ்)
106. " - ஹஜ்ரத் மெஹபூப் அலிஷா (ரஹ்)
107.கூத்தூர் குருக்கத்தி- ஹஜ்ரத் பீர்காய்பு ஹஸன்ஷா காதிரி (ஒலி)
108.ஏணங்குடி- சத்திரம் மக்கான்
109.வெளவால் அடி- தர்கா
110.கொந்தை- ஹஜ்ரத் நூர் அலிஷா (ரஹ்)
111.காரைக்கால்- ஹஜ்ரத் மஸ்தான் பாபா (ரஹ்) தர்கா
112.கொல்லாபுரம்- எல்லைக்கரை பாபா (ரஹ்)
113.திருக்களாச்சேரி- ஹஜ்ரத் சையத்ஷா ஜலாலுத்தீன் டோங்கிரி (ரஹ்)
114.சங்கரன் பந்தல்- ஹஜ்ரத் ஜுல்பிகார் ஷா (ரஹ்)
115.நீலவேளி- மாமரத்து அவுலியா தர்கா
116.திருமங்கலக்குடி- மௌலானா அபூபக்கர் (ரஹ்)
117. " - ஹஜ்ரத் தீர்க்கமான் குடல் கழுவி பாபா (ரஹ்)
118.திருமங்கலக்குடி- ஹஜ்ரத் ஜீலானி ஷா பாபா (ரஹ்)
119. " - ஹஜ்ரத் புளிமரத்தடி மலங்ஷா பாபா (ரஹ்)
120.மேலக்காவேரி- சடை பக்கீர் பாபா (ரஹ்)
121. " - ஹஜ்ரத் அஸதுல்லாஹ்ஷா ஹுஸைன் (ரஹ்)
122.மணஞ்சேரி கருப்பூர்- ஹஜ்ரத் முக்தியார்ஷா (ரஹ்)
123.திருப்பந்துருத்தி- ஹஜ்ரத் அச்சேஹ் ஷா(ரஹ்), லச்சேஹ் ஷா(ரஹ்)
124.அய்யம்பேட்டை- ஹஜ்ரத் நூர் இஸ்மாயீல்ஷாசுல்தான் சிஷ்தி(ரஹ்)
125.இராஜகிரி- ஹஜ்ரத் பாக்கர் ஷா(ரஹ்), ஷாகர் ஷா (ரஹ்)
126.பாபநாசம்- ஹஜ்ரத் ஷாகிர்ஷா (ரஹ்)
127.கும்பகோணம்-பெரிய தைக்கால்
128. " - ஹஜ்ரத் கரீம் ஷா (ரஹ்)
129. " -மணிக்கூண்டு- அரக்காஸ் பீவி அம்மா (ரஹ்)
130. " -இரயிலடி- திவான் அஸ்கர்(ரஹ்)
131.கும்பகோணம் பட்டீஸ்வரம்- இஸ்ரார்அலிஷா (ரஹ்)



132.பட்டீஸ்வரம்- இர்ஃபானுல்லாஹ்ஷா (ரஹ்)
133.பம்பைபடையூர்- ஹஜ்ரத் படேஷா புர்ஹானே (ரஹ்) -சவுக்கண்டி
134.இராஜகிரி- ஹஜ்ரத் பீர்ஷாஅவுலியா, மீர்ஷா அவுலியா -சவுக்கண்டி
135.பண்டாரவாடை- ஹஜ்ரத் நூருல்லாஷா (ரஹ்)
136.மெயின்ரோடு- பெரிய சான்பீவி(ரஹ்), சின்ன சான்பீவி(ரஹ்)
137. " - ஹஜ்ரத் ஜஃபருல்லாஹ்ஷா (ரஹ்)
138.பண்டாரவாடை- நடுத்தைக்கால்
139. " - ஹஜ்ரத் லாடம் மக்கான்
140.பசுபதி கோயில்- ஷா கஷ்மீரி (ரஹ்)
141. " -ஹஜ்ரத் ஜப்பார் (ரஹ்) தைக்கால்
142. " -ஹஜ்ரத் சையத் ரஜாக் அலிஷா காதிரி (ரஹ்)
143.தஞ்சாவூர்- ஹஜ்ரத் பீர் முஹம்மத் ஷா காதிரி(ரஹ்) -சவுக்கண்டி
144. " -குளிச்சப்பேட்- ஹஜ்ரத் பந்தே நவாஸ்ஸானி (ரஹ்)
145. " -படா மக்கான்- ஹஜ்ரத் அஷ்ரப்ஷா காதிரி (ரஹ்)
146. " -தொம்பன்குடிசை- குஞ்சாலி பீரான் (ரஹ்)
147. " -குண்டுதைக்கால்- ஹஜ்ரத் ஷேரன்ஷா காதிரி (ரஹ்)
148. " -இரயிலடி- ஹஜ்ரத் தில்பர் அலிஷா காதிரி (ரஹ்)
149. " -கோயில்பழையரோடு- சூஃபி ஸர்மஸ்த் அவுலியா
150. " -இரயிலடி- ஹஜ்ரத் சையதினா ஷம்ஸ் மன்ஸூர்(ரஹ்)
151. " -மெயின்பஜார்- இரட்டை மஸ்தான் தர்கா
152. " -ஒற்றை மஸ்தான் தர்கா
153. " -சையத் சக்காப் (ரஹ்)
154. " -விசிறிகாரத்தைக்கால்- ஹஜ்ரத் நக்ஷபந்த் (ரஹ்)தைக்கா
155. " -கீழவாசல்- மீரான்ஷா(ரஹ்) மக்கான் (கிளிமூக்கு மக்கான்)
156. " -நாஞ்சிக்குட்டைரோடு- இஸ்ரார் அலிஷா (ரஹ்)
157. " - ஹஜ்ரத் சையத்ஷா சந்தா ஹுஸைனி (ரஹ்)
158. " -சின்ன தைக்கால்- ஹஜ்ரத் நூர் அலிஷா (ரஹ்)
159. " -தையா மண்டபம்
160. " -சோட்டார் மக்கான்
161.வாலிகண்டபுரம்- சையத் (ரஹ்) தைக்கால்
162. " - ஹஜ்ரத் சுலைமான் ஷா (ரஹ்)மக்கான்
163. " - ஹஜ்ரத் ஜாபர்கான் (ரஹ்)மக்கான்
164.நஞ்சன்குடு- ஹஜ்ரத் இஸ்திஹாக்ஷா (ரஹ்)
165.வி.களத்தூர்- தைக்கால் ஆஷீர்கானா
166. " - ஆற்றங்கரை தர்கா
167.வருங்கூர்- ஹஜ்ரத் மக்கான்
168.தொழுதூர்- சையத்ஷா (ரஹ்) தர்கா
169.வடகராம்பூண்டி- ஹஜ்ரத் ஸானி சுல்தான் பாபா (ரஹ்)
170.விருகாவூர்- ஹஜ்ரத் அப்துல் ரஹ்மான் பக்ஷ்(ரஹ்) ஆஷிர்கானா
171.சித்தலூர்-ஹஜ்ரத் சையதினா ஷாபாஸ்புர்ஹானே(ரஹ்)சவுக்கண்டி
172.தியாகதுருகம்- ஹஜ்ரத் மாலும் ஷா (ரஹ்)
173. " - ஹஜ்ரத் கும் ஆபித் அலிஷா (ரஹ்)

174.அண்ணாநகர்- கரீம்ஷா (ரஹ்) தைக்கால்
175.எலவநாசர்கோட்டை- ஃபாத்திமா பாக்(ரஹ்)
176.புகைப்பட்டி குஞ்சினம்- காகா தோப்பு மக்கான்
177.ஜங்லீ சாபித் அலிஷா (ரஹ்),மிஸ்கீன் அலிஷா(ரஹ்) தைக்கால்
178.குலாம் தைக்கால்- தர்கா
179.பூட்டை- ஹஜ்ரத் யாகூப் அலிஷா சுஹர்வர்தி
180.சங்கராபுரம்- ஸைய்யிதானி பீவி தர்கா
181. " -பாலா தர்கா
182. " -ஃபக்கிரி தைக்கா
183.கள்ளக்குறிச்சி- ஹஜ்ரத் தில்பர் ஷா அவுலியா தர்கா
184.பூமாம்பாக்கம்- ஹஜ்ரத் மஸ்தான் ஷா ஒலி
185.நீர்மூழ்கி தைக்கால்- ஹஜ்ரத் பஹதூர் அலிஷா தர்கா
186.உளுந்தூர்பேட்டை- ஹஜ்ரத் ஷா ஹுஸைனி (ரஹ்)-மக்கான்
187. " - ஹஜ்ரத் கரீம்ஷா (ரஹ்) தைக்கால்
188.விருதாச்சலம் நவ்விபேட்- ஹஜ்ரத் முனவர்அலிஷா (ரஹ்)
189.விருதாச்சலம்- ஐந்து கோரி தைக்கால் -சவுக்கண்டி
190.ஸ்ரீ முஷ்ணம்- ஸ்ரீ முஷ்ணம் தர்கா
191.பாளையங்கோட்டை- ஆதம்ஷா (ரஹ்)தர்கா
192. " - ஸைய்யிதா ஹுஸைன்பீ -மக்கான்
193. "அனார்கலி அம்மா தர்கா
194.வெங்கடாம்பேட்டை- இஸ்திஹாக்ஷா தர்வேஷ்
195.கான்சாவடி- ஹஜ்ரத் ஜிந்தாஷா மதார்(ரஹ்)
196. " - ஹஜ்ரத் அலிஷா ஃபக்கீர் (ரஹ்)
197.பண்ருட்டி-குத்புல் அக்தாப் நூர்முஹம்மத்ஷா அவுலியா-சவுக்கண்டி
198. " -மெயின்ரோடு- ஹஜ்ரத் லாரப்ஷா அவுலியா
199. " -நதிக்கரை- ஹஜ்ரத் காஹிஷா (ரஹ்)
200.திருவெம்பூர்- பீர் முஹம்மத் அலிஷா
201.பண்ருட்டி ஈத்கா- அன்வர்ஷா -மக்கான்
202. " -சாமியார் தைக்கால்- தாதாபீர்(ரஹ்)
203.ஃபக்கீர் பாளையம்- பீர் முஹம்மத் ஷா(ரஹ்)
204.திருவதிகை- ஹஜ்ரத் மாலும் ஷா(ரஹ்)
205. " - ஹஜ்ரத் ஆதம்ஷா மக்கான்(ரஹ்)
206. " - ஹஜ்ரத் கரீம்ஷா (ரஹ்)தைக்கால்
207. " - ஹஜ்ரத் முக்தியார்ஷா (ரஹ்)தர்கா
208.கவரப்பட்டு- ஹஜ்ரத் மஜ்னு ஷா (ரஹ்)
209.நெல்லிக்குப்பம்-குத்பாபள்ளி - ஹஜ்ரத் இக்ராம் ஷா (ரஹ்)
210. " -இரயிலடி- ஷேக் தாவூத் ஒலியுல்லாஹ்
211.கடலூர் **OT** தோணித்துறை- போலேஷா கலந்தர் ஒலியுல்லா
212.பரங்கிப்பேட்டை- ஹஜ்ரத் ஷா அலி கஞ்ஜு (ரஹ்)தைக்கால்
213. " -அப்துல் ரசூல்ஷா காதிரி (ரஹ்)
214. " - ஹஜ்ரத் மாசும் கேத்தல் பண்டு (ரஹ்)
215. " - ஹஜ்ரத் பிஸ்மில்லாஹ் ஷா (ரஹ்) தைக்கால்



216. " - ஹஜ்ரத் பண்டாரி ஜஹன்ஷா காதிரி(ரஹ்)
217. " - ஹஜ்ரத் உக்காஷா (ரலி)
218. " -ஹஜ்ரத் ஷாவஜுஹுத்தீன்அப்துல்காதர் (ரஹ்) -சவுக்கண்டி
219.கிள்ளை- ஹஜ்ரத் ரஹ்மத்துல்லாஹ்ஷா காதிரி ஷத்தாரி(கத்)
220.புவனகிரி- ஹஜ்ரத் ஜிந்தாஷா மதார்(கத்)
221. " - ஹஜ்ரத் சாந்த் முஹம்மத் திவான்ஷா(கத்)
222. " - ஹஜ்ரத் புகாரி ஷா(கத்)
223.சிதம்பரம்- ஹஜ்ரத் மீர் காதர்ஷா ஹுஸைனி சிஷ்தி(கத்)
224. " - ஹஜ்ரத் மீர் ஹுஸைன் ஷா சிஷ்தி(கத்)
225. " - ஹஜ்ரத் காஜா சையத்ஷா அமீனுத்தீன் ஹுஸைனி சிஷ்தி(கத்)
226. " - ஹஜ்ரத் அபூ முஹம்மத் தர்வேஷ்(கத்)
227. " - ஹஜ்ரத் சூஃபி சர்மஸ்த் ஷா(கத்), ஹஜ்ரத் பாவுடேஷா(கத்)
228.முட்லூர்- ஹஜ்ரத் இஸ்லாம் ஷா(கத்)
229.பி.முட்லூர்- ஹஜ்ரத் ஜமால் முஹம்மத் ஷா(கத்)
230. " - ஹஜ்ரத் நஃபாஷா(கத்)
231.முட்லூர்- ஹஜ்ரத் ஜம்மன் ஷா(கத்)
232. " - ஹஜ்ரத் மிஸ்கீன் ஷா(கத்)
233. " - ஹஜ்ரத் ரஜாஷா(கத்)
234. " - ஹஜ்ரத் ஸைய்யிதானி பீவி தர்கா
235. " - ஹஜ்ரத் ஹாபிஸ் அலிஷா(கத்)
236.ஆதலூர்- ஹஜ்ரத் ஃபுர்ஹான் ஷா அவுலியா(கத்)
237.ஆணைக்குப்பம்- ஹஜ்ரத் மிஸ்கீன் அலிஷா(கத்)
238.தீட்டாம்பாளையம்- ஹஜ்ரத் ரம்ஜான் ஷா(கத்)
239. " - ஹஜ்ரத் கரீம் ஷா(கத்), ஹஜ்ரத் அக்பர் ஷா(கத்)
240. " - ஹஜ்ரத் முக்தியார் ஷா(கத்)
241.பாண்டி-கன்னிகோவில்- ஹஜ்ரத் ஹுதா ஷா(கத்)
242.பாகூர்- ஹஜ்ரத் மாலும் ஷா(கத்)
243.வழுதாவூர்- ஹஜ்ரத்ஷா அலி கன்ஜ கௌஹர் ஷா காதிரி(கத்)
244. " - ஹஜ்ரத் மக்கா பீவி அம்மா தர்கா
245.விழுப்புரம்- ஹஜ்ரத் மஸ்தான் ஷா பாபா(கத்)
246.மீனம்பூர்- ஹஜ்ரத் காதர்ஷா தர்கா பங்களா
247.சேத்துப்பட்டு- ஹஜ்ரத் குப்ர் தோட்ஷா(கத்)
248.ஆற்காடு- ஹஜ்ரத் ஹாஜி ஸையத் ஹஸன் ஸானி (கத்)
" -ஸிப்கத்துல்லாஷா நாயபே ரசூல்(கத்) -சவுக்கண்டி
249.ஆற்காடு- ஸாபித் அலிஷா(கத்) -மண்டல் மக்கான்
250. " - ஹஜ்ரத் கரீமுல்லாஷா(கத்)
251. " - ஹஜ்ரத் மாலும் பர்தண்டே(கத்),ஹஜ்ரத் மாலும் மச்சூவா(கத்)
252. " - ஹஜ்ரத் சையதினா தாதாபீர்(கத்)
253. " - ஹஜ்ரத் நௌஷஹீத்(கத்)
254. " -தாஜ்புறா- ஹஜ்ரத் ஸாதிகுல் ஹுஸைனி சிஷ்தி
255.ஆற்காடு- ஹஜ்ரத் சையதினா திப்பு அவுலியா

*256. " - ஹஜ்ரத் ஜௌஹர் அலிஷா(கத்)*
*" - ஹஜ்ரத் கலந்தர் அலிஷா(கத்)*
*257.இராணிப்பேட்டை- ஹஜ்ரத் நாஸர் ஷா அவுலியா(கத்)*
*258. " - ஹஜ்ரத் ஷாகர்ஷா(கத்), ஹஜ்ரத் அஸ்கர்ஷா(கத்)*
*259.பெருமுகை- ஹஜ்ரத் மெஹபூப் அலிஷா(கத்)*
*260.ஹஜ்ரத் குஹுங்ரூ ஷா(கத்)*
*261.ஒலிமுஹம்மது பேட்டை- ஹஜ்ரத் ஒலி முஹம்மத் அவுலியா*
*262. " - ஹஜ்ரத் நிஜாமுத்தீன் ஷா சிஷ்தி(கத்)*
*263.காஞ்சிபுரம்- ஹஜ்ரத் சையதினா ஹமீத் அவுலியா பாபா சிஷ்தி(கத்)*
*264. " -ஹஜ்ரத் கரிமுல்லாஷா(கத்)*
*265. " -சென்னை-மந்தைவெளி- ஹஜ்ரத் அஷ்ரப் ஷா(கத்)*
*266. " - **Dr.**நடேசன்ரோடு- ஹஜ்ரத் இப்றாஹிம்அலிஷா நக்ஷபந்தி(கத்)*
*267. " -ஹஜ்ரத் ஸுர் ஷா அவுலியா*
*268. " -ஐஸ்ஹவுஸ்- ஹஜ்ரத் குப்பேமஸ்தான் ஷா(கத்)*
*269. " -மௌண்ட்ரோடு- ஹஜ்ரத் சையத் மூஸா ஷா காதிரி(கத்)*
*270. " -வாலாஜா ரோடு- ஹஜ்ரத் பஞ்சே அக்பர் அலிஷா காதிரி (கத்)*
*271. " -ஹஜ்ரத் நீலம் பாஷா தர்கா ஷெரிப்*
*272. " - ஹஜ்ரத் மஸுதுல்லாஷா(கத்)*
*273. " - ஹஜ்ரத் தஹ்ன்பக்ஷ்(கத்)*
*274. " -கச்சேரி ரோடு- ஹஜ்ரத் சாதிகுல் ஹுஸைனி(கத்)*
*275. " -ஸ்டான்லி- ஹஜ்ரத் சையதினா துராபுத்தீன் ஷா காதிரி சிஷ்தி*
*276. "-ஜமீன்பல்லாவரம்-ஹஜ்ரத்பத்ருத்தீன் ஷஹீத்(கத்)-சவுக்கண்டி*
*277. " - ஹஜ்ரத் அர்கான் சற்குரு தில்தார் அலிஷா காதிரி (கத்)*
*278.திருச்சி சிந்தாமணி- பள்ளிவாசல் தர்கா*
*279.இனாம் களத்தூர்- பள்ளிவாசல் தர்கா*
*280.சித்துவார் பட்டி- பள்ளிவாசல் தர்கா*
*281.வேழ்வார் கோட்டை- நவாப் பள்ளி வாசல் தர்கா*
*282.கோயிலுர்- ஜாமியா மஸ்ஜீத் தர்கா*
*283.திண்டுக்கல் ராஜகப்பட்டி- நவாப் பள்ளி வாசல் தர்கா*
*284.திருமங்கலம்- பள்ளிவாசல் தர்கா*
*285.விருதுநகர்- கல்லு பள்ளிவாசல் தர்கா*
*" - ஷாஃபி பள்ளிவாசல் தர்கா*
*" - நவாப் பள்ளிவாசல் தர்கா*
*286.சிவகாசி- ஷாபாஸ்கான்(கத்) கோரி பள்ளிவாசல் தர்கா*
*287.தென்காசி- சுலைமான் ஷா காதிரி(கத்)*
*" - ஐந்து வர்ணப்பள்ளி தர்கா*
*" - ஷாஃபி பள்ளி தர்கா*
*288.கடையநல்லூர்- நவாப் பள்ளிவாசல் தர்கா*
*289.ரவண சமுத்திரம்- ஹனஃபி பள்ளிவாசல் தர்கா*
*" - ஷாஃபி பள்ளிவாசல் தர்கா*
*290.வீர சமுத்திரம்- ஜாமியா மஸ்ஜீத் தர்கா*



*291.அயன் பொட்டல்புதூர்- ஷாஃபி பள்ளிவாசல் தர்கா*
*" - புது தெற்குதெரு பள்ளிவாசல் தர்கா*
*292.இனாம் பொட்டல்புதூர்- முஹ்யித்தீன் ஆண்டகை பள்ளி தர்கா*
*293.சொக்கலிங்கபுரம்- ஜாமியா பள்ளி தர்கா*
*294.மேலச்சேவல்,கீழச்சேவல்- ஜாமியா பள்ளிவாசல் தர்கா*
*295.கல்லிடைக்குறிச்சி- முஹ்யித்தீன் ஆண்டவர்கள் பள்ளி தர்கா*
*296.களக்காடு ஏர்வாடி- ஜாமியா பள்ளி, தர்கா*
*297.சேரமான் தேவி- ஜாமியா பள்ளி,தர்கா*
*298.மேலப்பாளையம்- ஷத்ரன்ஜீ பள்ளிவாசல் தர்கா*
*299.செய்துங்க நல்லூர்- முஹ்யித்தீன் ஆண்டவர்கள் பள்ளி தர்கா*
*300.தாதன் குளம்- முஹ்யித்தீன் பள்ளிவாசல் தர்கா*
*301.கருங்குளம்- முஹ்யித்தீன் பள்ளி தர்கா*
*302.ஆறாம்பண்ணை- குத்பாபள்ளி தர்கா*
*303.அரஃபாத் நகர்- பெரிய பள்ளி தர்கா*
*304.கொங்கராயன் குறிச்சி- பெரிய பள்ளி, தர்கா*
*305.திருவை குண்டம்- நவாப் பள்ளி தர்கா*
*306.பேட்மா நகரம்- நவாப் பள்ளி தர்கா*
*307.கேம்லாபாத்- ஜாமியா பள்ளி தர்கா*
*308.சுங்குநாதபுரம்- ஷாஃபி பள்ளி தர்கா*
*309.ஆழ்வார் திருநகரி- நவாப் பள்ளி தர்கா*
*310.நாலுமாவடி- பெரிய பள்ளி தர்கா*
*311.தேரி குடியிருப்பு- ஹஜ்ரத் ஹம்ஜா (கத்) தர்கா*
*312.காயா மொழி- பெரிய பள்ளி தர்கா*
*313.சீருடையார்புரம்- பெரியபள்ளி தர்கா*
*314.பரமன் குறிச்சி- பெரிய பள்ளி தர்கா*
*315.சிறிய பரமன் குறிச்சி, ஆஜாத் நகர்- பெரிய பள்ளி தர்கா*
*316.உடன்குடி- பெரிய பள்ளி தர்கா*
*317.காளாஸ் குடியிருப்பு- சுல்தான் பள்ளி தர்கா*
*318.தெற்கு ஆத்தூர், வடக்கு ஆத்தூர்- ஜும்மா பள்ளி தர்கா*
*319.காயல்பட்டினம்- ஜும்மா பள்ளி தர்கா*
*320.ஏரல்- ஜும்மா பள்ளி தர்கா,பெரிய மினாரா பள்ளி தர்கா*
*321.சூளை வாய்க்கால்- பெரிய பள்ளிவாசல் தர்கா*
*322.சிறுதொண்டை நல்லூர்- பெரிய பள்ளி வாசல் தர்கா*
*323.தூத்துக்குடி- பெரிய பள்ளிவாசல் தர்கா*
*324.தரைக்குடி- பெரிய பள்ளி தர்கா*
*325.சாயல்குடி- பெரிய பள்ளி தர்கா*
*326.கொக்காடி,குருவாடி,கம்பம்- பெரிய பள்ளி தர்கா*
*327.கீழச்செவ்வனூர்,சிக்கல்- பெரிய பள்ளிவாசல் தர்கா*
*328.எக்கக்குடி- பெரிய பள்ளி வாசல் தர்கா*
*329.நத்தம் - குத்பா பள்ளி வாசல் தர்கா*
*330.ஏர்வாடி - பள்ளி வாசல் தர்கா*

*331.கீழக்கரை - ஷேகப்பா பள்ளி வாசல் தர்கா*
*- நவாப் பெரிய பள்ளி வாசல் தர்கா*
*- வருசை முஹம்மது பள்ளி தர்கா*
*332.காஞ்சிராங்குடி- சதக் பள்ளி வாசல் தர்கா*
*333.தீனக்குளம்பன், பெரியபட்டணம்- பெரியபள்ளி தர்கா*
*334.உச்சிபுளி- தைக்கால் பள்ளி வாசல் தர்கா*
*335.இருமேனி- பெரிய பள்ளி வாசல் தைக்கால்*
*336.என் மனங்கொண்டான்- பெரிய பள்ளி வாசல் தர்கா*
*337.பெருங்குளம்,மேம்பாளை- முஹ்யித்தீன் ஆண்டகை பள்ளி தர்கா*
*338.அழகன்குளம்- ஜாமியா பள்ளி தர்கா*
*339.பனைக்குளம்- நவாப் பள்ளிவாசல் தர்கா*
*340.ஆற்றங்கரை- பெரிய பள்ளிவாசல் தர்கா*
*341.அத்தி ஊத்து புதுவலசை- முஹ்யித்தீன் ஆண்டகை பள்ளி தர்கா*
*342.சித்தார் கோட்டை- முஹ்யித்தீன் ஆண்டகை பள்ளி தர்கா*
*343.வாலூர், தேவிப்பட்டினம்- மேலப்பள்ளி, தர்கா*
*344.தேவிப்பட்டினம், திருப்பாலக்குடி- கீழப்பள்ளி, தர்கா*
*345.புதுப்பட்டினம்- பெரிய பள்ளி,தர்கா*
*346.சோளியாக்குடி- அறுபது அடி தர்கா பள்ளி வாசல்*
*347.நம்புதாளை- நவாப் பள்ளி வாசல் தர்கா*
*348.வண்ணாங்குளம்- நவாப் பள்ளி வாசல் தர்கா*
*349.தொண்டி- பெரிய பள்ளிவாசல் தர்கா*
*350.டி.ஆர். பட்டினம்,பி.வி. பட்டினம்- ஷாஃபி பள்ளிவாசல் தர்கா*
*351.எஸ்.பி.பட்டினம்,பாசிப்பட்டினம்-நைனார்முஹம்மது(கத்) தர்கா,*
*352.புதுவயல், ஓரியூர் - பெரிய பள்ளி வாசல்,தர்கா*
*353.வெள்ளையாபுரம்,ஆர்.புதுப்பட்டினம்-நவாப் பள்ளி வாசல் தர்கா*
*354.முத்துகுடா, அரசன் நகரிப்பட்டினம்- பெரிய பள்ளி தர்கா*
*355.கடாரம், கோபாலபட்டினம்- பெரிய பள்ளி வாசல் தர்கா*
*356.கோபாலபட்டினம்- பெரிய பள்ளி வாசல் தர்கா*
*357.ஜெகதாப் பட்டினம்,கோட்டைப்பட்டினம்- பெரிய பள்ளி தர்கா*
*358.அம்மா பட்டினம்,வடக்கூர்- முஹ்யித்தீன் ஆண்டகை பள்ளி தர்கா*
*359.கட்டுமாங்குடி,மந்திரிப்பட்டினம்- பரிய பள்ளிவாசல்,தர்கா*
*360.சீதாராம்பட்டினம், வ.அம்மாபட்டினம்- பெரியபள்ளி ,தர்கா*
*361.வரதப்பிராமணப்பட்டினம்,புதுக்குடி- ஜாமியா பள்ளி தர்கா*
*362.செண்பகராயப்பட்டினம்,கிருஷ்ணாஜிபட்டினம்-பெரியபள்ளிதர்கா*
*363.சேம்பைபட்டினம்,திருவையாறு-முஹ்யித்தீன்ஆண்டகைபள்ளிதர்கா*
*364.திருமானூர்- முஹ்யித்தீன் ஆண்டவர்கள் பள்ளி வாசல்*
*365.வடக்கு ஜம்பு மஹாதேவி பட்டினம்- பெரிய பள்ளி வாசல் தர்கா*



## இறைநேசர்களாக சமாதி கொண்டிலங்கும் ஜமா பானுவா ஃபக்கீர்மார்கள்

ஹஜ்ரத் சையதினா ஷெய்க தாதா தப்லே ஆலம் பாதுஷா(கத்) அவர்களின் உத்தரவு மொழிக்கேற்ப ஷாபானுவா ஜமா ஃபுக்ரா அர்கானே பெனுகொண்டா ஜமாவில் சற்குருவாக பணிபுரிருந்து இறைநேச விலாயத் பெற்று சமாதி அடைந்துள்ள இறை நேசச் செல்வர்கள்,

*1.சற்குரு தில்பர் அலிஷா காதிரி(கத்) - நாகூர் ஷெரிஃப் சவுக்கண்டி மேளா. இவர்கள் நினைவாக நாகூர் ஷெரிஃபில் கொண்டாடப்படுகிறது,*
*2.சற்குரு தில்தார் அலிஷா காதிரி(கத்) - ஜமீன் பல்லாவரம்*
*3.சற்குரு லாஹூர் அலிஷா(கத்) - கர்நாடகா*
*4.சற்குரு மன்அரப் அலிஷா (காதிரி)- சென்னை*
*5.சற்குரு மன்கரார் அலிஷா காதிரி (கத்)- தமிழ்நாடு*
*6.சற்குரு ரஜ்ஜாக் அலிஷா சிஷ்தி (கத்)- கொடிக்கால் பாளையம்*
*7.சற்குரு காஜா ரஹ்மத் அலிஷா சிஷ்தி (கத்) - இராம் நகரம்*
*8.சற்குரு காஜா ஆரிபுல்லாஹ் ஷா சிஷ்தி (கத்) - இராஜகிரி*
*9.சற்குரு காஜா யாஸீன் அலிஷா சிஷ்தி (கத்) - தர்வேஷ் மக்கான் அய்யம்பேட்டை*
*10.சற்குரு காஜா சாதிக் அலிஷா காதிரியா (கத்)- காஞ்சிபுரம்*
*11.சற்குரு காஜா அஹமத் அலிஷா சிஷ்தி (கத்) - மணஞ்சேரி கருப்பூர்*
*12.சற்குரு ஹாஜி மஷ்குர் அலிஷா காதிரி (கத்) - பரங்கிப்பேட்டை*
*13.சற்குரு காஜா ஜமால் அலிஷா காதிரி (கத்) - கோலார் ஷெரிஃப்*
*14.சற்குரு காஜா அஹமத் அலிஷா சிஷ்தி (கத்) - தர்வேஷ் மக்கான் அய்யம்பேட்டை*
*15.சற்குரு காஜா மஸ்தான் அலிஷா காதிரி (கத்) - நாகூர் ஷெரிஃப்*
*16.சற்குரு காஜா தில்தார் அலிஷா காதிரி (கத்) - கோம்பூர் ஷெரிஃப், தர்மபுரி மாவட்டம்.*

# ஜமா ஃபக்கீர்கள் பயணப் பாதையில் பாடிவரும் ஃபார்ஸி பனுவல்கள்

தமிழாக்கம் மற்றும் விளக்க உரை :

**ஹஜ்ரத் மவுல்வி ஸைய்யத் வி.என். சக்காப் சாஹிப்**

*அவர்கள்*

முத்தவல்லி

**ஹஜ்ரத் ஸைய்யத்ஷா ரஹமத்துல்லா ஷா சாஹிபு**

**சத்தாரி ஒலியுல்லா**

**தர்கா ஷெரீஃப்**

*கிள்ளை - 608 102*

*சிதம்பரம் (வழி).*



## ஜமஅல் ஃபுகரா எனப்படும் ஃபக்கீர்களின் நிதா என்ற முழக்கம் மற்றும் சதா என்ற கட்டியம் கூறுதலின் அர்த்தங்களும் விளக்கங்களும்.....

*நஅரயே பஞ்சதன்- "நபியுடைய வீட்டினரே உங்களை விட்டு சகல அசுத்தங்களையும் நீக்கி உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கி விடவே அல்லாஹ் விரும்புகிறான்". அல் குர்ஆன் 33:33 என்ற ஆயத்தே தத்ஹுர் வசனம் குர்ஆனில் வஹியாக இறக்கப்பட்ட போது பெருமானார் நபிகள் கோமான் கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் போர்வைக்குள் ஐவரை அழைத்துக் கொண்டார்கள்.*

*ஹஜரத் அலீ, சொர்க்க லோக தலைவி அன்னை ஃபாத்திமா (ரலி) அவர்கள் தம் புதல்வர்களான இமாம் ஹஸன் (ரலி) இமாம் ஹுஸைன் (ரலி) ஆகிய இவர்களே அந்த புனித பஞ்சதன் ஐவர் என்று அழைக்கப்படுகிறார்கள்.*

*அந்த புனித ஐவரையும் நினைவு கூர்ந்து எழுப்பப்படும் முழக்கமே நஅரயே பஞ்சதன் என்று அழைக்கப்படுகிறது. இதை ஃபக்கீர்மார்கள் தங்களின் எல்லா ஆன்மீகப் பணிகளின் போதும் ஆரம்பமாக வீர முழக்கமாக நாதம் எழுப்புவார்கள்:-*

*லுத்ஃபே அன்பியா, கரமே அவுலியா யா ஃபஜேபஞ்சதன் யாஅலீ மதத்! இல்லல்லாஹ்!*

*நபிமார்களின் நல்லாசியும், அவுலியாக்களின் அருளாசியும், பஞ்சதன் ஆகிய புனித ஐவரின் அன்பாசியும், அலீ புலியின் துணையும், நம் மீது பொழிய அல்லாஹ் அருள் புரிவானாக! நிச்சயமாக அல்லாஹ்வையன்றி வேறெந்த உஜூதும் இல்லவே இல்லை.*

*பிஸ்மிலை ஓதி மேற்கண்ட கட்டியத்தை முழங்கிய பின் தான் ஃபக்கீர் மார்கள் எந்த ஆன்மீக, உலக, பணியையும் தொடங்குவார்கள்.*

*நஅரயே ஹைதரீ! ஹைதரின் திருநாமத்தை முழங்குங்கள்! யா ஹைதர்! யா அலீ!*

**நிஃப்லு:-**

ஜலாலி ஃபக்கீர்மார்கள் மலையாடுகளின் கொம்பை பயன்படுத்தி ஊதுகுழல்கள் செய்து விசேஷ காலங்களில் அதை வாயில் வைத்து ஊதி, பலத்த சப்தம் எழுப்புவார்கள். வல்லோனாகிய அல்லாஹ் உலக அழிவு நாளான கியாம நாளில் வானவர் ஹஜரத் இஸ்ராஃபீல்(அலை) அவர்களை அழைத்து ஊதுகுழலை வழங்கி சூர் ஊதும் படி உத்தரவு விடுவான்.

அப்படி மூன்று முறை ஊதப்படும் போது இந்த உலகமே அழிந்து போகுமென்று பல ஹதீதுகளின் மூலம் நமக்கு தெரிய வருகிறது. வானவர் இஸ்ராஃபீல்(அலை) முடிவு நாளில் ஊதும் சூரின் அடையாளமாகத்தான், ஜலாலி ஃபக்கீர்மார்கள் உரூஸ் கந்தூரி மற்றும் விசேஷ நாட்களில் நிஃப்லு என்ற பெயருடைய ஊதுகுழலை ஊதுகிறார்கள்.

“உலக மாந்தர்களே! பூமிக்கு அழிவு நாள் ஒன்று உண்டு, நாம் அனைவரும் ஒருநாள் மௌத்தாகி மரணித்து மண்ணில் அடங்கிப்போவோம். எனவே நீங்கள் எந்நேரமும் படைத்தவனை நினைவு கொள்ளுங்கள்” என்று எச்சரிக்கின்ற வண்ணம்தான் ஃபக்கீர்களால் நிஃப்லு ஊதப்படுகிறது.

**விடியல் முழக்கம்:-**

அதிகாலை விடியும் போது ஃபஜ்ரின் பாங்குடன் பானுவா ஜமா சற்குரு மற்றும் ஃபக்கீர்மார்கள் ஒன்றாக கூடி நின்று எழுப்பும் முழக்கம்,

*இன்னி அர்ஜுக்கும் மினல் ளுலுமாத்தி இலன் நூர்*

*திடமான நம்பிக்கை கொண்டு இருட்டை விரட்டி வெளியேற்றும் பேரொளி பிரகாசத்தின் ஜோதியை நோக்கி வாருங்கள்! (அல்குர்ஆன்-யாஸீன்).*

*சுப்ஹதம் புல்புலே அஜாயிப் போல்தாஹி நாதே அலிநாதே*
*அஹமத் மத்ஹே ஹைதர் ஹம்ஜலியோ ஹம்கஃபி*



*அதிகாலை விடியலில் அதிசய புல்புல் பறவையாகிய யான் அலீயின் பெயரை உச்சரித்து அவரை அழைத்து முழக்கமிடுகிறேன்.*

*தோழர்களே! பெருமானாரின் புகழை, அலியாரின் புகழ்ச்சியை அந்தரங்கமாகவும், வெளிப்படையாகவும் நாம் ஸ்தோத்தரித்து வெளிப்படுத்துவோம்.*

*தாஷுதா ராக்கே ஹக் ஆராம் காஹே அபுல் ஹஸன்*
*துக்மயே காக்கே கிரேபான் ஷுத் நமூத் ஆஃப்தாப்!*

*அல்லாஹ்வின் இந்த பூமி புனிதமான ஹஸன் (ரலி) யின் தந்தையாருக்கு சாய்ந்து ஓய்வெடுக்கும் ஸ்தலமானது. இது பூமிக்கு பெருமை.*

*ஹஜரத் அலி அணிந்திருக்கும் அங்கியின் சாதாரண பொத்தான்கள் கூட சூரியனைப் போல் பிரகாசிக்கின்றன.*

*இப்னே அபிதாலிப் அமீருல் மூமினீன் ஹைதர்அலீ*
*சுபுஹ் சாதிக் கர் நமி ஜதம் சோ மீர் பூதுராப்*

*அபுதாலிபின் மகனார் அமீருல் மூமினாகிய ஹைதர் (மாவீரர்) என்ற புகழாரம் சூட்டப்பட்டவர்.*

*அதிகாலை விடியல் வேலையிலே மூச்சை தம்பிடித்து அபூ துராப் ஆகிய அலியாரை நெஞ்சில் நிறுத்தி ஜிக்ர் என்று தியானம் மேற்கொள்வோம்.*

*அர்ஷ்கோயத் பர்சுபான் யா லைத்தனி குன்து துராப்*
*பல்கே பர்ஸக் அர்ஷோ குர்ஸீ தப்லு ஜத் லஹோகலம்*

*அர்ஷ் என்று புனித இறைதளம் அலியாரின் உயர்ந்த அந்தஸ்த்தை கண்டு வெட்கி நான் மண்ணாகி போகக் கடவது என்று அலமலர்கிறது.*

*கேளுங்கள்! அந்த மறுமை நாள் இறைதளமும், இறை அமர்வும் நாற்காலியும் அலீயின் புகழுக்கு முரசு கொட்டும் நாளாயிருக்கும்.*

*ஹர்க்கே வக்த் சுப்ஹு தம் தர் யாதே ஹக் பேதார் நேஸ்த்*
*''ஊ'' முஹப்பத் ரா சேதானது லாயகே தீதார் நேஸ்த்*

*யார் பூபால வேலையில் எழுந்து படைத்தோனை நினைத்து ஜிக்ரு ஞானம் செய்யவில்லையோ, அவன் இஷ்க் என்ற இறைக்காதல் நேசத்திற்கு லிகா என்னும் இறை தரிசனத்திற்கு லாயக்கற்றவன் ஆவான்.*

*ஷாஹே மர்தா ஷேரே யஸ்தான் குவ்வத்தே பர்வர்திகார்*
*லாஃபதஹ் இல்லாஹ் அலீ லா ஸைஃபு இல்லா ஜுல்ஃபிகார்*

*ஆண் இனத்தின் வீரத்திற்கு தந்தையானவரே, புலி போன்ற அச்சமற்ற வீரம் கொண்ட அலீயே, இறையோனின் வல்லமை அருள் சக்தி அருளப்பட்டவரே,*

*கேளுங்கள்! அந்த வீர அலீ புலி இல்லையென்றால் வெற்றி என்ற பதம் ஏது? ஜுல்ஃபிகார் என்ற திருநாமம் கொண்ட அவரது வாளை விட சிறந்த வாள்தான் ஏது?*

*யா அலீ ! யாபுல் ஹஸன் யா பூதுராப்*
*ஹல்லே முஷ்கின் சர்வரேதீன் ஷாஃபியே யாமுல் ஹிஸாப் !*
*ஹர்பலா ரத் பபாஷத் இதுஆஹஃப் தாது பார்*
*யாஅலீ ஷை அன்ஜலி கோயம்சதா லைலோ நஹார்*

*கஷ்டங்களும், தொல்லை துயரங்களும் விரண்டோடட்டும்! இப்பிரார்த்தனையை நான் எழுபது விடுத்தம் பிரார்த்திக்கிறேன்.*

*ஓ! அலீயாரே உமது கடைக்கண் பார்வை ஒரு கணமேனும் அருளும் தந்தையே! நான் உம்மை எழுபது விடுத்தம் கூவி அழைக்கிறேன்.*



*லுத்ஃபே அன்பியா, கரமே அவுலியா யா ஃபஜேபஞ்சதன்*
*யாஅலீ மதத்! இல்லல்லாஹ்!*

*நபிமார்களின் நல்லாசியும், அவுலியாக்களின் அருளாசியும் பஞ்சதன் ஆகிய புனித ஐவரின் அன்பாசியும், அலீ புலியின் துணையும், நம் மீது பொழிய அல்லாஹ் அருள் புரிவானாக! நிச்சயமாக அல்லாஹ்வையன்றி வேறெந்த உஜூதும் இல்லவே இல்லை.*

(அதிகாலை துஆக்களும் பிரார்த்தனையும் அருள் வேட்டலும் நிறைவுற்றது).

**மஃக்ரிபு மாலை இருள் நேரத்து இறை அருள் வேட்டலும் துஆவும்:-**

*இன்னி ஆமன்துபி ரப்பிகும் ஃபஸ்மவூன்*

*நிச்சயமாக நான் உங்களை படைத்து போஷித்து இரட்சிப்பவனையே நான் விசுவாசிக்கின்றனே. (யாஸீன் 25).*

ஃபக்கீர்மார்கள் மஃக்ரிபு மாலை தொழுகை பாங்குடன் இந்த மறை வசனத்தை சேர்த்து ஓதுகின்றார்கள். அதன் தாத்பரியம் நிச்சயமாக ஃபக்கீர்மார்களாகிய நாம் இந்த பொழுது சாயும் வேலையிலே நம்மை படைத்து பரிபாளிப்பவனை தவிர வேறு யார் மீதும் நம்பிக்கை வைக்கமாட்டோம், யாருக்கும் செவி சாய்க்கமாட்டோம் என்பதாகும் .

**இதை தொடர்ந்து ஃபக்கீர்கள் ஓதும் ருபாயியே மலா மஃக்ரிபு நேரத்து பாமாலை :-**

*ஷம்மரோஷன் தாபோ மெஹ்தாபோ மெஹ்தா போசிராக்*
*ஜஹான்மே ஷுகுஷ் ஷஹர்மே ஹோன் ஷாத்*

*பொழுது சாய்ந்துவிட்டது இருட்டை விரட்ட மான்புரி ஒளிவிளக்கை ஏற்றுகிறோம்.*

*பூமிப் பந்தின் மீது பூரிப்போடு அல்லாஹ் ஆகிய அவன் நினைவில் வாழ்வோம். மறுமைநாள் மஹ்ஷர் மைதானத்தில் மகிழ்ச்சி நமக்கு கிட்டும் என்ற நம்பிக்கையை வளர்ப்போம்.*

*சிராகோ மஸ்ஜிதோ மெஹ்ராபோ மின்பர்*
*அலீயோ ஃபாத்திமா ஷப்பிரோ ஷப்பர்!*

*இறை இல்லமாம் பள்ளிவாசலிலும், தொழும் திசை காட்டும் மெஹ்ராப் தனிலும், புனித மின்பரின் படிக்கட்டுகளிலும் நமது நபிகளாரின் உறவு கிளைக் கொழுந்துகளாம் ஹஜரத் அலீயாருக்கும் அன்னை ஃபாத்திமாவுக்கும் அவர்கள்தம் பிள்ளைகளாம் ஷப்பீர் என்ற இமாம் ஹஸனுக்கும் ஷப்பர் என்ற இமாம் ஹுஸைனுக்கும் விளக்கேற்றி வைத்து ஒளி கூட்டுவோம்.*

*அகர் கேத்தீ சராசர் பாத்கீரத் சிராகே முக்பிலா*
*ஹர்கிஸ் ந மீரத்*

*தொடர்ந்து வீசும் புயலால் பூமியில் காற்றும் மழையும் விடாமல் அடித்தாலும் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நேசர்களால் ஏற்றப்படும் ஒளி விளக்குகள் மங்காது அணையாது என்றென்றும் நின்று எரிந்து ஒளிவீசும்.*

*சோமீரத் முப்திலா மீரத் சோகீசத் முப்திலா கீஸத்*
*சிராகே ஆலே முஹம்மது ஹமேஷா ரோ ஷன்பாத்*

*ஃபக்கீர்களே! இவ்வுலகை விட்டு நீங்கும் பொழுதும் மறுமை நாளில் எழுப்பப்படும் பொழுதும் நமது இதய நாயகர் மஹம்மது (ஸல்) அவர்கள் கிளையார் என்ற ஒளிவிளக்குகளும் நமக்குள் வியாபித்து பேரொளி ஜோதியாய் பிரகாசிக்கட்டும்.*

*பர்ஜஃபா காராகே ஃபானி அலல் முதாம் லானத்பாத்*
*பீஷ்பாதோ பீஷ்பாதோ பீஷ்பாத்*



*ஆனால் உலக ஆசைகளின் பால் பேராசை கொள்ளும் எதன்மீதும் எவர்மீதும் ஓ ஃபக்கீர்களே நமது சாபம் உண்டாகட்டும்! சாபம் உண்டாகட்டும்! நமது சாபம் உண்டாகட்டும்!*

*பர்ரோ பெஹ்லே விலாயத் ஹமேஷா ரோஷன் பாத்*
*சிராகே ஹுப்பே அலீ பர்கானயே தில் ரோஷன்பாத்!*

*அலை கடலும் காற்றும் போன்று ஆழமும் வேகமும் கொண்ட விலாயத் என்ற தெய்வ நேசத் தத்துவத்தின் பேரொளி நம்மீது வீசட்டும் அந்த விலாயத்தின் ஆதாரமான அலீயாரின் நேசம் நம் இதயக் கூண்டில் ஜோதியாய் பிரகாசிக்கட்டும்.*

*எல்லோரும் முழங்குங்கள் !*

*லுத்ஃபே அன்பியா, கரமே அவுலியா யா ஃபஜேபஞ்சதன் யாஅலீ மதத்! இல்லல்லாஹ்!*

*நபிமார்களின் நல்லாசியும், அவுலியாக்களின் அருளாசியும் பஞ்சதன் ஆகிய புனித ஐவரின் அன்பாசியும், அலீ புலியின் துணையும், நம் மீது பொழிய அல்லாஹ் அருள் புரிவானாக! நிச்சயமாக அல்லாஹ்வையன்றி வேறெந்த உஜூதும் இல்லவே இல்லை.*

**தரீக்கின் ஸலாம்:-**

முகத்துக்கு முகம் உற்றுப்பார்த்து ஒருவரை ஒருவர் பார்வையோடு பார்வையைப் பொருத்தி ஃபக்கீர்மார்கள் தரீக்கின் ஸலாம் முகமன் சொல்லிக்கொள்ளும் முறைகள் :-

*சீமாஹும் ஃபீ உஜூஹிஹிம் மின் அசரிஸ் ஸுஜூத்*

*அவர்களுடைய அடையாளமாவது அவர்களுடைய முகம் பூமியின் மீது சிரம் பணிந்து வணங்குவதின் ஸஜ்தாவின் அடையாளமாகும். -சூரத்துல் ஃபதஹ் 29*

**பான்வா ஜமா ஃபக்கீர்கள் செய்யும் ஸலாம் முறை மற்றும் ரிஃபாயியா ஃபக்கீர்மார்களும் இதே முறையை பின் பற்றுகிறார்கள்:-**

*இஷ்கல்லா ஃபுகரல்லா*
*சதாரா இஷ்க்*

*அல்லாஹ்வின் இஷ்க்கென்னும் பேரின்ப காதலில் லயித்திருப்பதில் பெருமை கொள்வோம்.*

*தோழர்களே! உங்களில் இஷ்க் என்னும் இறைக் காதல் நிலைத்திருக்கட்டும்.*

**பான்வா மற்றும் தபகாதி ஃபக்கீர்மார்கள் ஸலாம் சொல்லிக்கொள்ளும் முறை:-**

*சாய்ன்ஜி பீர் ஃபகீர் ஹக்கல்லா முஹம்மத் மதார்*

*எங்களது ஷெய்காகிய ஞான குருநாதரும், ஃபக்கீர்களான நாங்களும் அல்லாஹ்வின் நேசத்தில் நிலைத்திருந்து முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் உதவியை நாடுவோம்.*

*எங்களது சற்குரு நாதராகிய சங்கைக்குரிய ஷெய்கின் கடைக்கண் கடாட்சப் பார்வையில் எம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஷஃபாஅத்தும் ஈடேற்றமன்றாட்டும் அல்லாஹ்வின் தீதார் என்ற முக தரிசனமும் எமக்குக் கிட்டட்டும்.*

**ஷாஜலால் ஃபக்கீர் மார்களின் சந்திப்பு முறை:-**

*யா அலீ அல்லாஹ் மன் முர்ஷதல்லா*

*ஓ அலீயாரே எங்கள் முர்ஷிதான சற்குருநாதரின் பொருட்டால் நாங்கள் ஏகன் அல்லாஹ்வில ஃபனாவாகி அழிந்து போக அருளுங்கள் . இஷ்கே முஹம்மது ரசூலுல்லாஹ் நபி பெருமானார் கண்மணி நாயகத்தின் மீது இஷ்க் என்னும் இறைக்காதல் எங்களுக்கு வழி காட்டட்டும்.*



## கிருபை செய்வீர் பாபா!

பூஸ்தான் குலிஸ்தான் மெய்ஞ்ஞான மஹ்ரிபா
பூங்காவின் பூர்ணிமாவே
சீஸ்தானின் அரசரே சிருங்கார சிரபுரம்
தேடி வெகு நடைநடந்து
ஆஸ்தானை அடைந்து பாதுஷா நத்தர்ஒலி
அருள்பாத நிழலமர்ந்து
நாஸ்திக அனாநிய்யத்தை வீழ்த்தி இறை
தானென்ற கொள்கை ஓர்ந்து
சூஸ்திர மிஃகுராஜ் கண்ணாடி ஒளிவினில்
சுழலும் கலந்தரே பர்ஸக்!
வாஸ்துநின் பாதமே கன்ஜுல் அஸ்ரார்
பாபா ஃபக்ருத்தீன் ஒலியே!
நேத்திரம் திறந்து சிராத்துல் முஸ்தகீம்
நேர்வழி சென்றுய்யவே
கோத்திர குலநபி குருவே அடிமை குலாம்
குரல்கேட்டு கிருபை செய்வீர்!

*- ஹைதர் அலீ யகீனுல்லாஷா*


## பாபாவின் பயணப் பாதை






# Kashmir Valley

***Where Baba Fakrudheen Oliyullah spent eleven years in meditation with his Kalandars travelling amid the tombs of the Prophets Noah, Moses, and the family members of Jesus.***




**1.Tomb of Noah**
**2.Tomb of Joseph - the husband of Mary**
**3.Tomb of Mary - the mother of Jesus**
**4.Tomb of the Donkey of the Jesus**
**5.Tomb of Moses**
**6.Tomb of Aaron the brother of Moses**
**7.The monument where Jesus was lifted to Heaven**
**8.Prophet Solomons temple**
**9.The tomb wherein the rod of Moses is burried**
**10.Martand Sun temple**
**11.Tomb of Mary Magdalene - Disciple of Jesus**

## கூஹே க்வாஜா மலை

## பாபா அவர்களுக்கு முடி சூட்டப்பட்ட இடம்

